மொழியியல்

சிறப்பிதழ்

தொகுதி 8 ஜனவரி-ஜூன் எண் 3 & 4

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழக
முதல் மாநாட்டுக் கருத்தரங்கு மலர்

பதிப்பாசிரியர்கள்
ச. அகத்தியலிங்கம்
ந. குமாரசாமிராஜா
கே. எஸ். கமலேசுவரன்
எம். சுசீலா

சிறப்புப் பதிப்பாசிரியர்
தா. எட்வர்ட் வில்லியம்ஸ்

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்தின்
காலாண்டு இதழ்
1985

T13395
R005A07

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம்

பதிவு எண் 2 (1977)

அண்ணாமலைநகர்

செயற்குழு

தலைவர்	:	முனைவர் மோ. இசரயேல் (மதுரை)
துணைத் தலைவர்	:	முனைவர் எம். எஸ். திருமலை (மைசூர்)
செயலாளர்	:	முனைவர் ச. அகத்தியலிங்கம் (அண்ணாமலை நகர்)
பொருளாளர்	:	முனைவர் க. முருகையன் (அண்ணாமலைநகர்)
உறுப்பினர்கள்	:	முனைவர் எஸ். பூபதி (கல்கத்தா)
		முனைவர் வி. ஞானசுந்தரம் (மைசூர்)
		முனைவர் க. பாலசுப்பிரமணியம் (தஞ்சாவூர்)
		முனைவர் டி. எஸ். மாணிக்கம் (ஹைதராபாத்)
		முனைவர் கு. அண்ணாத்துரை (அண்ணாமலைநகர்)

மொழியியல்

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்தின் காலாண்டு இதழ்

கட்டணம்

	உள்நாடு	வெளிநாடு
ஆயுள் கட்டணம்	ரூ 300-00	US$ 75-00
ஆயுள் கட்டணம் (நிறுவனங்களுக்கு)	ரூ 450-00	US$ 112-00
ஆண்டுக் கட்டணம்	ரூ 30-00	US$ 7-50
ஆண்டுக் கட்டணம் (நிறுவனங்களுக்கு)	ரூ 45-00	US$ 10-50
ஆண்டுக் கட்டணம் (மாணவர்களுக்கு)	ரூ 15-00	

நுழைவாயில்

மனித குலம் சிறப்பாக இயங்க உதவுவது மொழி. மனிதர்கள் வளர்கிறார்கள்; மொழியும் அவர்களுடன் வளருகின்றது. அம்மனிதர்கள் ஆற்றலுக்கு நிகராக அவர்தம் மொழியும் வளருகிறது. உலகில் தமிழைப் போன்ற தொன்மையான மொழிகளும் ஒரு சில நூற்றாண்டிற்குள்ளாகத் தோன்றி வளர்ந்த மொழிகளும் உள்ளன. எங்கு சென்றாலும் அண்மையில் தோன்றி வளர்ந்து வருகின்ற மொழிகளுக்கு உயர்வு காணும் உறைவிடமாக எத்தனை எத்தனையோ இயக்கங்கள், அமைப்புகள், அறிவாலயங்கள், அறிவிதழ்கள், ஆய்விதழ்கள் எனப் பல வழிமுறைகள் காணப்படுகின்றன. இவற்றின் துணையோடு அம்மொழிகள் மிகவேகமாக வளர்ந்து வருகின்ற பாங்கினைக் காண்கிறோம். ஆனால் எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன் கல் தோன்றி மண் தோன்றா காலத்திற்கு முன் தோன்றிய மூத்தமொழி என தமிழ்மொழியைப் பற்றிக் கூறும்போது அதனை கேட்க மிகவும் இனிமையாகத்தான் உள்ளது. அத்துணை நல்ல வரலாறு கண்ட இந்த இனிய மொழி இன்று நலிந்த நிலையாகக் காணப்படுகிறது. ஒரு சமுதாயம் வளரவேண்டுமென்றால் அவர்களது மொழி வாழ்வாங்கு வாழவேண்டும்; வளரவேண்டும். இவ்விழப்பினை ஈடுகட்டிட நல்லதோர் அமைப்பு தேவை என நல்லோர் பலர் எத்தனையோ மேடைகளில் பேசக் கேட்டிருக்கிறோம். இதன் வடிவமைப்பே இந்த அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம். இந்த அமைப்பானது 1977-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் இரண்டாம் தேதியன்று அண்ணாமலைநகரில் உருவானது. இதன் நோக்கங்களாவன:

1. தமிழ்மொழியைப் பற்றியும், மொழியியலைப் பற்றியும், இலக்கணத்தைப் பற்றியும் தமிழ் மக்களிடையேயும், மாணவர்களிடையேயும், உறுப்பினர்களிடையேயும் விழிப்புணர்வை உருவாக்குதல்;

2. இத்துறைகளில் வருகின்ற ஆய்வுமுடிவுகளை, ஆய்வு பற்றிய செய்திகளைப் பரிமாறுதல்;

3. இவற்றில் எழும் புதிய எண்ணங்களை ஆண்டுக்கொரு முறை கருத்தரங்கு மாநாட்டின் மூலம் பரிமாறுதல்;

4. தேவையான நல்ல ஆய்வுகளைத் தொடங்குதல்;

5. இத்துறைகளில் வரும் நல்ல ஆய்வுகளைப் புத்தகமாகக் கொணருதல்;

6. இத்துறைகளில் எழும் நல்ல ஆய்வுக்கட்டுரைகளைத் தர "மொழியியல்" எனும் ஆய்விதழைக் கொணருதல்.

இந்த அமைப்பு அமைக்கப்பட்ட ஆண்டிலேயே 'மொழியியல்' எனும் ஆய்விதழ் கொணரப்பட்டது. இப்போது தங்கள் கைகளில் மலர்ந்திருக்கும் இதழ் எட்டாவது தொகுதியும், சிறப்பாக முதல் மாநாட்டில் தரப்பட்ட ஆய்வுக்கட்டுரைகளின் தொகுப்புமாகும். இதுகாறும் 35 நூல்களுக்கு மேலாகப் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. 'மொழியியல்' வாயிலாக இதுவரையிலும் நூறுக்கும் அதிகமான நல்ல ஆய்வுக்கட்டுரைகள் வந்துள்ளன.

கட்டுரைகள் நன்கு அமைந்திருப்பினும் படிப்பவர்கட்கு அவர்களது அய்யங்களைக் கட்டுரையாளர்களிடம் பகிர்ந்து கொள்ள அத்துணை வாய்ப்பு கிடைப்பதில்லை. எனவே ஆண்டுக்கு ஒரு முறை அறிஞர்களை ஒன்றுசேர்த்து பொது ஆய்வுப் பிரச்சினைகளைப் பற்றிக் கலந்துரையாடல் செய்ய வேண்டும் என்ற நோக்குடன் முதல் முறையாக இந்த ஆண்டு (1985) மார்ச்சுத் திங்கள் 22, 23 ஆகிய நாட்களில் பல்கலைக் கழக மானியக் குழு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அ.ப.க. மொழியியல் துறை ஆகியவற்றின் சார்பில் அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம் இந்த மாநாட்டினை அண்ணாமலை நகரில் நடத்தியது.

1) பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தமிழ் இலக்கணம் கற்பித்தல், உரிச்சொல்

2) தொல்காப்பிய சூத்திரங்களுக்கு புதிய விளக்கம்

3) தமிழ் மொழியியலின் பரிணாம வளர்ச்சி

எனும் தலைப்புகளில் ஆய்வும், தொடர்ந்து கலந்துரையாடலும்

நடைபெற்றது. சிக்கலான பல கேள்விகளுக்கு இந்தக் கலந்துரையாடலினூடே நல்ல விளக்கங்கள் கிடைக்கப்பெற்றன.

தமிழ் கற்போருக்கும், ஆய்வாளர்களுக்கும், கல்லூரி, பள்ளி ஆசிரியர்க்கும் ஏற்படுகின்ற பல சிக்கல்களுக்கு நல்ல விளக்கங்கள் இந்த மாநாட்டில் ஏற்பட்ட காரணத்தால் இதனைத் தொகுத்துத் தமிழினத்திற்குத் தரவேண்டுமென இந்தக் கழகமும், குறிப்பாக இதனை அமைத்துப் பேணி வளர்த்துவருகின்ற செயலர், பேராசிரியர் அகத்தியலிங்கனாரும் விழைந்தனர். இந்த மாபெரும் பொறுப்பினை இக்கழகம் என்னிடம் தந்தது. சற்றுத் தயங்கித் தடுமாறினேன் என்றாலும் கழகத்தின் ஆணைக்குப் பணிந்து இயன்றவரையில் நன்றாகத் தொகுக்க முயன்றுள்ளேன். இந்தச் சிறப்பினை எனக்குத் தந்த தமிழ்மொழியியற் கழகத்துக்கும், அதன் செயலாளர் பேரா. அகத்தியலிங்கனார் அவர்களுக்கும் நான் என் நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்குகிறேன்.

இந்த மாநாடு சிறப்புற நடைபெற எல்லாவகையிலும் ஆக்கமும் ஊக்கமுமளித்து மாநாட்டினைத் துவக்கிவைத்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர், சொல்லின் செல்வர் பேரா. சை.வே. சிட்டிபாபு அவர்களுக்கு இக்கழகத்தினுடையவும் என்னுடையவும் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

இந்தக் கழகத்தின் தலைவர் பேரா. மோ. இசரயேல், பேரா. குமாரசாமிராஜா, பேரா. செ.வை. சண்முகம், முனைவர் திருமதி சுசீலா, முனைவர் அண்ணாதுரை, முனைவர் இராதா கிருட்டிணன், திரு. நடராசன், மற்றும் இந்த இதழ் வெளிவர உதவியாகவிருந்த அனைவருக்கும் நன்றியுள்ளவனாவேன்.

'உயர்நிலைப்பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு இலக்கணம் கற்பித்தல்', 'தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும்போது எதிர்படும் இடர்பாடுகள்', 'உரிச்சொல்', 'தொல்காப்பியம் அல்லது நன்னூல் சூத்திரங்களுக்குப் புது உரை காண்டல்' ஆகிய ஆய்வுக்கட்டுரைகள் மீது நடந்த கலந்துரையாடலில்

மிகவும் நல்லமுறையில் பல பேராளர்கள் கலந்துகொண்டது தமிழ்மொழி ஆய்வில் அறிஞர்களுக்கு இருக்கும் ஆர்வத்தைக் காட்டியதுடன் சிக்கலான பல கேள்விகளுக்கு ஏற்புடைய விடைகளும் கிடைக்கப்பெற்றன. இது ஆய்வில் கண்ட நல்லதோர் பயனாகும். 'தொல்காப்பியச் சூத்திரம் ஒன்றுக்குப் புத்துரை' 'இன்றைய மாணவர் இலக்கணத்தை வெறுப்பதேன்', 'தமிழ் நடையியற் போக்குகள்', 'தமிழ் மொழியியலின் ஆய்வுப்போக்கு' எனும் கட்டுரைகள் மீதான கலந்துரையாடலில் பேராளர்கள சிலர் கலந்துகொண்டார்கள். ஆனால் அது போதுமான அளவிற்குக் காணப்படவில்லை என்றே சொல்ல வேண்டும். கலந்துரையாடலில் கலந்துகொண்ட அத்துணை பேரையும் வாழ்த்துகிறோம். கட்டுரையாளர்களையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

இவ்விதழானது பெரியதோர் மறுமலர்ச்சிக்குத் துவக்கமாக அமைந்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் வர இருக்கின்ற மாநாடுகளுக்கு ஒரு எடுத்துக்காட்டாக உள்ளது. தமிழ் வளர்ந்தால் தமிழன் வளருவான்; தமிழ் நலிவுற்றால் தமிழன் வீழ்ந்துவிடுவான். நம் வாழ்வும் உயர்வும் நம் மொழியின் உயர்வினையும் வளர்ச்சியையும் பொறுத்திருக்கிறது.

இந்தக் கருத்தரங்க மாநாடு தமிழ் மொழிக்கு நல்லதோர் முன்னேற்றப் பாதையை வகுத்துத் தந்துள்ளது எனப் பார்க்கும் போது இந்த ஆய்வுக்கட்டுரைகளும் கலந்துரையாடலும் மாநாட்டில் வந்து கலந்துகொள்ள இயலாதார்க்குப் பயனுள்ளதாகுமென்பதில் ஐயமில்லை. ஆகவே இதனை அனைத்திந்தியத் தமிழ் மொழியியல்கழகமும், அதன் தலைவரும், செயலரும், மற்றும் அனைவரும் தமிழ் சமுதாயத்திற்குக் காணிக்கையாக்குவதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றனர்.

தா. எட்வர்ட் வில்லியம்ஸ்

துவக்கவிழா

23-4-1985 **காலம்: காலை 10.00 மணி**

வரவேற்புரை

பேரா. ச. அகத்தியலிங்கம்

பாராட்டுச் செய்திகள் படித்தல்
முனைவர்
தா. எட்வர்ட் வில்லியம்ஸ்

தலைவர் உரை

பேரா. மோ. இசரயேல்

துவக்க உரை

பேரா. சை.வே. சிட்டிபாபு

நன்றியுரை

பேரா. செ.வை. சண்முகம்

மொழியியல் 8. 3 & 4 (1985)
முதல் மொழியியல் கருத்தரங்குக்
கட்டுரைக் கோவை

வரவேற்பு உரை

பேராசிரியர் ச. அகத்தியலிங்கம்*

மதிப்பிற்கும் மரியாதைக்குமுரிய அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்களே, அனைத்திந்தியத் தமிழ் மொழியியல் கழகத் தலைவர் பேராசிரியர் முனைவர் இசரயேல் அவர்களே, இந்தக் கருத்தரங்க மாநாட்டில் கலந்துகொள்ள வந்துள்ள பேராளர் பெருமக்களே, பேராசிரியர்களே, நண்பர் களே! உங்கள் அனைவரையும் வரவேற்பதில் நான் பெருமையும் பெருமகிழ்ச்சியும் அடைகிறேன். இந்தக் கருத்தரங்க மாநாடு அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயராய்வு மையத் தின் சார்பிலும், அனைத்திந்தியத் தமிழ்மொழியியற் கழகத்தின் சார்பிலும் நடைபெறுகிறது.

இந்தத் துறையானது மறைந்த மேதை செட்டிநாட்டரசர் முனைவர் முத்தையவேள் அவர்களுடைய சீரிய ஆசியுடன்

---

* பேராசிரியர் ச. அகத்தியலிங்கனார் அவர்கள், அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழியியல் உயர் ஆய்வு மையத்தின் இயக்குநரும் அனைத் திந்திய தமிழ் மொழியியற் கழகத்தின் அமைப்புத் தலைவரும் தற்போது அதன் செயலருமாவார்.

துவங்கப்பட்டு, பெரியதோர் ஆய்வு மையமாக இன்று வளர்ந்துள்ளது. புதிய கோணத்தில் பல ஆய்வுமுறைகள் இங்கே வகுக்கப்படுகின்றன. அவற்றுள் ஒன்று தமிழ் இலக்கணத்தை, தமிழ்மொழிக் கூறுகளை, மொழியமைப்பினைப் புதிய நெறிமுறைகளில் காணுவது ஆகும்.

இதுபோன்று பல இடங்களில் தமிழில் சீரிய ஆய்வுகள் நடப்பதை நீங்கள் அறிவீர்கள். இவற்றினை ஒன்றுதிரட்டி ஒரு அமைப்பின் கீழ்க்கொணர்ந்து அந்த முடிவுகளை ஒரு காலாண்டு இதழ் வாயிலாக எல்லோர்க்கும் கிடைக்கச் செய்யவேண்டும் என்ற எண்ணத்தோடும், அறிஞர்களை ஒன்று திரட்டி சிக்கலான ஆய்வு நுணுக்கங்கள் பற்றிக் கலந்துரையாடி தமிழில் ஆய்வை வளர்க்க வேண்டும் என்ற கருத்தோடும் அமைக்கப்பட்ட இயக்கமே அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம். இது கடந்த எட்டாண்டு காலமாக மொழியியல் எனும் பெயரில் ஒரு காலாண்டிதழ் வாயிலாக நல்ல பல அரும்பெரும் ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டுள்ளது. இன்றைக்குத் தொடங்க இருக்கின்ற கருத்தரங்க மாநாடு அந்த அடிப்படையில் ஆய்வுக் கலந்துரையாடலுக்காகக் கூட்டப்பட்ட நிலையில் தனிச்சிறப்புடையது. அதுமட்டுமன்றி இந்த மாநாட்டினைத் தொடங்கி வைக்க எங்கள் மதிப்பிற்குரிய துணைவேந்தர் அவர்கள் இசைந்து வந்துள்ளமை பெருமையளிப்பதாகும்.

பாட்டுக்கொரு புலவன் பாரதியென்றால் பேச்சுக்கொரு பேராசிரியர் சிட்டிபாபு என்பது மிகையாகாது. அது மட்டுமன்றி உயர் ஆய்விலே மிக அக்கறை கொண்டவர் அவர். கடந்த நான்கு ஆண்டுகளில் இந்தப் பல்கலைக் கழகத்திலிருந்து கிட்டத்தட்ட 135 ஆசிரியர்களும் 150 ஆய்வாளர்களும் முனைவர் பட்டங்கள் பெற்றிருக்கிறார்கள் என்றால் அந்தச் சிறப்பு முற்றிலும் அவரையே சாரும். அத்தகைய ஒரு துணைவேந்தர் இந்தக் கருத்தரங்க மாநாட்டினைத் திறந்து வைப்பது உண்மையிலேயே பூரிப்பையும் பெருமிதத்தையும் அளிக்கிறது. பல அலுவல்கள் காரணமாக வேலை நெருக்கடி இருந்த போதிலும் நம்முடன் வர இசைந்துள்ளது ஆய்வின்பால் அவர் கொண்டுள்ள அக்கறையைக் காட்டும். அவர்களை இந்தக் கழகத்தின் சார்

பிலும் என் சார்பிலும் உங்கள் அனைவர் சார்பிலும் வருக வருக என வரவேற்கிறேன்.

அடுத்தபடியாக இந்த விழாவிற்குத் தலைமை ஏற்றுள்ள எனது நண்பர், பேராசிரியர் முனைவர் இசரயேலைப் பற்றி நான் சொல்லாமலேயே உங்கள் அனைவருக்கும் தெரியும். மதுரைப் பல்கலைக் கழகத்தில் மொழியியல் துறையை உருவாக்கியவர் அவர். அந்தத் துறைக்குத் தலைமை தாங்கிச் சிறப்பாக நடத்துகிறார்கள். அவர் மரபு இலக்கியங்களிலும், மொழியியலிலும் நல்ல தேர்ச்சி பெற்றவர்; நல்ல சிந்தனையாளரும் திறனாய்வாளரும் ஆவார். அவர் நமது மொழியியல் கழகத்திற்குத் தலைவராக இருப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். பல அலுவல்கள் இருந்தும் எமது அழைப்பிற்கிணங்க இங்கு வந்து இந்த விழாவிற்குத் தலைமை ஏற்றதோடு மட்டுமின்றித் தலைமை உரையாற்ற உள்ளார். அவரை இந்தக் கழகத்தின் சார்பிலும், என் சார்பிலும், உங்கள் சார்பிலும் வருக வருக என வரவேற்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய பேராளப் பெருமக்கள்! பல்கலைக் கழக மானியக்குழு இந்தக் கருத்தரங்க மாநாட்டினை நடத்துவதற்கான நிதி உதவியினை ஒருசில வாரங்களுக்கு முன்னர் அறிவித்து மார்ச்சுத் திங்களுக்குள் நடத்தி முடிக்க வேண்டுமென்று கூறியுள்ளது. ஆகவே உங்களுக்கு மிகவும் குறுகிய காலத்தில் அழைப்பு விடுத்தோம். கல்விச் சாலைகள் கோடை விடுமுறைக்காக மூடப்படுகின்ற வேளை. வேலை அதிகமாக இருக்கும் நேரம். இருந்தும், இந்தச் சிறிய கால வெளிக்குள் நீங்கள் அனைவரும் எமது அழைப்பை ஏற்று இங்கு வந்தது உண்மையிலேயே தமிழ்மொழி மீதும் அதுபற்றிச் செய்யப்படுகின்ற ஆய்வின் மீதும் உங்களுக்கு இருக்கின்ற ஆழமான பற்றினையும், ஆர்வத்தையும் காட்டுகின்றது. நான் உண்மையிலேயே மன நெகிழ்ச்சியடைகிறேன். இந்த இரு நாட்கள் கலந்துரையாடல்கள் நம் எல்லோருக்கும் மிகவும் பயனுள்ளதாக அமையும் என நம்புகிறேன். இந்த நிலையில் உங்களனைவரையும், மற்றும் இந்த விழாவிற்கு எங்கள் அழைப்பிற்கிணங்கி வருகை தந்திருக்கும் பேராசிரியர்கள், ஆசிரியர்கள், ஆய்வாளர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரையும் வருக வருக என இருகரம் கூப்பி வாழ்த்தி வரவேற்று அமைகிறேன்.

மொழியியல் 8. 3 & 4 (1985)
முதல் மொழியியல் கருத்தரங்குக்
கட்டுரைக் கோவை

தலைமை உரை

பேராசிரியர் மோ. இசரயேல்*

பெருமதிப்பிற்கும் பேரன்பிற்குமுரிய மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இந்நாள் துணைவேந்தரும் ஆகிய பேராசிரியர் சிட்டிபாபு அவர்களே! அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்தின் செயலர் பேராசிரியர் அகத்தியலிங்கனார் அவர்களே! இன்று இங்கே பெருந் திரளாக வந்து குழுமியிருக்கும் தமிழ் மொழி, இலக்கணம், மொழியியல் ஆகியவற்றில் ஆர்வமும் ஈடுபாடும் கொண்டிருக்கின்ற அறிஞர்களே; ஆய்வாளர்களே! உங்களனைவருக்கும் அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்தின் சார்பிலே முதற்கண் என் வணக்கத்தையும், வாழ்த்தையும் கூறி என்னுடைய தலைமை உரையை ஆற்ற விழைகிறேன்.

---

*பேராசிரியர் மோ. இசரயேல் அவர்கள் மதுரைக் காமராசர் பல்கலைக் கழக மொழியியற்துறையின் தலைவரும், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்தின் தலைவருமாவார்.

அலுவல் நெருக்கடியான இந்தமாத இறுதிநாளிலே எவ்வாறேனும் இத்தகைய ஒரு கருத்தரங்கில் பங்கு பெற வேண்டும் என்று என் அன்புக்குரிய பேராசிரியர் அகத்தியலிங்கனார் என்னை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார்கள். ஆகவே, எவ்வளவு சிக்கல்கள் இருந்த போதிலும் இதில் கலந்து, நானும் பங்குபெற வேண்டும், அறிவைப் பெறவேண்டும், என்ற ஆர்வத்தால் உங்கள் முன்னிலையிலே வந்து நிற்கின்றேன். முதற்கண் உங்களையெல்லாம் இந்த இடத்தில் ஒரு திரளாகப் பார்ப்பதிலே பெருமகிழ்ச்சி அடைகின்றேன். அடுத்து, பேராசிரியர் சிட்டிபாபு அவர்களை நான் மிக நெருக்கமாக அறிந்தவன்; பழகியவன் என்ற முறையிலே ஒரு சில சொற்கள் அவரைப் பற்றிக் கூறிவிட்டு, 'இலக்கணமும் மொழியியலும்' என்ற தலைப்பிலே சில செய்திகளை என்னுடைய தலைமை உரையில் மிகக்குறுகிய கால அளவிலே சொல்ல விரும்புகிறேன்.

பேராசிரியர் சிட்டிபாபு அவர்கள் காட்சிக்கு எளியர்; கடுஞ்சொல் இலர். அவரிடத்திலே நான் மிக நெருங்கிச் சென்று சந்தித்துப் பேசும் வாய்ப்பைப் பெற்றவன் என்பதைச் சொல்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். எந்த நேரமாயினும் சரி அவர் மனமகிழ்வோடு என்னுடன் பொறுமையாகப் பேசிக்கொண்டிருந்த வாய்ப்பும் உண்டு. அதோடுகூட, அவர்கள் ஆய்வுப் பணிக்கும், கல்விப்பணிக்கும் ஆக்கமும் ஊக்கமும் தருவதில் எந்த நிலையிலும் தயங்கமாட்டார்கள்; எந்த நிலையிலும் ஆதரவு தருவதில் ஆர்வமாக இருப்பார்கள். இன்னொன்றையும் நான் சொல்லிக் கொள்வேன்—அவர்கள் யாரிடத்திலும் பொறுமையாகச் செய்திகளைக் கேட்டு, உள்ளத்திலே இருத்திக் கொண்டு செயலாற்ற வேண்டுமென்று எண்ணுகின்றவர்கள். பொறுப்பை வகிக்கின்றவர்கள் - அதிலும் தலைமைப் பொறுப்பை வகிக்கின்றவர்கள் இத்தகைய இயல்பைப் பெற்றிருக்கவேண்டும் என்று நான் நினைப்பதுண்டு. பேராசிரியர் சிட்டிபாபுவைப் பொறுத்தவரையிலே ஒருவர் எதற்காக எதைச் சொல்கிறார் என்பதை நன்றாக வாங்கிக் கொண்டு, அவர்கள் தக்க முடிவை எடுப்பார்கள். அதோடுகூட, 'நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின்' என்பதை

அவருடைய வாழ்க்கையிலே குறிக்கோளாக வைத்திருக்கின்றார் என்பதை நான் அடிக்கடி எண்ணிப் பார்ப்பதுண்டு. இத் தகைய நல்ல துணைவேந்தரை இந்தப் பல்கலைக்கழகம் பெற்றி ருக்கின்றது. அவருடைய வழிநடத்துதலை இந்த மொழியியல் துறை பெற்றிருக்கின்றது. இந்நிலையில் அவருடைய அன்பை யும் ஆதரவையும் அனைத்திந்தியத் தமிழ் மொழியியற்கழகம் பெற்றிருக்கின்றதை நான் உணரும்போது, பெருமகிழ்ச்சி அடைகின்றேன்; அவரை நான் பாராட்டுகினறேன்; மொழி யியற் கழகத்தின் சார்பிலும் உங்கள் அனைவரின் சார்பிலும் வாழ்த்துகின்றேன்.

அடுத்ததாக, இந்த அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்தினை நிறுவி, அதனைக் கட்டிக் காத்துவருகின்றவர் இதன் செயலர் அன்புக்குரிய பேராசிரியர் அகத்தியலிங்கனார் ஆவார். அவர் 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற குறிக்கோளிலே பணியாற்றிக் கொண்டிருப்பவர்; ஏதோ ஒன்றை எண்ணிவிட்டோம், ஆழ்ந்து எண்ணிவிட்டோம், எப்படியும் செயலாற்றவேண்டும்—அந்தத் தொடர்ச்சி, செயல் தொடர்ச்சி, பணித்தொடர்ச்சி நிகழவேண்டும் என்ற குறிக் கோளிலே இடையறாது உழைத்து, இந்த மொழியியற் கழகத் திற்கு மட்டுமல்ல தமிழ் மொழியியலின் முன்னேற்றத்திற்காக வும் அரும்பாடுபட்டு வருகின்ற இந்தச் செயலாளரை நாம் பெற்றிருக்கின்றோம். உண்மையிலே இங்கு வந்திருக்கின்ற ஒவ் வொருவரும் அவருடைய பணியைப் பற்றியும், அவருடைய ஆழ்ந்த முன்னோக்கு எண்ணத்தைப் பற்றியும், அவருடைய இடையறாத முயற்சியைப் பற்றியும் அறிந்து பெருமகிழ்ச்சி யடையத்தான் செய்வார்கள். அவருக்கு நம் அனைவருடைய வாழ்த்துதலும் பாராட்டுகளும் உரித்தாகுக. மேலும் அவர் களோடு இணைந்து பணியாற்றுபவர்களுக்கும் என்னுடைய பாராட்டுதலையும் அன்பையும் இந்த நேரத்திலே நான தெரி வித்துக்கொள்ளுகின்றேன்.

இந்த மொழியியற் கழகம் எட்டு ஆண்டுகளாகப் பணி யாற்றிக் கொண்டிருக்கின்றது; அது 'மொழியியல்' என்ற ஆராய்ச்சிக் காலாண்டிதழை வெளியிட்டு வருகின்றது. இந்த 'மொழியியல்' இதழ் மட்டுமன்றி, ஏறத்தாழ இருபத்தி ஆறு

நூல்களையும் வெளிக்கொணர்ந்திருக்கின்றது. நான் சில நாடுகளுக்குச் சென்று பார்த்தவரையிலே ஒன்றை மட்டும் ஆணித்தரமாகச் சொல்லிக்கொள்ள முடியும். இன்று இந்தியாவின் மொழியியல் வளர்ச்சியிலே தமிழ் மொழியியல் ஒரு சிறந்த இடத்தைப் பெற்றிருக்கிறது; தமிழ் மொழியியல் வளர்ச்சி மிகுதியாக முன்னேறிச் செல்கின்றது; இந்திய மொழிகள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டால், நான் உறுதியாகச் சொல்லமுடியும் இந்தியாவிலேயே தமிழ் மொழியில்தான் மிகுதியான மொழியியல் ஆராய்ச்சி நடக்கின்றது. ஆனால், இந்தி மொழியைப் பற்றிய ஆராய்ச்சி வெளிநாட்டிலே மிகுதியாக நடக்கிறது; உலகம் முழுவதும் நடைபெறுகின்ற மொழியியல் ஆராய்ச்சியை எடுத்துக் கொண்டால், இந்திமொழி ஆராய்ச்சி தான் மிகுதியாக நடக்கிறது. சோவியத்து நாட்டிற்கு சென்றால் இங்கிலாந்துக்கு சென்றால், அமெரிக்காவுக்குச் சென்றால், எந்த நாட்டிற்கு சென்றாலும் இந்திமொழி ஆராய்ச்சியில் ஈடுபடுன்றவர்கள் பலராக இருக்கின்றார்கள். ஆனால், தமிழைப் பொறுத்தவரையிலே, தமிழ் மொழியியலைப் பொறுத்தவரையிலே, நீங்கள் நன்றாக மனதில் கொள்ளவேண்டும், இந்தியாவிலேதான் மிகுதியான முன்னேற்றமான பணி நடந்திருக்கின்றது; பல நூல்கள் வெளிவந்திருக்கின்றன. பலவிதமான, அதாவது புதிய செய்திகள் தமிழில் மரபிலக்கணம் பற்றியும், பழங்கால மொழி, இடைக்கால மொழி, இக்கால மொழி பற்றியும் மிகச்சிறப்பான நூல்கள் வந்திருக்கின்றன; மிக நல்ல ஆய்வுகள் நடைபெற்றுவருகின்றன. இதற்கெல்லாம் அடிப்படையாக, முன்னோடியாக நிற்பது அண்ணாமலைப் பல்கலைக் கழகம் என்பதை நான் சொல்ல விரும்புகின்றேன்.

இனித் தமிழாராய்ச்சியிலே ஈடுபட்டுள்ள நிறுவனங்களை நீங்கள் எண்ணிப்பார்த்தால், பூனாவிலுள்ள டெக்கான் கல்லூரி, கேரளப் பல்கலைக் கழகம், திராவிட மொழியியற் கழகம், மதுரைக் காமராசர்ப் பல்கலைக் கழகம், தமிழ்ப் பல்கலைக் கழகம், மைசூரிலுள்ள இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், சென்னையிலுள்ள உலகத் தமிழ் ஆய்வு நிறுவனம், தமிழ் மொழியியற் கழகம் போன்ற அமைப்புகள் சீரிய பணியினை நடத்திக் கொண்டிருக்கின்றன என்பதை அறிய முடியும்.

திருப்பதியிலுள்ள வெங்கடேசுவராப் பல்கலைக்கழகம், ஐதரா பாத்திலுள்ள உஸ்மானியாப் பல்கலைக்கழகம், தில்லிப்பல்கலைக் கழகம், இங்கெல்லாம் ஒருசிலர் தமிழ்மொழி ஆராய்ச்சியிலே ஈடுபட்டிருப்பதையும் அறியலாம். இந்த நிலையிலே, இந்திய அளவிலே தமிழ் மொழியில் மிகுதியான மொழியியல் ஆராய்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை எண்ணி என்னைப் போன்றே நீங்களும் மகிழ்ச்சி அடையக் கடமைப்பட்டிருக்கி றீர்கள்.

நான் அடிக்கடி இலக்கிய ஆராய்ச்சி, மொழி ஆராய்ச்சி என்று இருவகையிலே எண்ணியதுண்டு. ஒருவேளை மொழி ஆராய்ச்சிதான் மிகுதியாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறதோ என்று கூட நான் நினைத்ததுண்டு. ஏனென்றால், இலக்கிய ஆய்வாளர்கள் குறைவாகவே காணப்படுகின்றனர். இந்தநேரத் திலே இலக்கியத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஆய்வு பற்றி சற்று சொல்ல விரும்புகின்றேன். குறை கூறுவது அன்று என் நோக்கம். மொழியியலிலே கண்டிருக்கின்ற புதிய செய்திகள், வகுத்திருக்கின்ற நெறிமுறைகள், இன்று கண்டிருக்கின்ற சில தெளிவுகள் போல இலக்கிய ஆய்விலே ஏற்படவில்லை என்பதை மிக வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். இலக் கியத்திலும் இணையான ஆய்வு வளர்ச்சி ஏற்படவேண்டும். இலக்கிய ஆய்வில் ஒரு புதிய பணி அதாவது இலக்கியத்தை யும் சமுகவியலையும், இலக்கியத்தையும் மானிடவியலையும்' இலக்கியத்தையும் உளவியலையும், இலக்கியத்தையும் அரசியலை யும் புகுத்திப் பொருத்தி—அதாவது இருதுறை இணைந்து ஆற்றுகின்ற ஆய்வுகள் பல வெளிவந்தால், இலக்கிய அறிவு வளர்ச்சி மிகுதியாகப் பயன் பெறும் என்று நினைக்கின்றேன். ஆகவே, இந்தத் துறைகளிலே இலக்கிய ஆய்வாளர் இன்னும் ஈடுபட வேண்டும். வெளிநாட்டுத் திறனாய்வுகளை மட்டும் பின்பற்ற வேண்டுமென்பதில்லை. பிறதுறை அறிவைப் புகுத்தி இலக்கிய ஆய்வை நடத்த வேண்டுமென்று நான் இந்த இடத் திலே சுட்டிச்சொல்ல விரும்புகிறேன்.

தமிழ் மொழி ஆய்வு - தமிழ் மொழியியல் ஆய்வு இன்று மிகுதியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்று நாம்

சொல்லுகின்ற பொழுது, 'இலக்கணம்-மொழியியல்' என்ற கருத்தைப் பற்றிச் சில செய்திகளை நான் சொல்ல விரும்புகின்றேன். மரபு நெறியாலே இலக்கணம் பயின்றவர்கள் இலக்கணமே சிறப்புடையது என்று பாராட்டலாம். இலக்கணத்திற்கும் மொழியியலுக்கும் முரண்பாடு உள்ளதா? இலக்கணமும் மொழியியலும் ஒன்றா? ஆகிய வினாக்களுக்கு ஓரளவு விடை கூற நான் முயற்சி செய்கின்றேன். ஒருவேளை உங்களுக்கு மனநிறைவு ஏற்படாவிட்டால், அடுத்து நடக்கவிருக்கும் கலந்துரையாடலில் 'இலக்கணம் பயிற்றுவித்தல்' எனும் தலைப்பில் விவாதத்திற்கு அடியெடுத்துத் தரும்பொழுது இதைப்பற்றி இன்னமும் விரிவாக உரையாடுவேன். இலக்கண அறிஞர் மொழியியல் அறிஞருக்கு ஒன்றும் தெரியாது என்று சில ஆண்டுகளுக்கு முன்னால் சொல்லி வந்தார்கள். அதாவது, நான் 1968-ஆம் ஆண்டு மதுரைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றத் தொடங்கியபோது மொழியியலுக்கு ஒரு பெரிய வெறுப்பு அங்கே இருந்ததைக் கண்டேன். கல்லூரி இணைவகுப்புகளுக்கு மொழியியல் கற்பிக்கும்படி என்னைக் கேட்டுக்கொண்டார்கள்; இந்த வகுப்புகளிலே நான்கைந்து கல்லூரிகளும், பல்கலைக் கழக மாணவர்களும் பங்குபெற்றார்கள்; அப்பொழுது பொறுப்பிலிருந்த ஒரு பெரியவர் என்னிடத்தில் சொன்னது ஞாபகத்திற்கு வருகிறது. 'நீங்கள் மொழியியலை மிகுதியாகப் பாராட்டிச் சொல்லிவிடாதீர்கள், கல்லூரிகளிலிருந்து உங்களுக்கு பெரிய எதிர்ப்பு வரும்' என்று. உண்மையிலேயே அன்றிருந்த நிலை அதுதான். மொழியியல் என்றால் ஒரு வெறுப்புணர்ச்சி உண்டு. ஆனால் காலப்போக்கில் என்ன நிகழ்கிறது என்றால், இலக்கணமும் மொழியியலும் இணைந்து செல்லுகின்ற நிலை, ஒன்றுபட்டு (உழைக்கின்ற) நிலை, ஒன்றுபட்டு அறிவு வளர்ச்சியிலே முன்னேறுகின்ற நிலை இவற்றை நான் காணுகின்றேன். பொதுவாக மொழியியல் என்றாலே கல்லூரிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் பலர் வெறுப்படைந்திருந்தார்கள். அதுபோல மொழியியலை நன்றாக அறிந்தவர்கள் வெளிநாட்டிலே சென்று பட்டம் பெற்றுவிட்டோம்; அங்கே கலிபோர்னியா பல்கலைக்கழகம், நியூயார்க் பல்கலைக்கழகம் போன்றவிடங்களில் மொழியியல் பட்டம் பெற்றுவிட்டோம்; இந்த மரபு இலக்கணத்திலே இவர்கள் எதைச் சொல்லிக் கொண்டிருக்

கிறார்கள்? அவர்களுக்கு என்ன தெரியும்? என்றெல்லாம் இழிவாக எண்ணியதுண்டு. மரபு இலக்கண அறிஞர்கள், மொழியியல் அறிஞர்களுக்கு ஒன்றும் தெரியாது என்று சொல்ல மொழியியல் அறிஞர்கள், மரபு இலக்கணம் பயின்றவர்கள் தொல்காப்பியமா, நன்னூலா இதையே பேசிக்கொண்டிருக்கிறார்களே என்று குறைகூற இருவேறு சாராராகப் போட்டி போட்டுக் கொண்டிருந்த காலம் படிப்படியாக மாறி, இன்று ஒரு புதுமையான காலத்தை நாம் அடைந்திருக்கின்றோம். அறிவு வளர்ச்சிதான் இதற்குக் காரணம்; ஒருவரை ஒருவர் எண்ணி அறிந்து கொண்டதுதான் இதற்குக் காரணம். மரபு இலக்கண அறிஞர்கள் மொழியியலிலே ஈடுபடுகின்றார்கள்; மொழியியல் அறிஞர்கள் இலக்கணத்திலே ஈடுபடுகின்றார்கள்; மரபிலக்கண நூற்களிலே கிடைக்கின்றது மொழியியல் இல்லையா? தொல்காப்பியம் மொழியியல் இல்லையா? நன்னூல் மொழியியல் இல்லையா அல்லது வீரசோழியம் மொழியியல் இல்லையா? மொழியைச் சொல்லவில்லையா அல்லது மொழியின் இயல்பைச் சொல்லவில்லையா? என்ற ஆராய்ச்சி வினாக்கள் இன்று எழுந்துள்ளன. தொல்காப்பியர் முன்பே "எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி, வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்" என்று கூறியுள்ளார். அவர் பேச்சு வழக்கு மொழியை எடுத்தார்; செய்யுள் வழக்குமொழியை எடுத்தார். ஆகவே எழுத்து, சொல், பொருள் ஆகியவற்றையும் இலக்கணம் என்று பொதுவாகக் குறிப்பிட்டுள்ளார் என்றே கருதவேண்டும். இலக்கணம் என்ற சொல்லிலே குழப்பம். இலக்கணம் என்றால் மொழியின் இயல்பு அல்லாத ஒன்று என்று நாம் நினைக்கின்றோம். மாணவர்களுக்கும் மரபிலக்கணத்தை நன்றாகப் பயிற்றுவித்த ஆசிரியர்கள், இத்தகைய அச்சத்தை ஊட்டியதால் தான் இலக்கண அறிவே குறைந்துபோய் விட்டது. பலருடைய மனதிலே ஏற்படுகின்ற கவலை என்னவென்றால், மரபிலக்கணத்திலே ஆழமாக ஈடுபட்டு அதிலே ஆர்வம் காட்டுகிறவர்களுடைய எண்ணிக்கை மிகக் குறைந்து வருகிறது; ஒருவேளை இன்னும் சில ஆண்டுகளிலே மரபிலக்கணத்தைத் தீண்டுவார் இல்லாமல் போய்விடுமோ என்பதுதான். மரபிலக்கணம் நமது மொழியை வளர்க்கும் ஒரு சொத்து; நமது நிலையான சொத்து. தொல்காப்பியரின் காலத்திலே இருந்த வழக்கு மொழியையும்

செய்யுள் மொழியையும்—செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு-செந்தமிழ் வழங்கிய அந்த நிலத்திலே அன்று பொருந்திய மொழியையும்தான் எடுத்தார். முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணித்தான் தொல்காப்பியர் சொன்னார்; பழைய நூல்களையெல்லாம் பார்த்தார். அதை முறைப்படச் சொல்ல வேண்டும் என்று நினைத்தார்; மொழியின் எழுத்தியல்பைச் சொல்லவேண்டும் என்று நினைத்தார்; சொல்லியல்பைச் சொல்ல வேண்டும் என்று நினைத்தார்.

இலக்கணம் என்ற சொல் தமிழ்ச்சொல் அன்று. அதிலிருந்து நாம் இலக்ஷண் என்ற ஒன்றை ஆக்கவேண்டாம். இலக்கணம் உடையவர் என்ற பொருளாகுமே அன்றி இலக்கணம் சொல்லு கிறவர்கள் என்று வராது. ஆகவே, இலக்கணம் என்ற சொல்லே வடசொல்லாக இருப்பதினாலே, அது நமக்கு ஒரு குறை. இலக்கணம் என்பது மொழி இயல்பு, அந்த மொழியின் இயல்பைத் தான் தொல்காப்பியர் கூறுகின்றார். எழுத்து மொழியின் இயல்பு, எழுத்தின் இயல்பு, சொல்லின் இயல்பு, பொருளின் இயல்பு, தொடர் இயல்பு என்றுதான் சொல்லிக் கொண்டு செல்கின்றார். மரபிலக்கணம் என்று சொல்லும்போது அப்படியே நாம் மாணவர்கள் கட்டளை இலக்கியமாகப் படிக்கவேண்டும் அல்லது இலக்கணத்திலே ஈடுபடுகிறவர்கள் படிக்கவேண்டும் என்று நாம் வலியுறுத்துகின்றதனாலோ அல்லது ஒரு அச்சத்தை மறைமுகமாக நாம் ஏற்படுத்துகின்றதனாலோ இந்த இலக்கணத்திலே பலருக்கு ஈடுபாடும் ஆர்வமும் இல்லாமல் போய்விடுகிறது. கணிதத்திலே ஈடுபடுகின்ற ஒரு அறிஞன் கணிதத்திலே ஆழமாக ஈடுபடும்போது, அதிலே ஆர்வம் ஏற்படும்போதுதான் கணிதத்திலே ஆற்றலுடையவன்'- வல்லுநன் ஆகமுடியும். அதுபோல் மொழியின் இயல்பிலே நமக்கு ஈடுபாடும் ஆர்வமும் ஏற்படும் போது ஒரு நல்ல முடிவைக் காணலாம் அல்லவா! இவ்வாறு மொழியின் இயல்பிலே ஒரு நல்லமுடிவு, நல்ல தெளிவு ஏற்பட்டு, தனக்கு இதிலே ஆற்றல் இருக்கிறது, அதைப் பகுத்து, தொகுத்து, தெளிவாகப் பிறருக்கு விளக்கும் வகையிலே சொல்ல முடியம் என்ற உறுதி ஏற்படும் போது, உண்மையாகக் கணிதத்தில் வல்லுநனுக்கு ஏற்படும் மகிழ்ச்சியைவிட மொழி வல்லுநனுக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்படும். இலக்கணத்திலே அவனுக்கு மிகுதி

யான மகிழ்ச்சி இருக்கும் என்று நான் இந்த இடத்திலே உங்களுக்கு உறுதியாகச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். இலக்கணத்தைப் பற்றி அச்சம் வேண்டாம், இலக்கணம் அந்தந்தக் காலத்தில் இருந்த மொழி இயல்பை விளக்குகின்ற ஒன்றுதான். இனி, ஒருவேளை அது வரலாற்று இலக்கணமாக இருக்கலாம்; வரலாற்றுச் செய்தியை விளக்குகின்றதாகவும் இருக்கலாம்; ஒருவேளை அது கட்டளையின் ஒருசார் உடையதாகவும் இருக்கலாம். இந்நிலையில் தொல்காப்பிய மொழிக்கு நாம் விளக்கம் காண்கின்றோம். சங்க இலக்கியமொழிக்கு விளக்கம் காண்கின்றோம். ஆழ்வார்களின் மொழிக்கு விளக்கம் காண்கின்றோம். தேவாரம், திருவாசகம் மொழிக்கெல்லாம் நாம் விளக்கம் காண்கின்றோம். ஆகவே, இந்த மொழியியல் அறிவு, இலக்கண அறிவை இன்னும் தெளிவு படுத்தி அறிந்து கொள்ள, இலக்கண அறிவில் உறுதி ஏற்பட துணை நிற்கின்றது.

அன்று மனிதன் கால்நடையாக நடந்து சென்றுகொண்டிருந்தான். இன்று ஈரிருளையிலே செல்கின்றான், பேருந்துகளிலே செல்கின்றான், விண்ணிலே பறக்கின்றான், கடலிலே கப்பலிலே செல்கின்றான். ஆகவே, நமது போக்குவரத்திற்குப் புதுப்புது வழிவகைகளைக் கண்டு கொள்ளுகின்றோம். இலக்கண விளக்கத்திலும் புதுமைகளைக் கண்டு கொண்டிருக்கின்றோம். அறிவியல் வளர்கின்றது; மனிதனுடைய அறிவு மாறுகின்றது. மனிதன் புதுமை எண்ணத்தைப் பெறுகின்றான்; ஆய்வு மனப்பான்மை ஏற்படுகின்றது. நம்முடைய மூதாதையர்களைவிட நாம் பல துறைகளிலே முன்னேறி இருக்கின்றோம். ஆடை அணிவதிலே, சத்தான உணவு உண்ணுவதிலே, இன்னும் நமது பழக்கவழக்கங்களிலே பொது இடங்களில் நடந்துகொள்வதிலே அல்லது ஒரு குழுவிலே பங்கேற்பதில் அல்லது ஒரு செயலைத் திறனாகச் செயல்படுத்துவதிலே முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றதல்லவா! அதுபோல இலக்கண மரபிலே ஏற்பட்டிருக்கின்ற மாற்றம்தான் இன்றைய மொழியியல் என்று சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

இலக்கணத்தை நாம் சொன்னால், கட்டளை இலக்கணம், வரலாற்று இலக்கணம், ஒப்பிலக்கணம் என்றெல்லாம் பாகு

படுத்திச் சொல்லமுடியும். இதுபோலவே மொழியியலில் பாகுபாடு வளர்ந்திருக்கின்றதென்றால் இலக்கண மரபிலே-பண்டைய மொழியியல் மரபிலே நமக்கு ஏற்பட்டிருக்கின்ற அறிவு வளர்ச்சியின் பயன் ஆகும். ஆகவே, இலக்கணமும் மொழியியலும் ஒனறிலிருந்து ஒன்று வேறானதே அல்ல. இலக்கணத்தைப் புரிந்துகொள்ள மொழியியல் துணை செய்கின்றது. இந்த நிலையிலேதான் அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்திலே இப்பொழுது நடைபெறுகின்ற கருத்தரங்கு 'இலக்கணமும் மொழியியலும்' என்ற பொருளின் கீழ் நடக்கவிருக்கின்றது. இத்தகைய ஒரு சிறந்த பொருளை இம்முதற் கருத்தரங்குக்கு எடுத்து, தக்க ஆய்வாளர்களை அழைத்து, உங்களையெல்லாம் இதில் ஈடுபடச் செய்த, செய்து வருகின்ற இந்த அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்தின் செயலாளர் பேராசிரியர் அகத்தியலிங்கனார் அவர்களுக்கு என் வாழ்த்தினையும், இந்த நேரத்திலே எனக்குத் தலைமை உரை ஆற்றக் கிடைத்த வாய்ப்பிற்கு என் உளமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்து முடிக்கின்றேன்.

மொழியியல் 8. 3 & 4 (1985)
முதல் மொழியியல் கருத்தரங்குக்
கட்டுரைக் கோவை

துவக்க உரை

பேராசிரியர் சை. வே. சிட்டிபாபு*

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்தின் தலைவர் பேராசிரியர் இசரயேல் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் மொழியியல் உயராய்வு மையத்தின் இயக்குநரும், கழகத்தின் செயலாளருமான பேராசிரியர் அகத்தியலிங்கம் அவர்களே, அறிஞர் பெருமக்களே!

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம் பல்கலைக்கழக மானியக்குழுவின் உதவியோடும், அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆதரவோடும் நடத்தும் முதல் கருத்தரங்க மாநாட்டில் கலந்து கொள்வதில் பெருமகிழ்ச்சியும் பெருமையும் கொள் கிறேன்.

---

*பேராசிரியர் சை. வே. சிட்டிபாபு அவர்கள், முன்னாள் கல்லூரிக் கல்வி இயக்கு நரும், மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தரும், இந்நாள் அண்ணா மலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தரும் ஆவார்.

இந்தக் கருத்தரங்க மாநாடு பல வகையிலும், நோக்கிலும் சிறப்புடையது என்று கருதுகிறேன். இதற்குப் பல காரணங்களைச் சொல்லலாம். ஒன்று நீங்கள் ஆய்வுப் பொருளாக எடுத்துக் கொண்ட ''இலக்கணம் எப்படிக் கற்பிப்பது'' என்ற தலைப்பே சிறப்பு வாய்ந்தது. ஏனெனில் இன்று மாணவர்கள் இலக்கணம் என்றாலே கசப்பாகக் கருதி ஒதுக்கி விடுவார்கள். இந்த நேரத்தில் இலக்கணத்தைக் கசப்பில்லாமல் இனிப்பாக எடுத்துச் சொல்லும் முயற்சியும் மாணவர்களை இலக்கணத்தில் ஈடுபாடு கொள்ளச் செய்யும் முயற்சியும் கல்வித்துறையில் உள்ள எல்லோராலும் பாராட்டுதற்குரியது. இன்னுமொரு சிறப்பு, பள்ளிகளிலிருந்தும் கல்லூரிகளிலிருந்தும் பல்கலைக் கழகங்களிலிருந்தும் ஆசிரியர்கள் வந்து கூடி இலக்கணத்தை ஆய்வுப்பொருளாகக் கொண்டு கருத்தரங்கு நடத்துவது தனித்துவம் உடையதாகும்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நடத்தும் பல கருத்தரங்குகளிலும் இப்படிப் பலதரப்பட்ட ஆசிரியர்களும் கூடிக் கருத்துப் பரிமாற்றத்திற்கும் கருத்து வளர்ச்சிக்கும் வழிவகுப்பது பல ஆண்டுகளாக நடந்து கொண்டிருக்கிறது. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெறும் பாடம் கற்பிக்கும் நிறுவனமுமல்ல; உயராய்வு நடத்தும் நிறுவனமுமல்ல. கடவுள் அருளைப் பெற்ற யாரோ சிலர்தான் பல்கலைக்கழகத்தில் நுழைய முடியும் என்று நினைக்கும் நிறுவனமுமல்ல. எல்லா நிலைப்பட்ட ஆசிரியர்களையும் ஒன்று கூட்டி அறிவுப் பரிமாற்றத்திற்கு வழிவகுப்பதையே இந்தப் பல்கலைக்கழகம் தன்னுடைய தலையாய கடமையாகக் கொண்டுள்ளது. 'Symbiosis' என்று தாவரவியல் குறிப்பிடுவது போல பலதரப்பட்டவர்களையும் இணைக்கும் பாலமாகப் பல்கலைக்கழகம் இயங்க வேண்டும் என்பதே எனது பேராவல். அதற்கேற்ப இப்பல்கலைக்கழகம் பல கருத்தரங்குகளை நடத்தி வருவது சிறப்பாகக் குறிப்பிடத் தகுந்தது. நான் கல்லூரி ஆசிரியனாக வாழ்வைத் தொடங்கினாலும் பள்ளிக் கல்வி இயக்குநராகவும் கல்லூரிக் கல்வி இயக்குநராகவும் பல்கலைக் கழகத் துணைவேந்தராகவும் இருந்ததால் பலநிலைப்பட்ட ஆசிரியர்களுடன் ஒன்றுக்கூடிக் கல்விப்பணி செய்ய வேண்டும் என்று நினைப்பவன். அதனாலேயே பல இடங்களிலும் இக் கருத்தைச் சமயம் வாய்க்கும் போதெல்லாம் வற்புறுத்தி வருகி

றேன். பள்ளி ஆசிரியர் பள்ளி ஆசிரியராகவே ஓய்வு பெறுவது, கல்லூரி ஆசிரியர்கள் அவர்கள் தனி உலகத்தோடு வாழ்ந்து பிற ஆசிரியர்களோடு பழகாமல் இருந்து வருவது பழைய காலத்துப் பண்பாகும். தொடக்கப் பள்ளி ஆசிரியர்களிடத்தில் கூட பல நற்பண்புகளை நான் கண்டு பாராட்டியிருக்கிறேன். என்னுடைய தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, கல்லூரித் தமிழாசிரியர்களை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன். இன்னும் அவர்களை நினைக்க நினைக்க பெருமகிழ்ச்சி பொங்குகிறது.

ஒவ்வொரு நிலை ஆசிரியர்களும் ஒவ்வொருவித சாதியினர் போல ஒதுங்கி வாழ்வது கல்வி வளர்ச்சிக்கு நல்லதல்ல. இந்த நேரத்தில் வரலாற்று ஆசிரியனான எனக்கு 18-ம் நூற்றாண்டில் அமெரிக்காவில் வாழ்ந்த மண்ட்ரோ என்பவரின் நினைவுதான் வருகிறது. அவர் அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவிற்கும் எந்த விதத் தொடர்பும், தலையீடும் வேண்டாம் என்று தனித்து இருக்க வேண்டும் என்ற கொள்கையை வற்புறுத்தி வந்தார். அதனால் அது "மண்ட்ரோ கொள்கை" என்றே வரலாற்றாசிரியர்களால் குறிப்பிடப்படுகிறது. ஆனால் வில்சன் (குடியரசுத் தலைவர்) வந்தபிறகு அந்தக் கொள்கையைப் புறக்கணித்து ஐரோப்பாவோடு தொடர்பு கொண்டு 'கொண்டும் கொடுத்தும் வாழ்வோம்' என்ற கொள்கையை வலியுறுத்தி அமெரிக்க நாட்டு வரலாற்றில் பல புதுமைகள் செய்தார்.

இதைப்போலவே கல்வித்துறையில் மண்ட்ரோ கொள்கை சிலகாலம் நிலவி வந்தது. அதாவது தொடக்கப் பள்ளி ஆசிரியர்கட்கும், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கட்கும், கல்லூரிப் பல்கலைக்கழக ஆசிரியர்கட்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லாமல் இருந்து வந்தது. வேறு வகையாகச் சொன்னால் பழங்கால வருணப்பாகுபாடு போல வேற்றுமையே நிலவி வந்துள்ளது. ஒவ்வொரு நிலை ஆசிரியர்களும் ஒவ்வொரு தனித் தனி உலகில் வாழ்ந்து வந்தனர். கல்லூரி, பல்கலைக்கழக ஆசிரியர்கள் தமிழறிவு தங்களுக்கு சொந்தமானது என்று உரிமை கொண்டாடி வந்தார்கள்.

இன்று அந்த நிலைமாறி எல்லா நிலை ஆசிரியர்களும் இக் கருத்தரங்கில் கலந்து கொள்ள வந்திருப்பதைக் காணப் பெரு மகிழ்ச்சியடைகிறேன். குறிப்பாக அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இதில் முன்னணியில் இருக்கிறது என்பதில் பெருமைப் படுகிறேன். இதற்கு ஒரு நல்ல சான்று அண்ணாமலைப் பல் கலைக்கழகம் நடத்தும் பல்வேறு கருத்தரங்குகள். இந்தக் கருத் தரங்கும் இந்த வேறுபாட்டை முழுமையாக நீக்கிவிட்டது என்று கருதுகிறேன். ஒரு பெரிய மரத்தை ஒரு கோடாரியால் வெட்டி வீழ்த்துவது போல நிலை வேறுபாடாகிய மரத்தை கருத்தரங்கக் கோடாரியால் வெட்டி வீழ்த்திவிட்டீர்கள்.

மொழியியலும் இலக்கணமும் ஒன்றையொன்று சார்ந்திருப் பவை. இரண்டும் இரண்டு வேறு உலகத்தைச் சார்ந்தன அல்ல. ஒன்றில்லாவிட்டால மற்றொன்று வாழாது, வளராது.

பழங்காலத்தில் இந்தியா வளர்த்த பல விஞ்ஞான ஆய்வு களில் மொழியியலுக்குத் தனி இடம் உண்டு. கிறித்துவ சகாப் தம் ஆரம்பிப்பதற்கு முன்னரே மிகப் பெரிய மொழியியல் அறி ஞர்களான பாணினியையும், தொல்காப்பியரையும் தோற்று வித்த பெருமை இந்த தேசத்துக்கு உரியது. என்றாலும் தமிழ கம சில தனித்த பெருமைகளை உடையது என்பது உலக வர லாற்றை நோக்கும்போது புலனாகிறது. கிரேக்கம், வடமொழி ஆகிய மொழிகளில் பழைய இலக்கியங்களைப் பாதுகாப்பதற் கும், படித்துப் புரிந்து கொள்வதற்கும் உதவி செய்யத் தோன் றியது மொழி ஆராய்ச்சி. காலப்போக்கில் இது மொழிகளின் அமைப்பை ஆராயும் மொழியியல் ஆராய்ச்சியாக ஒருபுறமும் மற்றொரு புறம் யாப்பு, அலங்காரம் ஆகியவற்றை உணரும் ஆராய்ச்சியாகவுமே மலர்நதது. ஆனால் தமிழ் மொழியில் முதலில் தோன்றிய இலக்கண நூலான தொல்காப்பியம் எழுத்த திகாரம், சொல்லதிகாரம் என்ற இரண்டு அதிகாரங்களிலும் மொழி அமைப்பைத் துல்லியமாகவும் நுண்மையாகவும் வரு ணிக்க, மூன்றாவது அதிகாரமான பொருளதிகாரம் இலக்கியத் துக்குரிய வடிவம், உள்ளீடு, மரபு ஆகியவற்றை விளக்குகிறது. இது வேறு எந்த மொழியினும் காணப்படாத புதுமை ஆகும். எனவே மொழியியல் ஆய்வு என்பதை மொழியின் அமைப்பை

விளக்கும் ஆய்வு என்று மட்டும் கருதாமல் அந்த மொழியி லுள்ள இலக்கியத்தைப் படிப்பதற்குத் துணை செய்வது என்று கருதி இலக்கியத்தைப் பலநோக்கிலும் பொருள், யாப்பு, அணி, மெய்ப்பாடு, மரபு என்ற முறையில் விளக்கியது பழங்காலத் தமிழ் மக்களின் ஆய்வுத் திறனுக்கும் உழைப்பிற்கும் சாட்சி ஆகும்.

இத்தகைய பாரம்பரியம் உடைய தமிழகத்தில் அண்ணா மலைப் பல்கலைக்கழக மொழியியல்துறை தென்னாட்டில் முதல் முதலாகத் தோன்றியதாகும். அண்ணாமலைப் பல்கலைக்கழக வெள்ளிவிழாவுக்காக நடுவண் அரசு அளித்த மானியத்தில் தொடங்கப்பட்ட துறையே மொழியியல்துறை. வெள்ளிவிழா வுக்குப் பல்கலைக்கழக மானியக்குழு கொடுத்த மானியமே மொழியியல்துறை உருப்பெறுவதற்கு காரணம் ஆகும். மொழி யியல்துறை துவங்கிய சில ஆண்டுகளுக்குள்ளேயே உயர் ஆய்வு மையமாக உயர்த்தப்பெற்று பெருஞ்சிறப்பைப் பெற்று விட்டது. இதற்கெல்லாம் மூல காரணம் அன்றைய இணைவேந் தர், மறைந்த மாமனிதர் டாக்டர் ராஜா சர் முத்தைய செட்டி யார் அவர்கள். அவர் முப்பத்தாறு ஆண்டுக் காலம் அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தில் இணை வேந்தராக இருந்து பல் கலைக்கழகத்தைக் கண் இமை போல் கட்டிக் காத்ததோடு பல புதிய துறைகள் ஏற்படவும் உதவி செய்தார். இன்றைய மொழியியல்துறை முதன் முதலில் தமிழ் ஒழிந்த திராவிட மொழிகளின் ஆராய்ச்சித்துறையாக (1956 இல்) துவங்கப்பட் டது. அப்பொழுது தேவநேயப்பாவணர் தலைவராக இருந்து சொற்பிறப்பு அகராதிப் பணியைச் செய்துவந்தார். 1958இல் பேராசிரியர் தெ. பொ. மீ. தமிழ்த்துறைத் தலைவராக வந்த பொழுது பல்கலைக்கழகம் திராவிட மொழியியல் துறையை மொழியியல்துறை என்று மாற்றி அவரைத் தலைவராக்கியது. அப்பொழுது, அவர் தலைமையில் நடந்த ஆராய்ச்சி திறனைக் கண்ட பல்கலைக்கழக மானியக்குழு அத்துறையை மொழியியல் உயர் ஆய்வு மையமாக (1963 இல்) ஆக்கி (Centre of Advanced Study in Linguistics) துறை வளர்ச்சிக்கு முழுமையும் உதவியது. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் 1966 இல் மதுரை துணை வேந் தராக நியமிக்கப்பட்டதால் 1967 இல் பேராசிரியர் அகத்திய

லிங்கம் இயக்குநராக நியமிக்கப்பட்டார். பேராசிரியர் தெ. பொ. மீ. துணைவேந்தராக ஆனபோதிலும் மொழியியல் வளர்ச்சியில் கருத்துச் செலுத்தி வந்தார். அவரே, அனைத்திந்திய மொழியியல் கழகம் 1977இல் அமைக்கப்பட்டபொழுது, அதன் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு அவரது இறுதிக்காலம் (1980) வரை அப்பதவியை வகித்து வந்தார். அவர் தமிழகத்தில் மொழியியல் வளர்ச்சிக்கு பாடுபட்ட வரலாறு எல்லோரும் அறிந்த ஒன்று.

அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல்துறைக் கருத்தரங்குக்கு வருகை தந்துள்ள அனைவரையும் பல்கலைக்கழகச் சார்பில் வரவேற்கும் அதே சமயத்தில் இந்தத் துறையின் சாதனைகளையும் நினைவுபடுத்த விரும்புகிறேன். கடந்த பத்து, பதினைந்து ஆண்டுகளுக்குள் 75க்கும் மேற்பட்ட டாக்டர் பட்ட மாணவர்களை உருவாக்கி இந்தியாவில் எல்லாப் பகுதிகளிலும் வெளிநாடுகளிலும் அனுப்பியுள்ளது இத்துறை. 70க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுத் திராவிட மொழி ஒப்பிலக்கணம், வரலாற்று ஆய்வு, பழங்குடி மக்கள் ஆய்வு, கிளை மொழியியல் ஆய்வு போன்ற பல துறைகளில் உலகத்தின் கவனத்தையே ஈர்த்துள்ளது. நான் வெளிநாடுகள் செல்லும் பொழுதெல்லாம், நம் மொழியியல் துறை பற்றிப் பல அறிஞர்கள் என்னிடம் உசாவி மகிழ்ந்ததுண்டு. அதனுடைய பெருமைகளை, அவர்கள் கூறக் கேட்கும்போது இப்பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் என்ற முறையில், பெருமையும், பூரிப்பும் பெற்றதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சிறப்பாக, அண்மையில் நான் அமெரிக்கா கலிபோர்னியா பல்கலைக்கழகம் சென்றிருந்தபொழுது, திராவிடமொழி ஆராய்ச்சியில், உலகப் பேரறிஞராகக் கருதப்படும் பேராசிரியர் எமினோ அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல்துறையைப் பற்றி புகழ்ந்துரைத்த வார்த்தைகள் இன்னும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. மேலும் சங்கத்தமிழ், இடைக்காலத்தமிழ், இன்றைய தமிழ், தமிழ்மொழி கற்பித்தல், அறிவியல் நோக்கில் இலக்கணம் கற்பித்தல், பிற மொழியினருக்குத் தமிழ் கற்பித்தல், பழங்குடி மக்களின் மொழியாராய்ச்சி, கல்வெட்டாராய்ச்சி, புதிய பார்வையில் மரபு இலக்கண ஆராய்ச்சி, வயது வந்தோர் கல்வி

போன்ற இன்னோரன்ன பல துறைகளில் ஆய்வு நடத்தி வரு கிறது இத்துறை.

மொழியியல் துறை இதுவரையிலும் முப்பது கருத்தரங்கு களை நடத்தித் திராவிட மொழி ஆய்வில் உள்ள உள்நாட்டு, வெளிநாட்டு அறிஞர்களை ஒன்றுகூட்டித் திராவிட மொழியி யல் ஆராய்ச்சிப் பாதையைச் செப்பனிட்டுள்ளது. துறை ஆசிரி யர்கள் அவரவர் தாய்மொழியில் மாணவர்களும் பிற துறை அறிஞர்களும் அறிந்து கொள்ளும்படி பல நூல்களை வெளியிட் டுள்ளனர். மொழியியல் துறையின் தொண்டுகளில் இன்றைய நோக்கில் சிறந்து விளங்குவது அனைத்திந்தியத் தமிழ் மொழி யியல் கழகம்தான் என்று கூறுவதில் தவறில்லை என்று எண்ணு கிறேன். தமிழகத்தில் வாழும் ஆய்வாளர்களையும் மொழியியல், இலக்கணம் ஆகியவற்றில் ஆர்வம் கொண்ட மாணவர்களையும் ஆசிரியர்களையும் ஒன்று கூட்டி அதன் ஆதரவில் மொழியியல் என்ற காலாண்டு இதழைக் கடந்த எட்டு ஆண்டுகளாக எட்டு தொகுதிகளில் வெளியிட்டுள்ளது பாராட்டுதற்குரியது. தமிழிலும் ஆங்கிலத்திலும் தமிழ் மொழி பற்றி நூல்களை எழுதத் தூண்டி மொழியியற் கழகத்தின் ஆதரவில் 26 நூல்களை வெளியிட்டுள்ள பெருமையும் இக்கழகம் பெற்றுக் கொண்டுள்ளது. ஆங்கிலத்தி லும் தமிழிலும் வெளிவரும் இந்நூல்கள் இவர்களின் ஆய்வுக் கருத்துக்கள் அகில உலக அறிஞர்களுக்கும், தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கும் பயனுள்ளவைகளாக விளங்குகின்றன. தங்கள் ஆராய்ச்சியின் பயன் ஒருசில அறிஞர்களுக்கு மட்டுமன்றி தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கும் சென்று சேரவேண்டும் என்ற ஒரே எண்ணத்தில்தான் தமிழ் நூல்கள் வெளிவருகின்றன. இதே நோக்கத்தில்தான் அனைத்திந்தியத் தமிழ் மொழியியல் கழகமும் தோன்றியது என அறிகிறேன்.

இவ்வாறு மொழியியல் வளர்ச்சிக்குப் பலவேறு நோக்கில் பாடுபட்டு வரும் அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் துறை இந்த ஆண்டு பல்கலைக்கழக மானியக் குழுவின் ஆதர வோடு அனைத்திந்தியத் தமிழ் மொழியியல் கழகத்தின் முதல் கருத்தரங்க மாநாட்டினை நடத்துவது பாராட்டுவதற்கு உரியது.

மொழியியல் அறிஞர்களும் இலக்கண அறிஞர்களும் அந்தத் துறைகளில் ஆர்வமுள்ளவர்களும் உவப்பத் தலைகூடி பல பிரச்சனைகளை ஆராய முன்வந்துள்ளீர்கள். பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் இலக்கணம் கற்பித்தல்பற்றிய கலந்துரையாடல் இன்கறைய சமூகத் தேவையை ஒட்டி எழுந்தது இன்றைய மாணவர்கள் இலக்கணத்தை வேப்பங்காயாகக் கருதும் நேரத்தில் அதன் காரண காரியங்களை ஆராய்வது உங்களுடைய சமூக விழிப்புணர்வையே காட்டுகிறது. இதை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

இந்தக் கருத்தரங்குக்குத் தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் மட்டுமன்றிக் கேரளம், ஆந்திரா, கருநாடகம் ஆகிய தென்னாட்டின் பிற பகுதிகளிலிந்தும் பேராளர்கள் வந்திருப்பதை அறிய மகிழ்ச்சியாக இருக்கிறது. தமிழ் மொழி ஆய்வு பரந்த நிலையில் செய்யப்படுவது பன்முகநோக்கைக் கொடுக்கும்.

உங்களுடைய கருத்தரங்கக் கலந்துரையாடல் தமிழ் மொழி ஆய்வுக்குப் புதிய நெறிமுறைகளையும் அணுகு முறைகளையும் சுட்டிக்காட்டி இத்துறை ஆராய்ச்சியில் புதியதொரு பொலிவையும் வளத்தையும் சேர்க்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

கருத்தரங்க மாநாட்டிற்கு ஏற்பாடு செய்த அனைவரையும் பாராட்டி இந்த மாநாட்டினைத் திறந்து வைப்பதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

முதல் மொழியியல் கருத்தரங்குக்
கட்டுரைக் கோவை

நன்றியுரை

பேராசிரியர் செ. வை. சண்முகம்*

பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய துணைவேந்தர் அவர்களே, அனைத்திந்திய மொழியியற் கழகத்தின் தலைவரும் மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தின் மொழியியல் துறையின் பேராசிரியரும் ஆகிய இசரயேல் அவர்களே, அனைத்திந்திய மொழியியற் கழகத்தை நிறுவிக் கட்டிக்காத்துப் பலவகையாலும் வளர்த்துவரும் செயலாளரும், அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழியியல் உயர் ஆய்வுமைய இயக்குநரும் ஆகிய பேராசிரியர் அகத்தியலிங்கம் அவர்களே, இங்கு கூடியுள்ள அறிஞர் பெருமக்களே!

உங்கள் அனைவருக்கும் என் அன்பு கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

---

*பேராசிரியர் முனைவர் செ. வை. சண்முகம் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயர்ஆய்வு மையத்தில் பேராசிரியராவார்.

அனைத்திந்திய மொழியியற் கழகத்தின் முதல் கருத்தரங்க மாநாட்டின் துவக்கவிழாவின் இறுதிக் கட்டத்திலே நன்றி கூறுவதற்காக நான் உங்கள் முன்னே வந்து நிற்கிறேன். இப்பொழுது என்னுடைய கல்வித் தாயகமான அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பெருமையெல்லாம் என் மனக்கண் முன்னே வந்து ஓடுகின்றன. அவைகளுள் மொழி சம்பந்தமாக அழுத்தமாய்ப் பதிந்த மூன்று தனிப்பெரும் சிறப்புகளை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். கல்வி சம்பந்தமான எத்தனையோ புதுமைகளை உண்டாக்கிய அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தான் தமிழகத்தில் மட்டுமன்றி இந்தியப் பெருநாட்டிலும் முதன் முதலில் தமிழுக்கெனத் தனித்துறை நிறுவி, தனிப் பேராசிரியரை நியமித்து, தமிழாசிரியர்களையெல்லாம் பிறதுறை ஆசிரியரைப் போலவே பெருமைப்படுத்தி வழிகாட்டியது. அதுவும் பல்கலைக்கழகம் துவங்கிய காலகட்டத்திலேயே பெருங்கொடை வள்ளல், அமரர், அண்ணாமலையரசர் அவர்கள் பொற்கரத்தாலேயே ஆரம்பிக்கப்பட்ட தனிப்பெருமையும் உடையது.

தென்னகத்திலேயே முதன்முதலாக மொழியியல் துறையைத் துவக்கித் திராவிடமொழி ஆராய்ச்சிக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்து நடத்திய பெருமை அன்மையில் மறைந்த மாமேதை அரசர் முத்தையவேள் அவர்களையே சாரும். அரசர் முத்தையவேள் அவர்களின் ஆர்வத்தைச் செயல்படுத்திய துணைவேந்தர்களான உயர்திரு **T. M.** நாராயணசாமிப்பிள்ளை அவர்களையும் சர் சி. பி. இராமசாமி ஐயர் அவர்களையும் சாதாரணமான துறையை உயர்ஆய்வு மையமாக்கிய பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்களையும் இந்த நேரத்திலே நன்றியுடன் நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இன்று நாம் கொண்டாடிக்கொண்டிருக்கும் அனைத்திந்திய மொழியியற் கழகத்தின் முதல் கருத்தரங்க மாநாடும் தமிழ்ப் பல்கலைக்கழகமெனச் சிறப்பித்துப் பேசப்படும் நம் பல்கலைக் கழகத்தில் நடைபெறுவது அதனுடைய பெருமையை மேலும் ஒரு படி உயர்த்துவதாகும். இந்தக் கருத்தரங்க மாநாடு செயல் திறனோடு சேவை உள்ளம் கொண்ட டாக்டர் **M.A.M** இராம

திறனோடு சேவை உள்ளம் கொண்ட டாக்டர் **M.A.M.** இராமசாமி அவர்கள் இணைவேந்தராகப் பல்கலைக்கழகத்தைப் பேணிக் காத்துவரும் நேரத்தில் நடைபெறுவது நமக்கெல்லாம மகிழ்ச்சி தரும் செய்தியாகும். மொழியியற் கருத்தரங்கு மகா நாடு இந்தியா முழுமையும் நடைபெறுவதற்கு இது ஒரு முன் னோடியாகும்.

இந்த எண்ணங்கள் என் மனத்திரையில் நிழற்படமென ஓடிக்கொண்டிருக்கும் இந்த வேளையிலே இம்மகாநாடு பல வகையாலும் சிறப்பாக நடைபெற உதவிய எல்லோருக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் கருத்தரங்க மகாநாடு நடைபெறுவதற்கு அனுமதியளித்து, அதற்கு வேண்டிய பல்வகை உதவிகளையும் செய்ததோடு தொடக்கவிழா சிறப் புரையாற்றிய எங்கள் மதிபபுக்குரிய துணைவேந்தர், கல்விக் காவலர், கற்றார் மதிக்கும் பண்பினர், வரலாற்றுப் பேராசிரி யராக இருந்து அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே வரலாறு படைத்த செயல்வீரர், பேராசிரியர் சிட்டிபாபு தமக்கே உரிய பாணியில் மொழித்தொடர்பான பல அரிய கருத்துகளைக் கூறி நம்மை மகிழ்வித்ததற்கும் அனைத்திந்திய மொழியியற் கழகத் தின் சார்பில் என நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைத்திந்தியப் பல்கலைக்கழக மொழியியற் கழகத்தின் தலைவர், பேராசிரியர் இசரயேல் அவர்கட்கும், விழா சிறப்புற வேண்டிய அறிவுரைகளையும் ஆக்கப் பணிகளையும் செய்த பேராசிரியர் அகத்தியலிங்கம் அவர்களுக்கும், இங்கு பெருந்திர ளாகக் கூடியிருக்கும் பலவேறு பல்கலைக் கழகங்களினின்றும் வந்திருக்கும் பேராளப் பெருமக்களுக்கும், அண்ணாமலைப் பல் கலைக்கழக பிறதுறைப் பேராசிரியப் பெருமக்களுக்கும் மாணவ மாணவியர்கட்கும் மொழியியற் கழகத்தின் நன்றி உரியது. விழா சிறப்புற நடைபெற உதவிய எல்லோருக்கும் எங்கள் நன்றி-நன்றி.

முதல் அமர்வு

நாள்: 23.3.1985 **காலம்: காலை 12.20 மணி**

பொருள்: கருத்தரங்கு மாநாட்டின் நோக்கமும் நடத்துமுறையும்

தலைமையும் விளக்க உரையும்:

பேராசிரியர்

ச. அகத்தியலிங்கம்

மொழியியல் 8. 3 & 4 (1985)
முதல் மொழியியல் கருத்தரங்குக்
கட்டுரைக் கோவை

கருத்தரங்கு மாநாட்டின் நோக்கமும் நடத்துமுறையும்

பேராசிரியர் ச. அகத்தியலிங்கம்

பேரன்பு மிக்க அறிஞர்களே!

இப்போது இங்கே தொடங்கப் பெற்றுள்ள கருத்தரங்கு மாநாடு எதற்காக அமைக்கப்பட்ட தென்பதை ஏற்கனவே எனது வரவேற்புரையில் குறிப்பிட்டுள்ளேன். அதன் நோக்கத்தினைப் பற்றியும், அணுகுமுறையினைப் பற்றியும் சற்று விளக்கமாக சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். பொதுவாகப் பல்கலைக் கழகச் சூழ்நிலையில் நடக்கும் கருத்தரங்குகள், மாநாடுகள் ஆகியவற்றின் பயன்கள் சாதாரண மக்களின் அளவில் வந்து அடைவதில்லை என்னும் ஒரு குறைபாடு சொல்வதுண்டு. மேலும் பள்ளிக்கூடங்களுக்கும், பல்கலைக்கழகங்களுக்கும் இடையே கருத்துப் பரிமாற்றம் செய்யப்படுவதில்லை என்கிற குறையினையும் சொல்லுவது வழக்கம். இந்தக் கருத்தரங்கு மாநாட்டின் நோக்கமானது தமிழ்மொழிப் பயிற்சி அளிக்கும் போது பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் ஆசிரியர்கள் சந்திக்

கின்ற பிரச்சினைகள் யாவை, அவைகளை எளிதாக்குவது எப்படி என்பதனைப் பற்றி பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஒன்றுபட்டுக் கலந்துரையாடுவதன் மூலம் ஒரு புதிய நோக்குமுறையை ஏற்படுத்துவதேயாகும்.

இதனை நான்கு கோணங்களினூடே ஆய்வு செய்வது சிறந்ததாகும் என எண்ணி, கீழ்க்கண்ட நான்கு தலைப்புக்களின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது.

1. கல்லூரிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் இலக்கணம் கற்பித்தல்.

2. மரபிலக்கணங்களில் காணப்படும் சில சிக்கல்களும் அவற்றிற்குரிய விடைகளும்.

3. சில சூத்திரங்களுக்குப் புதிய விளக்கங்கள் காணுதல்.

4. இன்றைய தமிழ் மொழியியல் ஆராய்ச்சியின் நிலை.

இப்படி நான்கு அமர்வுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அமர்விலும் அத்துறைகளில் வல்லுநர்களான அறிஞர்கள் தங்களது ஆய்வு, ஆசிரிய வாழ்க்கைகளில் இத்துறைகளில் கண்ட சிக்கல்களை அடிப்படையாகக் கொண்டு தங்களது கருத்துக்களை நமக்கு அடியெடுத்துத் தரவிருக்கிறார்கள். அதனைத் தொடர்ந்து நாம் கலந்துரையாடல் செய்யும் போது இவற்றைப் பற்றிய சிக்கல்களுக்கு நல்ல விளக்கமும், தெளிவும் கிடைக்குமென நம்புகின்றேன்.

இதனைப் பற்றி இங்கே நான் பேசும்போது கடந்த ஆண்டு கோடை விடுமுறையில் அனைத்திந்தியத் தமிழாசிரியர் மன்றத்தின் சார்பில் தில்லி மாநகரத்தில் நடந்த கருத்தரங்கு மாநாட்டின் நினைவு வருகிறது. அங்கே அளபெடை பற்றிய ஒரு சிறப்புக் கலந்துரையாடல் நடைபெற்றது. அப்போது சில நல்ல புதிய கருத்துக்கள் வெளியாகின.

''அங்ங்கே .... போ''
''இங்ங்கே .... வா''

போன்று பேச்சுவழக்கிலும் அளபெடை காணப்படுகிறது எனும் கருத்து வெளியாகியது.

அளபெடை வெறும் ஓசையை நிறைப்பதற்காக அல்ல. தூரத்தைக் காட்டுவதற்காகவும் பயனபடுகின்றது என்ற உண்மையும் வெளியாயிற்று.

இந்நிலையில் இத்தகைய நல்ல புதிய கருத்துக்கள் வெளியாவதற்குக் காரணமாக இருந்தது நலலதோர் கலந்துரையாடல் என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும். இந்நிலையில் பேசுபவர் மட்டும் பேசிக்கொண்டேயிருக்கக் கூடாது. மாறாக, எல்லோரும் கலந்துரையாடலில் பங்கேற்பார்களேயானால் அது மிகப் பயன் தரக்கூடியதாகும். எனவே, இந்தக் கருத்தரங்கு மாநாட்டில் பேரறிஞர்கள் தங்கள் கருத்தோவியங்களை அடியெடுத்து வைத்த பின்னர் அறிஞர் பெருமக்கள் அனைவரும் கலந்துரையாடலில் பங்கு பெறுவது தனியொரு இடத்தைப் பெறவுள்ளது என்பதனைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மேலும், முழுமையாக, முடிபாக சில எண்ணங்கள் அமைவது வரையிலும் எவ்விதத் தடங்கலும் இல்லாமல் கலந்துரையாடல் நடைபெறுமேயாயின், இந்த மாநாட்டின் நோக்கம் ஈடேறியதாகும் என்பதில் ஐயமில்லை. இதன் காரணமாகவே பல கட்டுரைகள் படிக்கப்படும் நிலையை மாற்றி ஒருசில கட்டுரைகளை மட்டும் இங்கே வைக்க முனைந்துள்ளோம். கட்டுரைகளுக்கு தரும் நேரத்தை விட கலந்துரையாடலுக்கே அதிக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் எல்லோரும் நல்ல முறையில் தங்களது கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள வாய்ப்பு அதிகமாகிறது. விவாதங்கள் வளரும்போது நல்ல புதிய கருத்துக்கள் எழ வாய்ப்பு உண்டாகிறது. இதனால் நல்ல சில முடிவுகள் ஏற்பட வாய்ப்பு உண்டு.

இன்று தமிழ் கற்பித்தலில் பெரியதோர் பிரச்சினையாகக் காணப்படுவது இலக்கணப் பயிற்சியாகும். இலக்கணம் கற்பிக்கும்போது அதனை நடைமுறை உதாரணங்களைக் கொண்டு ஒப்பிட்டு விளக்குதல் மிக முக்கியமான ஒரு முறையாகும். மாறாக, வழக்கில் இல்லாத உதாரணங்களைக் கொண்டு இலக்கண

விளக்கம் தருவோமேயாயின் மாணவர்களுக்குத் தெளிவு ஏற்படுவதை விட குழப்பமே அதிகமாகின்றது. இச் சூழ்நிலையில் தான் மாணவர்கள் எதுவும் புரியாமல் திக்குமுக்காடுகிறார்கள். இலக்கணத்தின் மீது அவர்களுக்கு ஏற்படும் வெறுப்புக்கு இதுவே அடிப்படைக் காரணமாகும்.

இது போன்றே மொழியியல் அறிவும், இலக்கண ஆய்வும். இலக்கணத்தினை மொழியியல் கண்ணோட்டத்துடன் பார்ப்பின் பல புதிய கருத்துக்கள் உருவாகின்றன. மரபிலக்கணத்தில் காணப்படும் பல கருத்துக்கள் தெளிவு பெறவும், புதிய கருத்துக்கள் உருவாகவும் வாய்ப்பாக அமைகின்றது. தொல்காப்பியம் போன்ற நூல்களின் மரபிலக்கணச் சூத்திரங்களுக்குப் புதிய பொருள் காண முடிகின்றது.

இக் கருத்தரங்கின் அடிப்படை நோக்கமே இலக்கணம் கற்பித்தலில் உள்ள சிக்கல்களை எவ்வாறு தீர்ப்பது என்பதும், இதனால் மாணவர்களிடையே தனியொரு ஆர்வத்தை எவ்வாறு தூண்டுவது என்பதுமேயாகும். இந்நிலையில் அறிஞர்களாகிய உங்கள் கருத்துகள், கோட்பாடுகள் மலரட்டும். அதனால் தமிழ் பயிற்றுவித்தலில் புதியதோர் மலர்ச்சி உருவாகட்டும் எனக் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

இரண்டாம் அமர்வு

நாள்: **23.3.1985**

காலம்: மாலை **2** மணி

பொருள்: பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் இலக்கணம் கற்பித்தல்

தலைமை:

முனைவர் ந. குமாரசாமிராஜா

உரையாளர்கள்:

1. பேராசிரியர் மோ. இசரயேல் 'பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் இலக்கணம் கற்பித்தல்'
2. முனைவர் ந. நடராசபிள்ளை 'தமிழை இரண்டாம் மொழியாக பயிற்றுவித்தல்'

மொழியியல் 8. 3 & 4 (1985)
முதல் மொழியியல் கருத்தரங்குக்
கட்டுரைக் கோவை

உயர்நிலைப்பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு இலக்கணம் கற்பித்தல்

பேராசிரியர் மோ. இசரயேல்

தமிழ்மொழியைத் தவறின்றிப் பேசவும் எழுதவும் நாடோறும் பேச்சு, எழுத்து வழக்குகளில் ஏற்படும் தவறுகளை அறிந்து அகற்றிக் கொள்ளவும் இலக்கணப் பயிற்சி துணை நிற்கின்றது. எனவே உயர்நிலைப்பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு அடிப்படையான இலக்கணக் கல்வி அளித்தல் இன்றியமையாததாகின்றது.

இலக்கணம் என்றவுடன் பலருக்கு நன்னூல், தொல்காப்பியம் போன்ற மரபிலக்கண நூற்களும் அவற்றின் இலக்கண நூற்பாச் செய்திகளும்தான் நினைவில் வரும். இலக்கணம் என்பது பழைய மொழிக்கு விளக்கம் கூறும் மரபிலக்கண நூற்களின் செய்திகள் மட்டுமல்ல, இன்று நாம் பேசும், எழுதும் மொழியின் அமைப்பையும் ஒழுங்கு நெறியையும் கூறுவதும் அதன்பாற்படும். எனவே அடிப்படையில் இலக்கணம் என்ற

சொல்லைப் பற்றியும் அதன் செய்தியைப் பற்றியும் ஆசிரியர் பலரும் மாணவரும் கொண்டிருக்கும் தவறான எண்ணமே இலக்கணக் கல்விக்கு இடையூறாக அமைகின்றது. இந்நிலையில் உயர்நிலைப்பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு இலக்கணத்தைப் பற்றித் தெளிவான விளக்கம் அளித்தல் அடிப்படைத் தேவையாகும்.

மாணவர் பலருக்கு இலக்கணத்தைப் பற்றிய அச்சம் உள்ளத்தில் அகலாது அமைந்து கிடப்பதைக் காணமுடிகின்றது இதற்கு இலக்கணம் கற்பிக்கும் ஆசிரியர்களும், அவர்களது இலக்கணத்தைப் பற்றிய எண்ணமும், அவர்கள் இலக்கணத்தைக் கறபிக்கப் பின்பற்றும் அணுகுமுறையுமே காரணமாகும். ஆசிரியர்கள் 'இலக்கணம் கடினமானது' 'எளிதில் விளங்கிக் கொள்ள இயலாதது' என்ற அச்சத்தை ஊட்டுதல் கூடாது மரபு நெறியில் இலக்கண நூற்பாக்களை ஓதி மாணவர்கள் இலக்கணச் செய்தியினை எளிதில் விளங்கிக் கொள்ளாமல் மனப்பாடமாகக் கற்கவைக்கும் முறை மாணவர் உள்ளத்தில் இலக்கணத்தின்பால் அச்சத்தையும் வெறுப்பையும் தோற்றுவிக்கும். ஆசிரியர் பலர் இலக்கணத்தில் நல்லறிவும் தெளிவும் இன்றி, அதில் ஈடுபடாமல் அதனைக் கடமையாகக் கற்பிக்கின்றனர். ஆசிரியர் பலருக்கு இலக்கணம் என்பது வெறும் கட்டளை இலக்கணமாகவே (prescriptive grammar) தெரிகின்றது. மேலும் அதனை அச்ச உணர்வுடன் அணுகிக் கற்றாலே மாணவர் விளங்கிக் கொள்ளுவர் என்று கருதுகின்றனர் எனவே சில ஆசிரியர்கள் 'நன்னூல் என்பது வேப்பங்காய், தொல்காப்பியம் என்பது எட்டாதகிளை, ஒருகால் அது எட்டினும் எட்டியாம்' என்றெல்லாம் கூறி மாணவரை வெருட்டுகின்றனர். அவர்களில் சிலர் ஓரளவு அறிவும் தெளிவும் பெற்றிருப்பினும் அதனை அரியதாக்கிக் கற்பிப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றனர். ஆசிரியர்கள் தம் அறிவையும் திறனையும் இலக்கணத்தை எளிமையாக்கிக் கற்பிப்பதிலே வெளிப்படுத்த வேண்டுமேயொழிய அதனை அரியதாக்கிக் காட்டுவதில் மனநிறைவு அடைதல் கூடாது. எனவே உயர்நிலைப்பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இலக்கணம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குத் தொடர்ச்

சியான இலக்கணக் கல்வியும் நல்ல பல பயிற்சிகளும் அளித்தல் இன்றையத் தேவையாகும்.

மாணவர்கள் மொழியை ஓரளவு நன்கு பேசவும் எழுதவும் பயிற்சி பெற்றுள்ள நிலையில் அவர்களுக்கு இலக்கணம் கற்பிக்கும்போது இலக்கணத்தைப் பற்றிய உண்மை விளக்கம் தருதல் இன்றியமையாததாகின்றது. இலக்கணம் என்பது பேசும், எழுதும் கூறுகளின் விளக்கமே. அக்கூறுகள் ஒலி, எழுத்து சொல், தொடர், வாக்கியம், பொருள் போன்றவைகளாக அமைகின்றன. மொழி இன்றைய வழக்கு மொழியாகவோ (பேச்சு, எழுத்து) செய்யுள் மொழியாகவோ அமையலாம். மரபிலக்கண நூற்கள் தம் காலத்திய பேச்சு வழக்கு, செய்யுள் வழக்கு ஆகியவற்றின் இலக்கணமே கூறுகின்றன. இதனையே தொல்காப்பியப் பாயிரம் "வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்" என்ற தொடரால் குறிக்கின்றது. எனினும் பல செய்திகள் இக்காலத் தமிழுக்கும் பொதுவானவைகளாக இருக்கலாம்.

இலக்கண நூற்கள் தரும் செய்திகளின் விளக்கத்துள் ஒரு சிலவேனும் அவற்றின் காலத்தின் மொழிக்குரியனவாக அமைகின்றன. எனவே மரபிலக்கண நூற்களைக் கற்பிக்கும் பொழுது மாணவர் உள்ளத்தில் கால உணர்வினை ஏற்படுத்த வேண்டும். சான்றாக, தொல்காப்பியம் என்றதும் அது பழந்தமிழின் இலக்கணம் கூறுவது; நன்னூல் என்றதும் அது இடைக்காலத் தமிழின் இலக்கணம் கூறுவது என்ற எண்ணம் இயல்பாக ஏற்படுதல் வேண்டும். மேலும் இலக்கண நூற்கள் குறிப்பிடும் மொழிவழக்கின் நிலப்பரப்புப் பற்றிய உணர்வும் வேண்டும். மரபிலக்கண நூலார் தம் கால மொழிக்கு மட்டும் விளக்கம் தராமல் 'முன்னையோர் கருத்தினையும் பொன்னே போற் போற்றி' மொழிக்கு இலக்கணம் வரைதலைக் கடமையாகக் கொண்டனர். இதனைத் தொல்காப்பியர் பயன்படுத்தியுள்ள என்ப (தொ. சொ. 88, 104, 118, 124, 207, 232), என்மனார் (தொ. சொ. 72, 74, 78, 82, 92), என்மனார் புலவர் (தொ. சொ. 38, 80, 85, 124, 145, 156), அறிந்திசினோர் (தொ. சொ. 158, 159), மொழிப (தொ. சொ. 62, 109, 116), மாழிமனார் (தொ. சொ. 282, 421), வரையார் (தொ. சொ. 46, 103) போன்ற சொல் வழக்குகளாலும் தொடர்களாலும் அறிய முடிகின்றது.

மரபிலக்கண நூலார் முன்னையோர் அறிவையும் பயன் படுத்தி இலக்கண விதிகளை அமைத்துக் கொண்டதுமன்றிக் காலப்போக்கில் ஏற்பட்டுள்ள மொழிமாற்ற உணர்வினையும் உடையராய் இலக்கணச் செய்திகளை வரைந்தனர். தொல்காப் பியம் ''கடிசொல்லில்லைக் காலத்துப் படினே'' (தொ. சொ. 452) என்றும் நன்னூல்

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே (நன். 462)

என்றும் குறிப்பிடுவன இதனைத் தெளிவுபடுத்தும் சான்று களாம். மேலும் தொல்காப்பியம்,

'ஆவோ டல்லது யகர முதலாது' (தொ. எ. 65) என்று குறிப்பிட, நன்னூல் 'அ ஆ உ ஊ ஔ யம்முதல்' நன். 104) என்று குறிப்பிட்டு யவனர், யுகம், யூகம், யோகம், யௌவனம் போன்ற கடன் சொற்கள் மொழியில் ஆட்சிபெறறுள்ள வளர்ச்சி நிலைக்கும் இடம் தந்துள்ளது. இக்கால மொழியில் யகரம் மொழிமுதலில் வருதல் மறைந்துபோய்க் கொண்டிருக்கிறது.

தொல்காப்பியம் யாவென் வினாவே யாவன், யாவள், யாவர், யாது, யாவை போன்ற ஐம்பால் வினாப்பெயர்களுக்கு அடியாக அமைதலைக் காட்டுகின்றது (தொ. சொ.162, 167). தெளிவான எகர வினாவிற்கும் அதனடியாகத் தோன்றிய எவன், எவர், எது, எவை போன்ற வினாப்பெயர்களுக்கும் அது இடந்தரவில்லை. ஆனால் நன்னூல் எகரத்தைத் தெளிவான வினாவடியாகக் குறிப்பதோடு (நன். 67, 276, 277), எவன், எவள், எவர், எது, எவை, போன்ற வினாப்பெயர்களுக்கும் இடந்தந்து நிற்கின்றது. மேலும் அவ், இவ், உவ் (தொ. சொ. 167) போலவே காலப்போக்கில் 'எவ்' என்ற சொல்லின் தோற் றத்தையும் மொழிவழக்கில் காணமுடிகின்றது. எ-டு. எவற்றை, எவற்றால், எவற்றுக்கு போன்றவை.

வியங்கோள் வினைமுற்று முன்னிலைத் தன்மையில் மன் னாது (தொ. சொ. 226) என்று தொல்காப்பியம் கூற, நன் னூல் அது 'இயலும் இடம் பால் எங்குமென்ப' (நன். 318) என்று கூறுவது மொழி வரலாற்றினை உணர்த்தும் செய்தி யாகும்.

இலக்கண நூற்கள் கூறும் செய்திகள் விளக்க இலக்கணமா (descriptive grammar), கட்டளை இலக்கணமா (prescriptive grammar) என்ற வினா இங்கு எழுகின்றது. மொழியின் இயல்பை விளக்கி வரையறுத்துக் கூறுவது விளக்க இலக்கணம். மொழி இயல்பு இவ்வாறு இருத்தல் வேண்டும் என்று கூறிச் செல்வது கட்டளை இலக்கணம். இலக்கண நூலார் பெரும்பாலும் தம்கால மொழிக்கு விளக்க இலக்கணம் கூறுதலையே குறிக்கோளாகக் கொண்டிருப்பினும் தம் காலத்திற்கு முன்னைய வழக்குகளின் அடிப்படையில் இலக்கணம் கூறி, இதனை இவ்வாறு பயன்படுத்துக என்று சொல்லும் இடங்கள் கட்டளை இலக்கணத்திற்குச் சான்றுகளாக அமைகின்றன, சான்றாக இலக்கண நூற்கள்

ஆ எ ஒ என்னும் மூவுயிர் ஞகாரத்துரிய (தொ. எ. 31)

அ ஆ எ ஒவ்வொ டாகும் ஞம்முதல் (நன். 105)

என்று கூறுவதும்,

வகரக் கிளவி நான் மொழி ஈற்றது (தொ. எ. 81)

என்று கூறுவதும் இக்கால மொழிக்கும் ஏற்புடையதாகக் கூறப் பட்டால் அது கட்டளை இலக்கணமாகவே அமையும். இது போலவே 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்றுபற்றி அது பல்லோர் படர்க்கையிலும் முன்னிலைத் தன்மையிலும் வராது; படர்க்கை ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால், பலவின்பால் ஆகியவற்றில் மட்டும் வரும்' என்று அப்படியே இன்றைய மொழிக்கு ஏற்றிக் கூறுவதானால் அது கட்டளை இலக்கணமாகின்றது. இன்று செய்யும் வாய்பாட்டு வினைமுற்று ஆண்பால், பெண்பாலில் உயர்வு ஒருமையில் அப்பா வரும், அம்மா வரும் போன்ற வழக்குகளிலும் முன்னிலையில் நீர் வரும், நீர் செய்யும் என ஏவலிலும் வருதலைக் காணமுடிகின்றது.

மாணவர்களுக்கு மொழிவரலாற்று உணர்வு ஊட்ட வேண்டியது தேவையாயினும் பெரும்பாலும் கற்பிக்க வேண்டியது விளக்க இலக்கணமே விளக்க இலக்கணமே அவர்கள் நாடோறும் பயன்படுத்தும் மொழியுடன் தொடர்புடையதாக அமைந்து அவர்களுக்குப் பயனும் பொருளும் தருவதாக

அமையும். எனினும் இதுகாறும் கூறியவற்றைப் பற்றிய தெளிவான அறிவு அவர்களுக்கு இலக்கணத்தைப் பற்றிய பல குழப்பமான எண்ணங்கள் அகல வாய்ப்பு ஏற்படும்.

இலக்கணப் பாடத்திட்டம்:

உயர்நிலைப்பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இலக்கணப் பாடத்திட்டம் நாடோறும் வாழ்க்கையின் இன்றியமையாத மொழி வழக்கிற்கும், இலக்கியப் பயிற்சிக்கும், ஈடுபாட்டிற்கும் பயனுள்ளதாக அமைய வேண்டும். ஆனால் இன்று இலக்கணப் பாடத்திட்டம் இன்றைய மாணவர்களின் அறிவுவளர்ச்சி, மொழித்திறன், கருத்தாழம். படைப்பாற்றல், சமுதாயத் தேவை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு அமையவில்லை. அதில் சில இன்றியமையாக் கூறுகள் கூட இடம்பெறவில்லை.

ஒருமொழியைத் தவறின்றித் திருத்தமாக எழுதவே இலக்கணக் கல்வி பெரிதும் துணைநிற்கின்றது என்றாலும் அம்மொழியைத் திருத்தமாகப் பேசவும் அது பயன்படல் வேண்டும். மொழியைத் திருத்தமாகப் பேசுவதற்குப் பயிற்சி தரும் பிறப்பியல் (ஒலியியல்) பற்றிய செய்திகள் இன்றைய இலக்கணப் பாடத்திட்டத்தில் இடம்பெறவில்லை. மேலும் இக்கால மொழியின் அமைப்பை முழுஅளவில் மாணவர்கள் விளங்கிக் கொள்ளப் போதுமானதாக இன்று பாடத்திட்டம் அமையவில்லை. மரபிலக்கண நூற்களில் உள்ள விதிகளின் அடிப்படையில் ஆயத்தம் செய்யப்படும் இலக்கணப்பயிற்சி இதற்கு இடையூறாக உள்ளது.

மேலும் இன்று இலக்கணப்பாடத்திட்டம் பெரும்பாலும் மாணவர்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தொடர்பில்லாத, ஆசிரியரை மையமாகக் கொண்டதாக, மரபிலக்கண அறிவைப் பெரிதும் திணிக்க முயலுகின்ற வகையில் அமைந்துள்ளது. பள்ளி இலக்கண நூல்கள் கூட நன்னூல் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் பழங்கால, இடைக்கால, இக்கால வழக்குகளிலிருந்து சான்றுகள் தரப்படுகின்றமையால் அவை விளக்க இலக்கண நூல்களாக அமையாமல் ஒருவகையில் வரலாற்று முறையில் தமிழ் இலக்கணத்தைக் கற்பிக்கத் துணை செய்யும் நூல்களாக உள்ளன.

வழக்கிறந்த பல செய்திகள் பாடத்திட்டத்தில் இடம் பெற்றுள்ளன. ஞகர, நகர, வகர மெய்யீற்றுச் சொற்கள், ஆய்தக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக் குறுக்கம் போன்றவை, பல புணர்ச்சி விதிகள, சில வேற்றுமை உருபுகள், பல வினைமுற்று, வினையெச்ச வடிவங்கள், வாய்பாடு கள், பல இடைச்சொற்கள், பல உரிச்சொற்கள் ஆகியவற்றை மாணவர்களின் அடிப்படை மொழித்திறனுக்காக அல்லாமல் அவர்கள் மொழிவரலாற்றறிவிற்காகவே கற்க வேண்டியுள்ளது. மொழித்திறனை வளர்த்தல் அடிப்படையில் தகவல் தொடர்புத் திறனை மிகுவிப்பதற்காகவேதான். எனவே இக்கால மொழி யின் அமைப்பை அறிந்து உணரப் போதிய செய்திகள் பாடத் திட்டத்தில் இடம்பெறவேண்டும். நல்லபல மொழிப்பயிற்சி களால் மொழித்திறன் வளர்க்கப்படுதல் வேண்டும். இவ்வடிப் படையில் இன்றைய மாணவர்களுக்குத் தேவையானது பயன் வகை இலக்கணமே (functional grammar). அது விளக்க இலக்கணமே ஆகும். அறிந்தவற்றிலிருந்துதான் அறியாதவை கற்பிக்கப்படுதல் வேண்டும். இக்கால மொழியின் அமைப்பை மாணவர்கள் நன்கு விளங்கிக் கொண்ட பின்னரே இடைக் கால, பழங்கால மொழியில் அவர்களுக்குத் தொடர்பும் பயிற்சி யும் அளித்தல் வேண்டும். அவர்கள் தமிழ் மொழியின் கூறு களையும் அமைப்பையும் தெள்ளிதின் விளங்கிக் கொள்ளவும் இலக்கியப் பயிற்சி பெறவும் இத்தகைய பாடத்திட்டமே துணை செய்யும். இலக்கணப் பாடத்திட்டம் இக்கால மொழியியல் கொள்கைகளின் அடிப்படையில் விளக்கப்பட்டால் மேலும் சிறப்புறும்.

கல்லூரி மாணவர்கள் மொழித்திறனில் தக்க பயிற்சிகள் பெற்றுள்ளமையாலும் மரபிலக்கண நெறியில் ஓரளவு ஈடுபடத் தேவை ஏற்படும் வாய்ப்புள்ளமையாலும் காலப்போக்கில் படிப்படியே அவர்கள் பாடத்திட்டத்தில் முறையான - விதி முறைக்குரிய (formal) மரபிலக்கணச் செய்திகள் புகுத்தப் படலாம்.

இலக்கணம் கற்பிக்கும் முறை

இலக்கணத்தைக் கற்பிக்கும்போது ஆசிரியர் தக்க முறையி னைப் பின்பற்றினால்தான் மாணவர்களுக்கும் இலக்கணத்தில்

ஈடுபாடும் தெளிவும் ஏற்படும். இலக்கணம் கற்பிக்க இன்று இருமுறைகள் பின்பற்றப்படுகின்றன. ஒன்று விதிதருமுறை (deductive method); மற்றொன்று விதிவருமுறை (inductive-method). முன்னையதில் பொதுக்கருத்து (விதி) சொல்லப்பட்டுப் பின்னர் தனிப்பட்ட செய்திகளின் விளக்கம் தரப்படுகின்றது. பின்னையதில் தனிப்பட்ட செய்திகளில் (சான்றுகளில்) தெளிவு பெற்றபின் அவற்றினின்று பொதுக்கருத்து (விதி) உய்த்துணர்ந்து அறியப்படுகின்றது. அவ்வப்போது பொதுவிதி கொடுத்துப் பின்னர் தனிப்பட்டவற்றின் விளக்கம் தரும் விதிதருமுறை பின்பற்ற வேண்டியதுள்ளதாயினும் இலக்கணம் கற்பிப்பதற்கு விதிவருமுறையே (inductive method) சாலவும் ஏற்றதும் பயன் தருவதும் ஆகும். மாணவர்களே பொது விதியைக் கண்டு கொள்ள இம்முறை வழிவகுக்கின்றமையால் இதனால் பெற்ற அறிவு அவர்கள் உள்ளத்தில் தெளிவான அழுத்தத்தை ஏற்படுத்துகின்றது. மேலும் இம்முறையில் அவர்களே எண்ணி முயன்று அறிவு பெற வாய்ப்புள்ளமையால் அது கூடுதல் நிலைபேறு உடையதாக அமையும். அவர்கள் மொழி அமைப்பில் நல்ல பயிற்சி பெறவும் திறன் அடையவும் இம்முறை வாய்ப்பு அளிக்கின்றது.

இலக்கணம் கற்பிக்கும் ஆசிரியர்கள் சில அடிப்படை அணுகு முறைகளைப் (approaches) பின்பற்றவேண்டும். ஒன்று, தெரிந்ததிலிருந்து தெரியாததற்குச் செல்லவேண்டும். மாணவர் அறியாத ஒன்றைக் கற்பிக்க அவர்கள் அறிந்த ஒன்றை முறையாகத் தொடர்புபடுத்திக் காட்டி அதோடு அறியாததை அறிமுகம் செய்தல் வேண்டும். அடுத்து எளிமையானதை முதலில் கற்பித்துப் பின்னர் அரிதானதைக் கற்பித்தலும் தக்க அணுகுமுறையாகும். அதாவது மாணவன் அறிந்துள்ள எளிமையான எல்லாச் சூழ்நிலைகளிலும் செய்திகளைத் தருவித்து, அவனுக்கு நல்ல நம்பிக்கை ஊட்டிய பின்னர் அரிய அல்லது சிக்கலான கருத்துக்களைப் படிப்படியே புகுத்த வேண்டும். எப்பொழுதும் ஆசிரியர் கற்பிக்கின்ற இலக்கணச்செய்தி மாணவர்க்கும் பொருள் உள்ளதாக, தெளிவுடையதாக அமைகின்றதா என்பதை ஆசிரியர் அறிதல் இன்றியமையாத தேவையாகும்.

இலக்கணக்குறிப்பு

இதுகாறும் இலக்கணம் கற்பித்தல் பற்றிய பொதுவான சில செய்திகள் சொல்லப்பட்டன. இனி, தொடர்ந்து உயர் நிலைப்பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் மாணவர்களுக்கு இலக்கணக்குறிப்பு கற்பித்தல் தேவையா? அது தேவையாயின் அதன் நோக்கமும் பொருளும் அது கற்பிக்கும் முறையும் பற்றிய சில கருத்துக்கள் கூறப்படுகின்றன.

மாணவர்கள் பொதுவாகச் சிலவற்றின் இலக்கணச்குறிப்பு அல்லது குறிப்பாகச் சில சொற்களின் சொல்லிலக்கணம் அறிந்து கொள்ள எதிர்பார்க்கப்படுகிறார்கள். இதில் அவர்களுக்கு ஓரளவு பயிற்சி தரப்படுதல் மட்டுமன்றி தேர்வு வினாத்தாள்களில் வினாக்களும் இடம்பெறுகின்றன. ஆனால் இன்றைய நிலையில் இலக்கணக் குறிப்புச் செய்திகளை விளங்கிக் கொள்ளாமலே பெரும்பாலான மாணவர்கள் மனப்பாடம் செய்து கொண்டு ஒருசிலவற்றை எழுதி விடுகின்றனர். வேறுசிலர் ஒரு சிலவற்றைக் குறுக்கு வழிகளில் புரிந்து கொண்டு தேர்வுக்காக மட்டும் தங்களைத் தகுதியுள்ளவர்களாக்கிக் கொள்ளுகின்றனர். இன்னும் சிலர் இலக்கணக்குறிப்புத் தொடர்பான வினாக்களைத் தொடுவதேயில்லை.

இந்நிலையில் மாணவர்களுக்கு இலக்கணக்குறிப்பில் பயிற்சி அளித்தல் தேவையா என்ற வினா எழுகின்றது. அது தேவையில்லை என்று கருதுவாரும் உளர். அங்ஙனமாயின் பழைய இலக்கியங்களும் இலக்கணமரபும் பெற்றுள்ள தமிழ் மொழியின் வழக்காறுகளையும் பொருள் நுட்பங்களையும் இன்றைய மாணவர் எவ்வாறு விளங்கிக் கொள்ள முடியும்? அவர்களும் அவற்றைப் பயின்று பயன் துய்க்கவேண்டுமே. அவர்கள் இலக்கியப் பயிற்சி பெறுதற்கும் மொழி வரலாற்றறிவு உடையவர்களாக இருத்தற்கும் இன்று வழக்கிறந்துள்ளவற்றை விளங்கிக் கொள்ளுவதற்கும் இலக்கணக்குறிப்பில் பயிற்சி அவர்களுக்குத் தேவையாகின்றது. இவ்வகை இலக்கணப் பயிற்சி முழுவகையில் பயன்வகை (functional grammar) இலக்கணத்தின் பாற்படும்.

இலக்கணக் குறிப்புப் பயிற்சி அளிக்கும்போது கலைச்சொற்களிலும் அவற்றின் செய்தியிலும் மாணவர்க்குத் தெளிவு ஏற்படாமைதான் அவர்கள் அதனை விரும்பாதிருந்தலின் அடிப்படைக் காரணம் என்பதை அறிதல் வேண்டும். சான்றாக முதனிலைத்திரிந்த தொழிற்பெயர், செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம், ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் போன்ற சில குறிப்புகளையும் அவற்றால் அறியலாகும் செய்திகளையும் இவண் விளக்கத்திற்கு எடுத்துக் கொள்ளுவோம்.

பல மாணவர்களுக்கு முதனிலை, திரிதல், தொழிற்பெயர் ஆகிய மூன்று கலைச்சொற்களின் பொருள் தெரிவதில்லை, சிலர்க்கு இவற்றில் எவையேனும் இரண்டு, வேறுசிலர்க்கு ஏதேனும் ஒன்று, அரிதாக அமையும். தொழிற்பெயரில் தெளிவு ஏற்படாத ஒருவன் எவ்வாறு அதன் வகைகளைக் கருதமுடியும்.

பேறு, கேடு, ஈறு, ஊறு, பாடு, ஈடு போன்றவை முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்கள். முதற்கண் தொழிற்பெயர் என்பதனை எளிமையான சான்றுகளால் விளக்கி, அது தொழிலின் பெயரைக் குறிக்கும் பெயர்ச்சொல் என்பதனையும் விளக்கித் தெளிவுபடுத்தியிருத்தல் வேண்டும். பின்னர் முதனிலைத் தொழிற்பெயர், விகுதிபெற்ற தொழிற்பெயர் ஆகியவை இதனுடன் தொடர்புபடுத்தி விளக்கப்பட்டால் ‘முதனிலை’ என்ற சொல்லிலும் பொருளிலும் தெளிவு ஏற்படும். முதனிலை மட்டுமாய் நிற்கும் பெயர்கள் கெடு, அடி, அறி போன்றன. முதனிலை என்பது பகுதியாகும். இவற்றில் விகுதி (இறுதிநிலை) இல்லை. அடுத்தது விகுதி பெற்ற தொழிற்பெயர்கள் பகுதியுடன் விகுதி இணைந்து நிற்பன. எ-டு. பெறுதல், கெடுதல், வருதல், உண்டல் போன்றன. இவற்றில் பகுதி, விகுதி ஆகிய இரண்டும் உள. இவண் முதனிலை, இடைநிலை, இறுதிநிலை போன்ற சொற்கள் தெளிவுபடுத்தப்பட்டால் மிக்க பயனுள்ளதாக அமையும். அடுத்து முதனிலை திரிதல் - பகுதி திரிந்து நிற்றல் என்பது விளக்கப்படல் வேண்டும். பெரும்பாலும் முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்களில் பகுதியில் உள்ள உயிர் நீட்சி பெற்று அமைதலையும் உய்த்துணரச் செய்தல் வேண்டும். இறுதியாகப் பகுதிமட்டுமாய் உயிர் நீட்சி பெற்று

நின்று தொழிலின் பெயரை உணர்த்தும் சொல் முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் எனக் கொள்ளப்படுகின்றது என்ற விளக்கமும் பொருளும் தானே அறிதல் இயலும். இவண், வினையாலணையும் பெயரினின்று தொழிற்பெயரின் வேறுபாட்டினை உய்த்துணர வைத்தல் நலம்.

செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம் பழந்தமிழில் மட்டும் காணக்கிடக்கின்றது. முதற்கண் வினையெச்சம் என்றால் என்ன என்பதைத் தெளிவு செய்தல் வேண்டும். குறைந்து நிற்கும் வினைச்சொற்கள், முற்றுப் பெற்ற வினைச்சொற்கள் ஆகியவற்றை வந்து, சென்று, வந்த, சென்ற, வந்தான, சென்றான் போன்ற சான்றுகளால் விளக்கலாம். பின்னர் வினையைக் கொண்டு முடியும் குறைந்து நிற்கும் வினைச்சொல், பெயரைக் கொண்டு முடியும் குறைந்து நிற்கும் வினைச்சொல் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டி வினையெச்சம், பெயரெச்சம் ஆகியவற்றின் வேறுபாட்டினை விகுதிகளை ஏற்கின்ற அமைப்பு நிலையிலும் வினை, பெயர் ஆகிய முடிக்கும் சொல் நிலையிலும் காட்டலாம். தொடர்ந்து பலவகையான வினையெச்சங்களைக் கூறி விளக்கலாம். உகர ஈறு ஏற்பன; இகர ஈறு ஏற்பன; யகர ஈற்பன போன்றவற்றை ஈற்றடிப்படையிலும் செய்து, செய்யூ, செய்பு, செய, செய்யியர், செய்யா என்பனவற்றை வாய்பாட்டு அடிப்படையிலும் காட்டலாம். மாணவர்க்கு 'வாய்பாடு' என்பதனை என்னவென்று பல ஆசிரியர்கள் தெளிவாக விளக்குவதில்லை. மாணவரும் தானாக அதனை விளங்கிக்கொள்ளுவது அரிதாக உள்ளது. வாய்பாடு என்பது அமைப்பைக் குறிக்கும். செய்த, செய்கின்ற, செய்யும், செய்யா, செய்து போன்ற வாய்பாடுகளில் பல சொற்கள் தமிழ் மொழியில் வழங்குகின்றன. ஓடா நின்றன, பாடா நின்றான், அழா நின்றனை போன்றவற்றுள் ஓடா, பாடா, அழா போன்றன 'செய்யா' என்ற வாய்பாட்டில் அமைகின்ற வினையெச்சங்கள். மேலும் அஃறிணைப் பலவின் பால் வினைமுற்றுக்களும் எதிர்மறைப் பெயரெச்சங்களும் 'செய்யா' என்னும் வாய்பாட்டில் அமைகின்றன.

எ-டு. மாடுகள் ஓடா 'அஃறிணைப் பலவின்பால் எதிர்மறை வினைமுற்று'

ஓடாப் புலி 'எதிர்மறைப் பெயரெச்சம்'
ஓடா நின்றன 'வினையெச்சம்'

வாய்பாடு ஒன்றாகவே அமையினும் ஏனைய சொல்வகைகளினின்று பயன்வகையில் வேறுபடுத்தவே வினையெச்சம் என்ற பெயர் சுட்டப்படுகின்றது.இவண், இவையாவும் ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் விளக்கவேண்டுவது இன்றியமையாததாகின்து.

ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என்ற பெயர் வழக்கு பிற்காலத்தில் தோன்றியது. ஆனால் மொழிவழக்கில் அது மிகுதியும் பழந்தமிழுக்கு உரியதாகும். பெயரெச்சம் என்பது எஞ்சி நிற்கும் பெயரைக் கொண்டு முடியும் வினைச்சொல். எச்சம் என்பது எஞ்சி நிறப்து. அது வினையை எஞ்சி நிற்பது, பெயரை எஞ்சி நிற்பது என்றெல்லாம் விளக்கப்பட்டு, முற்றினின்று அதன் வேறுபாடு காட்டப்பட்டு, இருவகை எச்சவேறுபாடுகளும் விளக்கப்படுதல் வேண்டும்.

பெயரெச்சம் மிகுதியாக உடன்பாட்டில் செய்த, செய்கின்ற, செய்யும் என்னும் வாய்பாட்டில் அமைகின்றன. மொழியில் எதிர்மறைப் பெயரெச்சங்களும் வழங்குகின்றன. அவை செய்யா, செய்யாத என்னும் வாய்பாடுகளில் காணப்படுகின்றன. முன்னைய வாய்பாட்டினவை மிகுதியும் பழந்தமிழிலும் பின்னைய வாய்பாட்டினவை பெரும்பாலும் பிற்கால மொழியிலும் காணப்படுகின்றன. என்வே செய்யா, செய்யாத என்ற வாய்பாடுகளில் ஈறுகெட்டதா அன்றேல் தோன்றியதா என்ற சிக்கல் எழுகின்றது. ஈறுதோன்றியது என்பதே பொருத்தமுடைத்து என்பதை மொழி வரலாற்றினை உணர்வார் தெள்ளிதின் அறிதல் இயலும்.

ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என்பது 'செய்யாத' என்பதன் ஈற்றினதாகிய தகரம் கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என விளக்கப்படுகின்றது. ஆனால் உண்மையில் 'செய்யா' என்ற வாய்பாட்டுடன் பிற்காலத்தில் தகரம் இணைந்தே 'செய்யாத' என்ற வாய்பாடு அமைந்திருத்தல் வேண்டும். இது 'செய்த' என்னும் உடன்பாட்டுப் பெயரெச்சத்தின் ஒப்புமை

யாக்கத்தால் தோன்றியிருக்கலாம். செய்யா வாய்பாட்டில் அமைகின்ற அஃறிணைப் பலவின்பால் எதிர்மறை வினைமுற்று, வினையெச்சம் ஆகியவற்றோடு ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம காட்டற்குரியது.

மீண்டும் உயர்நிலைப்பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் இலக்கணக்குறிப்புத் தேவையா என்ற வினாவை எழுப்பித் தெளிவாகத் தீர்வு காணும் முயற்சி இவண் மேற்கொள்ளப்படுகின்றது. தமிழ் மொழி வரலாற்றில் காலப்போக்கில் சில சொற்கள் வழக்கிறந்து விட்டன, சில அருகிய வழக்கின ஆகிவிட்டன. இவற்றுள் பலவும் பிற சிலவும் வடிவம், அமைப்பு, பொருள், வழக்கு ஆகியவற்றில் சிக்கல் தருகின்ற இலக்கிய வழக்கு மரபுச்சொல்/ தொடர்களாக உள்ளன. இவற்றில் பயிற்சி அளிப்பதே இலக்கணக்குறிப்பின் நோக்கமாகும். இப்பயிற்சி பழைய இலக்கியத்தில் ஈடுபடவும் மொழிவரலாற்றினை உணர்ந்து கொள்ளவும் துணைசெய்கின்றது.

செய்கு, செய்கும், செய்யும், செய்ம்மன போன்ற வாய்பாட்டு வினைச்சொற்கள், செய, செய்யூ, செய்யா, செய்பு, செய்யியர் போன்ற வினையெச்சங்கள், அளபெடைகள், போலி, முதனிலைத் தொழிற்பெயர்கள் போன்றவை வடிவத்திலும், இலக்கணப்போலி, இரட்டைக்கிளவி, ஒருபொருட்பன்மொழி, தொகைநிலைத்தொடர், வண்ணச்சினைச்சொல் போன்றவை அமைப்பிலும், ஆகுபெயர், உரிச்சொல், உருபுமயக்கம், ஒன்றொழி பொதுச்சொல் போன்றவை பொருளிலும், இடைச்சொல், உரிச்சொல், தகுதிவழக்கு, மரபுவழக்கு போன்றவை வடிவிலும் அறிந்து உணர்தற்கு அரியவை. எனவே இலக்கணக்குறிப்பு பெரும்பாலும் வழக்கிறந்த அருகிய இலக்கியச்சொற்கள், தொடர்களை அவற்றின் வடிவம், அமைப்பு, பொருள், வழக்கு முதலியவற்றின் அடிப்படையில் விளக்கம் காணவும் அவற்றை ஐயந்திரிபற அறிந்து கொள்ளவும் திறன்பெற வழிவகுக்கின்றது.

பெரும்பாலான இலக்கணக்குறிப்புக்குரியனவற்றை எடுத்துக் கொண்டால் இவற்றில் ஒன்றிரண்டு அல்லது மூன்று அடிப்படையில் தெளிவுபடுத்துதல் இயலும். சிலவற்றைச் சான்றுகளாக இங்கு காட்டுவோம்.

1.	அளபெடை	: வழக்கிறத்தல், வடிவம், பொருள்
2.	ஆகுபெயர்	: அருகியவழக்கு, அமைப்பு, பொருள்
3.	இரட்டைக்கிளவி	: அருகியவழக்கு, அமைப்பு, பொருள்
4.	இலக்கணப்போலி	: அமைப்பு, பொருள்
5.	இடைச்சொல்	: அமைப்பு, பொருள்
6.	ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்	: அமைப்பு, பொருள், வழக்கு
7.	உரிச்சொல்	: வழககிறத்தல், வடிவம், பொருள், வழக்கு
8.	உருபு மயக்கம்	: அருகிய வழக்கு, வடிவம், பொருள்
9.	ஒருபொருட் பன்மொழி	: பொருள், வழக்கு
10.	செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்	: வடிவம், பொருள், வழக்கு
11.	செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று	: வடிவம், வழக்கு
12.	தகுதிவழக்கு	: அருகிய வழக்கு, பொருள், வழக்கு
13.	தொகை நிலைத் தொடர்	: அமைப்பு, பொருள், வழக்கு
14.	தொழிற்பெயர்	: அமைப்பு, வழக்கு
15.	மரபு	: பொருள், வழக்கு
16.	முதனிலைத் தொழிற்பெயர்	: வடிவம், வழக்கு
17.	முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்	: வடிவம், பொருள், வழக்கு
18.	முற்றெச்சம்	: வடிவம், வழக்கு
19.	வண்ணச்சினைச் சொல்	: வழக்கிறத்தல், அமைப்பு, பொருள்
20.	வழுவமைதி	: பொருள், வழக்கு

21. விகாரம் : வடிவம்
22. வியங்கோள் வினைமுற்று : வடிவம், வழக்கு
23. வினையாலணையும் பெயர் : வடிவம், வழக்கு

இவ்வாறாக, இலக்கணக்குறிப்புகளுக்கு இன்னோரன்ன முறைகளில் தெளிவும் விளக்கமும் அளித்துக் கற்பித்தால் மாணவர் உள்ளத்தில் அவை நன்கு நிலைபெறும். அவர்களுக்கு அவை பயன்படுதலும் இயலும்.

கலந்துரையாடல்

பெருமாள்: மருத்துவம், தொழிற்நுட்பக்கல்வி பயிலும் மாணவர்களுக்கு "அடிக்கோடிட்ட சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு" எனும் கேள்வியால் என்ன பயன்?

நடராசபிள்ளை: இலக்கணக்குறிப்பு வரைக என்று கேட்பது மொழித்திறனை இலக்கியத்தின் வாயிலாக புரிந்துகொள்ளப் பயன்படுகிறது.

முத்தன்: எந்த வழுக்கலுமின்றி மொழியினை பயன்படுத்த இலக்கணக்குறிப்பு வரைக என்பது தேவையே.

திருமுருகன்: இலக்கணக்குறிப்பு நோக்கம் சரியே. ஆனால் அடிப்படை சரியாக இல்லை.

பிச்சை: இலக்கண அறிவு இனங்காணும் அறிவு இருக்கிறதா என்பதை அறிய இலக்கணக்குறிப்பு தேவை.

இராமலிங்கம்: இலக்கியத் தொடர்களில் வரக்கூடிய இலக்கணக்குறிப்பு கேள்வித்தாளில் இலக்கணக்குறிப்பாக இடம் பெறுவது இல்லை. இலக்கணம் அறிந்தவர்களே அதிக மதிப்பெண்கள் பெறமுடியும். எனவே கல்லூரி நிலையில் இலக்கணக் குறிப்பு அவசியம்.

சிவலிங்கனார்: இலக்கணக்குறிப்பு பொறியியற் கல்லூரி, மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கும் தேவையே! இலக்கண அறிவு இருந்தால்தான் அவர்கள் நூல் எழுதும் நிலை வந்தால் அதைச் செம்மையாக செய்யமுடியும்.

சிவசுப்பிரமணியன்: பள்ளி மாணவர்களுக்கு இலக்கணக் குறிப்பு தேவையில்லை. கல்லூரி நிலையில் இலக்கணக் குறிப்பு தேவை. பாடத்திட்டத்தில் இருக்கும் குறைபாடுகளை மாற்றி அமைக்க வேண்டும். இலக்கணம் கற்பிப்போருக்கு இலக்கணம் பற்றிய முழு அறிவு தேவை. அஃதோடு பணியிடை பயிற்சி கோடையில் தேவை. மேலும் நடைமுறையில் வழங்குகின்ற உதாரணங்களை இலக்கணக் குறிப்புகளுக்கு எடுத்தாள வேண்டும்.

சண்முகம்: 'இலக்கணம் என்றால் என்ன' என்ற அடிப்படையைத் தெரிந்துகொள்ளவேண்டும். இலக்கணத்தை நடைமுறைபபடுத்த வேண்டும். இலக்கிய மொழிக்கும் பேச்சுமொழிக்கும் வேறுபாடு உள்ளதால் இலக்கண அறிவை புகட்ட பேச்சு மொழியிலிருந்து உதாரணங்களை எடுத்தாளவேண்டும்.

இசரயேல்: இலக்கணக்குறிப்பு ஏன் சொல்லிக்கொடுக்கின்றோம் என்ற நோக்கம் ஆசிரியர்களுக்கு நன்கு தெரிய வேண்டும். இலக்கியம் தெரிய இலக்கணம் கற்பிக்கவேண்டும். குறிப்புகள் படிப்படியாக அறிமுகப்படுத்தல் வேண்டும். மாணவர்களுக்கு இலக்கணத்தில் ஏற்படும் சிக்கல் என்னவென்று தெரிந்துகொண்டு அச்சிக்கலைப் போக்கி விளக்கவேண்டும். இலக்கணக் குறிப்பு எழுதுக என்று கேட்கப்படும் கேள்விகளை திரும்பத் திரும்ப கேட்டதையே கேட்காமல் இலக்கணக் குறிப்பு வரைதலில் வடிவமாற்றம், வழக்கு இழந்தவை, பொருள் வேறுபட்டவை, பயன்வகை வேறுபாடு, வழக்குமாற்றம், அரிய வழக்கு போன்ற செய்திகளை மொழியோடு தொடர்புபடுத்தி நிறைவாக கற்பித்தல் வேண்டும். கற்பிக்கத் தெரியாமல் இலக்கணத்தைக் கையாளுவதனாலும் குழப்பங்கள் ஏற்படுவதுண்டு ஆகவே நிறைவாக, தெளிவாக பயிற்றுவித்தல் வேண்டும்.

மொழியியல் 8. 3 & 4 (1985)
முதல் மொழியியல் கருத்தரங்குக்
கட்டுரைக் கோவை

தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும்போது எதிர்படும் இடர்ப்பாடுகள்

முனைவர் ந. நடராசபிள்ளை*

இக்கட்டுரை தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும் போதும், அதற்குரிய திட்டங்களை வகுக்கும்போதும் பாட நூல்கள் எழுதும்போதும் என்னென்ன இடர்ப்பாடுகளைச் சந்திக்க நேரிடும் என்பதை விளக்குகின்றது. இவ்விடர்ப்பாடுகள் கீழ்வரும் தலைப்பின் கீழ் விளக்கப்படுகின்றன. (1) பயிற்று முறை, (2) பாட நூல்கள், (3) ஆசிரியர், (4) பயில் மொழிக் கூறுகள்.

1. பயிற்றுமுறை

மாணவர்களின் தேவைக்கு அல்லது கற்றல் நோக்கத்திற்குத் தகுந்தாற் போலும் ஆசிரியர் பின்பற்ற நினைக்கும் கற்றல்

* முனைவர் ந. நடராசபிள்ளை அவர்கள் மைசூரிலுள்ள இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தில் விரிவுரையாளராக உள்ளார்.

கோட்பாட்டின் அடிப்படையிலும் பயிற்று முறைகள் மாறுபடு கின்றன.

மொழி கற்றல் கோட்பாடுகளையும், மொழி கற்பித்தல் கோட்பாடுகளையும் எவ்வாறு இணைப்பது என்பதை நோக்கும் போது உளவியல் அறிவு தேவைப்படுகின்றது. இவ்வறிவின் அடிப்படையிலேயே பாடநூலின் அமைப்பும் பயிற்று முறையும் அமைகின்றன. சான்றாக,

(அ) தூண்டல் — துலங்கல் செயற்பாடு.

ஸ்கின்னரின் தூண்டல் - துலங்கல்

உளவியல் கோட்பாடுகளை உள்ளடக்கிய கற்றல் செயற்பாடு இது. இதன் அடிப்படையில் ஆசிரியர் தமிழைக் கற்பிக்க நினைத்தால் பாட நூலையும் அவ்வாறே எழுத நேரிடும். இதன் காரணமாக அடிப்படை மொழித் திறன்களில் கேட்டல், பேசு தலுக்கு முக்கியத்துவமும் படித்தல், எழுதுதல் திறன்களுக்கு அடுத்த இடமும் தரப்படுகின்றன. எனவே, பாட நூலில் பேசிப் பழகுவதற்கான உரையாடல் பாடங்களும், அதை அடுத்து வாய் மொழிப் பயிற்சிக்கான வாய்பாட்டுப் பயிற்சிகளும் (drills, அதை அடுத்து எழுதுதல் திறனை வளர்ப்பதற்கான எழுத்துப பயிற்சிகளும் அடங்கும். இங்கு வாக்கிய அமைப்புகளும், சொற்களும் முழுவதுமாக படியமைப்பு செய்யப்பட்டிருக்கும். திருப்பிச் சொல்தலுக்குக கூடுதல் அளவு முக்கியத்துவம் தரப் படுகின்றது.

(ஆ) ஓர்தல் விதி பயில் செயற்பாடு

இது தூண்டல் - துலங்கல் செயற்பாட்டிற்கு நேர் எதிர் மாறான கற்றல் கோட்பாடு. ஆகையால் பாடநூலின் அமைப் பும் பயிற்று முறையும் மாறுபடும். மொழி வழக்கப்படுத்தப் படுவதைவிட விதிகளையே பயில்கிறோம் என்ற கோட்பாட் டின் அடிப்படையில் மொழி கற்பிக்கப்படுகின்றது. ஆகவே, இங்கு வாய்பாட்டுப் பயிற்சிக்கு இடமில்லை. மொழிப் பயனைக் கட்டுப்படுத்துகின்ற விதிகளே கற்பிக்கப்படுகின்றன.

ஆசிரியர் மேற்சொன்ன இருகற்றல் கோட்பாடுகளில் எதைப் பின்பற்றப் போகிறார் என்பதன் அடிப்படையில் கற்பித்தல் முறைகளும் உத்திகளும் மாறுபடுகின்றன, இதுவே ஆசிரியர் எதிர்ப்படுகின்ற முதல் இடர்ப்பாடு. இக்கோட்பாடுகளைப் பின்பற்றிப் பல பயிற்று முறைகள் எழுந்தன. முக்கியமாக

(1) இலக்கண மொழி பெயர்ப்பு முறை (Grammar translation Method)

(2) நேர்முகமுறை (Direct Method)

(3) கேட்டுப் பேசல் முறை (Audio lingual Method)

(4) மொழி ஒப்புமை முறை (Cognate Method)

(5) கூட்டு முறை (Eclectic Me hod)

இவற்றைக் கூறலாம். இந்த ஐந்து முறைகளிலும் ஆசிரியர் எதைப் பின்பற்றப் போகிறார் என்பது அடுத்த இடர்ப் பாடாகும்.

பயிற்று முறையைத் தேர்ந்தெடுக்கும் போது கூட கற்றல் கோட்பாடுகளோடு மாணவர்களின் நோக்கமும் மாணவர் களின் தாய்மொழி, அவர்களின் கல்விஅறிவு போன்ற வேறு பல கூறுகளும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியவையாகும். (இவற்றால் ஏற்படும் இடர்ப்பாடுகளை அடுத்தபகுதியில் காணலாம்) எனவே, தேவையின் அடிப்படையில் ஏதாவது ஒரு முறையைப் பின்பற்றவோ பல முறைகளிலிருந்தும் எடுத்து கூட்டுமுறையாகவோ கற்பிக்க நேரிடலாம். இந்நிலையில் முறைகளைப் பற்றிய அறிவும், அம்முறைகள் தருகின்ற உத்தி களைப் பற்றிய அறிவும் தேவைப்படுகின்றது. இவ்வறிவினால் தான் வகுப்பறைச் சூழலுக்கு ஏற்ப முறையை மாற்றிச் செம்மையாகக் கற்பிக்க இயலும்.

2. பாட நூல்கள்

மேற்கூறிய கற்றல்-கற்பித்தல், உளவியல், மொழியியல் கோட்பாடுகளின் அடிப்படையிலும் மாணவரின் நோக்கத்தின் அடிப்படையிலும் பாடநூலின் அமைப்பு மாறுபடுகின்றது.

(அ) கற்பித்தல் முறைகளை அடியொற்றி பல பாடநூல்களும் தமிழில் எழுதப் பட்டுள்ளன. அவற்றை இங்குக் காணலாம்.

நேர்முக முறையைப் பின்பற்றி ஜோதிமுத்துவின் (1963) '**A guide to Tamil by Direct method**' என்னும் நூலும்,

கேட்டுப் பேசல் முறையைப் பின்பற்றி இராசாராமின் (1979) '**An Intensive Course in Tamil**' என்னும் நூலும்,

மொழி ஒப்புமை முறையைப் பின்பற்றி சுப்பிரமணியமும் வேறுசிலரும் (1973) எழுதிய '**Tamil An Intensive course**' என்னும் நூலும்,

கூட்டுமுறையைப் பின்பற்றி ஞானசுந்தரத்தின் (1985) தமிழ்விளக்கு நிலை I, நடராசபிள்ளை (அச்சில்) தமிழ் விளக்கு நிலை II என்னும் நூல்களும்

தொடக்கநிலை மாணவர்களுக்கான பாடநூல்களும்

வெளிவந்திருக்கின்றன. (Kumaraswamy Raja and Dorasamy, 1966; Shanmugam Pillai, 1966 & 1968).

இவற்றில் எந்த நூலைக் கற்பிப்பதற்காக எடுத்துக் கொள்வது என்பது அடுத்த இடர்ப்பாடாகும்.

(ஆ) நூலின் வடிவத்தையும் மொழிகற்பிக்கும் ஆசிரியர் மனத்திலிருத்தித் தம் கற்பித்தல் முறையையும் உத்திகளையும் நிர்ணயிக்க வேண்டியிருக்கின்றது. நூலின் பாடம் எந்த வடிவத்தில் அமைந்துள்ளது? பேசுவதற்கு உதவியாக இருக்கும்படி உரையாடலில் அமைந்திருக்கின்றதா? (பெரும்பாலான பாட நூல்கள் இவ்வாறே அமைந்துள்ளன.) அல்லது மொழியமைப்புகளை உள்ளடக்கிய கதை, கட்டுரை பாடல் வடிவில் அமைக்கப் பட்டிருக்கின்றதா? (ஞான சுந்தரம், 1985, நடராசபிள்ளை (அச்சில்)

(இ) நூல்கள் ஆசிரியரின் உதவியோடு கற்க உதவுபவையா? அல்லது மாணவர்கள் தாமே கற்க உதவுபவையா? என்பன அடுத்த கேள்விகளாகும். ஷிப்மனின் (1975) **Intermediate Tamil: A Self Instructional Method** என்னும் நூலும்

சங்கர நாராயணனின் (1985) Semi Programmed Auto Instructional Tamil Reader - என்னும் நூலும் மாணவர்கள் தாமே கற்கும் முறையில் எழுதப் பட்டுள்ளன. இவற்றிலும் எந்நூல்களைத் தெரிவு செய்வது என்பது ஓர் இடர்ப்பாடாகும்.

(ஈ) பாடநூலில் வாய்பாட்டுப் பயிற்சிகள் உள்ளனவா? அவற்றை எவ்வாறு மாணவர்களுக்குக் கொடுப்பது? தாமே கற்க உதவும் நூல்கள் என்றால் வாக்கியங்களின் ஒலிப்பை யார் கொடுப்பது? எனின், பாடநூலோடு பதிவு நாடாக்களும் இருக்கின்றனவா? (தெய்வசுந்தரம் & கோபால் (1984) ஆகியோரின் நூலுக்குத் துணையாக பதிவு நாடாக்கள் இருக்கின்றன.)

(உ) எழுத்துப்பயிற்சிகள் இருக்கின்றனவா? என்பதன் அடிப்படையில் அடுத்த இடர்ப்பாடு எழுகின்றது. பயிற்சிகள் பாடத்தை ஒட்டி அமைகின்றனவா? பயிற்சி ஏடு எனத் தனியாக அமைகின்றதா? அடிப்படைத் திறன்களில் கேட்டல, பேசுதல், படித்தல், எழுதுதல் என்னும் நான்கு திறன்களையும் வளர்க்கும் முறையில் பயிற்சிகள் அமைக்கப்பட்டிருக்கின்றனவா? பயிற்சிகள் தாமே திருத்தும் முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றனவா? போன்ற கேள்விகளுக்குத் தரப்படுகின்ற பதிலின் அடிப்படையில் பிரச்சினைகளும் வேறுபடுகின்றன.

(ஊ) வகுப்பறையில் பயன்படுத்த உதவும் நூலா அல்லது மொழிப் பயிற்சிக் கூடத்தில் பயன் படுத்த உதவும் நூலா என்பதன் அடிப்படையில் பிரச்சினைகள் எழலாம். கோதண்டராமனின் (1975) A course in Modern standard T mil என்னும் நூல் மொழிப் பயிற்சிக் கூடத்தில் பயன்படுத்தப்படுவதற்கானது. எனவே, மொழிப்பயிற்சிக் கூடம் இன்றிமையாததாகின்றது.

(எ) இலக்கணப் பகுதியை உள்ளடக்கிய நூலா அல்லது இலக்கணப்பகுதி தனியாக அமைந்துள்ளதா? இலக்கணப் பகுதி ஆசிரியருக்கா, மாணவருக்கா? இலக்கணம் அமைப்பு மொழியியலை அடியொற்றியதா அல்லது மாற்றிலக்கண மொழியியலை அடியொற்றியதா அல்லது மரபு இலக்கணத்தை அடியொற்றி

யதா அல்லது எல்லாம் சேர்ந்த ஒரு கூட்டு இலக்கணமா? என்னும் கேள்விகளின் அடிப்படையிலும் இடர்ப்பாடுகள் எழலாம்.

(ஏ) பண்பாட்டுக் கூறுகளுக்கான குறிப்புகள் தரப்பட்டுள்ளனவா? சொற்களஞ்சியத்தைப் பெருக்க வழி முறைகள் கொடுக்கப்பட்டுள்ளனவா? சொற்பொருள் அறிய அகராதி பார்க்க வேண்டுமா? அல்லது பாடநூலிலேயே தரப்பட்டுள்ளனவா.? அகராதி பார்க்க வேண்டுமெனில் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பவர்களுக்குத் தேவையான அகராதி இருக்கின்றதா? (இல்லை) (Rajaram), 1979, Shanmugam Pillai, 1966 & 1968 போன்றவைகளில் சொற்பொருள் தரப்பட்டுள்ளது)

(ஐ) பாடநூலைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கையேடு தனியாக இருக்கின்றதா? இல்லையெனில் பாடநூலின் ஒரு பகுதியாக அமைந்துள்ளதா என்பதன் அடிப்படையிலும் இடர்ப்பாடுகள் எழலாம். ஞானசுந்தரம் (1985), நடராசபிள்ளை (அச்சில்) ஆகியோரின் நூல்களில் ஆசிரியருக்கான குறிப்புகள் நூலின் முதல்பகுதியாக அமைகின்றன.

(ஒ) மொழி அமைப்புகள் பாடநூலில் படியமைப்பு செய்யப்பட்டிருக்கின்றதா? அவ்வாறு படியமைப்பு செய்யப்பட்டிருந்தால் தெரிந்தவற்றிலிருந்து தெரியாதவற்றிற்கு என்றும் எளிமையானவற்றிலிருந்து கடினமானவற்றிற்கு என்றும் ஒருவாக்கியத்திலிருந்து இன்னொரு வாக்கியத்தை உருவாக்கும்வகையில் என்றும் அமைந்திருக்கின்றதா? இராசாராம் (1979), ஞானசுந்தரம் (1985), நடராசபிள்ளை (அச்சில்), ஷிப்மன் (1975) போன்றோரின் நூல்களில் ஓரளவு படியமைப்பு செய்யப்பட்டிருக்கின்றன எனினும் தமிழின் வாக்கிய அமைப்புகள் இன்னும் சரியாகப் படியமைப்பு செய்யப்படவில்லை என்று துணிந்து கூறிவிடலாம். இதற்குச் சான்றாக இதுகாறும் வெளிவந்துள்ள தமிழ்ப் பாட நூல்களின் மொழியமைப்புப் படி நிலையின் வேறுபாட்டினைக் கூறலாம். எனினும் படியமைப்பு செய்தல் தேவையான ஒன்று என்பது பலராலும் ஒத்துக் கொள்ளப்பட்டதாகும் (Nadaraja Pillai, 1985). மொழி அமைப்புகள் வரிசைப்படுத்தப் பட்டிருக்கின்றனவா என்ற கேள்வியைப் போன்றதே பாடப்பொருள்

வரிசைப்படுத்தப்பட்டிருக்கின்றனவா என்பதுவும். வகுப்பறைச் சூழலை மனத்திலிருத்தி எழுதப்பட்ட ஒரு பாடம் அறிவியல் பாடத்தை விட எளிமையாக அமையும். ஒருசில நூல்கள் இயற்கைச் சூழ்நிலைகளை மனத்திலிருத்தித் தேவையான மொழியமைப்புகளை எளிமையாக இருந்தாலும் கடினமாக இருந்தாலும் சேர்த்துப் பாடங்களைத் தருகின்றன. இச்சூழல்களில் மொழியமைப்புகள் படியமைப்பு செய்யப்படாத காரணத்தால் அவற்றை கற்பிப்பது மிகச் சிரமமாகத் தோன்றும். எனவே இடர்ப்பாடுகள் மொழி அமைப்பின் அடிப்படையில் எழலாம்.

(ஓ) பாடநூல் சிறுவர்களுக்காக எழுதப்பட்டதா? (ஞானசுந்தரம் (*1985*), நடராசபிள்ளை (அச்சில்)) பெரியவர்களுக்காக எழுதப்பட்டதா? (மேற்குறிப்பிட்ட எல்லா நூல்களும்) என்பதன் அடிப்படையில் பிரச்சினை எழலாம். வயதின் அடிப்படையில் பாடநூலை அமைக்க வேண்டியது மிகத்தேவையாகும். இதைப் போன்றே கற்றல் நோக்கத்திற்குத் தகுந்தவாறு பாடநூல் எழுதப்பட்டிருக்கின்றதா? இல்லையெனில் அவற்றிற்குத் தேவையான மொழி அமைப்புகளும் சொற்களும் தொகுக்கப்படவேண்டும். தேவைக்கு ஏற்றவாறு பாடநூலும் எழுதப் படவேண்டும். சான்றாக நோக்கங்கள கீழ் வருமாறு அமையலாம். அடைப்புக்குறிக்குள் அந்நோக்கத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பாடநூல் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

(i) இரண்டாம் மொழியாகத் தமிழைக் கற்பிக்கும் ஆசிரியராக வேண்டும். (Rajaram, 1979)

(ii) பொதுவாகத் தமிழைக் கற்க வேண்டும். (Kumaraswamy Raja & Doraisamy, 1966; Shanmugam Pillai, 1966 & 1968; Schiffman, 1971 & 1975; Jothimuthu, 1963)

(iii) சங்க இலக்கியங்களைக் கற்க வேண்டும் (இல்லை)

(iv) தற்கால இலக்கியங்களைக் கற்க வேண்டும் (இல்லை)

(v) மொழி பெயர்க்க வேண்டும் (இல்லை)

(vi) ஏதாவது ஒரு சமய இலக்கியத்தைக் கற்க வேண்டும் (இல்லை)

(vii) மொழித் தேவையின் அடிப்படையில் (need based courses)

1. இந்திய ஆட்சிப்பணி அலுவலர்களுக்காக (பாக்கியலட்சுமி, 1985)

2. வங்கி அலுவலர்களுக்காக (இல்லை)

3. மருத்துவர்களுக்காக (இல்லை)

4. சமயச் சொற்பொழிவிற்காக (இல்லை)

5. தலைமைச் செயலக அலுவலர்களுக்காக (இல்லை)

இவ்வாறு பலப்பல தேவைகளுக்கெனத் தனித்தனி பாடநூல்கள் எழுதப்படவேண்டும். ஓர் அடிப்படை அறிவைக் கொடுக்கும் நிலையில்தான் இதுவரை வந்த நூல்கள் உருவாக்கப் பட்டுள்ளன. இது ஓர் இடர்ப்பாடு தருகின்ற இடமாகும்.

(viii) சிறுவர்களுக்குக் கற்பிக்கவேண்டும் (ஞானசுந்தரம் 1985, நடராசபிள்ளை (அச்சில்)

(ix) பெரியவர்களுக்குக் கற்பிக்கவேண்டும். (மற்ற பல நூல்கள்)

(x பேச்சுத் தமிழைக் கற்கவேண்டும் (Raiaram, 1979; Shanmugam Pillai 1966 & 1968; Kumaraswamy Raja & Doraisamy 1966; Schiffman, 1975)

(xi) எழுத்துத் தமிழைக் கற்க வேண்டும் (Nadaraja Pillai, 1984; Jothi muthu (1963)

(xii) பேச்சுத்தமிழ், எழுத்துத் தமிழ் இரண்டையும் கற்க வேண்டும். (Kothandaraman 1975, Deivasundaram and Gopal, 1984)

மேற்சொன்ன ஒரு சில நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் வெகுசில நூல்களே எழுதப் பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றும் தனித்தனிக் குறிக்கோளை மனத்திலிருத்தி எழுதப்பட்டிருப்ப தால் மற்ற நோக்கங்களை நிறைவேற்றப் பெரும்பாலும் பயன்படாது. பாடநூல்கள் பல இயற்றப்படவேண்டும்.

(ஒவ) பாடநூல்கள் தமிழ் எழுத்துகளில் எழுதப்பட்டுள்ளனவா? (பல) ரோமன் எழுத்துகளில் தரப்பட்டுள்ளனவா? (Schiffman 1971, 1975) தமிழ் எழுத்துகளில் கொடுக்கப்பட்டுப் படிப்பதற்குத் துணைசெய்யும் வகையில் ரோமன் எழுத்துகளிலோ தேவநாகரி எழுத்துகளிலோ (Rajaram, 1979) தரப்பட்டுள்ளனவா? ரோமன அல்லது தேவநாகரி எழுத்துகளிலிருந்தால் மாணவர்களுக்கு அவ்வெழுத்துகள் தெரியுமா? அவ்வெழுத்துகளிலிருந்து தமிழ் எழுத்துகளுக்கு எவ்வாறு, எப்போது மாறுவது?

தமிழ் எழுத்துகளைக் கற்பிப்பதற்கு எனத் தனி நூல்கள் இருக்கின்றனவா? (Pattanayak and Thirumalai, 1980) அவை எம்முறையில் தமிழ் எழுத்துகளைக் கற்பிக்கின்றன? அகரவரிசையிலா அல்லது ட,ப,ய,ம,ழ என்னும் வரிவடிவ ஒற்றுமையின் அடிப்படையிலா? என்பனவும் இடர்ப்பாடு தருவனவாகும்.

தமிழ் ஒலிகளைக் கற்பிப்பதற்கு எனவும் (Rajaram, 1972) தமிழ் வாக்கிய அமைப்புகளையும் புணர்ச்சிகளையும் கறபிப்பதற்கு எனவும் (Nadaraja Pillai 1985; Nadaraja Pillai & Vimala 1978) ஒவ்வொரு சிறப்புக் குறிக்கோள்களை மனத்திலிருத்தி எழுதப்பட்டுள்ளனவா என்பது போன்றவையும் இடர்ப்பாடு தருவனவாகும். இவ்வாறு எழுகின்ற தேவைகளுக்கு ஏற்பப் பாடநூல்கள் எழுதப்படவேண்டும்.

3. ஆசிரியர்

தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும் ஆசிரியருக்கு இருக்க வேண்டிய தகுதித்திறன்கள் என்னென்ன? அவர் எவற்றில் பயிற்சி பெற்றிருக்க வேண்டும்? என்பதன் அடிப்படையில் பல இடர்ப்பாடுகள் எழலாம்.

(அ) மொழியின் அடிப்படைத் திறன்களான கேட்டல் பேசுதல், படித்தல, எழுதுதல் ஆகிய திறன்களைச் சிறப்பாகப் பெற்றிருக்க வேண்டும். இவற்றை மாணவர்களிடம் வளர்க்கத் தேவையான வழிமுறைகளையும் அறிந்திருக்க வேண்டும். சான்றாக, ர/ற, ல/ள/ழ, ன/ண, ந/ன, ஜ/ஸ/ஷ போன்ற ஒலிகளைத் தெளிவாக ஒலிக்க அறிந்திருக்க வேண்டும். திருத்தமாக, ஒலிப்பு

மாறாமல், நிறுத்தக் குறிகளை மனத்திலிருத்தி வியப்பு, வினா போன்ற குரலிசை மாற்றங்களோடு படிக்கவும் அறிந்திருக்க வேண்டும். வரி வடிவங்களைக் கற்பிக்கும் போது அவற்றிற் கிணையான ஒலி பெயர்ப்பு கொடுக்கவும் எழுதுதல் திறனை வளர்க்கவும் அறிந்திருக்க வேண்டும். இவற்றில் குறையிருக்கும் ஆசிரியர்களால் பலவிதமான இடர்பாடுகள் எழலாம்.

(ஆ) மொழி கற்பித்தலுக்கு நடைமுறையிலிருக்கின்ற முறைகளையும் உத்திகளையும் அறிந்திருக்க வேண்டும். குழந் தைகள் மொழி கற்பதற்கும் பெரியவர்கள் மொழி கற்பதற்கும் இடையிலான வேறுபாடுகளை அறிந்திருக்க வேண்டும். சுருக்கமாகக் கற்றல் கோட்பாடுகளை அறிந்திருக்க வேண்டும். இவற்றில் ஏற்படும் குறை மாணவர்களின் அடைவில் ஏற்படும் குறைக்குக் காரணமாகும்.

(இ) மொழியைப் பகுப்பாய்வு செய்யத் தேவையான மொழியியல் அறிவைப் பெற்றிருக்க வேண்டும். தமிழ் மொழி யியலை அறிந்திருக்க வேண்டும். பெரியவர்களுக்குத் தமிழைக் கற்பிக்கும் போது அவர்கள் தங்கள் தாய்மொழியோடு ஒப்பிட்டு நோக்குவதால் இவ்வறிவு இன்றியமையாததாகும். இவ்வாறு அறிந்திருக்கும் மொழியியலறிவையும் இருவகைகளாகப் பிரிக்க லாம். ஒலியியல், ஒலியனியல், உருபனியல், தொடரியல், சொற் பொருளியல் என்று அமைப்பு மொழியியலையும், மாற்றிலக் கண மொழியியலையும் அறிந்திருக்க வேண்டும். இரண்டா வதாக, மொழி ஆய்வுடன் தொடர்பு கொண்ட மொழிப் பயிற்சிக் கூடம், தொலைக்காட்சி, வானொலி போன்ற பல கருவிகளின் இயக்கத்தையும் பயனையும் அறிந்திருக்க வேண்டும்.

(ஈ) தமிழின் பண்பாட்டுக் கூறுகளை அறிந்திருப்பதோடு வேறுபண்பாட்டுப் பின்புலம் கொண்டவர்கள் தமிழைக் கற்கும் போது பல இடர்பாடுகள் எதிர்ப்படலாம். சான்றாக, உணவு, உடை, உறையுள், மரம், செடி, சமுதாய அமைப்பு, இலக்கியப் பண்பாடு, நாட்டு வரலாறு போன்ற பலவற்றை அறிந்திருப்ப தோடு இக் கூறுகளை மாணவர்களின் பண்பாட்டுக் கூறுக ளோடு ஒப்பிட்டுக் காட்டவும் அறிந்திருக்க வேண்டும்.

(உ) தமிழுக்கும் மாணவரின் தாய்மொழிக்கும் இடையே யுள்ள உறவை அறிந்திருக்க வேண்டும். இதன் அடிப்படையில் இருமொழிகளுக்கும் இடையிலான ஒற்றுமை வேற்றுமைகளையும் அறிந்திருக்க வேண்டும், மாணவர்களின் தாய்மொழியை ஓரளவாவது அறிந்திருத்தல் நல்லது. பயிற்று மொழி வேறாக இருந்தால் அம்மொழியையும் அறிந்திருக்க வேண்டும். சான்றாக, பல தாய்மொழிகளைக் கொண்ட மாணவர்கள். வகுப்பிலிருக்கும் போது ஆங்கிலம் பயிற்று மொழியாக இருக்கலாம். எனவே ஆங்கில இலக்கண அறிவும் தேவைப்படுகின்றது. அல்லது ஒரே மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் வகுப்பிலிருந்தால் அவர்களின் தாய்மொழியே பயிற்றுமொழியாக அமையலாம். அவ்வாறெனின் அம்மொழியின் இலக்கண அறிவு தேவைப் படுகின்றது. மேற்கூறிய மொழி அறிவுக்குறை தமிழைக் கற்பிக்கும் போது எல்லாநிலைகளிலும் இடர்ப்பாடு தரும்.

(ஊ) ஆசிரியருக்கு இருக்க வேண்டிய தகுதித் திறன்களில் முக்கியமானது மாணவரின் பின்புல அறிவை அளவிட்டுக் கொள்ளத் தெரிவதுதான். மாணவரின் தாய்மொழியும் தமிழும் வெவ்வேறு மொழிக் குடும்பத்தைச் சேர்ந்திருத்தல் (இந்தி, வங்காளி, ஒரியா போன்றவை) அல்லது திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்திருத்தல் (கன்னடம், தெலுங்கு, மலையாளம்) இவற்றின் காரணமாக ஆசிரியர் தாம் கற்பிக்கும் முறையையும் உத்தியையும், ஏன் பாட நூலையும் மாற்றிக் கொள்ள நேரிடலாம். மாணவர்தம் தாய்மொழியில் அறிந்திருக்கும் இலக்கண அறிவின் அளவு தமிழைக் கற்கும் போது செல்வாக்கு செலுத்துகின்றது. தமிழ் இலக்கணத்தைக் கற்பிக்கும்போது ஆங்கில அல்லது மாணவனின் தாய் மொழி இலக்கணக் கலைச்சொற்களைப் பயன்படுத்துவதில் இடர்ப்பாடு எழலாம். தமிழ் இலக்கணக் கலைச் சொற்களை அவற்றிற்குப் பதிலாகப் பயன்படுத்தினால் இடர்ப்பாடு வேறு விதமாக அமையும். மாணவரின் பின்புலக் கல்வித்தகுதிகள், அறிந்திருக்கும் வேறு மொழிகள், மாணவர் தமிழ் கற்பதன் நோக்கம், தமிழின்மேலும் ஆசிரியரின் மேலும் அவர்கள்

கொண்டிருக்கும் மனப்பான்மை போன்றவையும் இடர்ப்பாடு களை விளைவிக்கும்.

(எ) கற்பித்தல் - கற்றல் செயற்பாட்டில் ஒரு முக்கியமான நிலை பிழைதிருத்தலும் பிழை நீக்கல் பாடங்களும் (Remedial lessons) ஆகும். பிழைகளைத் தொகுத்து, வகுத்துக் காரணம் கண்டுபிடித்து அவற்றை நீக்குவதற்குத் தேவையான பாடங் களைத் தயாரிக்கவும் ஆசிரியர் அறிந்திருக்க வேண்டும். இந்த அறிவும் ஆசிரியருக்குத் தேவையாகும். (நடராசபிள்ளை & விமலா, 1981) பிழைகளுக்குக் காரணமாக அமைகின்ற தாய்மொழி இடையீடு, வளர்மொழி இடையீடு, பயிற்றுமொழி இடையீடு, அறிந்திருக்கும் இன்னொரு மொழியின் இடையீடு, ஒப்புமையாக்கம், மட்டுமீறிய திருத்தம் போன்ற பலவற்றையும் அறிந்திருக்க வேண்டும். இதோடு பிழைகளைத் திருத்துவது எப்படி? திருத்தி விட்டுவிடுவதா? திருத்தங்களை மாணவர்கள் செயற்படுத்த எப்போது தூண்டுவது? பிழைக்கான காரணங் களை மாணவர்களிடம் வெளிப்படுத்த வேண்டுமா? பிழை நீக்கற் பாடங்களை ஆசிரியரே எழுதவேண்டுமா? அவை பாட நூலிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றன? போன்ற பல இடர்ப் பாடுகளையும் ஆசிரியர் எதிர் நோக்க வேண்டியது வரும்.

4. தமிழ்மொழிக் கூறுகள்

மேற்கூறியவற்றில் அடங்காத, தமிழுக்கேயுரிய சிறப்பான மொழிக் கூறுகள் மாணவர்களுக்கு இடர்ப்பாடு தருவனவாகும். இவை கற்பிக்கும் போது கூட இடர்ப்பாடு தருகின்றன, (நடராச பிள்ளை, 1984).

(1) க, ச, ட, த, ப என்னும் ஐந்து வல்லினங்களும் இடத் திற்குத் தகுந்தாற் போல ஒலிப்பில் மாறுபடுதல்

(2) ற தனித்து வரும்போதும் இரட்டிக்கும்போதும் ஒலிப்பில் மாறுபடுதல்

(3) ர/ற, ல/ள/ழ, ன/ண போன்றவற்றின் ஒலிப்பு

(4) ந/ன ஆகியவற்றின் வருமுறையும் ஒலிப்பும்

(5) குற்றியலுகரம்

(6) க, ச, த, ப என்னும் நான்கு எழுத்துகள் இரட்டித்தல்

(7) வல்வினை மெல்வினைப் பாகுபாடு

(8) இறந்தகால இடைநிலைகள்

(9) அம் ஈறாக வரும் சொற்களோடு வேற்றுமை உருபு சேர்க்கும் போது -த்த்- சாரியை பெறுதல்.

(10) பண்புப் புணர்ச்சி. சான்றாக செம்மை + கோல் = செங்கோல், கருமை + குரங்கு = கருங்குரங்கு. முதல் வகையில் செம் என்பதும் இரண்டாவது வகையில் கரும் என்பது அடியாகவும் அமைதல்.

(11) (மெய்) + உயிர் (குறில்) + மெய் என அசை அமைப்பை உடையவற்றோடு வேற்றுமை உருபு சேர்க்கும் போது கடைசிமெய் இரட்டித்தல்.

(12) வினைச் சொல்லோடு வருகின்ற பால் எண் இயைபு, சிறப்பாக 'யார்' என்னும் சொல் எழுவாயாக வரும் போது.

(13) தன்மை, முன்னிலை பெயர்ப்பதிலிகளோடு வேற்றுமை உருபு சேர்க்கும் போது ஏற்படுகின்ற மாற்றங்கள்.

(14) ஒரு/ஓர்/ஒன்று போன்றவற்றின் பயன்

(15) ஒரு சில வினைச் சொற்களுக்கு வேர்ச்சொல் ஒன்றாகவும் கால இடைநிலைகள் சேரும்போது வேறாகவும் அமைதல். சான்றாக, வா, காண், போ, ஆள் போன்றவை.

(16) வலி, பசி போன்ற வினைச் சொற்களின் பயன்கள்.

(17) துணைவினைகளின் பயன்கள். குறிப்பாக, தெரியும், முடியும் போன்றவை. இவற்றின் பயன்பாடு வேண்டும், போதும் போன்றவற்றிலிருந்து வேறுபடுதல்.

(18) எதிர்கால இடைநிலைகள்

(19) தன்வினை, பிறவினை பாகுபாடுகள் போன்ற வேறு பல வினைப் பாகுபாடுகள்.

(20) எதிர்கால பெயரெச்ச அமைப்பு எதிர்கால அஃறிணை வினைத் திரிபோடு ஒன்றுபோலிருத்தல் (மாணவன் - அது வரும்)

(21) தொழிற்பெயரான வருகிறது, ஓடுவது போன்றவை அஃறிணை வினையாலணையும் பெயரைப் போலிருத்தல். ஓடுவது நல்ல பழக்கம். அங்கே ஓடுவது குதிரை.

(22) வினையடிப் பெயர், தொழிற்பெயர் போன்றவற்றை உருவாக்குதல்

(23) எதிர்மறை வினைவடிவங்கள்

(24) ஒரு சில வினைகளோடும் பல வேற்றுமை உருபுகளை ஏற்கும் பெயர்கள் வருதல். சான்றாக,

(அ) என்னிடம் சொல், எனக்குச்சொல்

(ஆ) கல்லால் கட்டப்பட்டது, கல்லில் கட்டப்பட்டது.

(25) இரு எனும் வினைச் சொல்லின் பயன், அதோடு '-ஆக' என்னும் வினையடை சேர்தல்.

(26) கிளம்பு, புறப்படு, தொடங்கி போன்ற னைச் சொற்களின் தேர்வுக் கட்டுப்பாடுகள்

(27) இரண்டாம் வேற்றுபை, நான்காம் வேற்றுமை உருபுகள் சில இடங்களில் தேவையில்லத நிலை

(28) செயப்பாட்டுவினை வாக்கிய அமைப்புகள்

(29) தமிழின் பேச்சுவழக்கு, எழுத்துவழக்கு வேறுபாடுகளும், சமுதாய, வட்டாரக்கிளை மொழிகளும், இதன்காரணமாக பாடநூல் எந்த வழக்கில் அமைய வேண்டும், எழுத்துவழக்கில் என்றால் புலவர் நடையா? பத்திரிகை நடையா? பேச்சு வழக்கென்றால் வட்டார/சமுதாய வழக்கா, பொதுமைப் பேச்சு வழக்கா? பொதுமைப் பேச்சு வழக்கென்றால் அது எது? அதை யார் நிர்ணயிப்பது? (வந்திருக்கும் பாட

நூல்களைப் பார்க்கும் போது அது நூலுக்கு நூல் வேறுபட்டிருக்கின்றது.) எந்த வழக்கை முதலில் கற்பிப்பது. ஒருவழக்கிலிருந்து இன்னொருவழக்கிற்குப் போகத் தேவையான விதிகளோ பயிற்சிகளோ எவ்வாறு தரப்படுகின்றன? (நடராசபிள்ளையின் (1985) **'A guide for Advanced leaners'** என்னும் நூல் விதிகளையும் பயிற்சிகளையும் தருகின்றது) பொதுமைப் பேச்சு வழக்கையும் எழுத்து வழக்கையும் கற்பித்தால் வட்டார சமுதாய வழக்கைப் புரிந்து கொள்ள இயலுமா? கன்னியாகுமரி மாவட்டத்தில் சமுதாய வியல் ஆய்வுசெய்ய விரும்புகிறவருக்கு எந்த வழக்கை கற்பிப்பது? அதற்கு நூல்கள் இல்லையே? இவ்விடர்பாடுகளைக் களைய முதலில பொதுமைப் பேச்சு வழக்கையும் பின்னர் எழுத்து வழக்கையும் கற்பித்து விட்டு வட்டாரசமுதாய வழக்குகளுக்குத் தேவையான சிறுசிறு கையேடுகள் உருவாக்கமுடியுமா? எழுத்துத் தமிழ் கற்றால் போதும் என வருகிறவருக்கு சங்கத் தமிழ் வழக்கு அல்லது இடைக்காலத் தமிழ் வழக்கு அல்லது தற்காலத் தமிழ் வழக்கு என ஏதாவது ஒரு வழக்கைக் கறகவேண்டுமென்றால் நூல்கள் இல்லையே? அவற்றை நிர்ணயம் செய்து எவ்வாறு தயாரிப்பது? வேறுபடும் இவ்வழக்குகளுக்கான அகராதிகள் இல்லையே! போன்ற பல இடர்ப்பாடுகளையும் தமிழின் கூறுகளால் சந்திக்க நேரிடும்.

மேற்கூறிய இடர்ப்பாடுகள் எல்லாம் வெறும் பட்டியல் அன்று. இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்திலும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திலும், வேறுபல நிறுவனங்களிலும் தமிழை இரண்டாம் மொழியாக அல்லது அயல் மொழியாகக் கற்பிக்கும் போது எதிர்ப்படுகின்ற இடர்ப்பாடுகளை மனத்திலிருத்தித் தொகுக்கப் பட்டவையாகும். இவ்விடர்ப்பாடுகளை இன்னும் பல வகைகளாகப் பிரிக்கலாம்; வேறுபல பட்டறிவு வாயிலாகக் கிடைக்கின்ற இடர்ப்பாடுகளையும் சேர்க்கலாம். இப்பிரச்சினைகளை நீக்குவதற்குத் தேவையான வழிமுறை

களைக் காணவேண்டும். அப்போதுதான் இடர்ப்பாடுகளின்றித் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிக்க முடியும்.

உதவிய நூல்களும் கட்டுரைகளும்

Bagyalakshmi, R. 1985, *Need based course in Tamil for IAS officers* (Mimeo), Central Institute of Indian languages, Mysore.

Deivasundaram and Gopal 1984. *A Course in Tamil*, International Institute of Tamil studies, Madras.

Gnanasundaram, V. 1985. *Tamil Vilakku - level I*, Central Institute of Indian languages, Mysore.

Jothimuthu, P. 1963. *A Guide To Tamil by Direct method*, The Christian Literature Society, Madras.

Kothandaraman, P. 1975. *A Course in Modern Standard Tamil*, International Institute of Tamil Studies, Madras.

Kumaraswamy Raja, N and Doraisamy, K. 1966. *Conversational Tamil*, Annamalai University, Annamalainagar.

Nadaraja Pillai, N. 1984. *A Written Tamil Reader* (Mimeo) Central Institute of Indian languages, Mysore.

——— 1984. "Problem Areas in Teaching Tamil as a second language", *Aayvukkoovai* 16:2. Annamalainagar.

——— 1985. *A Guide for Advanced learners of Tamil*, Central Institute of Indian languages, Mysore.

——— 1985. "Justification for grading - some Tamil Illustrations" *Indian linguistics* 46:142. (25-27)

——— (Forth coming) *Tamilvilakku - level II*, Central Institute of Indian languages, Mysore.

Nadaraja Pillai, N. & Vimala, S. 1981. *Pilai Aayvu*, Central Institute of Indian languages, Mysore.

——— 1978. *Tamil Structures A creative pattern practice*, (Mimeo). Central Institute of Indian languages, Mysore.

Pattanayak, D.P. & Thirumalai, M.S. 1980. *Introduction to Tamil Script – Reading and Writing*, Central Institute of Indian Languages Mysore.

Rajaram, S. 1972. *Tamil Phonetic Reader*, C.I.I.L. Mysore.

——— 1979. *An Intensive Course in Tamil*, C.I.I.L. Mysore.

Sankaranarayanan, G. 1985. *Semi Programmed Auto Instructional Tamil Reader* (Mimeo) C.I.I.L. Mysore.

Schiffman, H.F. 1971. *Reader for Advanced Spoken Tamil* Part I, Institute of International Studies, Washington.

——— 1975. *Intermediate Tamil A Self Instructional Method*, University of Washington, Seattle.

Shanmugam Pillai, M, 1966. *A Tamil Reader for Beginners Part I & II A.V*. Annamalai Nager.

——— 1968. spoken *Spoken Tamil - Part I & II, A.U*. Annamalai Nagar.

Subramonian, V. I. et. al 1973. *Tamil - An Intensive Course*, Department of Linguistics, Trivandrum.

கலந்துரையாடல்

பிச்சை: தமிழ் மொழியை பிறமொழியாளர்களுக்கு பயிற்று விக்க சரியான புத்தகமில்லை, மேலும் அமைப்பு முறைகொள் (Patten practice) நூற்கள் இன்னும் வெளிவரவில்லை. போது மான அகராதியும் தயாரிக்கப் படவில்லை.

பெருமாள்: மொழியை புரிந்து கொள்ள வயது காரண மில்லை. மூளையின் வயதுதான் காரணம்.

அறவாணன்: உயிர் எழுத்துக்களையும் மெய் எழுத்துக்களை யும் கற்பிக்கும் போது அதிக புழக்கமில்லா எழுத்துக்கள் தவிர்த்து

அதிகம் பயன்படும் எழுத்துக்களை மட்டும் IPA முறையை பின்பற்றி முதலில் மொழி கற்பிக்க வேண்டும்.

நடன சபாபதி: பொது வழக்கு மொழியை கற்பிக்க வேண்டும்.

நடராசபிள்ளை: 1. சுலபமான எழுத்துக்களை கொண்டு பிற எழுத்துக்களை கற்பித்தல் (ஒப்புமையுடைய வரிவடிவங்களை தொடர்பு படுத்தி எழுதிக் காட்ட வேண்டும்.) உதாரணமாக ட ப ய ம ழ என்பனவற்றை முதலில் சொல்லிக் கொடுக்க வேண் டும். பின்னர், ா ஈ ச க த போன்று எல்லா எழுத்துக்களையும் தொடர்பு படுத்தி எழுதினால் கற்போருக்கு எளிதில் விளங்கும். 2. அகராதி முக்கியமாக தயாரிக்கப் படவேண்டும் 3. பொது வழக்கு (தமிழுக்கு) எது என்பது இன்னும் வரையறை செய்யப் படவில்லை. எனவே அதை வரையறை செய்ய முயல வேண்டும். குழந்தைகளுக்கு தமிழ் பயிற்றுவிப்பதற்கு என தனி நூல்களும் பெரியவர்களுக்கு தமிழ் பயிற்றுவிப்பதற்கென தனி நூல்களும் வேண்டும்.

படி, குடி, பார், கொடு, எழுது, கிளம்பு, செய், ஓடு போன்ற வினையடி சொற்களை இறந்த கால வினையாக மாற்றும் பொழுது பயிலும் பெரியவர்கள் அனைத்து வினையடிகளுக்கும் ஒரே விதியை பயன்படுத்துகிறார்கள் என்பதை சுட்டிக்காட்டி னார். சொற்களஞ்சியம் மூன்று மாதத்தில் 1500 சொற்களும் ஆறு மாதத்தில் ஐயாயிரம் சொற்களும் அறிந்து கொள்ளுமாறு அமைக்கலாம்.

மூன்றாம் அமர்வு

நாள்: 24.3.1985 **காலம்: காலை 9.00 மணி**

தலைப்பு

உரிச்சொல்

தலைமை

பேராசிரியர்

ச. அகத்தியலிங்கம்

கட்டுரை

பேராசிரியர்

செ.வை. சண்முகம்

உரிச்சொல்

மொழியியல் 8. 3 & 4 (1985)
முதல் மொழியியல் கருத்தரங்குக்
கட்டுரைக் கோவை

உரிச்சொல்

செ. வை. சண்முகம்*

0. முன்னுரை

உரிச்சொல் என்பது மொழி அமைப்பில் எதைக் குறிக்கிறது; அதன் இலக்கணம் என்ன? என்பது தமிழ் இலக்கண உலகில் பெரிய பிரச்சனையாகவே இருந்து வந்திருக்கிறது. ஆயினும், அந்த உணர்வு அண்மையில்தான் பலராலும் வெளிப்படையாகக் கூறப்பட்டிருக்கிறது. உதாரணமாக ஆதித்தர் (1967:3) 'உரிச்சொல் என்றால் என்ன? அதற்குரிய விளக்கம் என்பது விளங்காத ஒரு புதிராகவே இருந்து வந்தது. இது பற்றி நாற்பது ஆண்டுகள் எண்ணியதுண்டு' என்று குறிப்பிட்டுள்ளார். சதாசிவம் (1961:107) 'உரிச் சொற்கள் எல்லாம் பெயர்ச் சொற்கள், வினைச் சொற்களினின்று தெற்றெனப் பிரித்துக் காட்ட

* பேராசிரியர் செ.வை. சண்முகம் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயர் ஆய்வு மையத்தில் பேராசிரியராக உள்ளார்.

ற்கு இயலாதனவாய் இருப்பது ஒரு பெருங்குறைபாடே என லாம்,' என்பார். 'முற்காலத்தில் சிறந்த தமிழ் அறிஞர் இருந்தனர் போலும். அவ்வறிஞர்கட்கு இவையெல்லாம் உரிச்சொல் என்று மேற்கோள் காட்டின் இன்ன இன்ன உரிச்சொற்கள் இன்ன இன்னவாறு திரிந்துநின்றுஇன்ன இன்ன பொருளை உணர்த்து கின்றன எனக் கூர்ந்தமதியால் ஆய்ந்து கொள்வர் போலும். இக் காலத்தில் உரிச்சொற்கு இலக்கணம் கூறி இவற்றை மேற் கோள் காட்டின் நுண்ணறிவுடைய மாணவரும் எண்ணி எண்ணி மயங்குவர். ஆசிரியர்க்கு மயக்கம் உளதோ எனவும் ஐயுறுவர்' என்பார் சங்குப் புலவர் (1962:331). இந்தக் குரல் எழுபதுகளிலும் (உ.ம் ஆண்டியப்பன், 1977:121) தொடர்ந்து வந்துள்ளது[1]. இந்த நிலையில் நமது நோக்கை வரையறுத்துக் கொண்டு அதற்கேற்பச் செய்திகளைப் பிரித்துப் பார்த்தால் ஓரளவாவது தெளிவு பிறக்கும். எனவே மொழி அமைப்பில் உரிச்சொல் என்பது என்ன என்று அறிந்து கொள்ள முயலு வோம்.

தொல்காப்பியர் உரிச்சொல் பற்றி உரியியலில் மட்டும் அல்லாது பெயரியலிலும் (சூ. 5) எச்சவியலிலும் (58) ஒவ்வொரு சூத்திரத்தில் விவரித்துள்ளார். அதில் உரியியலிலே உரிச் சொல் லின் விரிவான இலக்கணம் பேசப்பட்டுள்ளது. அந்த இலக் கணத்தை முதலில் பார்த்து அவை எப்படி ஏனைய இரண்டு இயல்களிலுள்ள சூத்திரக்கருத்தோடு ஒத்து வருகின்றன என்று நோக்க வேண்டும்.

1. உரியியல் விளக்கம்

உரியியல் முதல் சூத்திரத்தில் 'உரிச்சொற்கிளவி விரிக்குங் காலை' என்று தொடங்கி தொல்காப்பியர் நான்கு செய்தி களைக் குறிப்பிட்டுள்ளார். அவையாவன: (1) இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றுதல்; 2) பெயரினும் வினை யினும் மெய்தடுமாறுதல்; 3) ஒரு சொல் பல பொருளுக்கு உரிமையாயும் பல சொல் ஒரு பொருளுக்கு உரிமையாயும் தோன்றுதல்; 4) பயிலாத சொற்களுக்குப் பயின்ற சொற்க ளோடு சேர்த்து எல்லாச் சொல்லுக்கும் பொருள் கூறுதல்.

இவைகளில் உரிச்சொல்லுக்குரிய சிறப்பு இலக்கணம் எது என்பதில் உரையாசிரியர்கள் கருத்து மாறுபடுகிறார்கள்.

'தடுமாறுதல் என்பது பெயர் பற்றியும் வினைபற்றியும் வரும் வரவினை நோக்கி ... அவை அவ்வாறு தடுமாறித் தோன்றுதல் அவற்றிற்கு இலக்கணம்', என்று கூறுவதன் மூலம் இளம்பூரணர் 'பெயரினும் வினையினும் மெய்தடுமாறுதல்' என்பதே உரிச்சொல்லின் சிறப்பு இலக்கணமாகக் கருதுகிறார் என்பது தெளிவாகிறது.

'மெய்தடுமாறுதலும் ஒருசொல் பல பொருட்கு உரிமையும் பல சொல் ஒரு பொருட்கு உரிமையும் உரிச்சொற்கு உண்மையின் ஓதினாரேனும் உரிச் சொற்கு இலக்கணமாவது இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருட்கு உரியவாய் வருதலே யாம்' என்ற சேனாவரையர் வாசகம் அவரது கருத்தைத் தெளிவாகக் காட்டி விடுகிறது. நச்சினார்க்கினியரும் இதே கருத்தினர் என்பது 'பலவும் ஓதினாரேனும் உரிச்சொற்கு இலக்கணம் மூவகைப் பொருளும் பற்றி வருதலே யாம்' என்ற அவரது வாசகம் வெளிப்படுத்தி விடுகிறது. தெய்வச் சிலையார் இப்படி எதையும் வீதந்து ஓதவில்லை. சுப்பிரமணிய சாஸ்திரியும் (1930: 171) 'இச்சூத்திரம் உரிச்சொல்லின் இலக்கணத்தைக் கூறாது அதன் தன்மையைக் கூறிற்று என்று சொல்வதே பொருந்தும்' என்று கூறியுள்ளார். இந்த நிலையில் உரிச்சொல்லின் இலக்கணத்தை மொழி அமைப்புநோக்கில் வரையறுப்பதற்கு அதற்கு என ஏதாவது சிறப்புப் பண்பு இருக்கிறதா என்று பார்க்க வேண்டும்.

கடைசிச் செய்தியான 'பொருள் கூறுதல்' என்பது மொழி அமைப்புப் பண்பாக யாரும் கருதவில்லை. ஆயினும் அது சொற்பொருளியியல் (Semantics) பற்றிய கருத்தா என்பது தனியே ஆராயப்படவேண்டும். அப்படியே ஒரு சொல் பலபொருளுக்கு உரிமையாயும் பல சொல் ஒரு பொருளுக்கு உரிமையாயும் வருதலையும் உரையாசிரியர்கள் சிறப்புப் பண்பாகக் கருதவில்லை. இதற்குக் காரணம் பெயர், வினை, இடை ஆகிய மூன்றும் கூட இந்தப் பண்பைப் பெற்றிருப்பதுதான். சேனாவரையர் கூறிய இசையினும், பண்பினும், குறிப்பினும் தோன்றுதல் என்பது அவர்கருத்துப்படியே பொருள் அடிப்படையில் இசையை

உணர்த்தும் சொற்கள், பண்பை உணர்த்தும் சொற்கள், மனத்தால் குறித்து உணரப்படுபவை என்று பாகுபாடு செய்யப்படுவதாகும். இந்த முறையில் செய்யும் பாகுபாடு பெயர்க்கும், வினைக்கும் கூடப் பொருந்தும். எனவே இதை உரிச்சொல்லின் சிறப்பு இலக்கணமாகக் கருதுவது பொருந்தாது. அப்படியானால் இளம்பூரணர் கூறியபடி பெயரினும் வினையினும் மெய் தடுமாறுதல் உரிச்சொல்லுக்குரிய இலக்கணமாகக் கொள்ளலாம் போல் தோன்றுகிறது. ஆனால் இடைச் சொல்லையும் 'பெயரொடும் வினையொடும் நடைபெற்று இயலும், தமக்கு இயல்பிலவே' என்று (இடை. 1) தொல்காப்பியர் கூறியுள்ளதால் அதுவும் உரிச்சொல்லுக்குரிய இலக்கணமாகக் கொள்ள முடியாதே என்று நினைக்கத் தோன்றுகிறது. இந்த நிலையில் உரிச்சொல் என்பது தனி வகையான சொல் இல்லையோ என்ற முடிவுக்கு வரலாம் என்றாலும் உரையாசிரியர்கள் கொடுக்கிற விளக்கத்தில் ஏதாவது சிறப்புப் பண்பு அமைந்துள்ளதா என்று பார்ப்போம்.

2. உரிச் சொல்லின் பண்பு

உரையாசிரியர்கள் எல்லோரும் ஒரே பண்பை உடையதாக விளக்கவில்லை. இங்கு இளம்பூரணர் கருத்து ஒரு விதமாகவும் சேனாவரையர், நச்சினார்க்கினியர் கருத்து இன்னொருவிதமாகவும் தெய்வச் சிலையார் கருத்து மற்றொரு விதமாகவும் அமைந்துள்ளன.

2.1. அடை

'மெய் என்பது பொருள். தடுமாறுதல் என்பது பெயர் பற்றியும் வினைபற்றியும் வரும் வரவினை நோக்கி' என்று இளம்பூரணர் கூறுவது பெயரடையாகவும் வினையடையாகவும் உரிச்சொல் வருதலைக் குறித்து அங்கு ஏற்படுகிற பொருள்மாற்றத்தைக் குறிப்பிடுகிறாரோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. உரியியலில் கூறிய சொற்களில் பெயரடையாகவும் வினையடையாகவும் வருவதை ஆதித்தரும் (1967:12) இசரயேலும் (1974:139) எடுத்துக் காட்டியுள்ளதும் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் பெயர்ப்போலி, வினைப்போலி என்று சில

உரிச்சொற்களைக் குறிப்பிடுவதும் தொல்காப்பியரே அடையாக வருவது பற்றி எச்ச இயலில் கூறுவதும நம்முடைய ஊகத்தை உறுதிப்படுத்துகின்றன.

'கறுப்பு, தவ என்பன பெயர், வினைப்போலி' என்ற சேனாவரையர் கருத்தையே நச்சினார்க்கினியர் 'கறுப்பு பெயர்ப்போலி; தவ வினைப்போலி' என்று கொஞ்சம் விளக்கமாகக் கூறியுள்ளார். இதை மீனாட்சி சுந்தரனார் (1974:126) 'அடை' என்று குறிப்பிட்டு இதில் உள்ள குறையையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

'எல்லோரும் பெயர்ப்போலி, வினைப்போலி என்று வழங்காமல் போனாலும் அவர்கள் அனைவருக்கும் உடன்பாடான கருத்து என்றே தோன்றுகிறது. தவ என்பது வினையெச்சம் வினை அடையாக வருவதால் வினைப்போலி என்றனர் (ப. 126) ...... கறுப்பு என்பது பெயரே ஆம். பெயர்ப்போலி அன்று (ப. 127)' என்பது அவரது வாசகம். இங்கு பெயர்ப் போலிக்கு உரையாசிரியர்கள் கொடுத்த உதாரணமே தவறு. தவ என்பதுபோல உறு (உறுகால்), தட (தடக்கை), கய (கயவாய்) போன்றவை எப்போதும் பெயரை அடுத்தே வருவதால் அவைகளைப் பெயர்ப் போலிகளாகக் கொள்ளலாம். அப்படியானால் அவை பெயரடை ஆகும். எனவே பெயர்ப் போலி, வினைப்போலி என்பன அடைகளாகப் பெயரோடும் வினையோடும் வருவன என்றோ பெயரடை வினையடை என்றோ கருதலாம்.

தெய்வச்சிலையாரும் உரிச்சொற்கள் 'பெயர் வினைகளைச் சார்ந்து வரும்' என்றது அடையாக வருவதைக் குறித்தாலும் அவர் கருத்து கொஞ்சம் மாறுபட்டது என்பது பின்னால் விளக்கப்படும்.

ஆனாலும் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் எல்லா உரிச் சொற்களையுமே அடைச்சொற்களாகக் கருத முடியாது என்பதை உணர்ந்திருக்க வேண்டும், அவர்கள் 'முதனிலை' யாகவும் சில சொற்கள் வரும் என்று கூறுவதால் அஃது புலனாகிறது. இந்தக் கருத்தே 'அடிச்சொல்' என்று அடுத்த பிரிவில் விரிவாக ஆராயப்படுகிறது-

2.2 அடிச்சொற்கள்

'துவைத்தல், துவைக்கும் என்பன பெயர் வினைக்கு முதனிலையாயின' என்று சேனாவரையரும்; 'துவைத்தல் பெயர்க்கு முதனிலை தாவாத வினைக்கு முதனிலை' என்று நச்சினார்க்கினியரும் கூறியுள்ளார்கள். அதாவது சில உரிச் சொற்கள் பெயர், வினைகளுக்கு முதனிலை அல்லது பகுதி என்று ஆகும். தமிழ் பின்னொட்டுமொழி ஆதலால் முதனி லையே அடிச்சொல்லாகவும் அமைந்துவிடுகிறது. ஆனாலும் இவர்கள் கொடுத்த உதாரணங்கள் வினைஅடிச் சொல்லாகவே உள்ளன, ஏனென்றால் இவர்கள் பெயர்ச் சொல்லுக்குக் கொடுத்த உதாரணமான துவைத்தல் எனும் தொழிற் பெயர் துவை என்ற வினையடியாகப் பிறந்தது. எனவே அதைப் பெயர் முதனிலை என்று கூறமுடியாது. தொல்காப்பியரே வாள், மாலை போன்ற பெயர்ச் சொற்களைக் கொடுத்துள்ள தால் அவைகளையே பெயர் முதனிலை என்று அழைப்பது பொருத்தமாக இருக்கும். சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் பகுபதமாக இருப்பதில்தான் பெயர்முதனிலை வரவேண்டும் என்று நினைத்து, அப்படிப் பட்ட உதாரணங்களைக் கொடுத் தார்களோ என்ற எண்ணம் ஏற்படுகிறது. எப்படியாயினும் உரிச்சொல் முதனிலை என்றால் சில சொற்கள் தனித்து பெயரா கவும் வினையாகவும் வரும் உதாரணங்களையே கொள்ள வேண்டும்.

சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் உரிச்சொற்கள் அடையாகவும் அடிச் சொல்லாகவும் வரும் என்று கூறியது இரண்டு மாறுபட்ட நோக்கு உடையது. பொதுவாக ஒரு தொடரில் ஒரு சொல்லின் பொருளே சிறந்து மற்றொரு சொல்லின் பொருள் விசேடிப்பதாக அமையும் நிலை உண்டு. இதைத் தொல்காப்பியர் 'பினமொழிநிலையல்' என்று பொரு நிலை மரபில் ஒன்றாக (எச்ச, 23:4) கூறியுள்ளார். இதை மொழியியலார் தொடர்நிலை உறவு (syntagmatic relation) என்று பொதுவாகக் கூறுவார்கள். ஆனால் வேர்ச்சொல் என்பது சொல்லியல் ஆராய்ச்சியால் அடுக்கு முறை உறவுக்கு அடிப்படையாக வருவது. இப்படிப்பட்ட வேறுபாடு இருக்கிறது

என்பதை உணர்ந்து தெய்வச்சிலையார் எல்லா உரிச்சொற்களுக்கும் பொதுவான ஒரு பண்பைக் கண்டு அதற்கு ஆதாரமும் தேடிப்பிடித்துக் கூறியுள்ளார். அவர் கருத்துப்படி உரியியலில் கூறிய எல்லாச் சொற்களையும் தாது அல்லது குறைச்சொல்லாகக் கொண்டுவிடலாம். இதற்குத் தமிழில் தொல்காப்பிய எழுத்ததிகாரச் சூத்திரமும் (482.3) வடமொழி இலக்கண மரபும் ஆதரவாக உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

'எழுத்ததிகாரத்துள் இதனை (உரிச்சொல்) குறைச்சொற்கிளவி என்று ஓதினமையால் வடநூல் ஆசிரியர் தாது எனக் குறிப்பிட்ட சொற்களே இவை என்று கொள்ளப்படும். அவையும் குறைச்சொல் ஆதலான் ... ... தொழிலாவது வினையும் வினைக் குறிப்பும் ஆதலின் அவ்விருவகைச் சொற்கும் அங்கமாகி வெளிப்படாதன ஈண்டுக் கூறப் படுகின்றன ....பெயரினும் வினையினும் மெய்தடுமாறி என்பது உரிச்சொல்லாகிய உருபு பெயரின் கண்ணும் வினையின் கண்ணும் தடுமாறி என்றவாறு. அவை தடுமாறுங்கால் பெயர் வினைகளைச் சார்ந்தும் அவற்றிற்கு அங்கமாகியும் வரும். 'உறுவளி' என்பது பெயரைச் சார்ந்து வந்தது. உறக்கொண்டான் என்பது வினையைச் சார்ந்து வந்தது. 'உறுவன்' என்ற வழிப் பெயர்க்கு அங்கமாயிற்று. உற்றான் என்ற வழி வினைக்கு அங்கமாயிற்று' என்பதே தெய்வச்சிலையார் வாசகம்.

இங்கு தெய்வச்சிலையார் உரிச்சொல் என்பது தொல்காப்பியர் கருத்துப்படி 'குறைச்சொல்' என்றும் வடநூலாசிரியர்கருத்துப்படி 'தாது' என்றும் அடையாளம் காட்டி அதன் பண்புகளை விளக்கியுள்ளார்.

'சார்ந்தும் அங்கமாகியும் வரும்' என்பது அடையாகவும் அடிச்சொல்லாகவும் வருவதைக் குறிக்கும். வினையும் வினைக் குறிப்பும் இப்படி வரும் என்று கூறினாலும் வினையை மட்டுமே உதாரணமாகக் கொடுத்துள்ளார். மேலும் 'உறு' என்ற சொல்லே சார்ந்தும் அங்கமாகியும் கொடுத்திருந்தாலும் இங்கு இரண்டு பிரச்சனைகள் உள்ளன. 1) 'உறுவளி' என்ற தொடரில் உள்ள 'உறு' மிகுதிப் பொருளில் வருவது வினையடிச்சொல் அல்ல. அடையாக மட்டுமே வருவது; குறிப்பு வினை என்-

கூடக்கூறமுடியாது. 2) உறக் கொண்டான் என்பது வினையைச் சார்ந்து வந்தது என்பதும் பொருந்தாது. வினைக்கு அங்கமா கவே வந்துள்ளது. மேலும் 'உறு' என்பது பெறு, உடை, பொறுந்த' என்ற பொருளில் வந்துள்ளது. எனவே எல்லா உரிச் சொற்களும் சார்ந்தும் அங்கமாகியும் வருவது என்பதே பொருந்தாது போய்விடுகிறது. உண்மையில் சில உரிச்சொற் கள் சார்ந்து மட்டுமே வரும். சில உரிச்சொற்கள் அங்கமா கவே வரும். இரண்டு பண்புகளை உடைய சில உரிச்சொற் களும் உண்டு என்றாலும் உரிச் சொற்களைத் தாது என்று கூறியது பொருந்தும் கருத்தாகவே கொள்ள வேண்டும். வட மொழியில் தாது என்பது வினையடியை மட்டும் குறித்தாலும் தமிழைப் பொறுத்த வரையில் தாது என்பது வினையடியையும் பெயரடியையும் குறிப்பதாகவே கொள்ளவேண்டும் என்று சுப்பிரமணிய சாஸ்திரி (1930:172) தெளிவுபடுத்தியுள்ளார். இந்தக் கருத்தை இலக்குவனார் (1963:355), மீனாட்சி சுந்தர னார் (1974) ஆகியோர் ஆதரித்துள்ளார்கள். ஆயினும் சதா சிவமும் (1961), இசரயேலும் (1977) பொருந்தாது என்று கூறி யுள்ளார்கள்.

"வேர்ச்சொல்லியல் சொல்லின் தோற்றத்தையும் வளர்ச்சி யையும் பற்றிக் கூறுவதேயன்றி உரியியல் போலச் சொற்களின் பொருள்களை மட்டும் கூறுவதன்று (பக். 109) ....தொல் காப்பிய உரியியல் தொல்காப்பியர் காலத்து மக்கள் கொண் டிருந்த பொருள்களை எடுத்துக் கூறும் சொல்லியலே ஆகும். அது வேர்ச்சொல்லியலுக்குப் பெரிதும் பயன்படும் பகுதியே ஒழிய அதுவே வோச்சொல்லியல் ஆகாது. உரிச்சொல் பொருட் குறை இல்லாதது; வேர்ச்சொல் பொருட்குறை உடையது. எனவே உரியியலிற் காட்டப்பட்ட உரிச் சொற்களும் பிற உரிச் சொற்களும், வேர்ச் சொற்கள் ஆகாஎனக் கொள்க" (பக். 110). என்பதே சதாசிவம் வாசகம். சதாசிவம் கூறும் வேர்ச்சொல் லாய்வு வரலாற்று நோக்கு உடையது. ஆனால் இன்று வரு ணனை மொழியியல் நோக்கிலும் தாது அல்லது முதனிலை உண்டு. 2. வரலாற்று நோக்கில் ஒரு சொல்லின் முடிந்த முடி பான பகுதியை வேர்ச்சொல் என்பார்கள். வருணனை நோக் கில் பகுக்க முடியாத குறைந்தபட்ச பொருள் தரும் பகுதியை

வேர்ச்சொல் அல்லது அடிச்சொல் என்று கொள்வார்கள். உதாரணமாக வேள், வேண்டு என்ற இரண்டும் வரலாற்று நோக்கிலேயே ஒரு வேர்ச்சொல்லடியாகப் பிறந்தவை. ஆனால் வருணனை நிலையில் இரண்டும் இரண்டு அடிச்சொல்லாகவே கருதப்படும்.

உரியியலில் தொல்காப்பியர் வருணனை நோக்கிலேயே வேர்ச்சொல் என்பதைக் கையாண்டுள்ளதாகக் கொள்ள வேண்டும். தொல்காப்பியர் உகப்பு, உவப்பு, இயைபு, இசைப்பு என்ற சொற்களுக்கு வேறு வேறு நான்கு பொருள் கூறியுள்ளார், வரலாற்று நோக்குப்படி இரண்டு அடிப்படைப் பொருள் கூறினால் போதுமானது. அதனால் தொல்காப்பியர் வருணனை நோக்கு உடையவர் என்பதால் சதாசிவத்தின் கருத்தான 'உரிச்சொற்கள் வேர்ச்சொற்கள் ஆகா' என்பது பொருந்தாது போய்விடுகிறது.

இசரயேல் வேறு சில காரணங்களுக்காக 'அவர் (தொல்காப்பியர்) வேர்ச் சொற்களை மட்டும்தான் உரியியலில் கருதினார் என்று கொள்வது முழு அளவில் பொருந்தவில்லை' என்று (1977:155) கூறியுள்ளார். இதற்கு அவர் கூறிய இரண்டு காரணங்களாவன: 1) மிகுதியானவை பெயர், வினை வேர்கள். ஆனாலும் நனி, தவ ... போன்றவற்றை பெயர் வேர்களாகவோ வினை வேர்களாகவோ கொள்ளுதல் இயலாது. 2) பொற்பு ... செழுமை, இலம்பாடு போன்ற இருபத்து நான்கு சொற்கள் பெயர், வினை, பெயரடை வேர்களிலிருந்தும் அமைந்த ஆக்கப் பெயர்கள்.

முதல் வாதத்துக்கு ஓரளவு பதில் சொல்ல முடியும். பொதுவாக வேர்ச் சொற்கள் என்பது பெயராகவோ, வினையாகவோ மட்டும் இருக்க வேண்டும் என்பதில்லை. வேர்ச்சொல் என்பது தானே பொருள் உடையவை; அவை பெயராகவும், வினையாகவும், பெயரடையாகவும் (adjective), வினையடையாகவும் (adverb) அமையலாம். எனவே நனி, தவ முதலியவைகளை அடைகளாக வரும் வேர்ச்சொல் என்று கொள்ளலாம். இரண்டாவது கருத்தான சில ஆக்கப் பெயர்களையும் கூறியுள்ளார்

என்பதற்கு நேரடியான விடை கிடையாது. உண்மையில் உரியியலில் விளக்கிய 120 சொற்களில் இசரயேல் கணக்குப்படியே 55 சொற்களே பகாப்பதம். அதாவது வேர்ச்சொல் ஏனையவை பகுபதச் சொற்கள். அதாவது வேர்ச்சொல்லும் ஒட்டுக்களும சேர்ந்தவை. தொல்காப்பியர் சூத்திர அமைப்புக்காகப் பகுபதங்களாகக் கூறினாரா? அல்லது அதற்கு வேறு ஏதாவது காரணம் உண்டா என்று தெரியவில்லை.

மொழியியலார் உருபன்களை இலக்கண உருபன்கள் (grammatical morpheme) என்றும் அகராதி உருபன் (lexical morphemes) என்றும் பாகுபடுத்துவார்கள். பின்னதையே தண்டு (stem) அல்லது அடிச்சொல் என்று கூறுவார்கள். உரியியலில் இலக்கண உருபன்கள் எதுவும் விளக்கப்படவில்லை. எனவே எதிர்மறை நிலையில் உரிச் சொற்களை அகராதி உருபன் அல்லது அகராதியன் (lexeme) அல்லது அடிச்சொல் என்று கூறலாம். உரிச்சொல் வேர்ச்சொல்லைப் பற்றித்தான் விளக்குகிறது என்று திட்டவட்டமாகக் கூற முடியாது. இன்னொரு உண்மையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது தொல்காப்பியர் நேரடியாக வேர்ச்சொல் என்று எங்கும் குறிப்பிடவில்லை; உரையாசிரியர்களும் இலக்கண ஆராய்ச்சியாளர்களும்தான் உரிச் சொற்களை மொழி அமைப்பில் ஒரு கூறாகக் கொள்வதற்காகக் கண்டுபிடித்துக் கூறிய உண்மை இது. எனவே இங்கு முழுப்பொருத்தத்தையும் எதிர் பார்க்க முடியாது. அதே சமயத்தில் தங்கள் கருத்துக்கு ஆதரவாகத் தொல்காப்பியக் கருத்தைக் கூறியுள்ளதால் அது எவ்வளவு தூரம் பொருத்தமானது என்பதையும் இந்தக் கருத்தின் உட்கிடையையும் பார்க்க வேண்டும்.

2.3 குறைச்சொற்கள்

தெய்வச்சிலையார் உரிச்சொல்லைக் ‘குறைச்சொல்’ என்று கூறிய காரணத்தை ஆராய வேண்டும். அதற்கு முன்னால் குறைச்சொல் என்று கூறியதை உரிச்சொல் என்று அழைப்பதன் பொருத்தத்தையும் பரிசீலிக்க வேண்டும்.

உயிரும் புள்ளியும் இறுதியாக
குறிப்பினும் பண்பினும் இசையினும் தோன்றி
நெறிப்பட வாராக் குறைச்சொற் கிளவி
... ...
அன்னவை யெல்லாம் மருவின் பாத்திய
புணரியல் நிலையிடை உணரத் தோன்றா

என்பதே (எழுத்து. 482:1-3 & 11-12) குறைச்சொல் பற்றிய செய்தி. இங்குக் குறைச் சொல் என்பது மரூஉச் சொற்கள். அவை புணரியலில் நிலைமொழி, வருமொழி என்று பிரித்துப் புணர்க்கப்படாது என்பதும் பொருள்; எழுத்ததிகாரத்துக்கு உரை எழுதிய இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் உயிர் ஈறாகவும் (விண்ண விசைத்தது) மெய் ஈறாகவும் (விண் வினைத்தது) வரும் ஒலிக்குறிப்புச் சொற்களையே உதாரணம் காட்டிக் குறைச்சொற்களாகிய உரிச்சொற்கள் என்று குறிப்பிட்டிருந்தாலும் சொல்லதிகார உரையில் இந்தக் கருத்தை மேற்கோள் காட்டாமல் போய்விட்டார்கள். ஒருக்கால் அவை வேறு வகையான உரிச்சொல் என்று நினைத்திருக்கலாம். எப்படியாயினும் உரியியலில் கூறிய சொற்களை இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் குறைச்சொற்கள் என்று கருதவில்லை எனவே தெய்வச்சிலையார் கருத்தான உரிச்சொல்லைக் குறைச் சொல்லாகக் கருதவேண்டும் என்பதில் நமக்குச் சந்தேகமே ஏற்படுகிறது, இதை மனதில் கொண்டே மீனாட்சிசுந்தரனார் (1974:129) புதிய விளக்கம் கொடுத்துள்ளார்.

"இங்கு (எழுத்ததிகாரத்தில்) உரிச்சொல் என்ற வழக்கு இல்லை. உரிச்சொல்லைக் குறிக்கக் குறைச்சொல் என்ற தொடரைப் பயன்படுத்துகிறார். இதற்கு உரையாசிரியர்கள் வேறு பொருள் கொள்கின்றனர். சொல்லதிகாரத்தில் உரிச் சொல்லைப் பற்றி விளக்கும்போது இசையினும் பண்பினும் குறிப்பினும் தோன்றும் எனக் கூறுபவர், எழுத்ததிகாரச் சூத்திரத்தை மனதில் கொண்டுள்ளார் என்பது தெளிவு" என்பது மீனாட்சி சுந்தரனார் வாசகம்.

உரிச்சொல் என்பது குறைச் சொல்லைத் தான் குறிக்கிறது என்று புதிய காரணம் காட்டியுள்ளார். உரிச் சொல்லும் குறைச்

சொல்லும் 'குறிப்பினும், பண்பினும் இசையினும் தோன்றும்' பண்பு உடையன். எனவே உரிச்சொல்லைக் குறைச்சொல்லாகக் கருதலாம் என்பது அவர் கருத்து. அப்படியானால் குறைச் சொல்லின் 'புணரியல் நிலையிடை உணரத் தோன்றா' என்ற பண்பு எப்படி உரிச்சொல்லுக்குப் பொருந்தும் என்ற கேள்வி எழுகிறது. அதற்குப் பதில் சொல்வது போல "உரிச்சொல்லை ஏன் பிரித்துக் காட்ட வில்லை? நன்னூலார் போலப் பகுபதத்தைப் பகுதி முதலியனவாக ஏன் பிரிக்க வில்லை. இந்தப் பகுபத ஆராய்ச்சியால் வரும் இடர்ப்பாட்டினைச் சிவஞானமுனிவர் (முதல் சூத்திரவிருத்தி) குறித்துள்ளார்.... இத்தகைய அருமைப் பாடுகளை மனதில் கொண்டே தொல்காப்பியர் வடநூலாரைப பின்பற்றும் பவணந்தியார் பதவியலில் விளக்குவது போல புணரியல்களில் விளக்க முற்படவில்லை" என்று கூறுவதன் மூலம் குறைச் சொல்லின் பண்பும் உரிச்சொல்லின் பண்பும் ஒத்தனவாகக் காட்டப் பட்டுள்ளது என்பது அவர் வாதம். இது அடிச் சொல்லாக மட்டும் கூறாது பகுபதங்களாக உரியியலில் பலசொற்களை கூறியதற்கு ஒரு வகையில் சமாதானமாகக் கொள்ளலாம். ஆனாலும் தமிழில் சொல்லைப் பகுத்து ஆராய்வது கடினமான செயலா என்ற கேள்வி எழுகிறது. ஏனெனில் தமிழ் ஒரு ஒட்டு நிலை மொழி. ஆகவே அதில் பகுதிகளும் விகுதிகளும் பிரித்து அறியும்படித் தெளிவாக அமைந்திருக்கும். மீனாட்சி சுந்தரனார் அதே கட்டுரையில் (ப. 123) "தமிழ் போன்ற ஒட்டு மொழிகளில் தெளிவாகப் பிரித்தறியத் தக்க வகையில் பகுதியின் பின்னுறுப்புகளாகிய விகுதி முதலியனவாக வரும்' என்று கூறுவதால் உரியியலில் அடிச் சொல்லை மட்டும் கூறாமல் பகுபதங்களைச் சொன்னது சிறப்பானதாகக் கொள்ள முடியாது. அப்படியானால் உரிச் சொல்லைக் குறைச் சொல் என்பதும் ஏற்றுக் கொள்ள முடியாது. 'இசையினும், குறிப்பினும், பண்பினும் தோன்றுதல்' வேர்ச் சொல்லின் பண்பாகவும் கொள்ள முடியாது. தொல்காப்பியரே இடைச் சொல்லும் இந்தப் பண்புகளை உடையதாகக் கூறியுள்ளார் (இடையியல்,

10.1). எனவே. 1) இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் எழுந்ததிகாரத்தில் குறைச் சொல்லை உரிச்சொல் என்று கூறினாலும் உரியியலில் அந்தக் கருத்தைத் தொடர்பு படுத்திக் காட்டாததும் 2) குறைச் சொல்லின் பண்பாகக் கூறியது உரிச்சொல்லுக்கு மட்டும் பொருந்தாததும் 3) உரியியலில் 55 சதவிகிதச் சொற்களை (120 சொற்களில் 65) பகுபதமாக சொன்னதும் உரிச் சொல்லைக் குறைச் சொல் என்றோ அடிச் சொல் என்றோ திட்டவட்டமாக முடிவு செய்ய உதவி செய்யவில்லை.

வட மொழியில் 'தாது' குறைச்சொல் என்று தெய்வச் சிலையார் குறிப்பிட்டுள்ளார். ஆனால் குறைச்சொல் என்பதற்கு இணையான வடமொழிச்சொல் எது என்பதை யாரும் எடுத்துக் காட்டவில்லை. பதஞ்சலியாரே 'அபதம்' - பதம் அல்லாதது என்ற ஒரு சொல்லைக் கையாண்டுள்ளார். அதைக் குறைச் சொல்லாகக் கொள்ளலாமா என்பது ஆராயத் தகுந்தது.[3]

பாணினி கருத்துப்படி (1.4.14) பதம் என்பது வேற்றுமை உருபும் (சுப்), வினை விகுதிகளும் (திங்) ஏற்று வருவதே. 'சுப்-திங் அந்தம் பதம்' என்பதே அவருடைய வாசகம். தாது என்பதைப் பாணினி பொதுவான நிலையில் விளக்காமல் உதாரணத்துடனேயே 'பூ' (இரு) முதலானவை தாது (பூவாதயொ தாதவஹ் (1.3.1) என்பதே வாசகம்) என்று குறிப்பிட்டுள்ளார். இந்தக் கருத்து அடிப்படையில் பதஞ்சலி பதம் அல்லாதவற்றைப் பயன்படுத்தக் கூடாது என்ற கருத்தில் 'அபதம் ன ப்ரயுஞ்ஜீ' என்று கூறியுள்ளார். எனவே தெய்வச்சிலையார் 'அபதம்' என்பதையே குறைச் சொல்லாகக் கொண்டாரா என்பது தெரியவில்லை. மொழியியலாரும் அடிச்சொல் (root) என்பதை நுண்நிலை (abstract) வடிவமாகக் கொள்வார்கள்.[4] (Matthews 1974:40) மொழி ஆராய்ச்சிக்கு அறிஞர்கள் அமைத்துக் கொள்ளும் வடிவம் என்பதே அவர்கள் கருத்து. இதுவும் 'குறைச்சொல்' என்பதை சுட்டுவதாகக் கொள்ளலாம்.

மேலே குறிப்பிட்டபடி உரிச்சொல்லைத் தாது என்பதற்கு எதிர்மறையான சான்று மட்டுமே உள்ளது. ஆயினும் மொழி அமைப்பு நோக்கில் 'தாது' என்ற கருத்து முக்கியமானதே.

எனவே இதை முழுவதும் மறுத்து ஒதுக்க முடியாது. அதே சமயத்தில் உரிச்சொல்லைத் தாது என்று ஒத்துக்கொண்டால் இலக்கண உலகில் வழங்கிவரும் இரண்டு கருத்துகள் பொருந்தாது என்பதும் குறிப்பிடத் தகுந்தது.

2.4 சொல்வகை

உரிச்சொல்லை அடிச்சொல்லாகக் கொண்டால் உரிச்சொல்லைப் பெயர், வினைகளோடு சேர்த்துச் சொல் நான்குவகைப் படும் என்று கூறுவது பொருந்தாது. ஆனால் உரையாசிரியர்களும் இலக்கண ஆராய்ச்சி யாளர்களும் உரிச் சொல்லை அடிச்சொல் என்று கொண்ட பிறகு தமிழில் பெயர், வினை, இடை, உரி என்ற நான்கு வகைச் சொற்கள் இருக்கின்றன என்று கூறியுள்ளார்கள்.

"இவ்விரண்டையும் (இடை,உரி) அவற்றோடு (பெயர், வினை) தலைப் பெய்ய நான்காம் என்பது கருத்தாகக் கொள்க" என்பது சேனாவரையர் வாசகம் (பெயரியல்.5). "சொன்மை நிலை பெயர், வினை எனச் சிறப்புடைச் சொல் இரண்டும் இடை, உரி எனச் சிறப்பில் சொல் இரண்டும் என நான்கு வகைப்படும்" எனத் தெய்வச்சிலையாரும் பெயரியல்.5) கூறியுள்ளார்.இலக்கண உலகில் சொல்வகை நான்கு என்ற கருத்து பரவலாகவே காணப்படுகிறது. தொல்காப்பியர் கருத்துப்படி சொல் வகை நான்கு என்ற கருத்தைக் கொள்ளலாம் என்பார் இலக்குவனார் (1963: 3?8). ஆனால் சுப்பிரமணிய சாஸ்திரி (1945:167) உரிச்சொல் அடிச்சொல் ஆனதால் பெயர், வினை என்ற இரண்டு வகையே உண்டு என்று கூறியுள்ளார். ஆனால், அதற்கான விளக்கம் எதுவும் தரவில்லை. மீனாட்சி சுந்தரனார் (1974) சொல் இரண்டு வகையே என்ற கருத்தை வேறுவிதமாக விளக்கியுள்ளார். உரிச் சொல்லைக் குறைச் சொல் என்றதால் பெயர், வினைகளை முழுச்சொல் என்று குறிப்பிட்டு வேறு படுத்திக் காட்டியுள்ளார்.

'முழுதும் உருவடைந்து, சொற்றொடரில் வரும் முழுச் சொற்கள் வேறு, அவ்வாறு முழுச் சொல்லாக அன்றிப், பகுதி

முதலிய சொல்லுறுப்புக்களாக மட்டும் நிற்கும் குறைச்சொற்கள் வேறு. சொற்கள் இரண்டே வகை என்றது முழுச் சொற்களை மனதில் கொண்டே தான். பெயர், வினை என்ற இரண்டு வகை முழுச் சொற்கள் ஒவ்வொன்றிலுள்ளும் சொல்லின் புறத்துறுப்பாகவும் அகத்துறுப்பாகவும் உருபன்கள் (morphemes) உள்ளன. இவையே பலவகையில் இணைந்து முழுச் சொல் வடிவம் தருகின்றன. இவ்வாறு முழுச் சொல்லைப் பகுத்துப் பார்க்கும் போது இந்த இரண்டாம் வகைப் பாகுபாட்டில் வேறு இரண்டு வகைப் பிரிவுகள் தோன்றுகின்றன. சொல்லின் பொருள் இரண்டு வகைப்படும். இலக்கணத்தில் காலம், இடம், பால் முதலிய சுட்டும் இலக்கணப் பொருள் ஒன்று, பொதுவாக உலகத்தில் சொல்லுக்குக் காணும் பொருள் மற்றொன்று, சொல்லைப் பகுத்துக் காணும்போது இரண்டாம் வகையான பொருள் உடையன அடிச்சொற்கள் அல்லது பகுதி என்று கூறும உருபன்களே ஆம். பொருள் உள்ளவை (contentives) இவையே ஆம். மற்றவை இலக்கணப் பொருள் உள்ளவை (functors). இந்த நோக்கில் உருபன்கள் இரண்டாகப் பிரிகின்றன. 1) அடிச்சொல்லாம் உருபன், 2) அடிச்சொல் அல்லாத பிற உருபன் ... முதல்வகையினை உரிச்சொல் என்றும் இரண்டாம் வகையினை இடைச் சொல் எனறும் தொல்காப்பியர் பாகுபாடு செய்கிறார் (ப.121). ... ...''

இரண்டு வகையான பாகுபாடுகள் கிடைக்கின்றன. ஒன்று முழுச் சொற்கள் என்ற நிலையில் பெயர், வினை என்ற பாகுபாடு. மற்றொன்று: குறைச் சொற்கள் இடை, உரி என்ற பாகுபாடு. என்ற நிலையில் இடை, உரி என்ற பாகுபாடு. இந்த இரண்டு வேறு நிலைகளையும் ஒன்றாக்கிக் குழப்புதல் கூடாது (ப. 123) என்பதே அவருடைய வாசகம். இங்கு 1) முழுச்சொல், குறைச்சொல ஆகிய இரண்டின் விளக்கம் 2) உருபன்களைப் பொருள் உள்ளவை, இலக்கணப் பொருள் உள்ளவை, என்ற பாகுபாடு 3) இரண்டுவகையான பாகுபாடு ஆகிய மூன்று செய்திகள் விளக்கப்பட்டுள்ளன. இவற்றில் முழுச்சொல், குறைச்சொல் என்ற கருத்தே முக்கியமானது.

முழுச்சொல் என்பது வாக்கியத்தில் வரும் சொல் என்று கொள்ளலாம் போல இருக்கிறது. அதாவது தனிப்பெயராகவும்

வேற்றுமை ஏற்ற பெயராகவும் தனி வினையாகவம், விகுதிகள் ஏற்றுவரும் வினையாகவும் வரும் சொற்கள் என்று கொள்ள லாம். மகன், மகனுக்கு, மகனை; வீடு, வீட்டில் போன்றவை களும் வா, வர, வந்து, வந்தான், படித்தேன், படித்தால் போன்றவைகளும் முழுச் சொற்கள். பொதுவாக இது வார்த்தை (word) என்றாலும் இவை வார்த்தை வடிவங்கள் (word-forms) என்று சிறப்பான பொருளில் உள்ளதாகக் கொள்வார்கள் (Lyons, 1981:101)[5]. ஏனெனில் இங்கு 11 சொற்கள் இருந்தாலும் அகராதியன் அல்லது தாது என்ற முறையில் (மகன், வீடு, வா, படி) நான்கே உள்ளன.

குறைச்சொல் என்பது சொல்லியல் நோக்கில் வருவது. எனவே மேலே குறிப்பிட்ட சொற்களைப் பகுத்து பகுதி, விகுதி என்ற நிலையில் பேசுவது. மகன், மகனை, மகனுக்கு என்பது மூன்று சொல்லானாலும் ஒரு பகுதியும் மூன்று விகுதியும் உடையவை. இங்கு வார்த்தை என்பது அகராதியில் குறிப்பிடப் படும் சொல் என்ற முறையில் அகராதியன் (lexen e) என்ற பொருளில் உள்ளதாகக் கூறுவார்கள். பொருள் உள்ளவை, இலக்கணப் பொருள் உள்ளவை என்பதும் குறைச் சொல்லைப் பகுதி, விதநியாகப் பிரித்துக் காண்பதுதான். குறைச்சொல் என்பது பகுதியாக மட்டும வருலது. முழுச் சொல்லில் அடிச் சொல் மட்டும் (உரி) !வருவதும் அடிச்சொல்லும் விகுதியும் (உரியும் இடையும்) சேர்ந்து வருவதும் அடங்குவதால் முழுச் சொற்களில் குறைச் சொல் அடங்கிவிடுகிறது. எனவே அவற் றைச் சேர்த்து எண்ணக் கூடாது.

மீனாட்சி சுந்தரனார் முழுச் சொற்களைப் பெயர், வினை களாகப் பிரித்தது பொருந்துமா என்பதும் சந்தேகமே.

நனி சிறந்தது
உறு கால்

போன்றவற்றை வெறும் வினையாகவும் பெயராகவும் கொண்டு விட முடியுமா என்ற கேள்வி பிறக்கிறது. மேலும் சொல்ல கைப்பாடு என்பது அடிச்சொற்களையோ, தண்டுகளையோ கொண்டு பாகுபடுத்துவதே அல்லாமல் முழுச் சொற்களைக் கொண்டு பாகுபடுத்துவது அல்ல. மீனாட்சி சுந்தரனாரே

உரிச் சொல்லைப் பாகுபடுத்திக் காட்டியுள்ளார் அவருடைய கருத்துப்படி 1) பொருள் வேற்றுமை செய்யும் உரிச்சொற்கள் 2) தனிச்சொல்லாக வந்து தமக்கேற்ற பயனிலை கொள்ளுபவை 3) சிலபோது அடை கொளியாகவும் சிலபோது அடையாகவும் வருபவை (ப.131) என்று மூன்று வகைப்படும்.

இந்தப் பாகுபாடு தொடர்நிலை உறவை அடிப்படையாகக் கொண்டது. ஆனால் பெயர், வினை என்ற பாகுபாடு அவை ஏற்கும் விகுதிகளைச் சிறப்பாக—திரிவொட்டுக் கூறுகளை அடிப்படையாகக் கொண்டது. தொல்காப்பியரும் வினைச் சொற்களை வேற்றுமை உருபு ஏற்காது கால விகுதி ஏற்று வரும் என்று கூறுவது (வினை.1) அடிச்சொல்லின் பாகுபாடே ஆகும். ஏனெனில் நட, நடக்க போன்றவற்றையும் அவை கால விகுதி ஏற்காமல் இருந்தும் வினைச் சொல்லாகவே கருதுகிறோம். எனவே அடிச்சொல்லாக இருக்கும் நிலையில் பாகு படுத்துவதே சொல்வகைப் பாகுபாடாக ஆகும். இந்த நிலையில் தொல்காப் பியர் உரியியலில் எப்படிப்பட்ட அடிச்சொற்களை விளக்கி யுள்ளார் என்று பார்க்கவேண்டும்.

2.4.1 உரியியலில் காணப்படுவது

இசரயேல் (*1974:139*) சங்க இலக்கிய வழக்குகளைக் கொண்டு உரிச்சொற்களைச் சொல்வகை ஒட்டிய பாகுபாடு செய்து காட்டியுள்ளார். தொல்காப்பியர் உரியியலில் கூறிய வடிவங்களை அப்படியே எடுத்துக் கொண்டு அங்கு பெயர்ச் சொற்கள், வினைச் சொற்கள், பெயரடைகள், பெயர்வினைய டைகள் என்று நான்கு பெரும் பிரிவாகப் பிரித்து முன்னது இரண்டையும் சில உட்பிரிவுகளாகவும் பிரித்துள்ளார், இங்கு நமக்கு வேண்டியது அவர் செய்த பெரும்பிரிவே. அதில் பெயர், வினை, அடை (பெயரடை, வினையடை) என்று மூன்றாகப் பிரிக்கலாம் என்ற உண்மை முக்கியமானது. இவர் கருத்துப்படி 16 சொற்கள் மட்டுமே அடையாக வரும்.[6] ஆதித்தனாரும் உரிச் சொற்களில் இருபத்திரண்டு சொற்கள் அடையாக வருவதைச் சுட்டிக் காட்டி பெயர்ச்சொல், வினைச் சொல் இரண்டும் அல்லது பெயர் வினைகட்கு அடையா யுள்ளது உரிச்சொல் (*1967;12*) என்று கூறியுள்ளதும் நினைவு படுத்திக் கொள்ள வேண்டும். எனவே உரிச்சொற்களில் பெயர்

அடிச்சொற்கள், வினையடிச் சொற்கள் அல்லாது மூன்றாவதாக அடைச்சொற்கள் என்ற ஒரு வகை அடிச்சொல் உள்ளது என்பது தெளிவாகிறது. சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் வினைப்போலி, பெயர்ப்போலி என்று கூறியதும் இந்தக் கருத்தை உறுதிப்படுத்துகிறது. இதனுடைய உள் கிடை என்ன?

இசரயேல் உரிச்சொற்களில் உறு, தவ, நனி, தட, யாணு, கடி, எறுழ் போன்ற சில சொல்வேறுபாட்டு உருபன்களை (inflectional morphemes) ஏற்பதில்லை என்றும் (ப.144) தெளிவுபடுத்தியுள்ளார். அப்படியானால் உரிச் சொற்களில் மூன்று வகையான சொல்வகைப் பாகுபாடு அடங்கியிருக்கிறது எனபதும் அவைகளில் வேற்றுமை விகுதியை ஏற்கக் கூடியவை பெயர் அடிகள் என்றும் கால விகுதியை ஏற்கக் கூடியவை வினையடிகள் என்றும் எந்த விகுதியையும் ஏற்காதவை அடைகள் என்றும் கூறலாம். (அப்படியானால் இடைச் சொற்களில் ஒருநிலைச் சொற்களான (particles) முன், பின் போன்றவை ஓ, ஒ, உம் போன்ற கிளிட்டிக்ஸ் எடுத்து வரும், அடைச்சொற்கள் அவைகளையும் எடுக்காது) இதன் வண்மை மென்மையைத் தெரிந்து கொள்ள மூன்று வழிகள் உண்டு. 1) தொல்காப்பியர் உரிச்சொல் அடையாக வருவது பற்றிப் பேசி உள்ளாரா? என்று பார்ப்பது. 2) அவருடைய சொற்பயிற்சியை ஆராய்வது. 3) மொழி அமைப்பை விளக்கும் இலக்கண ஆய்வாளர்களின் கருத்தை அறிவது.

2.4.2. எச்சவியலில் உரிச்சொல்

எச்சவியலில் (சூ. 58) 'உரிச்சொல் மருங்கினும் உரியவை உரிய' என்ற சூத்திரம் காணப்படுகிறது. இந்த நூற்பா முன் உள்ள 'இடைச்சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லே' என்ற சூத்திரக் கருத்தோடு பிணைத்து (மாட்டெறிந்து) கூறப்பட்டுள்ளது. எனவே அதனுடைய பொருளை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்,

எல்லா உரை ஆசிரியர்களும் இடைச்சொல் வேறுபாட்டுக்கும் சொல்லாக - விசேடிக்கும் சொல்லாக வரும் என்று பொருள் கொண்டுள்ளார்கள்.

இது பற்றி விரிவாகத் தனியே ஆராயப்படும். அப்படியே உரிச்சொல் பற்றிய சூத்திரத்தில் உரிச் சொற்களில் சில வேறு படுக்குஞ் சொல்லாக மட்டுமே வரும் என்பதே விளக்கப் பட்டுள்ளது.

'உரிச்சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்' என்றது மேற் கூறிய இடைச் சொல்லே போல உரிச்சொல்லும் தாமாக நில்லா. பெயரும் வினையும் அடைந்து பொருள் வேறு படுத் தலும் உடைய; அது நோக்கி என்பது' என்பதே இளம் பூர ணர் வாசகம். இது அடையாக வரும் உரிச்சொல்லுக்கே பொருந்தும். இந்தக் கருத்தைத் தெய்வச்சிலையார் தெளிவா கவே புலப்படுத்தி உள்ளார்.

'உரிச்சொல்லிடத்தும் வேற்றுமை உருபு போல அப்பொருள் வேறுபடுத்துவதற்கு உரியவை உரியவாம்' என்ற பொழிப்புரை யும், 'அது நனி என்பது உறுவும் தவவும் போல மிகுதி குறித்து வரினும் உறுவன, தவவன எனப் பொருள் உணர வாராது இடைச்சொல் போலக் குறிப்பினான் மிகுதி உணர்த்துதலின இதுவும் பொருள் வேறுபடுத்தும் சொல்லாயின் அல்லது பொருள் உணர வாராமைக் கண்டு கொள்க. 'பிறவும் அன்ன'

என்ற அவருடைய விளக்கமும் அடையாக வருவன பிற விகுதி ஏற்று வராது என்பதைத் தெளிவுபடுத்தி விடுகின்றன. தெய்வச்சிலையார் உரிச்சொல் என்பதைத் 'தாது' என்று கொண்டு அவை வினையும் வினைக் குறிப்பு மாகவும் வரும் என்று கூறியிருந்தாலும் இங்கு சில உரிச்சொற்கள் எந்த விகுதியையும் ஏற்று வராமல் வேறுபடுக்கும் சொல்லாக அதாவது அடையாக மட்டுமே வரும் என்பதையும் ஒத்துக் கொண்டுவிட்டார்.

சேனாவரையர் 'உரிச் சொல்லிடத்தும் வேறுபடுக்குஞ் சொல்லாதற்கும் உரியன உரியவாம்; எல்லாம் உரியவாகா' என்று பதவுரையும் 'எனவே உரிச்சொல்லுள் வேறுபடுத்தும், வேறுபடுக்கப்பட்டும் இருநிலை உடையவாய் வருவதே பெரும் பான்மை என்பதாம்' என்ற விளக்கமும் கொடுத்துள்ளார்; என்றாலும் உரிச் சொற்களுள் வேறுபடுக்குஞ் சொல்லாகச் சில மட்டுமே வரும் என்பதே இங்கு முக்கியமானது.

'வறு படுக்குஞ் சொல்லாவன : உறு, தவ, நனி, என்னுந் தொடக்கத்தன' என்ற சேனாவரையர் தரும் உதாரணமும் அந்தக் கருத்தையே வலியுறுத்துகிறது. மேலும் 'இருநிலை உடைய சொற்கள் பெரும் பான்மை என்றதால் அடையாக வருவன சிறுபான்மை என்பது பெறப்பட்டு விடுகிறது. 120 சொற்களில் ஆதித்தனார் கணக்குப்படி இருபத்திரண்டும் இசரயேல் கருத்துப்படி பதினாறுந்தான் அடையாக வரும் என்ற செய்தி சேனாவரையர் கருத்தை உறுதிப்படுத்தி விடுகிறது.

நச்சினார்க்கினியர் சேனாவரையர் கருத்தைத் தழுவியே உரை எழுதியுள்ளார்.

'உரிச்சொல் மருங்கினும் உரியவை உரிய என்ற சூத்திரத்தின் மூலம் உரையாசிரியர்கள் கருத்துவழி அடையாக மட்டும் வரும் உரிச்சொற்கள் இருக்கின்றன என்பது தெளிவாகிறது. உரிச்சொற்களில் அடையாக வரும் சொற்கள் உண்டு என்ப தைத் தொல்காப்பியர் உணர்ந்து அதை எச்சவியலில் வெளிப் படுத்தி விட்டார் எனலாம்.

அடுத்த முயற்சி தொல்காப்பியர் 'அடை' என்ற கருத்தை எங்காவது நேரடியாகப் பயன்படுத்தியுள்ளாரா என்று பார்ப்பது.

2. 5 'அடை' பயிற்சி

தொல்காப்பியர் 'அடை' என்ற சொல்லை நான்கு இடத்தில் பயன்படுத்திபுள்ளார் (பாலசுப்பிரமணியன் 1981).

சொல்லதிகாரத்தில் நிறத்தைக் குறிக்கும் சொல்லைத் தொடரியல் நோக்கில் 'அடை' என்றே குறிப்பிட்டுள்ளார் அதாவது வண்ணமும் (நிறமும்), சினையும் (உறுப்பும்), முதலும் சேர்ந்து வரும் வண்ணச்சினைச் சொல்லின் (செங்|கால்|நாரை) தொடர் உறுப்புகளை விளக்கும் போது அடை, சினை, முதல் என்றே குறிப்பிட்டுள்ளார்.

> 'அடை,சினை, முதல் என முறை மூன்றும் மயங்காமை
> நடைபெற்று இயலும் வண்ணச் சினைச் சொல்'

என்பதே அந்தச் சூத்திரம் (கிளவி,25), சொல்லியல் நோக்கில் குறிப்பு பெயரெச்சமாகக் கருதப்படும். செம் – போன்ற சொற்களைத் தொடரியல் நோக்கிலே அடை என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

எழுத்ததிகாரத்தில் இரண்டு இடத்தில் அடை என்பதை பொதுப் பொருளிலேயே பயன்படுத்தியுள்ளார்.

புணரியலில் (சூ. 110) புணர்ச்சிப்பற்றி பேசும்போது சொல் நிலையில் பெயர் + பெயர்; பெயர் + தொழில் (வினை) தொழில் + பெயர்; தொழில் + தொழில் என்ற நானகுவகைப் புணர்ச்சிகள் உண்டு எனறு முதலில் குறிப்பிட்டுவிட்டு அடுத்த சூத்திரத்தில்

> நிறுத்த சொல்லும் குறித்து வருகிளவியும்
> அடையொடு தோன்றினும புணர்நிலைக் குரிய

என்று பெயரும் வினையும் அடையடுத்து வந்தாலும் புணர்ச்சி பெறும் என்று கூறுவது பொதுக் கருத்தே ஆகும். இங்கு 'அடை' என்பது எதைக் குறிக்கிறது என்பது தெளிவுபடுத்தப் படவில்லை. எழுத்ததிகாரத்துக்கு உரைஎழுதிய இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் பதினாயிரத்து ஒன்று போன்ற எண்ணுப் பெயர்களையே உதாரணமாகக் கொடுத்துள்ளார்கள். இதற்கு முக்கியக் காரணம் புள்ளி மயங்கியலில் ஆயிரம் என்ற எண்ணுப் பெயரைப்பற்றிப் பேசும் போது முதலில் (சூ. 21) அது இன்னொரு எண்ணுப் பெயரொடு புணர்ந்தால் 'அத்துச் சாரியை வரும் என்று கூறிவிட்டு அடுத்து

> 'அடையொடு தோன்றினும் அதனோரற்றே'

என்று சொல்லுவதே ஆகும். அங்கு பதினாயிரத்து ஒன்று போன்ற எண்ணுப் பெயர்களே குறிப்பிடப் படுகின்றன என் பது சந்தேகமே இல்லை. ஆனால் மேலே குறிப்பிட்ட புணரியல் சூத்திரத்திலும் எண்ணுப் பெயர்களை உதாரணங்களாகக் கொள்ளவேண்டிய அவசியமில்லை அவைகளுக்குப் பதிலாக அடையாக வரும் உரிச்சொற்களைக் குறிக்கிறது. என்று கொண் டால் ஏதாவது ஒரு வகையில் உரிச்சொற்களில் புணர்ச்சி விளக் கப் பட்டுள்ளது ஆகும் அல்லவா! அப்போது 'உரிச்சொல்' என் பதைத் தனியே கூறாதது பொருத்தமாகவும் ஆகிவிடும்.

தொல்காப்பியர் 'அடை' என்பதைப் பொருளதிகாரத்திலும் ஒரு தடவை கையாண்டுள்ளார். செய்யுளியலில் (சூ. 128) ஒத்தாழிசைக் கலியின் உறுப்பாக வரும் தனிச் சொல்லையே 'அடை' என்று குறிப்பிட்டுள்ளார். இதையே இன்னொரு செய்யுளியல் சூத்திரத்தில் (சூ. 131) 'அடைநிலைக்கிளவி' என்றும் அழைத்துள்ளார். எனவே பொருளதிகாரத்தில் 'அடை' என்று வேறு பொருளிலேயே கையாளப்பட்டுள்ளது. தொல்காப்பியர் எழுத்ததிகாரத்திலும் சொல்லதிகாரத்திலும கையாண்ட சொல்லைப் பொருளதிகாரத்தில் வேறு பொருளில் பயன்படுத்தியதற்குப் பல உதாரணங்கள் உண்டு.

		எழுத்து & சொல்லதிகாரம்	பொருள் அதிகாரம்
திணை	—	சொல்பாகுபாடு (சொல். 45:1)	ஐந்திணை ஒழுக்கம் (16:3)
உரி	—	உரிச்சொல்	உரிப்பொருள்
முதல்	—	சொல்லுக்கு முதலில் வருவது	இடமும் காலமும்
வண்ணம்	—	நிறம்	செய்யுள் உறுப்பு

எனவே தொல்காப்பியர் எழுத்ததிகாரத்திலும் சொல்லதிகாரத்திலும் 'அடை' என்பதை மொழி அமைப்பு நோக்கில் - சிறப்பாகத் தொடரியல் நோக்கில் பயன்படுத்தியுள்ளார் என்பது தெளிவு.

வெளிபபட வராத சொற்களுக்குப் பொருள் கூறுமுகமாக அமைத்த உரியியலில் மொழி அமைப்பில் சொல் வகைப்பாட்டில் ஒரு கூறாக 'அடை' என்ற ஒரு புதிய சொல் வகையையும் அடக்கிய தொல்காப்பியரின் நுட்பத்தை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

2.6. இலக்கண ஆய்வாளர்களின் கருத்துக்கள்

வீரமாமுனிவர் தன்னுடைய செந்தமிழ் இலக்கணத்தில் நனி, தவ, சால, உறு, கழி, ஆகியவற்றைக் குறிப்பிட்டு அவைகள் உரிச்சொற்கள் என்றும் அவை பெயரடையாகவும் வினையடையாகவும் வரும் என்று குறிப்பிட்டுள்ளார் (1917:51).

இந்த நூற்றாண்டில் சங்க இலக்கியங்களையும் தொல்காப் பியத்தையும் ஆராய்ந்தவர்களும் உரிச்சொல் என்றும் அடை என்றும் தனி சொல்வகை ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள். உதாரணமாக வ.ஐ. சுப்பிரமணியம் (1962:iv) எந்த விகுதி யையும் ஏற்காதவற்றை உரிச்சொல் என்று குறிப்பிட்டுள்ளார். அகராதியிலும் மணம் என்ற பொருளில் வரும் கடி என்பதை உரிச்சொல் என்று குறித்துள்ளார். ஏ.ஓ போன்ற கிளிட்டிக்ஸும் (clitics) விகுதிகளையும ஏற்காது என்று அகத்தியலிங்கம் (1962:155) விளக்கமாகக் கொடுத்து பெயர் உரிச்சொல் என்றும் வினை உரிச்சொல் என்றும் பிரித்துள்ளார். ச.வே சுப்பிர மணியம் (1965.85) அதே விளக்கத்தைக் கொடுத்தாலும் ஐ,ஒல்,ஒய், கல் போன்ற ஒலிக் குறிப்புச் சொற்களையும் (Onomatop eics) ,உறு, கடி, கதழ், கயம், கழி, கனை, நள் ஆகிய 'பெயர் உரிச்சொற்களையும் மே, மேம், நனி, செவ்வனம் ஆகிய வினை உரிச்சொற்களையும் சேர்த்துக் கூறியுள்ளார்.[7] ஒலிக் குறிப்புச் சொற்கள் என்பது பொருள் உணர்த்தும் முறையை ஒட்டியது; அவை, என/என்று ஆகிய இடைச்சொல்லை அடுத்தே வரும். இவற்றைத் தனிப்பிரிவாகக் கருதவேண்டும்.

தொல்காப்பிய மொழியை ஆராய்ந்த பாலசுப்பிரமணியன் (1981) அடைகள் (adjuncts) என்ற தனிச் சொல்வகையை ஏற்படுத்தி அவை திரியொட்டுக் கூறுகளை ஏற்காது அடிச் சொல்லாகவும் ஆக்கச் சொல்லாகவும் (derivatives) பகுபதமாக, அமைந்து பெயரடையாகவும் வினையடையாகவும் வரும் என்று குறிப்பிட்டுள்ளார். அடிச்சொல்லுக்கு உதாரணமாக நனி, காமர் (பெயரடைகள்), நனி, துவர, முற்ற (வினைய டைகள்) ஆகியவற்றைக் கொடுத்துள்ளார்.

ஆகவே தமிழ்ச்சொல் வகைப்பாட்டில் அடைச்சொல்லும் தனிவகையாகக் கருதப்படவேண்டும் என்பது சந்தேகமே இல்லை. அப்படியானால் உரிச்சொற்களில் சில ஒரு தனிச்சொல் வகைப் பாட்டைச் சார்ந்தது என்பது தெளிவாகிவிடுகிறது.

2 7 பெயரியலில் உரிச்சொல்

இந்த நிலையில் பெயரியலில் கூறிய 'உரிச்சொல்' எதைக் குறிக்கிறது என்று நிர்ணயிக்க வேண்டும். சுப்பிரமணிய சாஸ்

திரியும் மீனாட்சி சுந்தரனாரும் 'உரிச்சொல்' என்பது அடிச் சொல் என்று கொண்டு இரண்டு வகையான சொல் என்று சொன்னார்கள். அடிசசொல்லைப் பாகுபடுத்துவதே சொல் வகைப்பாடு என்ற மொழியியல் கருத்தில் பார்க்கும் போது பெயர், வினை, அடை என்ற மூன்று பாகுபாடு இருப்பது தெளி வாகிறது. எனவே பெயரியலில் உரிச்சொல் என்பது அடையாக வருவனவற்றைமட்டும் குறிப்பதாகக் கொள்ளலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது. ஆனால் உரியியலில் பெயர், வினை, அடை என்ற மூன்றையும் உரிச் சொல் என்று சொல்லியிருக்கும் போது பெயரியலில் 'அடை' யை மட்டும் குறிப்பதாகக் கொண் டால் குன்றக் கூறல் என்ற குற்றம் ஏற்படுமே என்ற மறு சிந் தனையும் எழுகிறது. இந்த நிலையில் ஒரே சொல்லை வேறு வேறு பொருளிலும் தொல்காப்பியர் கையாண்டுள்ளதை நோக் கும் போது குன்றக் கூறல் என்பது சில இடத்தில் வருணனை உத்தி என்று அறிந்து கொள்ளமுடிகிறது. உதாரணமாகப் பெய ரெஞ்சு கிளவி என்பதை வினையியலில் ஒருபொருளிலும் (பெய ரெச்சம்) எச்ச இயலில் வேறு பொருளிலும் (தெய்வச்சிலையார் உரைப்படி) கொண்டுள்ளார்:

அது போலவே பெயரியலில் சொல்வகைப் பாட்டைப் பற்றிப் பேசுவதால் உரியியலில் உரிச்சொல் என்பது பெயர், வினை, அடையாக வரும் மூன்று வகைகளைக் குறித்தாலும் எச்சவியல்ில் அடையாக மட்டும் உரிச்சொற்கள் சில இருப்பதை உணர்ந்திருப்பதாலும் உரி என்பது அடையாக வரும் உரிச் சொற்களை மட்டுமே குறிப்பதாகக் கொள்ளலாம். 'இடைச் சொல்' என்று பெயரியலில் கூறியது இடையியலில் குறிப்பிட்ட எல்லாவற்றையும் குறிக்காது சிலவற்றைக் குறிக்கிறது என்பதும் தனியே விளக்கப்படும்.

2 8 உரிச் சொல் தொடர்

'உறுகால்' போன்றனவற்றை இலக்கண உலகில் உரிச் சொல் தொடர் (உதாரணம் நன். 152.3) என்று குறிப்பிடுவது வழக்கம். இது பொருந்தாது என்பதை மறை முகமாக மீனாட்சி சுந்தரனார் குறிப்பிட்டுள்ளார்.

அடிச் சொல்லே உரிச்சொல் என விளக்கிய அவரே (தெய்வச் சிலையார்) இந்தக் குழப்பத்தில் சிக்கிக் கொண்டு உறுகால் என்பதில் உறு என்பது உரிச்சொல் என்கிறார். 'உறு, கால் உரிச்சொற்றொடர் எனபார் போலும்' என்பதே மீனாட்சி சுந்தரத்தின் வாசகம் (1974:132). 'உண்மையில் தெய்வச்சிலையார் உரிச்சொல் தொடர் என்பதைப் பயன் படுத்த வில்லை என்பதையே உரிச் சொல் தொடர் என்பார் போலும்' என்று குறிப்பிட்டுள்ளார். பிற்கால இலக்கணங்களி லேயே இந்த முறை காணப்படுகிறது என்பதற்கு நன்னூலார் அவ்வழித் தொடர்களில் ஒன்றாக உரிச்சொல் தொடரைக் குறிப்பிட்டுள்ளதால் அறிய முடிகிறது (நன் 152).

உரிச்சொல் தொடர் என்பது அடைச் சொல்லாக வரும் உரிச்சொல்லுக்கு மட்டுமே பொருந்தும். ஏனெனில் பெயர் அடியாகவும் வினையடியாகவும் உள்ள உரிச்சொல் உள்ள தொடர்களை வேறு வேறு பெயர்களால் அழைக்க வேண்டும், உதாரணமாக

'பசப்பு உளரும்பே' என்ற தொடரில் பசப்பு உரிச்சொல் இந்தத் தொடர் எழுவாய்த் தொடர் ஆகும், இப்படியே

கவர்நடைப் புரவி — வினைத் தொகை
உவந்துவந்து — வினையெச்சத் தொடர்
துணையிற் றீர்ந்த கடுங்கண் யானை — பெயரெச்சத் தொடர்.

(கவர், உவப்பு, தீர்தல்) என்ற உரிச்சொல் உள்ள தொடர் களை வெறும் உரிச்சொல் தொடர் என்று கூறினால் மொழி அமைப்பை ஒட்டிய இலக்கணமாகக் கருதபபடமாட்டாது. எனவே உரிச்சொல் தொடர் என்ற கருத்து அடையாக வரும் உரிச்சொல்லுக்கு மட்டுமே பொருந்தும். அதனால் நாம் மேலே குறிப்பிட்டபடி அடைச்சொல்லாக வருவனவற்றையே உரிச் சொல் என்று வழங்கும் வழக்கம் பிற்காலத்தில் நிலை பெற்று விட்டது. அதுவே இன்று பள்ளி இலக்கணங்களிலும் காணப் படுகிறது.

மேலே கூறிய விவாதங்களால் உரிச்சொல்லை மொழி அமைப்பு நோக்கில் பார்க்கும்போது அடையாக வருகின்றவற் றையே சிறப்பாகக் கொள்ள வேண்டும் என்பது உறுதி ஆகிறது.

2.9. முடிவுரை

உரியியல் முழுமையும் மொழி அமைப்பில், சிறப்பாக சொல்லியல் நோக்கில் பார்க்கும் போது 'தா ,' என்ற கருத்து ஓரளவு பொருந்துவதாகவே தோன்றுகிறது. ஆனால் உரியியலில் பெரும்பகுதியும் சொற்களுக்குப் பொருள் கூறியுள்ளதால் அவற்றை அதிக பட்சம் அகராதியன் (lexeme) அதாவது அகராதியில் பொருள் கொடுக்கக் கூடிய சொற்கள் என்று வேண்டுமானாலும் கொள்ளலாம்.

சொல்லியல் நோக்கில் எழும் இன்னொரு கேள்வி. அவற்றின் பாகுபாடு - சிறப்பாக சொல்வகைப் பாடு பற்றியது. தொல்காப்பியர் உரியியலில் பெயரடியாகவும் வினையடியாகவும் அடையாகவும் வருகின்ற சொறகளின் பொருளைக் கூறியுள்ள தன் மூலம் உரியியலைப் பொறுத்தவரையில் பெயர், வினை என்ற இரண்டுவகை அல்லாமல் அடை என்ற மூன்றாவது சொல்வகைப்பாடு உள்ளது என்பதைச் சூசகமாகப் புலப்படுத்தியுள்ளார் என்று கொள்ளலாம்.

இந்த நோக்கில் பார்க்கும் போது உரியியலின் பன்முக நோக்கு புலனாகிறது. உரியியலைமட்டும் தனித்துப் பார்க்கும் போதே இரண்டு முகங்களும் நூல் முழுமையும் பார்க்கும் போது இன்னும் இரண்டு முகங்களும் வெளிப்படுகின்றன. பொதுவாக உரியியல், சொற்பொருளியல் (semantics) என்ற மொழி அமைப்பின் புதிய கூறை முதல் சூத்திரத்தில் விளக்கி இரண்டாவது சூத்திரம் முதற் கொண்டு கடைசி எட்டு சூத்திரம் வரை வெளிப்பட வராத சொற்களுக்குப் பொருள்கூறி, இறுதி எட்டு சூத்திரங்களில் சொற்பொருளை விளக்கும் முறையும் விளங்கிக் கொள்ளும் முறையும் பேசுகிறது என்பதில் கருத்து வேறுபாடு இல்லை, எனவே உரியியலை 1) ஒரு நோக்கில் சொற்பொருளியலை விளக்கும் இயலாகக் கொண்டு அங்கு சொல்லிலக்கண நோக்கில் அகராதியன் (lexeme) பற்றியே பேசுகிறது என்று கொள்ளலாம். அப்படியானால் முதல் சூத்திரமும் கடைசி எட்டு சூத்திரங்களும் சொற்பொருளியல் பற்றிய பொதுக் கருத்தாகவும் ஏனைய சூத்திரங்கள் சொற்பொருள் உதாரணங்களாகவும் கொள்ள வேண்டும். வெளிப்பட வராத

சொற்களின் பொருளினை விளக்குவதால் மேலும் இரண்டு வித நோக்கு புலனாகிறது. 2) இலக்கணத்தின் நோக்கம் இலக்கியக் கல்விக்கு உறுதுணையாக இருப்பது என்பது. இவை இரண்டும் உரியியலை மட்டும் பார்க்கும் போது புலனாகின்றன. 3) இது மறைமுகமாக ஒரு மொழியில் மொழி ஆராய்ச்சி தோன்றிய துவக்கக் கட்டத்தை அதாவது பழைய இலக்கியங் களை அறிந்து கொள்ள உதவுவதற்காகத்தான் மொழி ஆய்வு தோன்றியது என்பதையும் உலகு அளாவிய நோக்கில் பார்க்கும் போது (விளக்கத்துக்கு சண்முகம்,1984 பார்க்கவும்) புலப்படுத்து கிறது. பயிலாத சொற்களுக்குப் பொருள் கூறுவது என்பது இலக்கியக் கல்விக்கு மொழி அளவில் உரியியல் உதவி செய்கிறது என்று ஆகிவிடுறது. இதனால் இலக்கியத்தின் வடிவத்தை உள்ளடக்கியதையும் (பொருளையும்) கூறும் பொருளதிகாரம் தொல்காப்பியரே இயற்றியிருக்கக் கூடும் என்ற கருத்தையும் கூடச் சூசகமாகப் புலப்படுத்துகிறது.

சொல்லதிகாரம் முழுமையும் பார்க்கும்போது உரியியலு டைய இன்னொரு முகமும புலனாகிறது. அதாவது பெயரி யலில் உரிச்சொல்லைத் தனிச்சொல் வகையாகக் கூறியதற்கு ஏற்பவும், எச்ச இயலில் உரிச்சொற்கள் அடையாக வரும் என்று சொன்னதற்கு ஒப்பவும், உரியியலில் வெளிப்பட வராத சொற் களுக்குப் பொருள் கூறும்போது பெயர், வினைகளோடு அடை யாக மட்டும் வரும் சில சொற்களையும் சேர்த்துப் பொருள் கூறியதன் மூலம் உரியியல் 4) சொல்லிலக்கண நோக்கில் புதிய தொரு சொல்வகை இருப்பதை உறுதிப்படுத்துகிறது. ஆகவே உரியியல் கருத்தாழம் மிகுந்த ஒரு இயல் என்பதும் அதில் பலவித கருத்துகள் புதைந்துள்ளன என்பதும் சிறப்பாக உணரத் தகுந்தன.

அடிக்குறிப்புகள்

1. “காப்பியர் வகுத்த உரியியல் எல்லோருடைய கவனத் தையும் கவர்ந்திருக்கிறது. இருந்தாலும் மாறுபட்ட கருத்துக் களுக்கே இன்னும் இடமளித்துக் கொண்டிருக்கிறது. அதனால் தெளிவற்ற நிலையில் இருக்கின்றோம் என்பதை ஒத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது”. (ஆண்டியப்பன், *1977:121.*)

2. "In a morpheme based grammar, the part of speech label which we have assigned to lexemes would be attributed, primarily to what are traditionally referved to as stems or even roots (The difference between stems and roots is that roots are morphologically unanalysable where stems may include, in addition to their root one or more derivational suffixes." (Lyons. J. 1981:112.)

3. வடமொழி மேற்கோளைச் சுட்டிக் காட்டிய மொழியியல் துறை பேராசிரியர் பி.எஸ். சுப்பிரமணியம், அவர்களுக்கு என் நன்றி உரியது.

4 From the view point of inflectional morphology, a form such as *volve* of *volubil* functions as the root of the lexeme *(volve* or *volubilis)* from whose paradigm it is abstracted; Matthewes, 1974:40.

5. We will say that sing, sings, sang etc. are word-forms (ie. they are forms which are also words)... And we will say that sing is a lexeme or vocabulary word என்ற ஆங்கில உதாரணம் இந்தக் கருத்தை விளக்கும்.

6. அடையாக வருபவை என்று ஆதித்தர் (1967) இருபத்திரண்டு சொற்கள் என்பதும், இசரயேல் (1977) பதினாறு சொற்கள் என்பதும் முரண்படுவதால் அடையாக வருவனவற்றைச் சரியாக வரையறுப்பது அறிஞர்களின் கடமையாகும். மேலும் இசரயேல் (1977:139) பதினாறு சொற்களைக் கொடுத்திருப்பதும் 152 - ஆம் பக்கத்தில் 'யாதொரு சொல் வேறுபாட்டு உருபனையும் ஏற்காத ...... முதலிய பதினைந்து சொற்கள் உரியியலின்கண் உள' என்று பதினைந்து சொற்கள் கூறுவது அச்சுப் பிழையாகவே இருக்க வேண்டும். இது போலவே 'யாணு' என்பது பெயர்ச்சொல் என்று ப. 139-இல் குறிப்பிடப் பட்டிருக்க ப. 144 - இல் பெயரடை என்று (-'உரிச்சொற்களில் உறு, தவ ... யாணு, கடி போன்ற சில வேறுபாட்டு உருபன்களை ஏற்பதில்லை) இருப்பதும் அச்சுப் பிழையாகவே இருக்க வேண்டும். இசரயேல் ப. 138 - இல் செய்துள்ள சொல்வகைப் பாடும் திருத்தத்துக்கு உரியது, 'செல்லல்' என்பதை ஆக்கப்

பெயராகக் கருத முடியாது என்பது முன்னரே (சண்முகம்,1984) விளக்கப் பட்டுள்ளது, பழுது, முழுது, வறிது, நன்று என்பன வற்றை ஒட்டுப்பெயர்கள் என்று அழைப்பதும் பொருந்தாது. அவைகள் குறிப்பு வினைகள். சிறப்பாக குறிப்பு வினையெச்சம் என்றே கருதப்பட வேண்டும்.

6. சா. வே. சுப்பிரமணியம் (1965:85) 'செவ்வனம்' என்பதை வினை உரிச்சொல்லாகக் குறிப்பிட்டுள்ளார். அதை பகாப்பத மாகக் கருத முடியாது - ம் கனம் (ஆங்கனம் என்ற சொல்லில் வருவது) என்று அவர் கொண்டுள்ள கிளிட்டிக்ஸின் (ப-84) மாற்று வடிவமாக - வனம் என்பதைக் கொள்ளலாம். எனவே, 'செவ்வனம்' என்பதைப் பகுபத கிளிட்டிக்ஸ் என்று கொள்ள வேண்டும்.

துணைநூல்கள்

அகத்தியலிங்கம், ச. 1962 *Description of the Language of Pati ṛuppattu*, unpublished, Trivandrum.

ஆதித்தர், ச.கு 1967 தொல்காப்பியம் உரிச்சொல் விளக்கம் (ஆதித்தியம்,) சென்னை.

ஆதித்தன், 1982 "உரிச்சொல்லும் பல பொருள் ஒரு சொல்லும்' தமிழ்ப்பொழில், துணர் 56. மலர் 7.324-8.

ஆண்டியப்பன்,தே. 1977 காப்பியர் நெறி, சொல்லியல், மதுரை.

இசரயேல், மோ. 1977 இடையும் உரியும், மதுரை.

இலக்குவனார்,எஸ். 1963 *Tolka:ppiyam (in English) with critical studies*, Madurai.

சங்குப்புலவர் 1962 "உரிச்சொல்", செந்தமிழ்ச் செல்வி, துணர் 36

சண்முகம், செ.வை. 1984 'வெளிப்பட வாரா உரிச்சொல்', புலமை. தொகுதி 10.72-96.

சதாசிவம்.மு, 1961 'உரிச்சொல்லும் வேர்ச் சொல்லும் ஒன்றா', செந்தமிழ்ச் செல்வி, துணர். 36 எண்,2 103-10.

சுப்பிரமணிய சாஸ்திரி, பி.எஸ். 1930 தொல்காப்பியச் சொல்லதி காரக் குறிப்பு, சென்னை.

சுப்பிரமணிய சாஸ்திரி பி.எஸ். 1945 *Tolka:ppiyam collatika:ram (English Translation with Explanation)*, 2nd edition, Annamalainagar, 1979.

சுப்பிரமணியம், சா.வே. 1965 *Descriptive grammar of Cilappatika:ram*, Madras.

சுப்பிரமணியம், வி.ஐ. 1962 *Index of Puṟaṉa:ṉu:ṟu*, Trivandrum.

பாலசுப்பிரமணியன், க. 1981 a. *A Descriptive Grammar of Tolka:ppiyam*, unpublished Thesis, Annamalainagar.

பாலசுப்பிரமணியன் க. 1981. b. *Indcx of Tolka:ppiyam*, Unpublished, Annamalai university, Annamalainagar.

மீனாட்சி சுந்தரன், தெ.பொ. 1974 'உரிச்சொல்', இலக்கண ஆய்வுக்கட்டுரைகள் - I, (Ed. அகத்தியலிங்கம் & பாலசுப்பிரமணியம்) - 'அண்ணாமலைநகர்.

Veeramamunivar 1917 *The grammar of centamil*

Lyons, J. 1981 *Language and Linguistics : An introduction*, Cambridge.

Matthews, P.H. 1974 *Morphology*, Cambridge.

கலந்துரையாடல்

திருமுருகன்: 1. உரிச்சொல் பெயர்க்காரணம் என்ன? 2. நன்னூலார் செய்யுளுக்குரியது உரிச்சொல் என்று கூறுகிறாரே, அது எந்த அளவிற்குப் பொருந்தும்? 3. பண்பிற்குரியன உரிச்சொல் எனக் கூறலாமா? 4. உரிச்சொல் பாகுபாடு இன்றியமையாததா?

சிவலிங்கனார்: உரிச்சொல் என்பதைப் "பொருளுக்கு உரிமையுடைய சொல்" என்று கருதுகின்றனர். ஆனால் அவ்வாறு கருதுவதை விட "பொருளுக்கு உரிமைப்படுத்தப்பட்ட சொல்" என்பது பொருந்துமென நான் கருதுகிறேன்.

சொற்களை, இவை பெயர், இவை வினை, இவை இடை இவையெனப் பிரித்துப் போடுகிறோம். ஆனால் பெயர், வினை,

இடையெனச் சொல்வதற்குத் தகுதியின்றி மீதியுள்ளனவற்றை - சால, உறு, தவ, நணி போன்றவற்றை - தனியாகப் போடுகிறோம். இவை, பெயரா, வினையா, இடையா எனக் கூற முடியாது. பெயருக்கு உரிய இலக்கணமான வேற்றுமை உருபை ஏற்று வருவதும், வினைக்குரிய இலக்கணமான கால இடைநிலை ஏற்று வருவதும், இடைச்சொல் விகுதி சாரியை போன்று வருவதும் ஆகிய பண்புகள் இவற்றில் இல்லை, எனவே இவற்றை எங்கே போடுவது என்ற தகராறு உள்ளது. இவற்றின் ஆட்சியைப் புரிந்து, பொருளை அறிந்து கொள்கிறோம். உதாரணமாக, "உறுபொருள்" என்பதில் காணப் படும் உறு என்ற சொல் "மிகுதி" என்ற பொருளைத் தருகிறது. இந்நிலையில் இவை, இசை, குறிப்பு, பண்பு இவற்றின் அடியாகத் தோன்றி, பொருளுக்கு முன்னோரால் உரிமையாக்கப்பட்டமையால் இவற்றை உரிச் சொல் எனக் குறிப்பிடலாம். நனி என்ற சொல்லுக்கும் மிகுதி என்ற பொருள் உரிமையாக்கப்பட்ட நிலையில் உரிச்சொல் ஆயிற்று.

இசரயேல்: உரிச் சொல் பற்றிப் பல ஆய்வுகள் தொடர்ந்து நடை பெற்று இருக்கின்றன. நானே பல ஆண்டுகள் இது பற்றி ஆராய்ந்து இருக்கிறேன். எனினும் எனக்கு இன்னும் மன நிறைவு ஏற்படவில்லை. செ. வை. சண்முகம் அவர்கள் இது வரை கூறியதில் இரண்டே இரண்டு புதிய கருத்துக்கள்தான் உள்ளன.

(1) ஆக்கப் பெயர்களைப் பற்றி தொல்காப்பியர் கூறியது நூற்பாவின் போக்கு அடிப்படையில் அமைந்ததாகும் என்பது.

(2) உரிச்சொல்லுக்கு இரண்டு வகையாக விளக்கம் தரலாம் என்பது. உரிச் சொல்லுக்கு அடிப்படை என்ன? பல உரையாசிரியர்களும், தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், வையாபுரிப் பிள்ளை போன்றோர்களும், மொழியியல் அறிஞர்களான, கமில் செவலபில், ஆந்திரனோவ் போன்றோர்களும் பல பலவிதமாக ஆராய்ந்துள்ளனர். (ஏழு கொள்கையாக விளக்கியுள்ளனர்.) எனினும் எனக்கு இதில் தெளிவு இல்லை.

> "இடையெனப் படுவ பெயரொடும் வினையொடும்
> நடை பெற்றியலும் தமக்கியல் பிலவே"

"இடைச் சொற் கிளவியும், உரிச்சொல் கிளவியும்
அவற்று வழி மருங்கிற் தோன்று மென்ப"

எனக் கூறுவார் தொல்காப்பியர். பெயரும், வினையும் சிறப்புடையன என முடிவு கட்டுகிறோம். இடைச்சொற் கிளவியும், உரிச்சொல் கிளவியும் தமக்கியல்பில; பெயர்ச் சொல் என்பது திணை, பால், எண் வேற்றுமை இவற்றைக் காட்டுவது என்பது.

வினை என்பது, திணை, பால், எண் இடம், என்னும் இலக்கணக் கூறுகளோடு தன்வினை, பிறவினை, காலம் போன்றவற்றைக் காட்டுவது. இடைபற்றிக் கூறும்போதும் தொல்காப்பியர் தெளிவாக இருக்கிறார்.

அவற்று வழி மருங்கில் தோன்றும் என்றும் நடை பற்றியலும், தமக்கியபில எனவும் குறிப்பிடுகின்றார். சொல் நிலையிலும், தொடர் நிலையிலும் இவை இலக்கண வேறுபாட்டை விளக்கும். என, என்ற, எனா, உம், எனவும் போன்றவை இலக்கண வேறுபாட்டை விளக்குவனவே. இவற்றைப் போன்றே வினையிலிருந்து உண்டாகும் துணைவினைகள் போன்றவையும் இலக்கண வேறுபாட்டை விளக்குவன. இவ்வளவு தெளிவாக இருக்கும் தொல்காப்பியர் உரிச்சொல் பற்றிக் குறிப்பிடும் போது தான் தடுமாறுவதோடு மட்டுமின்றி நம்மையும் தடுமாறவைக்கிறார். "அவற்றுவழி மருங்கில் தோன்றும்" - என்பதோடு குறைச் சொல் கிளவி என்றும் குறிப்பிடுகின்றார். இதில் எனக்கு கருத்துத் தெளிவில்லை. நன்னூலார் குற்றியலுகர புணர்ச்சிக்குப் பின்னர் உரிச்சொல் பற்றிக் குறிப்பிடுகின்றார். இது போன்று தொல்காப்பியர் உரிச்சொல்லும் புணர்ச்சியில் வரும் என்பதைக் காட்டவே, உரிச்சொல்லைப் பற்றிப் எழுத்ததிகாரத்தின் இறுதியில் புணரியல் நிலையிடை (சூத். 482.10) புணரியல் நிலையிடைஉணரத் தோன்றர் என்றெல்லாம் கூறிப்பிடுகினறார். அங்குக்குறிப்பிடுகின்ற உரிச்சொல்லும், உரியியலில் குறிப்பிடுகின்ற உரிச்சொல்லும் ஒன்றே.

எச்சவியலில் "இடைச் சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லே" என்றும் "உரிச்சொல் மருங்கினும் உரியன உரிய" என்றும் குறிப்பிடுவது இங்கு உணரத்தக்கது. இங்கு இடைச்

சொல் எல்லாம் வேற்றுமைப் படுத்துவது. இலக்கணப் பொருளைத் தருவது. ஆனால் உரிச்சொல்லில் கிலவேற்றுமைச் சொல்லாகவும் இருக்கலாம், சில இல்லாமலும் இருக்கலாம் எனக் கூறுகிறார். ஆனால் உரியியலில் சில தடுமாற்றம் உள்ளது.

உரியியல் பற்றிச் சில புதிய கருத்துக்களைச் சொல்ல முடியுமா என்று எனக்குத் தெரியவில்லை, வேர்ச்சொல், தாது, அடை என்றெல்லாம் சொல்கிறார்கள். மறுக்கவில்லை. ஆக்கப் பெயர்களை எல்லாம் நூற்பா வடிவில் அப்படித்தான் சொல்ல முடியும் என்று செ. வை சண்முகம் அவர்கள் சொன்னபடி நான் கருதவில்லை. வேறு எந்த வடிவத்திலும் ஆக்கப்பெயர்கள் இலக்கியத்தில் வரவில்லை. அடுத்தது, தொல்காப்பியர் பல இலக்கணக் கூறுகளைப் பற்றிக் குறிப்பிடவில்லை. காலம் தோன்றா தொழிற் பெயர், குறிப்புவினை எச்சம், பெயர் எச்சம் அரிய, செரிய, கரு, அருபோன்றவை பற்றிக் குறிப்பிடவில்லை. பலவற்றிற்குத் தொல்காப்பியத்தில் இலக்கணமில்லை.

உரிச் சொல், பொருளுக்கு உரியதா? தமிழுக்கு உரியதா? செய்யுளுக்கு உரியதா? இவை செய்யுளுக்கு உரியன. அதனால் தமிழுக்கு உரியன. இவை உரிமைப் படுத்தப்பட்டன என்கிறார். இதை நான் ஏற்றுக் கொள்கிறேன். தொல்காப்பியர், பெயர், வினை, இடை ஆகிய மூன்றிலும் அமைக்க முடியாததை நான்காவது வகையாகக் கொண்டார். அவை செய்யுளுக்கு உரியன. அவற்றை எல்லாம் தொகுத்தார். அடையாகக் கூறுவதை பெயர், வினை அடிகளில் காண முடியாது. எனவே, அவற்றையும் தொகுத்தார். பல இலக்கணக் கூறுகள் பெயர், வினை, இடையில் அடங்காதவை. பல இடைச் சொற்கள் வினையிலிருந்து வந்தன. இதனை நடுத்திராவிட மொழியிலிருந்து நன்கு அறியலாம்,

முழுநிலையிலிருந்து குறைநிலை எய்தி இலக்கண வேறுபாடு உணர்த்துகின்ற அந்தச் சொல் வடிவங்களையும், ஒட்டு வடிவங்களையும், இடைச் சொல்லில் அடக்க, இலக்கண வேறுபாடு உணர்த்தாத அதாவது அடைகளாக வருகின்ற, தழுவி வருகின்ற சொற்களையும், பெயரினும், வினையினும் இருந்து குறைநிலை எய்தி, அதனால் "பெயரினும் வினையினும் மெய்

தடுமாறி ... ... அவற்று வழி மருங்கில் தோன்றுவது உரிச் சொல் ஆகும்.

இனி இப்படிப்பட்ட சொற்களைத்தான் குறை நிலை எய்திய சொற்களைத்தான் (குறைச் சொற்கிளவி), குறைச் சொற்கிளவி தன்னியல்பற்ற சொற்கள், பெயரினும், வினை யினும் மெய் தடுமாறி குறை நிலை எய்தியவை, பெயரி னும் வினையினும் மெய்தடுமாறியவை : இலக்கணக் கூறுகளை ஏற்பதிலே தடுமாறியவை, வடிவம் தடுமாறியவை. இலக்கணக் கூறுகளை ஏற்பதில் குறை நிலை எய்தியவை. இப்படிப்பட்ட சொற்களை உரியியலில் கூறுகின்றார். இவை உரியியலில் சொற் பொருளை விளக்குவன.

எனவே. 1, 2. (பெயர், வினை); சொல் வகை.
3. (இடை) இலக்கண கூறு.
4. சொல் வகை என்று தனியாகப் பகுத்துக் காட்டாவிட்டாலும், வினையிடையிலும், பெயர் இடையிலும் சுட்டுகின்ற பகுதியாக அமைகின்ற நிலையிலேயே அவை மட்டு மன்றிப் பெயராகவும், வினையாகவும் இருந்து பெயருக்கும் வினைக்கும் உரிய எல்லா இலக்கணக் கூறுகளையும் முழு அளவில் ஏற்கக் கூடியன, குறை நிலை எய்துகின்ற, இலக்கண வேறுபாடு உணர்த்தாத, சொல் வடிவங்களை இவ் உரியி யலிலே சேர்த்தார் என்று கருதினால் ஓரளவு இன்னும் விளக்கம் ஏற்படும்.

அகத்தியலிங்கம்: உரிச்சொல் என்று உரியியலில் கூறப்படும் 16 சொற்கள் தவிர மீதி எவை எவை எனக் கூறமுடியுமா?

இசரயேல்: தவ, நனி முதலிய 16 உடன் வேறுபலசொற்களும் உரிச்சொல்லாகும். பெயரிலிருந்தும் வினையிலிருந்தும் குறை நிலையுடைய சொற்கள் சங்க இலக்கியங்களில் உரிச்சொல்லாக காணப்படுகின்றன, இலம்பாடு, கருமை போன்ற சொற்கள்; கருமை, சிவப்பு என்ற சொற்கள் வெகுளி என்ற பொருளில் வரும்போது வேறு வடிவங்களில் வருவதில்லை. இந்நிலையில் இவை குறைநிலை உடையவை, பெயரடையாக வருபவை குறைநிலை உடையவை. திணை, பால், எண், இடம் போன்றன வற்றைக் காட்டு வதில்லை. வடிவத்திலும் சில குறைநிலை உடையவை.

சிவலிங்கனார்: சிவப்பு என்ற சொல் சிவந்திருக்கிறது என வெகுளிப் பொருளில் வருகிறது. இதற்கு எவ்வாறு பதில் கூறுவது? அப்படியானால் உரிச்சொல் ஆகாதா?

அகத்தியலிங்கம்: கறுப்பு, சிகப்பு போன்ற சொற்கள் வேற்றுமை ஏற்குமே!

இசரயேல்: இவை வினைமுற்றாக, வினைஎச்சமாக வருவதில்லை. இந்நிலையில் இவை குறைபாடு உடையவை.

அகத்தியலிங்கம்: சிவந்தான் என வந்தால் அது எப்படி உரிச்சொல்லாகும்? மேலும், சிவந்தான் என வராவிட்டால் அது உரிச்சொல் ஆகிவிட முடியுமா?

இசரயேல்: தொல்காப்பியர், குறையாக வருவனவற்றை உரிச்சொல் என்றார். இவை ஏவலாக வராது. வினைகள், பெயர்கள், ஐம்பால் மூவிடங்களில் வரும்.

சண்முகம்: சிவப்பு வெகுளிப் பொருளில் வந்துள்ளது.

அறவாணன்: எனக்கு ஒரு அடிப்படை வினா எழுகிறது. உரிச்சொல்லை இப்பொழுது வகுப்புகளில் சொல்லித் தர வேண்டுமா? உரிச்சொல்லில் கூறப்படுபவை இன்று வினை நிலை எய்தி உள்ளனவே. எனவே, முன்னால் உரிச்சொல்லாக இருந்தன என்றும் பின்னால் உரிச்சொல்லாக இல்லை என்றும் கூறமுடியுமா?

பிச்சை: பெயரடை, வினையடை போன்றனவற்றை (வேகமான) உரிச்சொல்லாகக் கொள்ளலாமா?

ராஜரத்தினம்: இலக்கணக் குறிப்புக்கு உரிச்சொல் வேண்டுமா?

அரிமாமணி: தொல்காப்பியர்தான் உரிச்சொல் எனப் பெயர் வகுத்தாரா? இவை குறைநிலை எய்தியவையா? அந்தக் கால உரிச்சொல் எனப்பட்டவை இக்கால வேர்ச் சொல்லாக இருக்கலாமா?

அரங்கன்: தொல்காப்பியத்திற்கு உரியியல் எவ்வளவு பயன்படும் என்று கேட்டுப் பார்த்தால் சில உண்மைகள் தெரிய வரும்.

பாலசுப்பிரமணியன்: பொதுவாக உரிச்சொல், வேர்ச்சொல் என்பதைக் குறிக்கும் என்ற கருத்து அறிஞர்களிடையே உள்ளது. தெய்வச்சிலையார், தெ. பொ. மீ. போன்றவர்கள் இக்கருததைக் கொண்டுள்ளனர், ஆனால் தொல்காப்பியருக்கு இக்கருத்து இல்லை. பிற்கால ஆசிரியர்கள், பகுதி, விகுதி எனப் பிரித்துப் பார்த்த நிலையில்தான் இவ் எண்ணம் உண்டாயிற்று. தொல் காப்பியர் இவற்றைப் பொருளுக்கு உரிய சொற்களாகக் கருது கிறார். அதாவது அகராதிப் பொருள்; அகராதிப்பொருளுக்கு உரிய சொற்கள் ஒருவகை, இலக்கணப் பொருளுக்குரிய சொற்கள் ஒரு வகை. இடைச் சொற்கள் இலக்கணப் பொருளைக் குறிப்பவை. அகராதிப் பொருளைக் குறிப்பது உரிச் சொல். வந்தான் போன்ற சொற்களில் வா என்பது அகராதிப் பொரு ளுக்குரிய சொல் ஆகவே உரிச் சொல். சொற்களை, உரிச் சொற்கள் என்றும் இலக்கணச் சொற்கள் என்றும் பிரிக் கலாம். வா என்பது உரிச் சொல், வந்தான் என்பது இலக் கணச் சொல். மொழியில் வருவது இலக்கணச் சொல். வா என்ற தொழிலைக் குறிப்பதால் அது உரிச் சொல். இது பொருள் அடிப்படையில் வருவது. எனவே உரிச் சொல் என் பது "lexcical word" எனப் பொருள் படும். வட மொழியாளர் கள் கருதும் தாது என்பதும் இதுவும் வேறாகும்.

சிவலிங்கனார்: பொதுவாக உரியியலில், பொருள் தெரி யாத அரிய சொற்களின் பொருள்கள்தான் சொல்லப் படுகின் றன எனக் கூறலாம்.

சண்முகம்: எல்லாவற்றையும் தம்மால் சொல்ல முடியாது என்ற நிலையில்தான் தொல்காப்பியர் உரியியலிலேயே "இயன்ற மருங்கின் இனைத்து என அறியும் வரம்பு தமக்கு இன்மை யின் ..." எனக் குறிப்பிடுகின்றார். ஒரு சிலவற்றையே அவர் குறிப்பிடுகின்றார்.

பிச்சை : உரிச் சொல் பொருளைக் குறிப்பிடுகிறது என்று சொல்வதை விட நுண் பொருளைப் பற்றிக் (Abstract meaning) குறிப்பிடுகிறது எனக் கருதலாம். பெயர், வினை, இடை என மூன்றினும் சேராதனவற்றை உரியியலில் கூறுகிறார் எனக் கருதலாம்.

பாலசுப்பிரமணியன் : இன்னும் உரிச்சொல்லுக்கு விளக்கம் நன்குக் காணவேண்டுமானால், இசை, குறிப்பு, பண்பு என்பனவற்றிற்குச் சரியான விளக்கம் கண்டால் தெளிவு பிறக்கும்.

சண்முகம் : இசை, குறிப்பு, பண்பு என்பனவற்றில் 'இசை' என்பதற்குத் தெய்வச்சிலையார் 'சொல்' எனப் பொருள்படும் என்பார். எனவே இசை என்பதற்குச் சொற் பொருள் என்றும் குறிப்பு என்பதற்குக் குறிப்புப் பொருள் என்றும் தெய்வச்சிலையார் விளக்கியுள்ளார்.

திருமுருகன் : இசை என்பது ஒலி என்ற பொருளில் வந்துள்ளதே!

சண்முகம் : இசை என்பது 'சொல்' என்ற பொருளில் வந்திருக்கின்றது என்பதைத்தான் சுட்டிக் காட்டுகிறேன். சுந்தரமூர்த்தி தன்னுடைய பதிப்பில், பொருளியலில் முதல் சூத்திரமான இசைதிரிந்து இசைப்பினும் இயையுமன் பொருளே என்பதில் வரும் ... இசை என்பதற்குச் சொல் என்றே பொருள் கூறுவார். எனினும் இது பற்றி ஆராய்தல் நன்று.

மேலும் தொடர்ந்து வினாக்களுக்குப் பதில் அளிக்கையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்.

முதல் முதலாக உரிச் சொல்லின் பெயர்க் காரணம் பற்றி இங்கு வினா எழுப்பப் பட்டது. உரிச்சொல் என்றால் என்ன என்ற விளக்கம் தெரிந்து விட்டால் பெயர்க்காரணம் தானாக வந்து விடும். நான் விளக்கமின்றிக் காரணம் காண விரும்பவில்லை. அது கடினமானது.

மேலும் இந்தப்பாகுபாடு தேவையா என்று இன்னொரு கேள்வி எழுப்பப்பட்டது. பொதுவாக இலக்கண நூல்களில் உரிச் சொல்லுக்கு உதாரணங்களாக சால, உறு, தவ, நனி போனற அடைச் சொற்களே தரப்படுகின்றன. இவை அடைச் சொற்கள் என்றால், உரிச்சொல் என்ற பாகுபாடு தேவைதான். இன்றைய தமிழிலும் அடையாக மட்டும் வழங்கும் சொற்கள் இருப்பதால் உரிச்சொல் இன்றும் தேவையான சொல்வகைதான்.

திருமுருகன்: இத்தகைய ஒரு 16 சொற்களுக்காகத் தனி ஒரு பாகுபாடு தேவைதானா என்பது சிந்தித்தற்குரியது.

சண்முகம்: பொருளுக்கு உரிமையாக்கப்பட்ட சொல் எனக் கூறப்பட்டது. எந்த ஒரு மொழியிலும் இன்ன பொருளுக்கு இது என்று யாரும் ஆக்குவதில்லை என்று சிவலிங்கனார் கருத்தை மறுத்தார். மேலும் குறைச் சொல் பற்றிக் குறிப்பிடுகையில் சிவந்தான் போன்ற சொற்கள் காணப்படுவது பற்றியும் குறிப்பிட்டார். ''சிவ', ''முறி'' போன்ற பல சொற்கள் ஏவலில் வருவதில்லை என்பது உண்மைதான். ஆனால் இதனால் சிலவற்றைக் குறைச் சொல் என்று குறிப்பிட முடியாது.

அகத்தியலிங்கம்: ஏவலில் வராத எல்லாம் உரிச்சொல்லா?

இசரயேல்: அதுமட்டுமன்று, வேறு பல நிலைகளையும் நோக்கித்தான் உரிச்சொல் எனக் கருதப்படுகின்றது.

சண்முகம்: வெகுஜோர் போன்றனவற்றில் வரும் வெகு போன்ற சொற்கள் 'Intensive'' பொருள் காட்டும் நிலையில் உள்ளன. எனவே ஒரு இலக்கணக்கூறாக வருதல் வேண்டும் என்பது கவனிக்கத்தக்கது.

சிவதாணு. சொல் வகைப் பாட்டில் ஒரு தெளிவான கருத்து ஏற்படுகிறது. பெயர், வினை, இடையென மூன்று பாகுபாடு போக அடையாக வரும் சொற்கள் 16 உள்ளன என்பதும், அவைதான் உரிச்சொல் என்பதும் ஒரு தெளிவினைக் கொடுக்கிறது.

பாலசுப்பிரமணியன்: 16 சொற்கள் மட்டும்தான் உரிச்சொல் என்று கூறினால் அது சரியாகப் படவில்லை. பெயர், வினை போன்ற சொற்களில் எல்லாம் சொற் பொருளைத் தருகின்ற பகுதியை உரிச்சொல் எனக் கூறுவதுதான் சரி எனத் தோன்றுகிறது.

அகத்தியலிங்கம்: இவ்அமர்வுக்குத் தலைமை வகுத்த பேராசிரியர் அகத்தியலிங்கம், தன்னுடைய முடிவுரையில் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டார்.

பல நாட்கள் நான் உரிச்சொல்லைப் பற்றிச் சிந்தித்திருப்பினும் எனக்கு ஒரு நல்ல தெளிவு என்றுமே ஏற்பட்டது இல்லை. என்னுடைய புத்தகங்களில், தமிழில் பெயர், வினை, இடை,

உரி எனத் தமிழ் இலக்கண அறிஞர்கள் குறிப்பிடினும், உரிச் சொல் என்ற வகைப்பாடு அவசியமா என் நான் குறிப்பிட்டிருக் கிறேன். ஆனால் கடந்த மூன்று நான்கு நாட்களாக இது பற்றி நான் படிக்கும் போது ஒரு விதத் தெளிவு ஏற்படுகிறது. அத்துடன் இங்கு பல நண்பர்கள் பேசியதைக் கேட்ட போது மீண்டும் ஒரு தெளிவு வரக் கண்டேன். எனினும் என்னுடைய எண்ணத்தை உங்கள் முன் வைத்து மீண்டும் தெளிவு பெற விரும்புகின்றேன்.

பொதுவாகத் தொல்காப்பியர் சொற்கள் பெயர், வினை என இரு வகைப் பாகுபாட்டில் அடங்கும் என்றும், இடை, உரி ஆகியவை "அவற்று வழி மருங்கில் தோன்றும் ..." என்றும் குறிப்பிட்டார். எனவே இவற்றிற்கு இரண்டாவது இடமே உண்டு என்பது தெளிவு. இடைச் சொற்கள் ஒட்டுக் காக வந்து இலக்கணப் பொருளைக் காட்டுகின்றன. முன், பின் போன்ற சொற்களும் தனிச் சொல்லாக வந்தாலும், பெயர், வினை மருங்கில் நின்று "அவனுக்கு பின்", "அவனுக்கு முன்" போன்று இலக்கணப் பொருளைக் காட்டும். எனவே இடைச் சொற்கள் எல்லாம், பெயராகவும், வினையாகவும் வரும் சொற்களைத் தாயகமாகக் கொண்டே வருகின்றன. ராமன், ராமனை, ராமனால் போன்ற சொற்களில் இப்பண் பினைக் காணலாம். எனவே, பொதுவாக இடைச் சொற்கள் அனைத்தும் இலக்கணப் பொருளைக் காட்டுவன என்றும் பெயர், வினை ஆகியவற்றை அடியொற்றி வருவன என்றும் கொள்ளலாம்.

உரிச் சொற்களும், பெயர், வினையை ஒட்டி வருவன என்றே தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். இதுவரை இதுபற்றி எழுதியவர்கள் கருத்தையும், இப்பொழுது இன்று பேசிய அறி ஞர்களின் கருத்தையும் உள்ளத்தில் நிறுத்திக் காணும் பொழுது இரண்டு கருத்துக்கள் தோன்றின.

1. சால, உறு, தவ, நனி போன்று அடையாக வரும் சொற் களை உரிச்சொல் என்று குறிப்பிடலாம்.

2. தெய்வச்சிலையார், தெ. பொ. மீ, சாஸ்திரி போன்றவர்கள் உரிச் சொல் என்பது தாது என்பதைக் குறிக்கும் என்...

பிடுகிறார்கள். பாலசுப்பிரமணியன் இது பற்றிக் குறிப்பிடும் பாது, தாது என்பது பொருந்தாது என்றும், சொற்பொருளைக் குறிக்கும் பகுதியே உரிச் சொல் என்றும் குறிப்பிட்டார். இக் கருத்துதான் என்னுடைய உள்ளத்திலும் நானகு ஐந்து நாட் களாக இருந்து வருவது. எனவே உரிச்சொல்லுக்குப் பெயர்க் காரணம் கூறும் பொழுதும், சொற் பொருளுக்கு உரிய சொல் உரிச்சொல் எனக் காரணம் கற்பிக்கலாம், சொற் பொருளுக் குரிய சொல் என விளக்க நான் ஆசைப்படுகிறேன். பொருள் களை இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று இலக்கணப்பொருள்; மற்றொன்று சொற் பொருள், இலக்கணப் பொருளைக் காட்டு வன இடைச் சொல்; சொற் பொருளைக் காட்டுவன உரிச் சொல்.

பொதுவாகச் சொற்களைப் பல கண்ணோட்டங்களில் பார்க்கலாம். மேஜை என்பதை அது எடுக்கும் உருபுகள அல் லது ஒட்டுக்களை அடிப்படையாக வைத்து அதை அடிச்சொல் எனலாம். வேற்றுமை உருபை ஏற்கும் பண்பை வைத்து பெயர்ச் சொல் எனலாம். இது போன்றே செய் என்ற வினைச் சொல் லும். செய் என்பது அது ஏற்கும் ஒட்டினை அடிப்படையாக வைத்து வேர்ச் சொல் எனலாம். அது கால இடை நிலையை ஏற்பதை அடிப்படையாக வைத்து வினைச் சொல் எனலாம். இவ்விரு சொற்களும் பெயரடியாகவும், வினையடியாகவும் இருப்பினும் சொற்பொருள் கொண்டவை (Lexical word) ஆகும்.

எனவே சொற்பொருளைக் காட்டும் சொல்லின் பகுதியை உரிச்சொல் எனக் கூறலாம். இந்நிலையில் பெயர்ச் சொல்லிலும் உரிச்சொல் உண்டு; வினைச் சொல்லிலும் உரிச்சொல் உண்டு. இடைச் சொற்கள் சொற்பொருளைக் காட்டுமானால் அவற்றி லும் உரிச்சொல் உண்டு எனக் கருதலாம். தொல்காப்பியர் உரியியலில் கூறும் 16 சொற்களும் பெயரும் ஆகாது வினையும் ஆகாது இருத்தலின அவற்றை உரிச்சொல் எனப் பாகுபடுத்தித் தனியாகக் கூறினார் எனக் கருதலாம். சால, நனி, தவ, உறு போன்றவை பெயரும் ஆகாது வினையும் ஆகாது உள்ளமையின் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியதாயிற்று. இந்நிலையில் பொருளுக்குரிய சொல் எதுவோ அல்லது சொற் பொருளை உடையசொல் எதுவோ அதுவே உரிச்சொல் என விளக்கலாம்.

உரியியலில் சொற்பொருள் பற்றிப் பேசுவதற்குக் காரணமும் இதுவே ஆகும். இதனால்தான் நிகண்டுகளுக்கு உரிச் சொல் நிகண்டு என்ற பெயரும் உண்டாயிற்று. தெய்வச்சிலையார் பொருளுக்கு உரிமையுடைய சொல் உரிச்சொல் என்பார். "உரிச்சொல் என்பது யாதோ எனின், ஒரு வாய்பாட்டிற் சொல்லப்படும் பொருட்குத் தானும் உரித்தாகி வருவது" (293) என்பது தெய்வச்சிலையார் கூற்று. இக்கருத்தினை ஒத்துக் கொண்டால் சொற்கள் இரண்டு வகைப்படும் என்பதும் அது பெயர்ச் சொல், வினைச் சொல் என்பதும் அவற்று வழி மருங்கில் தோன்றுவதே இடையும், உரியும் என்பதும் விளங்கும். இதனால்தான் தொல்காப்பியர் பெயரினும் வினையினும் மெய்தடுமாறி எனக் குறிப்பிட்டார் என்றும் நன்கு விளங்கும். பெயரினும் வினையினும் மெய்தடுமாறி என்பதற்குப் பெயர் அல்லவா, வினை அல்லவா என்ற தடுமாற்றம் உண்டாக நிற்பது எனக்கொள்ளலாம். 'கண்' என்ற சொல் பெயர்ச் சொல்லாகவே கொள்வோம். ஆனால் கண் என்ற பொருளைத் தரும் நிலையில் அது உரிச்சொல் எனக்கொள்ளலாம். இதனை எவ்வாறு உரிச்சொல் எனக் கொள்ளலாம் என்ற தடுமாற்றம் வருகின்றதல்லவா! கண் என்பது பெயர்ச்சொல், அடிச்சொல், உரிச்சொல். பல கண்ணோட்டத்தில் பார்க்கும் போது பல பெயர்களைப் பெறுகின்றது, மேலும் உரிச்சொல்லை, பெயராக வோ அல்லது அடையாகவோதான் வரும் என்றும், தனியாக இயங்க முடியாது என்றும் குறிப்பிடலாம். எப்படி சால, உறு போன்றவற்றை அடைச்சொல், உரிச்சொல் எனக் கூறுகி றோமோ அதுபோன்றே கண் என்பதும் பெயர்ச்சொல்லா கலாம், உரிச்சொல்லாகவும், அடிச்சொல்லாகவும் உள்ளது எனக் கொள்ளவேண்டும்.

சிவலிங்கனார்: இவ்வாறு கூறுவதில் சிக்கல் உள்ளது. இடையினும், பண்பினும், குறிப்பினும் எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறாரே அது பற்றி உங்கள் கருத்தென்ன? அவை காட்டும் பொருள் என்ன?

அகத்தியலிங்கம்: இவற்றிற்கு நாம் கொள்ளும் பொருளி லிருந்து நான் இதைக் கூற முடியும். எடுத்துக் காட்டாக பண்பு என்பது ஒரு பொருளின் பண்பைக் குறிப்பது எனக் கொள்ள

லாம். சிலர் கருப்பு, சிவப்பு போன்ற சொற்கள் மட்டுமே பண்பைக் காட்டும் எனக் கருதுகின்றனர். அவ்வாறு கருதாமல் ஒரு பொருளின் பண்பை விளக்கும் சொல் உரிச்சொல் எனக் கொள்ளலாம். கல் என்ற சொல் நம்முடைய உள்ளத்தில் சில எண்ணங்களைத் தோற்றுவித்து, கல் என உணர்தலுக்கு அதன் பண்பை நம் உள்ளத்தில் எழுப்பி நிற்கிறது. எடுத்துக் காட்டாக கடினமாக இருப்பது; இலகுவாக உடையாதது போன்ற இன்னோரன்ன பண்புகளை எந்தச் சொல் காட்டி நிற்கிறதோ, அதுவே உரிச் சொல்.

திருமுருகன் : அதைப் பெயர்ச் சொல் எனக் கூறி விடலாம். ஏன் உரிச் சொல் எனக் குறிப்பிட வேண்டும்?

அகத்தியலிங்கம் : எல்லாச் சொற்களும் பெயராக இருந்தாலும், வினையாக இருந்தாலும் பொருளைக் காட்டுவது. எனவே, பொதுவாகச் சொற்பொருளைக் காட்டும் பண்பைக் கொண்ட சொல்லுக்கு உரிச் சொல் என்று பெயர்.

இசரயேல் : இது வரை கூறியதிலிருந்து புதிதாக இது எதைக் காட்டுகிறது?

அகத்தியலிங்கம் : தெ. பொ. மீ போன்றோர்கள் வேர்ச் சொல் என்றார்கள். ஆனால் இது அப்படி வேர்ச் சொல் இல்லை என்றும், பொருளைக் காட்டும் நிலை என்பதும் புதிய சிந்தனை.

பாலசுப்பிரமணியன் : புத்தகம் என்பது பெயர்ச் சொல் ஆகாது. புத்தகம் படித்தேன் என்றால் பெயர்ச் சொல்.

திருமுருகன் : பண்பு என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் அதற்கென தனி விளக்கம் வேண்டுமா? பொருளை அடிப்படையாக இன்னொரு கண்ணோட்டத்தில் பார்க்கும் போது இவ் வகைப்பாடு வேண்டியதா? ஒரே சொல்லையே பெயர்ச் சொல், வினைச் சொல், அடிச் சொல் என்றும் பேசுகிறோம். அதே மாதிரி உரிச் சொல் என்று கூறுகிறோம். சொற் பொருளைத் தருகின்ற நிலையில் உரிச் சொல் என்று கருதுகிறோம்.

அகத்தியலிங்கம் : தொல்காப்பியர் பொருளைப் பற்றி உரியியலில் கூறுவதன் காரணம் இதுதான்,

இசரயேல் : தாங்கள் கூறிய புதிய கருத்து எனக்கு விளங்க வில்லை.

அகத்தியலிங்கம் : உரிச் சொல் பொருளைப் பற்றி கூறு வது என்பதே புதிய கருத்துதான். பொருளைக் காட்டும் சொல்லே உரிச் சொல் என்பது புதிய கருத்துதான். வேர்ச்சொல் என்று கூறியவர்கள் அமைப்பை வைத்துக் கூறினார்கள். வேர்ச் சொல்தான் சொற் பொருளைத் தருகின்றது. ஆனால் சொற் பொருளைத் தருவது எனக் கூறுவதற்கும் வேர்ச் சொல் எனக் கூறுவதற்கும் வேற்றுமை உண்டு.

இசரயேல் : வேர்ச் சொல் என்பதை ஒத்துக் கொள்கிறேன். ஆனால் எல்லாம் வேர்ச் சொல் என்பதுதான் ஒத்துக் கொள்ள முடியவில்லை. உரியியல் மயக்கமாக இருக்கிறது.

அகத்தியலிங்கம்: எனக்கு இப்பொழுது மயக்கம் இல்லை. சொற்கள் நான்கு வகை என்பது தவறு. இரண்டு வகைதான். மீதி இருவகைகளும் சொற்பொருளை, இலக்கணப் பொருளை அடிப்படையாகக் கொண்டவை. உரியியலில் பெயரிலும், வினை யிலும், இடையிலும் கூட அடங்காத இலக்கணப் பொருளுடைய சொற்களை இங்கு கூறினார். வெளிப்பட வாரா சில உரிச் சொற்களைப் பற்றியும் இங்கு பேசுகிறார்.

இசரயேல்: அதில் காணப்படும் 120 சொற்களுக்குத் தீர்வு காண முடியும்.

அகத்தியலிங்கம்: முடியுமென்றுதான் நானும் கருதுகிறேன். 16 சொற்களைப் பற்றி கூறி அவற்றிற்குப் பொருள் தருகிறார். அவருக்கு ஏன் இந்த எண்ணம்?

திருமுருகன்: சுவர், வா போன்றவற்றைப், பெயர், வினை என்கிறோம். பண்பினைக் கூறுவது என்று சொல்கின்றீர்களே, அதைத் தனி வகையாகக் கூறவேண்டுமா?

பால சுப்பிரமணியன்: தொல்காப்பியர் இரண்டு வகைதான் சொல்கிறார். நன்னூலார்தான் இதை நான்கு வகையாக வைத்துள்ளார்.

அரிமாமணி: பேராசிரியர் அகத்தியலிங்கம் கூறுவது பொருத்தமாகவே உள்ளது. பால் என்றால் அது திரவம், வெண்மையானது எனப் பல பண்புகளைக் கொண்டது. அந்தப் பண்புகளை எது காட்டுகிறதோ அதுதான் உரிச்சொல்.

குமாரசாமி ராஜா. பண்புகளைப் பற்றி எல்லாம் கூறுவது உரிச்சொல் •என்பது எனக்குப் பொருத்தமாக இல்லை. சுவர் என்பது பெயர்ச் சொல் அல்லவா? உரிச்சொல என்றால் என்ன பயன்?

சண்முகம்: Abstract நிலையில் அது உரிச்சொல். பயன் நோக்கு நிலையில் பெயர்ச் சொல். எல்லாச் சொல்லும் உரிச்சொல் என்றும் அவற்றின் பிரிவே மற்றவை என்றும் கருதல் வேண்டும். தொல்காப்பியர் அரியசொற்களுக்கு எல்லாம் பொருள்கூறுவது மட்டுமன்று, வேறு வினைச் சொற்களும் பேசப்படுகின்றன.

பாலசுப்பிரமணியன்: சங்க இலக்கியங்களில் வராவிட்டால் அரிய சொற்கள் ஆகாது.

சண்முகம்: உரியியலில் சொல்வகைப் பாகுபாடு பேச்சு கிடையாது. சொற் பொருள் பற்றியே உரியியல் பெரும்பாலும் கூறுகிறது. அரியசொற்கள், அரிய பொருள்கள் ஆகியவற்றை பெரும்பாலும் கூறுகின்றன. சொல்லுக்குப் பொருள் கூறுகின்ற நிலையிலும் இந்த 16 புதிய சொல்வகைக்குரிய சொற்களை அங்கு கொண்டு வந்து கூறுவது சிறப்புடையது. உரிச்சொல்லைத் தனியாகவும், உரியியல் என்று இயல் நோக்கிலும் உரிச்சொல்லதிகாரம் என அதிகாரமுறையிலும் பல நிலையில் சொல்லை விளக்க வேண்டும்.

அகத்தியலிங்கம்: நீங்கள் சிறப்பு எனக் கருதுகின்றீர்களே அது என்ன சிறப்பு? சொல்லுக்கு பொருளைத்தான் உரியியலில் கூறவிரும்பினார். ஆயினும் இந்த 16உம் கொண்டு வந்து கூறியது சிறப்பல்லவா?

இசரயேல்: நான்காவது வகைச் சொல்லைக் கூறவிரும்பி னார். நன்றாக விளக்க முடியவில்லை.

அகத்தியலிங்கம் : விளக்க முடியவில்லை என்பது தவறு. நம்மால் விளங்கிக் கொள்ள முடியவில்லை என்று கூறலாம். நான்காவது வகை கூற விரும்பி இருந்தால் முதல் சூத்திரம் அவசியமில்லை. இது போன்றே கடைசி 8 சூத்திரங்களும் அவ்வாறே ஆகிவிடும். எனவேதான் சொற் பொருள் பற்றி பேசுகிறார் எனக் கருத வேண்டும். இந்நிலையில் பல நோக் கில் இது சிறப்புடையது.

பாலசுப்பிரமணியன் : ஒவ்வொரு இயலும், ஒவ்வொரு அடிப்படையைக் கொண்டவை. ஆனால் தொடர்புடையன வற்றையும் அவர் விளக்கினார். எனவே உரியியலிலும் அவ்வாறு.

சண்முகம் : பெயர், வினை ஆகியவை சொல் வகைப்பாடு. எனவே வகைப்பாடு பற்றி பேசும் பொழுது அங்கே இதனை இணைத்தார்.

சிவலிங்கனார் : எனக்கு இன்னும் உரிச் சொல் என்றால் என்ன வென்று விளங்கவில்லை.

சண்முகம் : இரண்டு வகையாக உரிச் சொல் உண்டு. எந்த உரிச் சொல் பற்றி கேட்கின்றீர்கள்? பெயரியலில் சொன்ன உரிச் சொல் வேறு, உரியியலில் சொன்ன உரிச் சொல் வேறு. ஏனெனில் பெயரியல் சொல்வகையைப் பற்றியும் உரியியலில் சொற் பொருள் பற்றியும் விளக்குகின்றன.

சிவலிங்கனார் : உரிச் சொல் யாது? பொதுவிலக்கணம் என்ன?

சண்முகம் : உரியியலில் வரும் உரிச் சொல் என்பது அக ராதிப் பொருளைத் தருவது.

திருமுருகன் : அகராதியில் வரும் சொற்கள் எல்லாம் உரிச் சொற்களா?

குமாரசாமி ராஜா : தொல்காப்பியச் சூத்திரங்கள் அக ராதிப் பொருளைப் பற்றி கூறுகின்றன. இவற்றுள் அடங்குமா

சண்முகம் : இதுவரை நடந்த கலந்துரையாடலில் உரிச் சொல் பற்றிய பலவேறு கருத்துகள் – எதிர்க் கருத்துகள் பற்றி எல்லாவற்றிற்கும் பதில் சொல்ல இயலாது. எனவே சிலவற் றிற்கு எனக்குத் தோன்றிய கருத்துகளைக் கூறி முடிக்கிறேன்.

உரிமையாக்கப் பட்டது உரிச்சொல் என்ற ஒரு கருத்து கூறப்பட்டது. உடனே எதற்கு உரிமையாக்கப்பட்டது என்ற எதிர்க் கேள்வி எழுகிறது. பொருளுக்கு உரிமையாக்கப்பட்டது என்று கூறினால் அகராதியன் (Lexeme) என்று மொழியியல் நோக்கில் கொள்ளலாம். இது தாது என்பதைவிட கொஞ்சம் விரிந்த பொருளை உடையது. மேலும், பயிலாதவற்றிற்கும் வெளிப்பட வாராதவற்றிற்கும் பொருள் கூறியுள்ளதாகத் தொல்காப்பியரே கூறியுள்ளதால் அகராதிக் கலையின் துவக்க நிலையை உரியியல் காட்டுவதாகக் கொள்வதற்கும் பொருத்த மாக இருக்கும்.

செய்யுளுக்கு உரிய சொல் என்று கொண்டால் செய்யுளில் அருகிய வழக்குச் சொற்கள் வரும் என்று பொருள்பட்டு, செய் யுள் பேச்சு வழக்கிலிருந்து மாறுபட்ட சொற்களை உடையது என்றும் இடைக் காலத்தில் செய்யுளே இலக்கியத்திற்குப் பயன் பட்டதால் இலக்கிய மொழியும் பேச்சு மொழியும் அதிக மாறு பாடு உடையது என்றும் ஆகும்.

அடுத்து 'உரிச்சொல்' குறைச்சொல் எனக் கொண்டு குறை நிலை எய்தியவை என்ற விளக்கம் தரப்பட்டது. மொழியியல் நோக்கில் இதற்கு விளக்கம் காண வேண்டும் என்றால் முழுச் சொல் விகுதிகளாக மாறுவதைக் கூறவேண்டும். இதை இலக்கணமாக்கம் (Grammaticalization) என்பர். பழந்தமிழில் 'மெய்' என்ற முழுச்சொல் மை என்று திரிந்து பண்பு விகுதியாக மாறியதாகச் சிலர் விளக்குவார்கள். இதை வேண்டுமானால் குறைநிலை எய்துதல் என்று கொண்டு மொழியியல் நோக்கில் இலக்கணமாக்கம் என்று கூறலாம். இன்றைய பேச்சுத் தமிழில் வேணும் என்ற சொல் அணும்' என்று விகுதியாய்ப் பயன்படுவதைக் (செய்யணும், தரணும்) குறைநிலை எய்தியது என்று கூறலாம். ஆனால் உரிச் சொற்களில் இப்படிக் கூறக்கூடிய சொற்கள் எதுவும் இல்லை. அப்படியே குறைச்

சொல் என்பதும் சில இலக்கணக் கூறுகளை ஏற்பதில் குறை நிலை உடையன என்ற விளக்கமும் பொருந்துவதாக இல்லை. ஏனெனில் பெயர்ச் சொற்கள் வேற்றுமையை ஏற்கும் என்று கூறினாலும் பெயர்ச் சொற்கள் செயப்படுபொருள் குன்றா வினையைப் பயனிலையாகக் கொள்ளும்போது மட்டுமே இரண்டாம் வேற்றுமை ஏற்று வரும்; செயப்படு பொருள் குன்றிய வினையைப் பயனிலையாகக் கொண்டால் இரண்டாம் வேற்றுமை உருபை ஏற்காது. மேலும் தன்மை, முன்னிலை, படர்க்கை பதிலீட்டுப் பெயர்கள் (Pronouns) விளி வேற்றுமையை ஏற்காது. எல்லாப் பெயர்ச் சொற்களும் பன்மை ஏற்கும் என்பது கூட ஒரு வகையில் தவறு. ஏனென்றால் திரட்சிப் பெயர் (Mass noun) என்ற வகையில் தண்ணீர் போன்ற நீர்மப் பொருளைக் (liquid) குறிக்கும் சொற்களும், சர்க்கரை, பருப்பு, மணல் போன்றவற்றைக் குறிக்கும் சொற்களும் பன்மை விகுதியை ஏற்காது. அதனால் பெயர்ச்சொற்களை எண்ணற் பொருளைக் குறிக்கும் பெயர்கள் (Count nouns), திரட்சிப் பொருளைக் குறிக்கும் பெயர்கள் (Mass nouns) என்று வேறுபடுத்துகிறார்கள். ஆனாலும் அடையாக மட்டுமே வரும் சொற்களை மட்டும் குறைநிலை எய்தியவை என்று கூறுவது பொருந்தும். ஏனென்றால் அவை மட்டும் வார்த்தை (word) ஆக இருந்தும் எந்த ஒரு இலக்கணக் கூறையும் ஏற்காததால் குறைநிலை எய்தியவை என்பதும் பொருந்தும். ஆனால் இது உரியியலில் கூறிய எல்லாச் சொற்கும் பொருந்தாததால் பொது விளக்கமாக ஏற்றுக் கொள்ள முடியாது.

கடைசியில் நேரடியாக உரிச்சொல் இலக்கண ஆராய்ச்சிக்குத் தொடர்பு இல்லாத அதே சமயத்தில் இலக்கணக் கல்வியோடு தொடர்புடைய ஒரு கேள்விக்கு மட்டும் பதில் கூற விரும்புகிறேன். அதாவது உரிச்சொல்லை இப்பொழுது வகுப்புகளில் சொல்லித்தர வேண்டுமா? என்பதே அந்தக் கேள்வி. இந்தக் கேள்வி மேலே குறிப்பிட்டபடி உரிச்சொல் ஆய்வுக்குப் பயன்படாவிட்டாலும் பொதுவான தமிழ் இலக்கண ஆராய்ச்சி நிலையையும், இலக்கண ஆராய்ச்சி நிலையையும், இலக்கணக் கல்வி நிலையையும் பற்றியது. ஆகையினால் இதில் தமிழ் கற்பிப்பவர்கள் மட்டுமல்லாமல் தமிழ் மொழி

ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்களும் சம்பந்தப் பட்டிருக்கிறார்கள். இந்தக் கேள்வி பல பொதுச் சிந்தனைகளை உள்ளடக்கி யுள்ளது. இன்று பள்ளிகளில் எந்தவித இலக்கணம் கற்பிக்க வேண்டும் என்ற பொதுக் கேள்வியின் ஒரு கூறே உரிச்சொல் பற்றிய கேள்வியாக - சிறப்பாகக் கேட்கப் பட்டிருக்கிறது. இதை இன்னொரு வகையில் சொன்னால் நன்னூலின் பொழிப்பு ரையை இன்றைய இலக்கணமாக பள்ளிகளில் கற்பிக்கலாமா என்று கேட்பதும் இதுவும் ஒன்றுதான். இருபதாம் நூற்றாண்டு மாணவர்களுக்கு இன்றைய வழக்கையும் இலக்கியத்தையும் ஒட்டிய இலக்கணத்தைக் கற்பிப்பதுதானே சிறந்தது; பழைய இலக்கணங்களின் பொழிப்புரையைக் கற்பிப்பதால் என்ன பயன் கிடைக்கப் போகிறது என்ற சிந்தனையும் இந்தக் கேள்வி யில் அடங்கியுள்ளது, அப்படியானால் இன்று உரிச்சொல்லின் இலக்கணம் என்ற பெயரால் சங்ககாலத்தில் வரும் சில அடைச் சொற்களையும் அதற்கான உதாரணங்களையும் தந்துகொண்டு இருக்கிறோமே, இது எவ்வளவுதூரம் பயன்படும் என்ற சிந் தனையும் இருபதாம் நூற்றாண்டு இலக்கியத் தமிழையும் பேச்சுவழக்குத் தமிழையும் ஆராய்ந்து முடிவுகட்டினால் அல்லவா அதைக் கற்பிக்க முடியும், அதாவது இருபதாம் நூற்றாண்டு தமிழை ஒட்டி இலக்கணம் எழுந்தால்தானே அதைப் பயன்படுத்த முடியும். எனவே இங்கு தமிழாசிரியர்கள் தமிழ் மொழியியலாளரைப் பார்க்கிறார்கள். என்றாலும் இலக் கணம் எழுதுவது என்பது அந்த கால மக்களின் மொழி உணர்வை ஒட்டியது. தொல்காப்பியர் சிறப்பு என்பது ஒன்றனைக் கூறும் பன்மைக்கிளவி, ஒருவரைக் கூறும பன்மைக் கிளவி, சிறப்பொருமை (Honorofic singular) பேச்சுவழக்கில் மட்டும் வரும் என்றும் இலக்கிய வழக்கில் வராது என்றும் கூறுவார். ஆனால் சங்க இலக்கியங்களில் அந்த வரையறைக்கு மாறுபட்ட உதாரணங்கள் நிறைய உண்டு. ஆனாலும் அவர் காலத்தில் வழங்கிய எல்லாச் சொற்களையும் முடிந்தவரை கவனித்தே எழுதியிருக்க வேண்டும். ஆனால் பல தமிழாசிரி யர்கள் இருபதாம் நூற்றாண்டு இலக்கிய வழக்கையும் பேச்சு வழக்கையும் புறக்கணித்து அதில் இலக்கணவரம்பு கிடையாது என்றும் கொச்சை என்றும் நினைப்பதாலும், இலக்கணங்களை

மொழியியல் நோக்கு விளக்குவதைச் சந்தேகிப்பதாலும், மொழியியலார் தைரியமாக இருபதாம் நூற்றாண்டுத் தமிழை ஒட்டி முழுவதுமான இலக்கணம் எழுத வரவில்லையோ என நினைக்க வேண்டியுள்ளது. நல்ல காலமாக கடந்த சில ஆண்டுகளாக பழைய இலக்கணங்களை மொழியியல் நோக்கில் ஆதரிக்கும் போக்கு காணப்படுகிறது. இது சிறப்பாகக் குறிப்பிடத் தகுந்தது.

எனவே, இன்றைய இலக்கிய வழக்கையும், பேச்சு வழக்கையும் சரியாகக் கவனித்து இலக்கணம் எழுத முன்வர வேண்டும். அடையாக வரும் உரிச்சொல்லைப் பற்றி எனக்குத் தெரிந்த உண்மையை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மிக என்ற சொல்லை அடையாகப் பயன்படுத்துகிறோம். மிக மோசம், மிக அவசியம், மிக நன்றாக இருக்கிறது போன்ற தொடர்கள் இன்றைய இலக்கிய வழக்கில் காணப்படுகின்றன. ஆனால், இந்த அடைச் சொல் உம் என்ற இடைச்சொல் ஏற்று வருகிறது. மிகவும் அவசியம், மிகவும் நன்றாக இருக்கிறது என்ற தொடர்கள் வருவதால் எந்தவித விகுதியும் ஏற்காதவை என்று கூறமுடியாது.

பேச்சு மொழியில் ரொம்ப என்பதும் (ரொம்ப நல்லது (அவனுக்கு) ரொம்ப கோவம், ரொம்ப வேகம்) வெகு என்பதும் (வெகு காலம், வெகு நாழி) கன என்பதும் (கன குஷி, கன கச்சிதம்) படு என்பதும் (படு மோசம், படு கஷ்டம், படுபாவி) அடைகளாக வருகின்றன. இவைகளில் ரொம்ப என்பது -உம் என்பதையும் (ரொம்பவும் நல்லது; ரொம்பவும் கோபப் பட்டான்) வெகு என்பது - ஆக என்பதையும் (வெகுவாக ரசித்தான்) ஏற்று வருகிறது. கன என்பதும் படு என்பதும் எந்த விகுதியும் ஏற்று வருவதில்லை படு என்ற வினைப்பகுதி (படுகிறான், பட்டான்) யையும், அடைச் சொல்லையும் ஒரு சொல் பன்மொழியாகக் (Homophonous) கொண்டு இரண்டு வேறு வார்த்தைகளாகக் கொள்ள வேண்டும். இது போன்று என்னென்ன அடைகள் பயன்படுகின்றன, அவை எப்படிச் செயல் படுகின்றன என்பதை ஆராய்ந்து முடிவுகட்ட வேண்டும்.

ஆனால் இந்தத் தொடர்களைக் கூட்டத்திலோ, வகுப்பிலோ 'இவையெல்லாம் தமிழா?' என்று கேட்டுக் கேள்விக்குரியதாக்கி விடுவதால் பலர் இன்று நாம் எல்லோரும் இயல்பாக வழங்கும் தமிழைக் கூர்ந்து கவனிக்க வேண்டும் என்ற எண்ணம் எழும்பாமல் செய்துவிடுகிறார்கள். அதனால் உண்மையாக இருபதாம் நூற்றாண்டு வழக்கை அறிந்து கொள்ள வேண்டும் என்பவர்களும் அதற்கு இலக்கணம் எழுத வேண்டும் என்பவர்களும் துணிச்சல் உடையவர்களாக இருக்க வேண்டியுள்ளது.

இந்த நிலையில் உரிச்சொல்லின் மரபு இலக்கணத்தைக் கற்பிக்க வேண்டுமா? என்பது யோசித்து முடிவுகட்ட வேண்டிய ஒரு உண்மை என்பதை ஒத்துக்கொள்கிறேன்.

நான்காம் அமர்வு

நாள். 24.4.1985 காலம்: காலை 10.30 மணி

பொருள்: இலக்கணச் சூத்திரங்களுக்குப் புதிய விளக்கம்

தலைமை:

பேராசிரியர் செ.வை. சண்முகம்

உரையாளர்கள்:

1. பேராசிரியர் ச. அகத்தியலிங்கம்
   'தொல்காப்பியம் அல்லது நன்னூல் சூத்திரங்களுக்குப் புது உரை காண்டல்'
2. பேராசிரியர் அ. சிவலிங்கனார்
   'தொல்காப்பிய சூத்திரம் ஒன்றுக்குப் புத்துரை'
3. பேராசிரியர் இரா. திருமுருகன்
   'இன்றைய மாணவர் இலக்கணத்தை வெறுப்பதேன்'

மொழியியல் 8. 3 & 4 (1985)
முதல் மொழியியல் கருத்தரங்குக்
கட்டுரைக் கோவை

தொல்காப்பியம் அல்லது நன்னூல் சூத்திரங்களுக்குப் புதுஉரை காண்டல்

ச. அகத்தியலிங்கம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

பொதுவாகத் தொல்காப்பியச் சூத்திரங்களை அணுகும் போது ஒருசில நோக்கங்களுடன் அல்லது ஒருசில அணுகு முறைகளுடன் அணுகுவது நல்லது என நான் கருதுகிறேன் அவ்வாறு அணுகும் போது பல வழிகளிலே பல புதிய விளக்கங் களை நாம் காண முடியும். சில நேரங்களில் தொல்காப் பியத்தில் காணப்படுகின்ற சூத்திரங்கள் அல்லது நூற்பாக் களில் காணப்படும் சில சொற்களுக்கு மட்டும் விளக்கம் கொடுத்தால் கூட அது பயனுடையதாக இருக்கும். உதாரண மாக தொல்காப்பியச் சொல்லதிகாரத்தின் முதல் சூத்திரத்தில்

> "உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே
> அஃறிணை யென்மனா ரவரல பிறவே
> ஆயிரு திணையினி சைக்குமன சொல்லே"

தொல் - சொல் 1

'ஆயிரு திணையி னிசைக்குமன சொல்லே' என்பதில் வருகின்ற 'சொல்' என்பது உண்மையிலேயே பெயர்ச்சொல்லைக் குறிப்பிடுகிறதா? அல்லது வினைச் சொல்லைக் குறிப்பிடுகிறதா? அல்லது இடைச் சொல்லைக் குறிப்பிடுகிறதா? அல்லது பழைய நெறியிலே உரிச் சொல்லைக் குறிப்பிடுகிறதா? அல்லது எல்லாச் சொல்லையும் குறிப்பிடுகிறதா? என்பதைப் பற்றி விளக்குகின்ற பொழுது சிலர் எல்லாச் சொல்லையும் எடுத்துக் கொள்வதும், சிலர் பெயர்ச் சொல்லை மட்டும் எடுத்துக் கொள்வதும் உண்டு.

இடைச் சொற்களும் உரிச் சொற்களும் பால் காட்டுவதில்லை என்பது தெளிவு. வினைச் சொறகள் வினைமுற்றாகவோ அல்லது வினையாலணையும் பெயராகவோ வரும் போது பலவேறு பால் பகுப்பினைக் காட்டி நிற்கும். ஆனால் நட, வா போன்றவை எந்த விதமான பால் பகுப்பையும் காட்டுவதில்லை. மேலும், தொல்காப்பியர் இச் சூத்திரத்தில் சொல்லுவது வினைச் சொற்களையா என்பதும் ஆராயத் தகுந்த ஒன்றாகும்.

ஆனால், எல்லாவிதமான பெயர்ச்சொற்களும் பால் காட்டுவன ஆகும். அடிப்படையாகப் பால் காட்டும் பண்பு பெயர்ச் சொற்களுக்கு மட்டுமே உண்டு என்பதையும் இங்கு சுட்டிக் காட்ட வேண்டும். இத்தகைய பண்பினை அடி நிலைப் பண்பு (Selectional property) எனக் கூறலாம். தொல்காப்பியர் இச் சூத்திரத்தில் குறிப்பிடுவது இப்பண்பையே என எண்ணலாம். இந்நிலையில் இச்சூத்திரத்தில் காணப்படும் 'சொல்' என்பதற்குப் பெயர்ச்சொல் எனப் பொருள் கூறுவது மிகப் பொருத்தமாக இருக்கும் (காண்க அகத்தியலிங்கம் 1979:64,65; செ. வை. சண்முகம் 1984:136,137).

அடுத்து இன்னொரு வகையினைக் காணலாம்.

"ளஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல்
ளஃகான் ஒற்றே மகடூஉ அறிசொல்"

போன்ற சூத்திரங்களில் கூறப்படும் விகுதிகள் வினைச் சொல்லில் வருவனவா அல்லது பெயர்ச் சொல்லில் வருவனவா

அல்லது இரண்டு வகைச் சொற்களிலும் வருவனவா என்ற ஐயப்பாடு எழுவதைக் காணலாம்.

பொதுவாக வினைச் சொல்லில் மட்டும் வரும் விகுதிகளைப் பற்றியே தொல்காப்பியர் கூறுகிறார் என்பதே அறிஞர்களின் முடிபு. தொல்காப்பியரும்,

"இருதிணை மருங்கின் ஐம்பால் அறிய
ஈற்றில்நின் றிசைக்கும் பதினோ ரெழுத்தும்
தோற்றந் தாமே வினையொடு வருமே."

தொல் - சொல் - 10

எனத் திட்டவட்டமாகக் கூறியுள்ளதால் வினையில் மட்டுமே வரும் எனக் கூறலாம்.

இக்கருத்தையே உரையாசிரியர்களில் பலர் கொண்டுள்ளனர். எனினும் தெய்வச்சிலையார் பெயரிலும் வரும் எனக் கூறுவார். 'தோற்றமாக என்பது', 'பெரிதாக என்பது' எனக் கூறிப் பெயரிலும் வரும் என்று வாதாடுவார் இவர். பெயரில் வரும் எனக் கூறுவது பொருந்துமா என ஆராய்தல் நலம் பயக்கும்.

இளம்பூரணர் வினையில் மட்டுமே வரும் எனக் கூறி

உண்டான்
உண்ணா நின்றான்
உண்பான்
கரியன்
செய்யன்

ஆகிய உதாரணங்களைத் தருவார். இவரையே பின்பற்றி பிற உரையாசிரியர்களும் தருவர்.

தெய்வச்சிலையார் பெயரிலும் வரும் எனக் கொண்டு பலவேறு உதாரணங்களைத் தருவார்.

உண்டான்

போன்றவற்றை மட்டுமன்றி

பாண்டியன்

மாயவன்

ஆகியவற்றைத் தந்து பெயரில் வரும் என்பார். இவற்றைப் போன்றே

அவள்

திருவினாள்

நம்பியர்

நங்கையர்

தாய்மார்

தந்தைமார்

போன்றவற்றையெல்லம் தந்து நிற்பார்.

ஆனால் எல்லா விகுதிகளுக்கும் பெயர்ச் சொற்களிலிருந்து உதாரணங்கள் தரமுடியாமல் இருப்பதைக் காணலாம். பகர விறுதிக்கு வினையிலிருந்து உதாரணம் காட்ட முடிகிறதே யன்றிப் பெயர்ச் சொற்கள் எதையும் தரவில்லை.

இவ்வாறே அஃறிணை ஒருமைக்கும் பெயர்ச் சொற்களைத் தருவதில் சிக்கல் ஏற்படுகிறது. ஒன்றன்பால் விகுதி எனக் குறிக்கப்படும் து,று,டு ஆகியவற்றிற்கு

அது

ஒன்று

இரண்டு

ஆகியவற்றைத் தருவார். அவற்றுள் ஒன்று, இரண்டு ஆகியவை எண்ணுப் பெயர்கள். இவற்றைச் சரியெனக் கொண்டால்

நான்கு

ஏழு

ஆகிய எண்ணுப் பெயர்களையும் கொள்ள வேண்டும். அவ்வாறு இவற்றையும் ஏற்றுக் கொண்டால் தொல்காப்பியர் கு, ழு ஆகியவற்றையும் ஏன் ஈறாகக் கொள்ளவில்லை என்ற வினா எழும். இந்நிலையில் பலவேறு சிக்கல்கள் (காண்க, அகத்திய லிங்கம் 1985) உள்ளதால் தெய்வச்சிலையார் உரை பொருந்தாது என்றும்

பிற உரையாசிரியர்களின் உரையே சிறந்தது எனவும் கொள்ள லாம். இந்நிலையில் புதிய உரைகளை நாம் கூறமுடியாவிடினும் பலவேறு உரையாசிரியர்களின் உரைகளை ஒப்பிட்டு எந்த உரை எதனால் சிறந்தது எனக் கூறுவதும் ஒரு வகையில் ஆராய்ச்சிக்கு நலம் பயப்பதாகும்.

இன்னும் சில இடங்களில் உரையாசிரியர்களின் உரை செம்மையாகவும் சிறப்பாகவும் இருந்து, அவர்கள் கொடுக்கின்ற உதாரணங்கள் தவறாகவோ அல்லது போதுமானதாகவோ இல்லாமலோ இருக்கலாம். இந்நிலையில் ஒவ்வொரு உரையா சிரியருக்கும் இடையே காணப்படும் வேறுபாடுகளை விளக்கி யாருடைய போக்கு சிறந்ததாக உள்ளது என விளக்குவதும் பயனுடையதாக அமையும்.

எடுத்துக்காட்டாக

"ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
வழக்கினாகிய உயர்சொற் கிளவி
இலக்கண மருங்கின் சொல்லா றல்ல"

தொல்-சொல் - 27

என்ற நூற்பாவை எடுத்துக் கொள்வோம். பலர்பாலைக் குறிக் கும் பல விகுதிகள் உயர்வு ஒருமையையும் குறித்து நிற்பதைக் காணலாம். இது பொருந்துமா? என எண்ணுகிறார் தொல் காப்பியர்.

இவ்விகுதிகள் பலர்பாலுக்குரியன. அவை வழக்கில் உயர்வு ஒருமையையும் குறிக்கும் எனக் கூறுவார் இளம்பூரணர்.

இதே கருத்தை உடையவரே சேனாவரையரும். இந்நிலையே பிற உரையாசிரியர்களிடமும் காண்கிறோம்.

இவற்றிற்கு உதாரணம் தரும்போது இளம்பூரணர்

தாம் வந்தார்
தாம் வந்தனர்

ஆகியவற்றையும், சேனாவரையர்

யாம் வந்தோம்
நீயிர் வந்தீர்
இவர் வந்தார்

ஆகியவற்றையும், நச்சினார்க்கினியர்

யாம் வந்தோம்
நீயிர் வந்தீர்
இவர் வந்தார்

எனச் சேனாவரையர் தந்த அதே உதாரணங்களையும், தெய்வச்சிலையார்

அவர் வந்தார்

என்பதையும் தந்து நிற்பர். இவர்கள் தரும் உதாரணங்களை வைத்து நோக்கின் இளம் பூரணரும் தெய்வச்சிலையாரும் படர்க்கையில் மட்டுமே உயர்வு ஒருமை வரும் எனவும், சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் பிற இடங்களிலும் வரும் எனவும் எண்ணியதாகக் கருதலாம்.

ஆனால் பழந்தமிழ் இலக்கியங்களை நோக்கின் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களிலும் உயர்வு ஒருமை வரக் காண்கிறோம்.

யாம், நாம் ஆகிய பதிலிடு பெயர்கள் பல இடங்களில் உயர்வு ஒருமையைக் காட்டி நிற்கின்றன (காண்க. சங்கத்தமிழ் II :163).

"முயங்கல் யாம் வேண்டினம்"

அகம் 26-15

"........... யாந்தன்
முயங்கல் விருப்பொடு குறுகினே மாக"

நற் 250-5

போன்ற இடங்கள் இப்பண்பைக் காட்டும்.

இவற்றைப் போன்றே முன்னிலையிலும் உயர்வு ஒருமை பல இடங்களில் வருகின்றது. நீர், நீயிர் ஆகிய பன்மைப் பதிலிடு பெயர்களும் இர், ஈர் போன்ற விகுதிகளும் வருகின்றன.

அகம், நற்றிணை, பத்துப்பாட்டு, பரிபாடல், கலித்தொகை, குறள், சிலம்பு ஆகிய நூல்களில் இப்பண்பினைக் காணலாம்.

அகநானூற்றில் தலைவி கூற்றாக வரும் பாடலில் 'நீர்' உயர்வு ஒருமையாக வருகின்றது.

> "சென்றுநீர் அவணிராகி நின்றுதரும்
> நிலையரும் பொருட்பிணி நினைந்தனி ரெனினே"
>
> அகம்.271 – 9

என்ற அடிகளில் 'நீர்' உயர்வு ஒருமையிலேயே வந்துள்ளது. இதுபோன்றே 'நீயிர்' என்பதும் உயர்வு ஒருமையில் (அகம்-1, பத்துப்பாட்டு - 3,) வந்துள்ளமை காணலாம்.

> 'நல்லோர்க் கொத்தனிர் நீயிர்' அகம். 26-19
>
> '...... .... இரவல
> .... நீயிடும்,
> .... செல்குவிர் ஆயின்
> .... பெறுகுவிர்
>
> பத்து. 3,40,163

என வருதல் கவனித்தற்பாலன. இந்நிலையில் இளம்பூரணரும் தெய்வச்சிலையாரும் படர்க்கைக்கு மட்டுமே எடுத்துக்காட்டு களைக் கொடுத்து அமைவது பொருந்தாது.

மேலும் உரையாசிரியர்கள் அனைவருமே பதிலிடு பெயர் களை மட்டுமே எடுத்துக்காட்டியுள்ளனர். ஆனால் பழந்தமிழ் இலக்கியங்களில் பெயர்களும் உயர்வு ஒருமையில் வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

காதலர், காதலோர், காதலவர், சான்றோர் சேர்ப்பர், ஆளர், அறிஞர், நாடர், மருத்துவர் கொடியர் போன்ற பல சொற்கள் உயர்வு ஒருமையைக் காட்டி நிற்கின்றன. காதலர் என்ற சொல் ஐங்குறுநூறு, அகம், நற்றிணை, குறுந்தொகை, கலித்தொகை, திருக்குறள் ஆகிய நூல்களில் காணப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

'காடிறந் தனரே காதலர்
நீடுவர் கொல்லென நினையுமென் நெஞ்சே'

ஐங். 311

'நீடினர் தோழிநம் காதலோரே'

ஐங். 463

'ஏதி லாளர்க்குப் பசந்தவென் கண்ணே'

ஐங். 34

''.......... ... இல்லோர்
நயந்த காதலர் கவவுப்பிணித் துஞ்சி''

பத்து. 6-663

'அறிஞர் கூறிய மாதிரங் கைக்கொள்பு'

பத்து. 8-287

'வாரார் தோழிநங் காத் லோரே'

குறு. 118-5

''................. காவலர்
கணக்காய் வகையின் வருந்தியென்
'நெஞ்சு புண்ணுற்ற ....'

குறு. 261 – 6

போன்று பல பெயர்ச் சொற்கள் உயர்வு ஒருமை காட்டி நிற்கக் காண்கிறோம், அகநானூற்றில் தலைவி தலைவனைக் குறிப்பிட்டு வரும் சொல்லாகக் காதலர் என்பதே இருபத்து இரண்டு இடங்களில் வரக்காண்கிறோம். இத்தகைய நிலைமை எல்லா அக இலக்கியங்களிலும் காணமுடியும். காதலர் போன்ற பெயர்ச் சொற்களே உயர்வு ஒருமையாக நூற்றுக் கணக்கில் வருகின்றது. ஆனால் உரையாசிரியர்கள் பதிலிடு பெயர்களை மட்டுமே உதாரணங்களாகக் கொடுத்துள்ளனர். இத்தகைய ஒரு நிலை பதிலிடு பெயர்கள் மட்டுமே உயர்வு ஒருமையாக வரும் என்ற தவறான எண்ணத்தைத் தரும். எனவே இத்தகைய பெயர்களையும் உதாரணங்களாகக் கொடுத்தல் வேண்டும்,

இத்தகைய சொற்கள் வேறு ராமனார் போன்ற சொற்கள் வேறு என்பதையும் இங்கு குறித்தாக வேண்டும்.

மட்டுமன்றிச் சில இடங்களில் உரையாசிரியர்கள் தரும் உதாரணங்கள் பொருந்துவதில்லை. சூத்திரத்தில் கூறுவதற்கும் உதாரணங்களுக்கும் எந்தவிதமான பொருத்தமும் இருப்ப தில்லை, எடுத்துக் காட்டாக ஒன்று பார்ப்போம்.

இடையியலில் வரும்

'இயற்பெயர் முன்னர் ஆரைக் கிளவி
பலர்க்குரி யெழுத்தின் வினையொடு முடிமே.'

தொல்-சொல். 265

இதற்கு உதாரணம் தரப்போந்த இளம்பூரணர்

அரசனார் வந்தார்
பார்ப்பார் வந்தார்

என்பவற்றையும், சேனாவரையர் போன்றோர்

பெருஞ் சேந்தனார் வந்தார்
முடவனார் வந்தார்

போன்றவற்றையும் தருவர். இவற்றுள் பார்ப்பார் வந்தார் என்பதில் பார்ப்பார் என்ற பெயர் சூத்திரதுக்குப் பொருந்து வதாக இல்லை. இது காதலர், நாடர் போன்று உள்ளதே அன்றி அரசனார் போன்று இல்லை, 'பார்ப்பனார்' என இருப்பின் பொருந்தும் பார்ப்பு + ஆர் எனப் பிரித்தல் முடியாது. பார்ப்பு என்பது இயற்பெயரும் இல்லை.

இதுபற்றிக் கூறும் சேனாவரையர்,

"ஒருமைப் பெயர் முன்னர் ஒருமை சிதையாமல் ஆரைக் கிளவி வந்து பாலறி சொல்லான முடிதலின், ஒருவரைக் கூறும் பன்மைக்கிளவியின் வேறாதலறிக" எனக் கூறுவது காண்க. இவ்வுதாரணம் 'ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவி' என்ற சூத்திரத்திற்குப் பொருந்துமே அன்றி இச் சூத்திரத்திற்குப் பொருந்தாது. இத்தகைய ஒரு நிலையை ஆங்காங்கே வேறுபல இடங்களிலும் வேறுபல உரையாசிரியர் களிடமும் காணமுடியும்.

இனி இன்னொரு நிலையில் தொல்காப்பியச் சூத்திரங்களை அணுகலாம்.

"செய்யாய் என்னும் முன்னிலை வினைச்சொல்
செய்யென் கிளவி ஆகிடன் உடைத்தே"

என்ற சூத்திரம் நுணுகி ஆராய்தற்குரியது. செய்யாய் வாய் பாட்டு முன்னிலை ஒருமை எதிர்காலச் சொற்கள் ஏவல் வினை யாகப் பயன்படும் என்பதே இச்சூத்திரக்கருத்து இதற்கு உரை கண்ட இளம்பூரணர் (444)

"செய்யாய் என நின்ற முன்னிலை வினைச்சொல்
செய்யென்றும் சொல்லும் ஆமிடன் உடைத்து"

என்பார்.

உண்ணாய் என்பது உண் என்ற பொருளைத் தரும்.

செய்யாய் என்பது உடன்பாட்டுச் சொல்லா, இல்லை எதிர் மறைச் சொல்லா என்ற ஆராய்ச்சியும் உரையாசிரியார் களிடையே உண்டு, சேனாவரையர் இளம்பூரணர் எதிர்மறைச் சொல்லே செய் என்னும் பொருளில் வருவதாகக் கூறினார் என்று கொண்டு அது பொருந்தாது என்னும் நிலையில்

"செய்யாயென்னும் முன்னிலை யெதிர்மறை செய்மென் கிளவியாதற் கேலாமையின், செய்யா யென்னும் முன்னிலை வினைச்சொல்லென்றது விதிவினையேயாம்" (சூத். 450) என்பார். சேனாவரையர் கருத்துப்படி செய்யாய் என்னும் உடன் பாட்டு முன்னிலை எதிர் கால வாய்பாட்டுச் சொல்லே 'செய் யென் கிளவியாகும் என எண்ணலாம்.

இதுபொருந்துமா என்பது ஆராய்தற்குரியது. நச்சினார்க் கினியர் பொதுவாகச் சேனாவரையருடன் பொருந்தியே செல்லு வார். ஆனால் இச்சூத்திரத்திற்குப் பொருள் எழுதும் போது

"ஒரு தொழிலினை 'மேற் செய்யாய்' என்னும் மறையாகிய முன்னிலை வினைச் சொல், அத்தொழிலினைச் செய்" என்னும்

உடம்பாட்டு முன்னிலைவினைச் சொல்லாம் இடத்தினை உடைத்து எனப் பொருள் கூறுவார். எனவே இவர் கருத்துப் படி எதிர் மறையே சிறுபான்மை உடன் பாட்டில் வரும் என்றும் அவ்வாறு வருங்கால் அது வேண்டிக் கோடற் பொருட்கண் வரும் என்றும் கருதலாம்.

எதிர்மறை → உடன்பாடு

⇓

வேண்டிக் கோடற் பொருண்மை.

தெய்வச் சிலையார் இதுபற்றிக் கூறும் போது

"செய்யாய் என்னும் ஆய் ஈற்று முன்னிலை வினைச்சொல் செய் என்னும் ஏவல் குறித்த வினைச் சொல்லுமாகி வரும்" (சூத். 439) எனக் கூறுவார் மேலும் இவர்

"நீ எம் இல்லத்து உண்ணாய் என்றவழி, உண்ணாமை யைக் குறித்தலேயன்றி, உண்க என்பதும் குறித்தவாறு கண்டு கொள்க" என்பார். எனவே உண்ணாய் என்பதை இவர் எதிர் மறையாகவே கொண்டுள்ளார் எனக் கருதலாம்.

எனவே உரையாசிரியர் கூற்று அனைத்தையும் ஆராயின் இளம்பூரணர் இது பற்றி வெளிப்படையாக எதுவும் கூற வில்லை.

சேனாவரையர் உடன்பாட்டு எதிர்கால முன்னிலை ஒருமைச் சொல்லே செய் என்னும் கிளவியாக மாறிற்று என்பார்.

நச்சினார்க்கினியர் எதிர்மறை ஒருமை வினைச்சொல் சிறு பான்மையாக உடன்பாட்டில் வரும். அதுவே வேண்டிக் கோடற் பொருளில் வரும் என்பார்.

தெய்வச்சிலையார் எதிர்மறைச்சொல்ஏவல் வினையாகவும் வரும் என்பார்.

இன்றைய வழக்கினை ஆராயின் சில உண்மைகள் தெரிய வரும். இன்றைய தமிழிலும்

வாக்களிப்பீர்
தேர்ந்தெடுப்பீர்
வருவீர்
தருவீர்

போன்ற முன்னிலை உடன்பாட்டுச் சொற்கள் ஏவல் வினையாகவும் பயன்படுகின்றன.

இதுபோன்றே

இங்கு கொஞ்சம் வரமட்டீர்களா?
இதைக் கொஞ்சம் செய்யமாட்டீர்களா?

போன்றவற்றில் வரும் எதிர்மறைச் சொற்களும் ஏவலாக வாருங்கள், செய்யுங்கள் எனப் பொருள்பட்டு நிற்கக் காணலாம்.

எனவே முன்னிலை உடன்பாட்டுச் சொற்களும் முன்னிலை எதிர்மறைச் சொற்களும் ஏவல் வினையாகப் பொருள் படுதலைக் காண்கிறோம்.

பழந்தமிழ் இலக்கியங்களை நோக்கின் செய்யாய் என்னும் வாய்பாட்டுச்சொல் எதிர்மறையிலும் உடன்பாட்டிலும் வந்துள்ளமை காணலாம்.

போலாய் - போல்கின்றாய்	புறம். 300.2
காணாய் - காண்பாய்	சிலம்பு. 9.27
அருளாய் - அருளாது ஒழிகுவை	பதிற்றுப்பத்து 71.26
செல்லாய் - செல்லமாட்டாய்	ஐங். 302.3

போன்றவை இப்பண்பைக் காட்டும். எனினும் எதிர்மறையாக வருவதே பெரும்பான்மையாக உள்ளது. இந்நிலையில்தான் நச்சினார்க்கினியர் இவற்றை எதிர்மறையாகக் கொண்டார் போலும்!

அவர் கருத்துப்படி இச்சொற்கள் எதிர்மறைச் சொற்களே. ஓரோவிடத்து இவை உடன் பாட்டில் வரும், அப்போது இவை செய் என்னும் ஏவல் பொருளைத் தந்து நிற்கும்.

பண்டைத் தமிழ் இலக்கியங்களில் இசை அதிகமாக எதிர் மறையில் வந்துள்ள போதிலும் சில இடங்களில் உடன்பாட்டு ஏவல் பொருளைக் காட்டுவதோடு ஒருமை முன்னிலை வினைச் சொல்லாகவும் உள்ளமை உணரத் தக்கது. உடன்பாட்டில் வரும் எல்லா இடங்களிலும் ஏவலாக உள்ளது எனக் கூறவும் முடியாது.

எதிர்மறையே உடன்பாட்டு ஏவலைக் காட்டும் எனக் கூறுவதா? இல்லை உடன்பாடாகி ஏவலைக் காட்டும் எனக் கூறுவதா என்ற கோள்வியும் எழலாம். நச்சினார்க்கினியர் உடன்பாடாக ஓரோவழிவந்து அவை ஏவலைக் காட்டுவதாகக் கருதுகிறார். ஆனால் தெய்வச்சிலையாரே, எதிர்மறையே உடன்பாட்டு ஏவலைக் காட்டும் என்கிறார். சேனாவரையர் உடன்பாட்டு ஒருமை வினையே ஏவலாகின்றது என்கிறார்.

சேனாவரையர்

செய்யாய் - எதிர்மறை
செயயாய் - உடன்பாடு
⇓
செய்
(ஏவல் பொருள்)

நச்சினார்க்கினியார்

செய்யாய் - எதிர்மறை ⇒ ஓரோவழி இது உடன்பாடு ⇒ ஏவல் பொருள்

தெய்வச்சிலையார்

செய்யாய் - உடன்பாடு
செய்யாய் - எதிர்மறை
⇓
செய்
(ஏவல்பொருள்)

இந்நிலையில் எது பொருந்தும் என ஆராய்தல் நலம் தரும்.

இன்றைய தமிழில் சில உடன்பாட்டுச் சொற்களும் சில எதிர்மறைச் சொற்களும் ஏவல் பொருள் உணர்த்துகின்றன எனக் கண்டோம், இதனால் செய்யாய் என்ற வாய்பாட்டுச் சொல்லும் (அது எதிர்மறையாயினும் அல்லது உடன்பாடாயினும்) ஏவல் பொருண்மையை சில நேரங்களில் உணர்த்தும் எனப் பொருள் கொள்ளுவதே பொருத்தம் என்று கருதலாம். இதனால்தான் தொல்காப்பியர் 'செய்யாய்' எனக் கூறிநின்றார் எனவும் எதிர்மறை என்றே அல்லது உடனபாடு என்றே விதந்து கூறவில்லை என்றும் கருதலாம்.

இதுபற்றி முன்னர் நான் எழுதியகட்டுரை ஒன்றில் (1985) சேனாவரையார் கூறுவதே பொருத்தம் என எழுதியிருப்பதை வாசகர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சேனாவரையர் உடன்பாட்டுச் சொல்லே ஏவல் (உடன்பாட்டு) வினையாக மாறிற்று என்பார். சேனாவரையர் கருத்தே பொருத்தம் என்பது அக்கட்டுரையின் சாரம். ஆனால் உடன் பாடும் எதிர் மறையும் ஏவல் பொருள் உணர்த்தும் என்பதே பொருத்தம் எனத் தோன்றுகின்றது.

சில சூத்திங்கட்கு உரையாசிரியர்கள் கூறும் பொருள் பொருத்தமாக இருப்பதில்லை.

இதுசெயல் வேண்டும் என்னுங் கிளவி
இருவயின் நிலையும் பொருட்டா கும்மே
தன்பா லானும் பிறன்பா லானும்.

தொல். சொல். 238

என்பது தொல்காப்பியச் சூத்திரம், இந்த 'இதுசெயல் வேண்டும் என்னுங் கிளவி' இருநிலைகளிலே அதாவது தன்பாலானும், பிறன் பாலானும் பொருள்குறித்து வரும் என்பது கருத்து. இதற்கு உரையாசிரியர்கள் கூறும் உதாரணங்களாக

(1) சாத்தன் ஓதல் வேண்டும்
(2) நீ உண்ணல் வேண்டும்
(1) சாத்தன் உண்ணல் வேண்டும்
(4) நான் ஓதல் வேண்டும்

முதலியவை காணப்படுகின்றன.

'சாத்தன் ஓதல் வேண்டும்' என்பதில் சாத்தன் என்பது 'ஓதல்' என்ற வினைக்கு எழுவாய் என்று நிச்சயமாகக் கொள்ள லாம். 'வேண்டும்' என்பதற்கு எது எழுவாய் என்று நோக்கி னால் சாத்தன் என்பதே மீண்டும் எழுவாய் ஆகிறது. எனவே ஒரு வாக்கியத்தில் இரண்டு வினைச்சொற்கள் இருக்குமானால் அவை இரண்டுக்கும் எழுவாய் ஒன்றுமட்டும் காணப்படும். உதாரணமாக

'நான் வந்து பாடினேன்'

என்பதில் இரண்டு வினைச்சொற்கள் உள்ளன. இதை நான் வந்தேன் என்றும் நான்பாடினேன் என்றும் இரு சிறுவாக்கியங்களாகக் காணமுடியும். இதையே 'நான் வந்து பாடினேன்' என்று கூறும்போது ஒரு எழுவாய் கெட்டு விடுகிறது. இதனையே 'தன்பாலானும்' எனக்கூறுவர் தொல்காப்பியர்.

'அவன் வந்து பாடினேன்'
அவன்சொல்லிப் பாடினேன்

என்ற உதாரணங்களை கொண்டால், இவற்றில்

'அவன் வந்தான்'
'நான் பாடினேன்'
'அவன் சொன்னான்'
'நான்பாடினேன்'

என இரு வாக்கியங்களைக் காணலாம். இதில் 'நான்' எனும் எழுவாய் கெட்டு நிற்பதைக் காணலாம். இவ்வாறு இரண்டு எழுவாய் வரும்போது ஒரு எழுவாய் கெடுவது இயற்கை. இதைப் போன்ற வாக்கியங்களை நிறையக் காணலாம். உதாரணமாக

சாத்தன் ஓதல் தந்தை உவக்கும்.
சாத்தன் ஓதுதல் உவக்கும்
சாத்தன் ஓதுதல் உரைக்கும்
சாத்தன் ஓதுதல் கூறும்

போன்ற பலவற்றைக் காணமுடிகிறது.

இப்படிப் பலவிதமான வினைச் சொற்கள் ஒரே எழு வாயைக் கொடுப்பனவாக இருக்க 'வேண்டும்' என்பதை மட்டும் தொல்காப்பியர் 'இதுசெயல் வேண்டும் என்னும் கிளவி' எனச் சூத்திரத்தில் வைத்துக் கூறக் காரணம் என்ன? என்பதே இங்கு எடுத்துக் கொண்ட பொருள்.

பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை
அவ்வயின் மூன்றும் நிகழுங் காலத்துச்
செய்யு மென்னும் கிளவியொடு கொள்ளா.

தொல். சொல். 229

எனும் சூத்திரத்தில் பல்லோர் படர்க்கையிலும் தன்மை முன்னி லையிலும் வராது மற்றைய எல்லாவிதமான எழுவாயிலும் வரும் என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். எனவே இப்படிப் பட்டச் சூழ்நிலையில் 'வேண்டும்' மட்டுமல்லாது பல்வேறு வினைச் சொற்களும் (உவக்கும், உரைக்கும், கூறும், விரும்பும்) வரலாம் என்பதும் பெறப்படுகிறது. அப்படியாயின் தொல்காப் பியர் ஏன் 'வேண்டும்' என்ற இவ்வினைச் சொல்லை மட்டும் போட்டுக் கூறினார் என நோக்க வேண்டும்.

இது செயல் வேண்டும் என்பதில் வரும் செயல் எப்படி வேண்டுமானாலும் வரலாம். செய்யும் என்னும் வாய்பாட்டிலும் வைத்து நோக்கலாம்,

சாத்தன் ஓதல் தந்தை வேண்டும்
சாத்தன் வருதல் தந்தை வேண்டும்
சாத்தன் போதல் தந்தை வேண்டும்
சாத்தன் நடத்தல் தந்தை வேண்டும்

என எந்த வினைச் சொல்லை வேண்டுமாயினும் போட்டுக் கூறலாம். உதாரணமாக.

'கண்ணன் போதல் வேண்டும்' அல்லது
கண்ணன் போக வேண்டும் என இரண்டையும் கூறலாம்.

பழந்தமிழ் இலக்கியங்களில் அதிலும் சங்க இலக்கியங்களில் மட்டுமே ஓதல் வேண்டும், செய்தல் வேண்டும் போன்ற தொடர்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. ஆனால் அங்

கேயும் செய்ய வேண்டும், போக வேண்டும் என்ற செயவென் வாய்ப்பாட்டு வினையெச்சங்களும் கூட பல இடங்களில் காணப்படுகின்றன. செயல் வேண்டும் என்பதைவிடக் குறை வான இடங்களில்தான் வருவதைக் காண்கிறோம்.

தொல்காப்பியத்திலேயே மிகுதல் வேண்டும், நிற்றல் வேண்டும் போன்ற உதாரணங்களைக் காணமுடிகிறது.

நற்றினை போன்ற இலக்கியங்களில் 'தல்' என்ற பின்ஒட்டு உடைய தொழிற்பெயர் பல இடங்களில் வரக்காணலாம். குறுந்தொகையில்

'நின்றாள் நிழல் மயங்காது செய்தல் வேண்டும்'
'வாழ்தல் வேுண்டும் இவள் வரைந்த வைகல்'
'நீயும் கண்டு நுமரொடும் எண்ணி
அறிவறிந்து அளவல் வேண்டும்'

என்று செய்தல் வேண்டும், வாழ்தல்வேண்டும், அளவல் வேண்டும் போனறவை வருகின்றன. அடுத்து 'வரைந்து கொண்டு போதல் வேண்டும்' 'நின்குறை செய்தல் வேண்டும் போன்ற உதாரணங்களையும் காணலாம்.

இவையன்றிச் செய்தல் என்பது இல்லாமல்

'நீ விளவில் செலிஇய வேண்டும்'
'பசலை உணிஇய வேண்டும்'
'எந்தையும் கொடிஇய வேண்டும்'

எனவும் வருகின்றன. புறநானூற்றில்

'வளரவேண்டும் அவளே'
எனவும் கலித்தொகையில்
'வருக என வேண்டும் வரிசையோர்க்கே'
'எவன் செய்ய வேண்டும்'
எனவும் மணிமேகலையில்
'பிலம்புக வேண்டும் பெற்றியிங் கில்லை'
'தாமே நெருப்பை சாதிக்க வேண்டும்'
'கணிகையை அனுமிக்க வேண்டும்'

எனவும் தேவாரத்தில்

அருளுமாறு அருள வேண்டும்
அதிகை வீரட்டனீரே.

எனவும் வருவதைக் காணலாம்.

சங்க இலக்கியங்களில் வருதல், செய்தல் என்ற தொழிற் பெயரைவிட, உணிஇய, செலிஇய, கொடிஇய போன்ற இய வாய்பாட்டு வினையெச்சங்களும், செயவென் வாய்பாட்டு வினையெச்சங்களும் குறைந்து வரக்காணலாம்.

இடைக்காலத்தமிழில், (7-ஆம் நூற்றாண்டு) தேவாரம் திருவாசகம் போன்றவற்றில்

'அஞ்சல் என்று அருள வேண்டும்
ஆவடு துறையாளானே'

என்றும் ஆடவேண்டும், பாடவேண்டும் என நிறைய வருவதைக் காணலாம்

இக் காலத்தமிழில் உணிஇய வேண்டும், போதல் வேண்டும் போன்றவை வழக்கில் குறைந்தும் செய்ய வேண்டும் போன்றவை நிறைந்தும் காணப்படுவதை உணரலாம்.

'நீ வரவேண்டும்'

என்பதில் வரவேண்டும் என்பது ஒரு எழுவாயைக் கொண்டதா? அல்லது இரண்டு எழுவாயைக் கொண்டதா? என்பதே கேள்வி. இதில் 'ஒரு எழுவாயைக் கொண்டதே' என்று சொல்லுவோரே அதிகம். நீ வரவேண்டும் என்பது ஆங்கிலத்தில் 'you must come' என வரும். இங்கு 'வேண்டும்' என்பது துணைவினை. ஆனால் வர வேண்டும் என்பது ஒரு கூட்டுவினை (compound verb) போலத் தோன்றுகிறது.

துணை வினையைக் கொண்டு முடியும் தொடர்கள் இரண்டு எழுவாயை உடையன என்பதைத் தொல்காப்பியர் உணர்த்தவே இவ்வாறு 'இது செயல் வேண்டும்' எனச் சூத்திரம் யாத்தார். ஏனெனில்

சாத்தன் உரைத்தல் வேண்டும்
சாத்தன் ஓதல் வேண்டும்
சாத்தன் போதல் வேண்டும்

போன்றத் தொடர்களில் வரும் வினைச் சொற்கள் துணைவினை (Auxillary verbs) ஒரே எழுவாயை மட்டுமே உடையனவாக உள்ளன எனப் பலர் கருதுவர். ஆனால் இங்கும் இரு எழுவாய் ஏற்பட வாய்ப்பு உள்ளது எனச் சொல்ல வேண்டிய நிலையில் தான் தொல்காப்பியர் 'இது செயல் வேண்டும்' எனச் சூத்திரம் யாத்திருக்கிறார். எல்லோரும் ஒரு எழுவாயைக் கொண்டு வருவதாக நினைப்பதை, இரண்டு எழுவாயைக் கொண்டு வருகிறது என்பதை விளக்கவே இவ்வாறு கூறுகிறார்.

மகன் போதல் தந்தை உவக்கும்
மகன் போதல் தந்தை உரைக்கும்
சாத்தன் போதல் உரைக்கும்
சாத்தன் போதல் நினைக்கும்

போன்ற தொடர்களில் கூட இரண்டு எழுவாய் வருவதைக் காணலாம். இருந்தாலும்கூட தொல்காப்பியர் 'வேண்டும் என்ற துணைவினையைக் கூறுவதன் நோக்கம்; பிற பொதுவான வினைச் சொற்களிலிருந்து இதை வேறுபடுத்திக் காட்ட வேண்டியே. போதல் வேண்டும், ஓதல் வேண்டும் போன்ற தொடர்கள் அந்தக் காலத்திலேயே பயன் படுத்தப்பட்டாலும் துணை வினை பற்றி அவர்கள் நினைக்க வில்லை. ஆனால் துணை வினையினுடைய தன்மை இரண்டு எழுவாய்களை கொண்டு வரும் என்று மட்டும் உணர்ந்த தொல்காப்பியர் வேறு வினைகளைப்பற்றிக் கூறாமல் துணைவினைகளைப் பற்றிக் கூற வேண்டியே இந்தச் சூத்திரம் அமைத்தார் எனலாம். பொதுவாகக் கூற நினைத்திருந்தால் ஏதேனும ஒரு வினைச் சொல்லையோ அல்லது வாய்பாட்டுச் சொல்லையோ போட்டுக் கூறியிருப்பார்.

ஆங்கிலத்தில் **'must'** என்ற சொல்லை ஆராய்ந்தவர்கள் முதலில் ஒரு எழுவாயை ஏற்கும் தொடரில் வருவதாகவும் பிறகு ஆராய்ந்தவர்கள் இரண்டு எழுவாயைக் கொண்டு வரும் என்ற கருத்தையும் வெளியிட்டார்கள். இது போல ஓதல் வேண்டும் என்பதில் இரண்டு எழுவாய்களே கொள்ளப்படுவதை உணரலாம். இப்படி ஒன்றா இரண்டா என்ற மயக்கம் நிலவிய காரணத்தால் தொல்காப்பியர் மற்ற வினைச் சொற்களிலிருந்து

பிரித்துக்காட்ட வேண்டியே 'வேண்டும்' என்ற சொல்லைப் பயன்படுத்திச் சூத்திரம் செய்தார். உரையாசிரியர்கள் கூறுவது போல இதை எல்லா வினைச் சொற்கும் பொதுவாகக் கூறினார் என எண்ண முடியாது. இதை ஓரளவு தெய்வச்சிலையார் உணர்ந்திருந்ததனால்

''சாத்தன் ஓதல் வேண்டும் என்று சொல்லுவதை விட 'நீ உண்ணல் வேண்டும்' என்ற வழி நீ உண்பாய் ஆகல் வேண்டும் எனத் தான் வேண்டிச் கோடற் பொருண்மை செய்வான் கண் நிலைபெற்றது. சாத்தன் உண்டல் வேண்டும் என்ற வழி உண்டலைப் பிறன் விரும்பும் என பிறன்கட் கூறுவதாய் அமையும்'' என்பார்.

ஆகவே, இங்கு என்னுடைய புதிய விளக்கம், இந்த 'இது செயல் வேண்டும் என்னும் கிளவி, என்பது, 'வேண்டும்' என்ற துணைவினை வருகின்ற போது உண்டாகின்ற ஒரு தொடர். அந்தத் தொடருக்குப் பலரும் ஒரே ஒரு எழுவாய் தான் இருக்கிறது என எண்ணுவார்கள். ஆனால் இரண்டு எழுவாய்கள் இருக்கின்றன. ஆகவே இந்த 'இருவயின் நிலையும் பொருட்டாகும் தன்பாலானும் பிறன்பாலானும்' என்பது உண்மைதான். ஆனால் இந்த நிலை 'வேண்டும்' என்பதற்கு மட்டும்தான் தொல்காப்பியர் கூறுகிறாரே ஒழிய மற்றவற்றிற்கில்லை. அப்படி மற்றவற்றிற்குச் சொல்லி யிருந்தால் வேறு வினைச் சொற்களை அல்லது வாய் பாட்டுச் சொற்களைப் போட்டுக் கூறியிருப்பார்.

இதனால் என்ன நன்மை என எண்ணினால் தொல்காப்பியர் துணைவினையைப்பற்றி ஓரளவு சிந்தித்திருக்கிறார். ஆனால் இதை துணைவினையென்று நினைக்கவில்லை துணை வினையினுடைய ஒரு தன்மை (property) யாக எண்ணியிருக் கிறார் என்பதே என் கருத்து.

சிவலிங்கனார்: 'நான் ஓதல் வேண்டும்' எனும் போது அது துணைவினையாக இருக்கிறது. அதுவே 'நான் சாத்தன் ஓதல் வேண்டும்' என்று கூறும்போது முதல் வினையாகிறது. இதில் ஓதலை விரும்பும் என்கிற போது ஓதல் செயப்படுபொருளாக ஆகிவிடுகிறதல்லவா?

நான் சாத்தன் ஓதலை விரும்பும் இங்கே வேண்டும் என்கிற சொல்லை முதல் வினையாக்கி விரும்பும் என்று பொருள் படுத்தி (பிறன்பாவில் வரும் போது) பொருள் கொள்கிறோம். அதுவே தன்பாவில் வரும்போது துணைவினையாகவும் பயன் படுவதால்

'இது செயல் வேண்டும் என்னும் கிளவி' இரு வேறு கிளவிகளாகத் தானே இருக்க முடியும் எவ்வாறு ஒரே கிளவி யாகும்?

இலக்குவனார்:

ஓதல் வேண்டும் ஒளிமாழ்கும் 'செய்வினை
ஆதல் என்னும் அவர்' — குறள்

ஓதல் வேண்டும் — புகழ்கெட வருகின்ற காரியங்களை ஆகக் கடவேன் என்று நினைக்கின்றவர்கள் ஓதல் வேண்டும். ஆதல் என்னும் அவர் பலர்பால். ஓதல் வேண்டும்—செய்யு மென்னும் முற்று.

"பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை
அவ்வயின் மூன்றாம் நிகழுங் காலத்துச்
செய்யு மென்னுங் கிளவியொடு கொள்ளார்
தொல். சொல். 22

என்ற சூத்திரப்படி நோக்கினால் திருக்குறளின் தொடர் தப் பாகி விடுகிறது. ஆனால் இதற்கு (குறளுக்கு) உரை எழுது கிறவர்கள் — ஓதுக, நீக்குக என எழுதுகிறார்கள். எனவே வேண்டும் என்கிற சொல் வியங்கோள் நிலையில் வருகிறது.

'வஞ்சரை அஞ்சப் படும்' இங்கும் 'வஞ்சரை' என வந்த பிறகு 'அஞ்சப்படும்' என வரக்கூடாது இதற்கும் உரை எழுதும் போது 'அஞ்சுக' என்றே எழுதுவார்கள்.

எனவே இது செயல் வேண்டும் என்னும் கிளவி வியங்கோள் நிலையிலும் வருகிறது. அந்த நிலையைத் தொல்காப்பியர் எடுத்துக் கொள்ளவில்லை.

ச. அகத்தியலிங்கம்: 'வேண்டும்' என்பதைத் துணை வினையாக மட்டுமே தொல்காப்பியர் கூறினார். ஏனெனில் உரைக்கும்' 'உவக்கும் போன்ற சொற்கள் இந்த பண்பைக் கொள்ளவில்லை.

'வேண்டும்' என்பது சங்க காலம் தொட்டே முதல் வினையாக மாறி, 'must' எனும் இலக்கணப் பொருளைத் தரும் சொல்லாகப் பயன்பட்டுள்ளது. அந்த இலக்கணப் பொருளை மட்டும்தான் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். முதல் வினை பற்றி அல்ல.

சிவலிங்கனார் கூறும் உதாரணம் பொருந்தாது.

நான் சாத்தன் ஓதல் வேண்டும்

என்பதில் வேண்டும் என்பது செய்யுமென்னும் முற்று. இது நான் என்பதை எழுவாயாக எடுத்து வராது. செய்யுமென்னும் முற்று தன்மை, முன்னிலை பல்லோர் படர்க்கையில் வராது.

தந்தை சாத்தன் ஓதல் வேண்டும்

என்பதை எடுத்துக் கொண்டால் வேண்டும் என்பதை முழு வினையாக ஏற்றால் 'வேண்டும்' என்பதைப் போன்று பல வினைகள் உள்ளன. இந்நிலையில் தொல்காப்பியர் வேண்டும் என்பதைப் பற்றி மட்டும் ஏன் கூறினார் என்ற கேள்வி எழும் எனவே இங்கு துணைவினை பற்றியே தொல்காப்பியர் கூறினார் எனக் கொள்ளுவதே பொருத்தம்.

உதவிய நூல்கள்

அகத்தியலிங்கம், ச. 1979 **மொழியியல் - சொல்லியல் - பெயரியல்,** அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணா மலை நகர்.

——— 1985 **தொல்காப்பியச்சிந்தனைகள்,** அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம். அண்ணாமலை நகர்.

சண்முகம், செ. வை. 1984 **சொல்லிலக்கணக் கோட்பாடு** அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம். அண்ணா மலை நகர்.

தொல்காப்பியம் - உரைகள், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

மொழியியல் 8, 3 & 4 (1985)
முதல் மொழியியல் கருத்தரங்குக்
கட்டுரைக் கோவை

தொல்காப்பியச் சூத்திரம் ஒன்றுக்குப் புத்துரை

பேராசிரியர் ஆ. சிவலிங்கனார்*

எவ்வயிற் பெயரும் வெளிப்படத் தோன்றி
அவ்வியல் நிலையல் செவ்விது என்ப

என்பது தொல்காப்பியச் சொல்லதிகார வேற்றுமையியற் சூத்திரம். இது தோன்றா எழுவாய் பற்றியது என்பது உரையாசிரியர் அனைவருடைய கருத்தாகும், "எவ்விடத்துப் பெயரும் வெளிப்படையாகத் தோன்றிப் பயனிலைகொள்ளுதல் சிறந்தது: வெளிப்படமால் இருந்து பயனிலை கோடல் சிறந்ததன்று" என்பது சூத்திரத்தின் பொருளாக வுரைப்பர் யாவரும். இதற்கு உதாரணம், 'ஒருவனைப் பார்த்து உண்டாயா என வினவின் நீ என்பது தோன்றா திருந்து உண்டாயா என்னும் வினாவாகிய பயனிலை கொண்டது' என்பதாம்.

* முன்னவர் ஆ. சிவலிங்கனார் அவர்கள் சென்னையிலுள்ள உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பேராசிரியராகப்பணி யாற்றுகிறார்.

எழுவாய் மட்டில் தோன்றா திருந்து பயனிலை கொள்ளும் என்பதில்லை, செயப்படு பொருள் முதலியனவும் தோன்றாமை யுண்டு. அதற்கேற்ப இச்சூத்திரத்துக்கு யான் உரைக்கும் பொருள் வருமாறு:-

> "மூவிடத்துள் எவ்விடத்துப் பெயரும் - தனிப்பெயரும் தொகைப் பெயரும் வெளிப்படத் தோன்றிநின்று வேற்றுமை யியல்பில் நிலைத்தல் சிறந்தது என்று சொல்லுவர் புலவர்; வெளிப்படத் தோன்றாமல் வேற்றுமையியல்பில் நிலைத்தல் சிறந்தது அன்று"

என்பதாம். இவ்வாறு இச்சூத்திரத்துக்குப் பொருள் கொண்டு' தோன்றா எழுவாய், தோன்றாச் செயப்படு பொருள், தோன்றாக் கருவிப் பொருள், தோன்றாக் கோடற்பொருள். தோன்றா நீங்கற் பொருள், தோன்றா இடப்பொருள் என ஆறுவேற்றுமைகளுக்கும் இச்சூத்திரம் கூறப்பட்டதாகக் கொள்ளலாம். இவற்றுக்கு உதாரணம்:-

1. 'முருகா உண்டாயா' என்றவழி 'உண்டேன்' எனின் நான் என்பது தோன்றா எழுவாய்.

2. 'உண்டாயா என்னும் போது' உணவு என்பது தோன்றாச் செயப்படு பொருள்

3. 'இச்செய்யுளை எழுதினேன்' என்றவழி 'பேனாவால் என்பதுதோன்றாக் கருவிப்பொருள்.

4. 'பசிக்கிறது சோறு படை' என்றவழி 'எனக்கு' என்பது தோன்றாக் கோடற்பொருள்.

5. மதுரைக்குச் சென்று பின்னர்த் திருப்பரங்குன்றம் செல்க' என்றவழி 'மதுரையிலிருந்து' என்பது தோன்றா நீங்கற் பொருள்.

6. ஒருவன் தன் நண்பனைக் காண அவன்வீடு சென்று அவன் தாயிடம் 'நண்பன் இருக்கிறானா' என்றவழி 'வீட்டில், என்பது தோன்றா இடப்பொருள்.

தோன்றா வேற்றுமைகள் வினைகொண்டு முடியும் காலத்தில்தான் வரும். இதனால் ஆறாம் வேற்றுமை தோன்றா வேற்றுமையாக வாராது.

இனி இப்பொருள்பற்றி நடைபெற்ற தடைவிடைகள் வருமாறு: –

(1) தடை: - முதல்வேற்றுமைபற்றிய சூத்திரங்களோடு இச்சூத்திரம் அமைக்கப் பட்டிருத்தலின் இது தோன்றா எழுவாய்க்குரியதாமே தவிர மற்றைய வேற்றுமைகட்குரியதாகாது

விடை:-

அவற்றுள்
எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே (வேற்றுமையியல் 4)

பொருண்மை சுட்டல் வியங்கோள வருதல்
வினைநிலை யுரைத்தல் வினாவிற் கேற்றல்
பண்புகொள வருதல் பெயர்கொள வருதல் என்று
அன்றியனைத்தும் பெயர்ப்பயனிலையே (வேற். 5)

பெயரினாகிய தொகையுமா ருளவே
அவ்வு முரிய அப்பா லான (வேற். 6)

எனவரும் முதல் வேற்றுமை பற்றிய சூத்திரங்களையடுத்து இச்சூத்திரம் அமைக்கப் பட்டுள்ளது. அடுத்து இரண்டாம் வேற்றுமை பற்றிய சூத்திரங்கள் அமைக்கப் படவேண்டும். அதற்கு முன்னர் கூறிய முறையின் உருபு நிலை திரியாது ஈறு பெயர்க் காகும் இயற்கைய என்ப (வேற். 8)

பெயர் நிலைக் கிளவி காலந் தோன்றா
தொழில்நிலை யொட்டும் தென்றலங் கடையே (வேற். 9)

என்னும் இரண்டு சூத்திரங்களும் அவற்றுக்கு முன் "எவ்வயிற் பெயரும்" என்னும் இச் சூத்திரமும் அமைக்கப்பட்டுளளன. பின்னருள்ள இரண்டு சூத்திரங்களும் எல்லா வேற்றுமைக்கும் பொது என்பது வெளிப்படை. அதனால் இச் சூத்திரத்தையும் எல்லா வேற்றுமைக்கும் உரியது என்று கொள்வதில் தவறாகாது. 'பெயரினாகிய தொகையுமாருளவே' என்னும் சூத்திரமும் பொதுச் சூத்திரமே என்பதில் ஐயமில்லை.

எனவே முதல் வேற்றுமையைச் சாரவைத்த காரணத்தால் இச்சூத்திரம் எழுவாய் வேற்றுமைக்கேயுரியது என்று கொள் வது ஏற்புடைய தாகாது.

(2) தடை: தோன்றாச் செயப்படு பொருள் முதலிய வற்றைப் புறனடைச் சூத்திரத்தால் கொள்ளலாம்; ஆதலின் இச்சூத்திரத்துக்குக் கூறிய புத்துரை தேவையில்லை.

விடை: வெளிப்படையில் பொருளுணர்த்த இயலாதபோது ஒரு கருத்தைப் புறனடையில் அடக்கலாம், இச்சூத்திரததில் இப்புதுப் பொருள் தெளிவாக அமைதலின் புறனடையில் கொள்ள வேண்டுவதில்லை.

''அவைதாம், வழங்கியல் மருங்கில் குன்றுவ குன்றும்''
(வேற். மயங்கியல். 30)

என்னும் சூத்திரத்தில் இப்புத்துரையடங்கும் என்னும் கருத்தும் வெளியிடப்பட்டது. அச்சூத்திரம் அதற்கு முன் உள்ள 'வினையே செய்வது' (வேற். மய. 29) என்னும் சூத்திரத்துக்குப் புறனடை. அதாவது ஒரு தொழில் தோன்றுவதற்கு எட்டு வகையான காரணங்கள் உண்டு அவை 'வினை, செய்வது, செயப்படு பொருள், கருவி, காலம், நிலம், இன்னதற்கு, இது பயன் என் பன. அவற்றுள் சில இல்லாமலும் ஒரு தொழில் நிகழலாம் என்பது, 'அவைதாம் வழங்கியல் மருங்கில் குன்றுவ குன்றும்' என்னும் சூத்திரப் பொருள். அதற்கு உதாரணமாக எல்லாவு ரையாளரும் 'கொடியாடிற்று' என்பதைக் காட்டினர். அத னால் இப்புறனடை புத்துரைக்குப் பொருந்தாது. வேறு எந்த புறனடைச் சூத்திரமும் பொருந்தவில்லை.

உரிச்சொல் - பெயர்க்காரணம். யான் கூறிய புதிய கருத்து:-

''முன்னோர் சொற்களைத் திரட்டி இன்ன சொல் இன்னதற்கு உரியது எனப் பிரித்த போது, பெயர்ச் சொற்களும் வினைச் சொற்களும் எளிதில் பிரிக்கப்பட்டன. இடைச் சொற்களின் தன்மை கண்டு அவற்றை இடைச் சொல் எனப் பிரித்தனர். ஆனால் சில சொற்கள், எந்த காரணத்தைக் கொண்டும் பெயர் வினை இடைச் சொற்களில் சேர்ககப்பாடற்கில்லாமல் தனித்து நின்றன. செய்யுளில் அவை ஆளப்பட்ட இடம் நோக்கி அவற்

றுக்கு இன்ன இன்ன பொருளுடையன இவை எனக் கண்டு, அன்ன அன்ன பொருள்களை அவற்றுக்கு உரிமைப் படுத்தினர். எனவே பொருளுக்கு உரிமைப் படுத்தப்பட்ட காரணமாகச் சில சொற்கள் உரிச் சொற்கள் எனப்பட்டன".

இக் கருத்தை டாக்டர் மோ. இசரயேல் அவர்கள் ஏற்பதாகக் கூறினார்கள்.

மொழியியல் 8. 3 & 4 (1985)
முதல் மொழியியல் கருத்தரங்குக்
கட்டுரைக் கோவை

இன்றைய மாணவர் இலக்கணத்தை வெறுப்பதேன் (இடைநிலை, உயர்நிலை, மேனிலை வகுப்புகளில்)

இரா. திருமுருகன்*

இன்றைய மாணவர்க்கு இலக்கணம் கசக்கிறது என்று சொல்வது கூடச் சரியில்லை, இலக்கணம் என்று சொல்லக் கேட்டாலே நடுங்குகிறார்கள்! அதனை வெறுக்கிறார்கள். காரணங்கள் பல:

I பாடப்பொருள்: இன்றைய மொழிக்கு வேண்டாதனவும் உணர்தற்கு அரியனவுமான இலக்கணக் குப்பைகள் சிறுவர் தம் தலையில் திணிக்கப்படுகின்றன.

1) இலக்கண அச்சுறுத்தல் முதல் வகுப்பிலேயே தொடங்கி விடுகிறது. குழந்தையின் கையில் கொடுக்கப்படும் பாட நூலில்,

'ஆய்தம் தனக்கு முன் ஒரு குற்றெழுத்தையும் தனக்குப் பின் வல்லின மெய்யின் மேல் ஊர்ந்த உயிருடன் கூடிய

* புலவர் இரா. திருமுருகன் அவர்கள் புதுவையிலுள்ள தாகூர் கலைக்கல்லூரியில் பேராசிரியராக உள்ளார்.

உயிர்மெய்க் குற்றெழுத்தையும் உதவியாகக் கொண்டு
சொல்லின் நடுவில் நின்றே ஒலிக்கும் (தமிழ் 1 பக். 27)

என்று ஒரு குறிப்புக் காணப்படுகிறது. இது இங்கே தேவையா? (இக்குறிப்பில் 'தனக்கு முன் ஒரு குற்றெழுத்து 'என்பது சரியன்று' விலஃஃ இ, என்பது போலவும் வரும். 'தனக்குப் பின் வல்லின உயிர்மெய்க் குற்றெழுத்தையும் என்பதும் பிழை, வெஃகா என்று வரும்).

2) சிறு வகுப்புகளில் உகரச்சுட்டைக் கற்பித்தாக வேண்டுமே? உவன், உவ்வீடு முதலிய வழக்கு வீழ்ந்த காட்டுகளைக் கொண்டு அவர்களுக்கு எப்படிக் கற்பிக்க முடியும்?

3) ஏவினாவும் அத்தகையதே. அன்றே? என்ற காட்டுடன் இது கற்பிக்கப்படுகின்றது (இலக்கணம் 7 ஆம் வகுப்பு, பக்கம் 60) இது தேவையா?

4) ஏழாம் வகுப்பு மாணவர் குற்றியலிகரத்தை அறிந்து கொள்வது இன்றியமையாததா? மியா, எந்த அளவு வழக்கில் உள்ளது? (7 77)

5) வெரிந், உரிஞ் (7:95) ஆகியவற்றின் இலக்கணம் இவர்கட்குத் தேவைதானா?

6) பனைக்கொடி, பனாட்டு முதலியவற்றின் புணர்ச்சி இலக்கணம் 9-ஆம் வகுப்பு மாணவர்க்குத் தேவையா? (9.92)

7) சென்று, சேறு முதலிய வழக்கு வீழ்ந்த தன்மை வினை முற்றுகளின் இலக்கணம் 10 ஆம் வகுப்பு மாணவர்க்கு இன்றியமையாததா? (10:16)

8) செய்பு, செய்யூ, செய்தென முதலிய வினையெச்ச வாய்பாடுகளின் இலக்கணம் சிறுவர்களுக்கு வேண்டுமா? (9:63)

9) உரிச்சொற் பாகுபாட்டின் காரணம் இன்னும் ஆராய்ச்சியாளர்க்கே எட்டாத நிலையில் உள்ளது. இதனைப் பள்ளி மாணவர்க்குக் கற்பித்தல் இன்றியமையாததா? இங்கே பெயர் வினை இடைப் பாகுபாடுகளை மட்டும் கற்பிப்பது போதாதா?

10) செய்யும் என்னும் எச்சம் செய்யுளில் உம் - உந்து ஆகும் என்பது இவர்கட்குத் தெரிய வேண்டுமா? (9:59)

11) பூச்சீர், நிழற்சீர்களின் இலக்கணம் இன்றியமையாததா? (9:115)

12) கைக்கிளை, பெருந்திணைகளுக்கு விளக்கம் பள்ளி மாணவர்க்குக் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டுமா? (10:92)

II பாட நூற்கள்: தரமும் கவர்ச்சியுமற்ற பாடநூல்கள் இளைஞர்கள் கையில் கொடுக்கப்படுகின்றன. சிலவகுப்புகளில் இலக்கண நூல்கள் தமிழ்ப்பாட நூல்களைவிடப் பெரிதாகவும் உள்ளன. பின்வரும் குறைகளை அவற்றிற் காணலாம்:

1) பிழைகள்: அ) நப்போல் என்பதில் ந மொழிக்கு முதலில் வருகின்றது என்பது (7.89) பிழை. இதன்படி டப்பெரிது ணச் சிறிது என்பவற்றில் ட, ண மொழி முதலாவதாக முடியும்.

ஆ) 'ந், ஞ வினையாலணையும் பெயர்களில் இடை நிலையாக வரும் காட்டு ஓட்டுநர்' - (9) இது பிழை. இவை பெயர் இடை நிலைகள். காலங்காட்டா வினையாலணையும பெயர்கள் காலங் காட்டும்.

இ) அவையறிந்து - தொகையறிந்த என்பது நெடிலெதுகை (9) என்பது பிழை. இது உயிரெதுகை. இவ்விடங்களில் ஐகாரம் நெடிலும் ஆகாது.

2) குழப்பங்கள்: அ) மொழி உண்டாவதற்கு முதற் காரணம் ஆவதால் அவை முதலெழுத்தெனப்படும் என்பதால் சார் பெழுத்துகளும் துணைக்காரணம் என்றாகிவிடும். உயிர் மெய் முதலிய சார்பெழுத்துகளும் முதற்காரணமே. மொழி முதற் காரணம் எழுத்து; அது முதல், சார்பு என இருவகைப் படும்.

மொழி முதற்காரணமாம் அணுத்திரள் ஒலி எழுத்து
(நன். 58)

ஆ) முற்றியலுகரத்தை,

'மெல்லின மெய்யின் மேலும் ஏறி நிற்கும் உகரமும், தனிக் குற்றெழுத்தினால் தொடரப்பட்ட வல்லின மெய்யின் மேல் ஏறி நிற்கும் உகரமும் (?) உயிரெழுத்தின் தனி உகரமும், தனித்தனி வல்லின மெய் மீது ஊர்ந்த உகரமும், 4 ... முற்றியலுகரம் (9.10) என்ற விளக்கம் குழப்பமும் குன்றக்கூறலுமாகும். குளம், அக்குள் இதில் அடங்கா. இதனை மிகச் சுருக்கமாகவும் தெளிவாகவும்,

'குற்றியலுகரம் அல்லாத உகரம் எல்லாம் முற்றியலுகரம்' என்று விளக்கலாம்.

க) 'ளவிறு தொழிற் பெயர்கள் உகரச் சாரியை பெறா. ஆடல் சிறந்தது என்று வரும்' (10:69) என்ற இலக்கணம் வேண்டாதது - உவ்வுறும் விதி கற்பிக்கப்படாததால்.

ஈ) பகுதி ஒற்றிரட்டிக் காலங்காட்டுவதை விளக்கிவிட்டு எந் தெந்த விகுதிகள் சேரும்போது பகுதி இரட்டிக்கும்? என்று வினவப் பட்டுள்ளது. (10 15) அப்படி ஒரு வரையறை உண்டா?

3) கருத்து வேறுபாடுகள் : மெய்களுக்குச் சொல்லில் வரும் போது மாத்திரை இல்லை. 'முன்னோர்' என்னும் சொல்லைச் சொல்ல 3 நொடி நேரமாகும். இதில் ன், ர் சொல்லில் இடம் பெற்றதால் மாத்திரை இல்லை' (6.85) என்றுள்ளது. அப் படியானால், தனியே வராத ஒற்றளபு, ஆய்தக் குறுக்கம், மகரக் குறுக்கங்களுக்கு மாத்திரை கூறியதேன்? 'மொழி யாய்த் தொடரினும் முன்னனைத்து எழுத்தே' (நன். 127) ஆனால் 10 ஆம் வகுப்பிலக்கணத்தில் 'வரும் வண்ணக்கண, என்பதில் ம் – $\frac{1}{4}$ மாத்திரை என்றிருக்கிறது' இது வெவ்வேறு ஆசிரியர்கள் பாட நூல்களை எழுதுவதால் ஏற்படுவது. இதனைக் கருத்து வேறுபாடாகக் கொண்டாலும் ஆறாம் வகுப்பு மாணவர்க்கு இது கற்பிக்கப்பட வேண்டிய ஒன்றா?

4) விளக்கப் படங்கள் இல்லை: மேனாட்டு இலக்கண நூல்களில் விளக்கப் படங்கள் இல்லாத ஒன்றினைக் காணல் இயலாது. எழுத்தின் தொகை வகைகளை,



என்றும், பகுபத உறுப்புகளைப் பெரும்பாலும் அவை அமையும் இடங்களைக் காட்டி,



என்றும் கோட்டுப்படம் வரைந்து விளக்கினால் குழந்தைக்கும் புரியும்; மனத்திற்பதியும்.

5 பழையகாட்டுகள். இலக்கணக் கல்வியில் விதிகளைவிட எடுத்துக்காட்டுகளே முதன்மை பெறல் வேண்டும், இன்றைய மொழியில் எங்கும் காணமுடியாத சாத்தன், கொற்றன், கஃறீது, முஃடீது, நாகியாது முதலிய பழைய சொற்களே இன்றைய இலக்கணத்திலும் இடம் பெற்று வருகின்றன. பழைய வாய்க்காலைத்தூர்க்காதே; புதிய வாய்க்காலை வெட்டாதே 'என்ற இப்போக்கு மாறவேண்டும். இன்றைய மொழிநிலையை முற்றும் புறக்கணித்தல் ஏற்புடையதாகாது, காரணவிடுகுறிப் பெயர்க்கு 'அந்தணன்' 'முக்கணன்' 'முள்ளி' 'கறங்கு' என்ப வற்றை விடுத்து 'நாற்காலி' என்பதுபோல் புதிய கற்றுத் தருதல் விரும்பத்தக்கது.

முகத்தல் அளவையாகு பெயர்க்கு நாழி உடைந்தது என் பதை விட்டு 'இலிட்டர்' உடைந்தது என்பது போல் கற்றுத்தரலாம்.

இனையாகு பெயர்க்கு 'வெற்றிலை நட்டான்' என்பதினும் 'தலைக்கு ஒன்று கொடு' என்பது விரும்பத்தக்கது.

காலவாகு பெயர்க்குக் 'கார்த்திகை பூத்தது' என்பதினும் 'திசம்பர் பூத்தது' என்பது ஏற்புடையது.

9. இலக்கணங்களை எஞ்சாது கூறுதல். ஒருகுறிப்பிட்ட இலக்கணம் குறித்து இன்றுவரையில் தமிழிலக்கணப் பரப்பில் என்னென்ன நுட்பங்கள் கூறப்பட்டுள்ளனவோ அவை அனைத்தையும் மாணவர்க்கான இலக்கண நூலில் எஞ்சாமல் தந்துவிடுதல் என்ற போக்கும் காணப்படுகிறது. ஆகுபெயர் என்ற பொருளை விளக்கும் 9 ஆம் வகுப்பு இலக்கணம், 16 வகையாக அதனை விளக்கிய தோடமையாது, மேலும் இருமடியாகு பெயர், மும்மடியாகுபெயர், இருபெயரொட்டாகு பெயர், விட்டவாகுபெயர், விடாதவாகு பெயர் ஆகிய எதனையும் விடாமல் விளக்குகிறது (9:33). நன்னூலார்கூட இவையனைத்தையும் கூறவில்லை.

எளிதாக உணரக்கூடிய சில வகைகளை மட்டும் சிறு வகுப்புகளில் கற்பித்துப் பிற நுட்பங்களைப் பின்னால் பார்த்துக் கொள்ளக் கூடாதா?

III பயிற்று முறை

1) இலக்கணம் பயிற்று முறையில் கவர்ச்சியில்லை. பெரும்பாலும் விதி விளக்க முறையே பின்பற்றப்படுகிறது.

'தனிக்குறியைச் சாராத மொழிகளின் கடையில் வல்லின மெய்யை ஊர்ந்து வரும் உகரம் குற்றியலுகரம்' என்று சொன்னால் மாணவர்க்குத் தலையைச் சுற்றுகிறது.

எடுத்துக்காட்டுகளை எழுதி அவற்றிலிருந்து மாணவர்களே விதியினைச் சொல்லிக்கும் விதிவருமுறை சிறு வகுப்புகளுக்கு மிகவும் ஏற்புடையதும் இன்றியமையாததுமாகும்.

2) இன்றைய இளைஞர்க்குத் திரைப்படத்தில் உள்ள கவர்ச்சியைப் பயன்படுத்திச் சில இலக்கணச் செய்திகளைக் கற்பிக்கலாம்.

தண்ணீர் தண்ணீர் — அடுக்குத் தொடர்
மூடுபனி — வினைத்தொகை

இப்படிப் பல பயன்படும்.

பிழைகளைத் திருத்தும் பயிற்சியில் தூறல் நின்னு போச்சு, நான் சிகப்பு மனிதன், காதுல பூ, காளிக்கோயில் கபாலி, காக்கி சட்டை முதலியன பயன்படும்.

3) நம் தமிழ் இலக்கண நூற்பாக்கள் இலக்கிய நயஞ் சான்றவை சில வேளைகளில் அவற்றை எடுத்துக்காட்டி இலக்கணக் கல்வியில் ஆர்வத்தை வளர்க்கலாம்,

'இசை கெடின் மொழி முதலிடை கடை நிலைநெடில் (நன்.) என்பதன் முருகியல் ஓசையையும்

'ஓடுற நரியில ஒரு நரி கிழ நரி'

என்பதன் ஓசையையும் ஒப்பிடலாம்.

'கண்கால் கடையிடை தலைவாய் திசைவயின்' (நன். 302) என்பதில்,

'தந்தாம் தக்திமி தக்தாம் தக்திமி'

என்ற சந்தம் வருவதைப் பாடிக் காட்டலாம்

'உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்
யவ்வரினிய் யாம'. (நன். 164)

என்பதை, 'குறைந்த் உகரம் குறையாத உயிர் வந்தால் தன் இடத்தை விட்டு எழுந்து ஓடுகிறது; தன்னைப் போல் அரை மாத்திரை உள்ள யகரத்தைக் கண்டால் அவ்வாறு ஓடாமல் அதற்குத் தக்கபடி மாறி 'இ' என்று இளித்துக் கொண்டு அங்கேயே இருக்கிறது' என்று நகைச்சுவையாக விளக்கலாம்.

IV பெரிதும் பயன்படாதவற்றிற்குத் தேர்வு வினாக்களிற் சிறப்பிடம் அளித்தல்

1) பகுபத உறுப்பிலக்கணம் கூறுதல் என்பது 12 ஆம் வகுப்பு வரையில் கற்பிக்கவும் வினவவும்படுகிறது. சொற்களைப் பகுத்தாய்வு செய்தல் மொழியியல் ஆய்வாளர்க்குத் தேவைப்படலாம். இளைஞர்க்கு இன்றியமையாததா?

அ) நடந்தான் என்பதில் த் சந்தி, அது ந் ஆனது விகாரம் என்று சொல்லப்படுகிறது. சென்றான் என்பதில் ற் சந்தி, அதுன் ஆன்து விகாரம் என்று சொல்லுவதில்லை, ல்-ன் ஆனது விகாரம் என்கிறார்கள், விகாரம் என்பன வலித்தல் மெலித்தல் முதலிய 9 செய்யுள் விகாரங்களே. வல்லொற்றுத்தன் இன

மெல்லொற்றாவதே மெலித்தல். இதன்படி ல் →ன் ஆவது மெலித்தல் ஆகாது, அப்படியாயின் அது என்ன விகாரம்?

ஆ) கேட்பர் என்பதில் ள் → ட் ஆனது விகாரம் என்றே கற்பிக்கின்றனர். இதைச் சந்தி என்று சொல்வதே முறை. தோன்றல் திரிதல் களாகிய புணர்ச்சி விகாரங்கள் சந்தி எனப்படும்.

இ) அடித்து என்பதில் உ - வினையெச்ச விகுதி! த் - இறந்தகால இடைநிலை எனப்படும். ஆனால் 'அடித்துவிட்டான்' என்பதில் 'து' சாரியை எனப்படும். இது முறைதானா?

ஈ) 'சொன்னான்' என்பதைச் சொல் + இன் + ஆன் என்றும் உறுப்புகளைக் கொண்டு புணர்த்துக் கூட்டுகிறோம் இதில் இன் இறந்த கால இன்டநிலை. ஆனால் 'சொன்னால்' என்னும் எதிர்கால வினை மெயச்சத்தை எப்படிப் பகுப்பது? என்ன இலக்கணம் கூறுவது?

உ) 'பெற்றான்' என்பதில் பகுதி ஒற்று இரட்டி இறந்த காலம் காட்டியது என்கிறோம், ஆனால் 'பெற்றால்' என்னும் எதிர்கால வினையெச்சத்தில் பகுதி ஒற்று இரட்டியது ஏன்?

ஊ) சில குறிலிணைப் பகுதிகளே ஒற்றிரட்டி இறந்தகாலம் காட்டும்என்று கற்பிக்கிறோம், போடு என்னும் பகுதி போட்டான் என்று ஒற்றிரட்டுவதை மாணவன் எப்படிக் கூறுவான்? இலக்கண ஆசிரியர்கள் மேற்கண்டவற்றிற்குத் தாம் விரும்பிய வாறு இலக்கணங் கூறுகின்றார்கள். 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்ற முறையிற் கூறப்படும் உறுப்பிலக்கணம் இன்றைய இளைஞர்க்குத்தேவைா?

2) மேனிலைப்பள்ளிகளில் இலக்கணம் தனிப்பாடமாக இல்லை, நடை முறை இலக்கணமே கற்பிக்கப் படுகின்றது. ஆனால் வினாக்களில் புணர்ச்சி விதிகூறுக என்ற வகை இடம் பெறுகிறது. புணர்ச்சி விதி கூறுதலை நடைமுறையிலக்கண மாகக் கற்பிக்க வேண்டு மெனின் நன்னூல் புணர்ச்சி விதிகள் அத்தனையும் அவர்கட்கு மனப் பாடமாகத் தெரிந்திருக்க வேண்டும். முன் வகுப்புகளில் அப்படி மனப்பாடம் செய்

விப்பதும் இல்லை. எனவே இவ்வினாவுக்கு விடையளிப்பதில் மாணவர் பெரிதும் இடர்ப்படுகின்றனர். எனவே இவ்வகை வினாக் கைவிடப் படல் வேண்டும்.

V இனிச்செய்யவேண்டுவன:

1. மிகக்குறைந்த அளவு இலக்கணப் பொருள்களையே பள்ளிகளில் கற்பிக்க எடுத்துக்கொள்ள வேண்டும். ஐ,கு ஆகிய உருபுகளின் முன்னும் வலிமிகுத் தெழுதத் தெரியாத மாண வனுக்கு,

வேளியாவன், நொவ்வளவா, உரிஞுக்கடிது, பொருநக் கடுமை, கோறீது, தொண்ணூறு, தாழக்கோல் முதலிய புணர்ச்சி களுக்கு இலக்கணம் தெரிய வேண்டுமா? (மேற்குறித்தவை 9, 10 ஆம்வகுப்புகளில் கற்பிக்கப்படு கின்றன.)

2) எடுத்துக் கொண்ட பொருட்களை இன்ன வகுப்புக்கு இன்ன பொருள் என்று வரையறுத்துக் கொள்ள வேண்டும்,

3) எதையும் முழுமையாகக் கற்பித்தல் என்பதை விடுத்துப் படிப்படியாகக் கற்பிக்க வேண்டும். (ஆறாம் வகுப்பில் பெயர் வினைப் பாகுபாட்டைக் கற்பிப்பதாயின், இடைச் சொல்லை ஏழாம் வகுப்பில் கற்பிக்கலாம். உரிச்சொல்லைப் பட்ட வகுப்புக் காகக் கூட ஒதுக்கிவைக்கலாம்.

4) ஆசிரியர் ஒருவரோ, ஆசிரியர்குழு வொன்றோ எல்லா வகுப்புகளுக்கும் பாடநூல் எழுதுதல் விரும்பத்தக்கது.

5) கருத்துவேறுபாட்டுக்குரிய பகுதிகள் பாடநூல்களில் இடம் பெறுதல் கூடாது.

6) விளையாட்டு முறையில் அமைந்த இலக்கணப் பயிற்சிகள் மிகுதியாகத் தரப்படல் வேண்டும். (இலக்கணப் பாடத்தை உரை நடைப் பாடம் போல் படித்துச் செல்வதில் எள்ளளவும் பயனில்லை. மிகுதியும் பயிற்சிசெய்து பழகியவர் கட்கே இலக்கணம் நினைத்த பொழுது வந்து ஏவல் செய்யும்)

7) அடிக்கடி ஆசிரியர்கட்கு மறுபயிற்சி நடத்தி வல்லு நர்களைக் கொண்டு இலக்கணச் செய்திகளில் தெளிவினை

ஏற்படுத்தல் வேண்டும். புதிய பயிற்றுமுறைகளைச் செய்து காட்டவேண்டும்.

8) இலக்கியத்திற்குப் போலவே இலக்கணத்துக்கும் கருத்தரங்குகள் பரவலாக அடிக்கடி நடைபெறுதல் வேண்டும். (புதுச்சேரியிலும், அண்ணாமலை, தஞ்சைப்பல்கலைக் கழகங்களிலும் இத்தகைய கருத்தரங்குகள் நிகழ்ந்து வருவது மகிழ்ச்சிக்குரியது). இது இலக்கணத்தின் இன்றியமையாமையை வற்புறுத்தி இலக்கண உணர்வினை ஊட்டிக்கொண்டேயிருக்கும்.

இவற்றை முறையாகச் செய்துவந்தால் இன்றைய மாணவர்க்கு இலக்கணம் கசக்காது இனிக்கும்,

ஐந்தாம் அமர்வு

நாள். 24.4.1985

காலம்: மாலை 2.00 மணி

பொருள்: தமிழ் மொழியியல்

தலைமை:

முனைவர் இராம சுந்தரம்

உரையாளர்கள்:

1. முனைவர் சே. நீதிவாணன்
   ‘தமிழ் நடையியல்’

2. பேராசிரியர் முனைவர் கி. அரங்கன்
   ‘தமிழில் மொழியியல் ஆய்வின் இன்றைய நிலை’

மொழியியல் 8. 3 & 4 (1985)
முதல் மொழியியல் கருத்தரங்குக்
கட்டுரைக் கோவை

தமிழ் நடையியற் போக்குகள் - சில சிந்தனைகள்

முனைவர் ஜெ. நீதிவாணன்*

இலக்கியத் தோற்றம் எவ்வளவு பழமை வாய்ந்ததோ அத்துணை அளவு பழமை வாய்ந்தது இலக்கியச் சுவைப்புமாகும். இலக்கியச்சுவைப்பு வளரமுடியாத சூழலில் இலக்கியவளர்ச்சியும் தடைபடுகிறது. ஒரு இலக்கியத்தினை முழுமையாகச் சுவைத்து அது வெளிப்படுத்தும் கருத்தோட்டத்தினையும் அக்கருத்து வெளிப்படும் முறைமையினையும் மயக்கமின்றி உணர்ந்து கொள்ளப் பெரிதும் துணை செய்வது நடைபற்றிய உணர்வேயாகும். ஒரு குறிப்பிட்ட கருத்து வெறும் தகவலாக வெளிப்படுவதற்கும் ஒரு இலக்கியமாக வெளிப்படுவதற்கும் பல வேறுபாடுகள் உண்டு. வெறும் தகவலாக மட்டுமே ஒரு கருத்து வெளிப்படும்போது அவ்வேளையில் அது மெருகூட்டப்படுவ

* முனைவர் ஜெ. நீதிவாணன் அவர்கள் மதுரை காமராசர் பல்கலைக்கழக மொழியியற்துறையில் பேராசிரியராகவுள்ளார்.

தில்லை, இலக்கியமாக வெளிப்படுத்தப்படும்போது அது மெருகூட்டப்படுகிறது. எனினும் இம்மெருகூட்டுதல் எனும் செயல் படைப்பாளி தன்விழிப்போடு செயற்கையாகச் செய்வதல்ல; அது இயல்பாக, ஆற்றொழுக்காக நடைபெறுவது. இன்றேல், கருத்து என்பதும் அதற்குக் கொடுக்கப் படும் வடிவமும் தனித் தனியே பிரித்தறியக் கூடியவை எனும் மயக்கம் தோன்றலாம். ஒரு இலக்கியப் படைப்பின் அடிநாதம் வெறும் கருத்துக்களை வாரி வழங்குவதன்று; அவற்றை ஒரு குறிப்பிட்ட முறையில் வழங்குவதே நோக்கமாகும். படைப்பாளி கையாண்ட அம்முறையினை, இலக்கியத்தைப் படிப்போனும் படைப்பாளியின் நிலையை எட்டி அதே உணர்ச்சி நிலையில் நின்று, அவ்வுணர்ச்சிகளின் தூண்டுதலுக்கு ஆளாகும்போது மட்டுமே இலக்கியச் சுவைப்பு முழுநிலையை அடைகிறது. எனினும் மொழியின் கட்டமைப்பினை சில குறிப்பிட்ட விதிகளுள் அடக்கி எண்ணிறந்த சொற்றொடர்களை ஆக்கிக் கொள்ள முடிவது போல ஒரு படைப்பாளி கையாண்டுள்ள முறைகளை விதிகளுக்குள் அடக்க முடியாது. கிடைக்கின்ற இலக்கியங்களுக்குள் காணப் படுகின்ற முறைகளை வகைப் படுத்துவதொன்றே இயலும், நடைபற்றிய ஆய்வு இதனையே இலக்காக் கொள்கிறது.

கிரேக்கர்கள் புலப்பாட்டு நெறியின் ஒரு பகுதியாக நடையியலை ஆய்ந்தனர். சமஸ்கிருத மொழியாளர் அலங்கார சாத்திரங்களின் ஒரு பகுதியாக நடையைக் கொண்டனர். ராஜசேகரரின் காவ்ய மீமாம்சம் நடைவகைகளை வைதர்பி, கௌடி, பாஞ்சாலி என நெறிப்படுத்துகிறது. குந்தகா தனது வக்ரோக்தி ஜீவிதத்தில் அழகிய சொல் மட்டுமோ அன்றி அழகிய வடிவம் மட்டுமோ ஒரு உண்மையான கவிதையை ஆக்க முடியாது என்றும், இரண்டின் ஒட்டு மொத்தமே கவிதையாகுமென்றும் கூறுகிறார்.

கிரேக்கத்திலும், சமஸ்கிருத உலகிலும் நடைபற்றிய சிந்தனையும் ஆய்வும், இருந்த அளவிற்குத் தமிழில் காணப்படவில்லை என்பது வியப்பாகவே உள்ளது. ஆனால் தொல்காப்பியச் செய்யுளியல் அக்காலத்தில் வழங்கியிருக்கக்கூடிய நடைபற்றிய சிந்தனைகளை எடுத்துக் கூறுகிறது. நடைபற்றிய குறிப்

புக்களும், இலக்கணங்களும், வகைப்பாடுகளும் நேரடியாகப் பேசப்படாவிட்டாலும், செய்யுளியலின் முதல் நூற்பா நடையியல் பற்றிய பல சிந்தனைகளைத் தருகிறது. செய்யுளியலின் ஒரு பகுதியாகவே நடையியல் தமிழ் உலகில் கருதப்பட்டு வந்திருக்க வேண்டும். எனினும் செய்யுளியலில் காணப்பட்ட பிற வளர்ச்சிகள் நடையியலில் காணப்படவில்லை. மேலை உலகைப்போலத் தனிப்பகுப்பாக மலரவில்லை.

கிரேக்கத்தின் முதல் இலக்கண ஆசிரியராகக் கருதப்படும் டயோனிசியஸ் திராக்ஸ் அலெக்சாந்திரியக் கருத்துப்பள்ளியின் பார்வையில் ஒரு இலக்கணத்தின் பயன்பாடு, அப்பயன்பாட்டுச் சூழல் ஆகியவற்றை விளக்கும்போது ஆறு சூழல்களை விளக்குகிறார். அவற்றுள் ஆறாவது என அவர் குறிப்பிடுவது இலக்கியப் படைப்புக்களைச் சுவைக்கும் சூழலே எனக் குறிப்பிட்டு அதுவே மிகவும் புனிதமான செயல் எனக் கூறுகிறார். ஹெலனியக் காலத்தின் மிகப் பெரும் பணியே ஹோமரது படைப்புக்களின் உண்மையான மூல வடிவத்தை மீட்டுருவம் செய்வதும், முழுச் சுவைப்பிற்கு வழி கோலுவதுமாகவே இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மொழியியல் வரலாற்றாசிரியர் ராபின்ஸ், பாணினியின் நோக்கத்தினைக் குறிப்பிடும்போதும், இவ்வாறே கருதுகிறார். வேத மொழியின் பண்புகளை விளக்குவதும், பின்வரும் தலைமுறையினர் புரிந்து கொள்ளுமாறு தருவதுமே பாணினியின் நோக்கமென்பது இவரது கருத்து. பல சொற்பட்டியல்கள் பொருளோடு தரப்பட்டிருப்பதும் இதனடிப்படையிலேயே என கூறுகிறார் அவர்.

தாய்மொழிப் பேச்சாளர் ஒருவர் தனது மொழியைப் புரிந்து கொள்வதற்காக இலக்கணம் ஆக்கப்படுகிறது என்பதனைவிட, இயல்பான மொழியிலிருந்து பல்வேறு திட்டப் பாங்குகளின் வழியே படைக்கப்படும் இலக்கிய மொழியைப் புரிந்து கொள்ளவே இலக்கணம் பயன்படுகிறது என்னும் கருத்தே வலிமை வாய்ந்தது. இந்நோக்கில் தொல்காப்பியத்தை அணுகினோமானால் செய்யுளியலின் ஆழ்பொருள் நமக்குப் புலனாகும்.

சங்க இலக்கியத்தை மேலோட்டமாகக் காணும் எவரும் அது எவ்வளவு தூரம் மரபிற்கு ஆட்பட்டுள்ளது என்பதனை யும், எவ்வளவு குறைந்த கருத்துகளையே யந்திரகதியில் கூறிச் செல்கிறது என்பதனையும் உணர முடியும். எனினும் படைப் புக்கள் அனைத்தும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டு தத்தமக் கெனத் தனித் தன்மைகளையும் கொண்டுள்ளமையும் குறிப் பிடத்தக்கது. இதற்குக் காரணம் இக்கருத்துக்கள், பின்னனிகள் முதலானவை வழங்கப்பட்டுள்ள முறையேயாகும். இவற்றை விளக்குவதே ஒரு இலக்கணத்தின் 'புனிதமான' பணியாகும் இதனையே தொல்காப்பியமும் செய்துள்ளது.

தொல்காப்பிய எழுத்ததிகாரம் இலக்கியமொழியில் 'பயன் படுத்தப்படும் அடிப்படை உறுப்பான ஒலியையும் அதனடிப் படையில் தோன்றும் மாறுதல்களையும் விளக்கி, சொல்லதி காரத்தில் இவ்வொலிகளினால் கட்டப்படும் உருபன்களையும். சொற்றொடர்களையும் விளக்குகிறது. இங்கு மொழியின் இலக் கணம் நிறைவுபெறுகிறது. மொழியியல் சொற்றொடருக்கு அப் பால் செல்வதில்லை. இவற்றுள் கூறப்படுபவை ஒரு இலக்கியத் தின் வடிவத்தை விளக்குகின்றன. ஒரு படைப்பு, வடிவம் பொருள் ஆகிய இரண்டையும் உடையது. இவ்விரண்டும் கொண் டுள்ள உறவே இலக்கியத்தின் அடிப்படை வடிவத்தின் விளக் கமே எழுத்தும் சொல்லுமாகும். பொருளதிகாரம் இலக்கியத் தின் பொருளை விளக்குகிறது. இது பொருளுக்கான இலக்கண மாகும். இலக்கியத்தினுள் பேசப்படுபவை, பேசப்படக்கூடி யவை, விலக்கப்படுபவை என்பனவற்றைப் பொருளதிகாரம் விளக்குகிறது. Form-content எனத் தற்கால நடையியலார் குறிப்பிடும் 'வடிவம்-பொருள்' ஆகியவையே தொல்காப்பியத் துள் பேசப்படுகின்றன. 'இரண்டின் ஒட்டு மொத்தமே கவிதை 'எனக் குந்தகா குறிப்பிட்டது இங்கு நினைவு கூரத்தக்கது. பாணினியின் சொற்பட்டியல்களைப் போன்றே தொல்காப்பி யரும், இடையியல், உரியியல் மரபியல் போன்றவற்றுள் சொற் பட்டியல்கள் தருவது குறிக்கத்தக்கது. இவ்வியல்களின் துணை யின்றிச் சங்கப்பாடல்கள் பலவற்றைப் புரிந்து கொள்வது கடினமே.

'வடிவ -பொருள்' இரண்டிற்குமிடையே காணப்படும் உறவைப் புரிந்து கொள்வதே ஒரு இலக்கியப்படைப்பின் தனித் தன்மையைப்புரிந்து கொள்வதாகும். இதுவே அவ்விலக்கியத்தின் நடையாகக் கருதப்படுகிறது. இவ்வுறவைப் புலப்படுத்தும் பணி யையே தொல்காப்பியச் செய்யுளியல் மேற்கொள்கிறது. இவ் வடிப்படையில் இவ்வியல் பொருளதிகாரத்திற்கு வெளியே தனித்து நிற்பதே பொருத்தமாகும். எழுத்து சொல் அதிகாரங் களில் ஏனைய எட்டு இயல்களில் கூறப்பட்ட இலக்கியப் பொருளுக்கான தரவுகளையும் இணைப்பதே செய்யுளியலாகும். ஏனைய அதிகாரங்களைப் போன்றே பொருளதிகாரமும் ஒன் பது இயல்களைக் கொண்டிருக்க வேண்டுமென்ற எண்ணமே செய்யுளியலை பொருளதிகாரத்தினுள் அடக்கியிருக்க வேண்டும்.

செய்யுளியலின் முதல்நூற்பா முப்பத்து நான்கு செய்யு ளுறுப்புக்களை வரிசைப் படுத்தி, அதன்மூலம் செய்யுளின் கூட் டிணைப்புத் தன்மையினைப் புலப்படுத்துகிறது. இம்முப்பத்து நான்கினையும் மூன்று பெரும் பிரிவாகப் பிரிக்கலாம். மாத் திரை, எழுத்தியல், அசைவகை, சீர், அடி, யாப்பு, மரபு, தூக்கு, தொடைவகை, பா, அளவியல், வண்ணம் ஆகிய பன்னிரண்டும் இலக்கியப் படைப்பின் வடிவத்தினைப் பல்வேறு வழிகளில், மாறுபட்ட வாய்பாடுகளின் மூலம், படைப்பாளியின் கற்பனைத் திறனுக்கொப்ப ஆக்கிக் கொள்ளும் வழிமுறைகளை விளக்குகின்றன. இவற்றை வடிவ உறுப்புக்கள் எனலாம். திணை, கைகோள், பொருள்வகை, கேட்போர், களன், காலவகை, பயன், மெய்ப்பாடு, எச்சவகை முன்னம், பொருள் துறைவகை, மாட்டு, நோக்கு ஆகிய பதினான்கும் 'பொருள், உறுப்புக்கள் ஆகும். இவற்றின் அடிப் படையிலேயே ஒரு இலக்கியப் படைப்பில் பேசப்படும் பொருள்கள் அமைகின்றன. இவ்விருபத்தாறு உறுப்புக்களையும் தனது கற்பனைத் திறனுக்கேற்ப, ஒரு படைப்பாளி இணைக்கும் முறையிலேயே அவனது நடை வெளிப்படுகிறது. இப்படித்தான் இணைக்க வேண்டுமென்ற கட்டாயம் இங்கில்லை.

எஞ்சியுள்ள எட்டுறுப்புக்களான, அம்மை, அழகு தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என்பன

உண்மையில் செய்யுளுறுப்புக்களல்ல. தொல்காப்பியர் எங்ஙனம் இவற்றை ஏனைய இருபத்தாறுடன் சேர்த்து (பொருந்தக் கூறிய எட்டும் தொகைஇ) செய்யுளுறுப்பாகக் கூறினார் என்பது புதிராகவே உள்ளது. இவ்வெட்டும் இலக்கிய வகைகளையே குறிக்கின்றன. முதலிற் குறிப்பிட்ட வடிவமும் பொருளும் இணைந்து கிடைக்கும் இலக்கிய வகைகளே இவை. இதுமேலும் ஆராய்தற்குரிய ஒன்றாகும்.

வடிவத்தையும் பொருளையும் இணைத்து ஒரு இலக்கியத்தைப் படைக்கும் போது சில குறிப்பிட்ட முறைகள் அல்லது உத்திகள் சிறப்பாகப் பின்பறறப்படுகின்றன. சமுதாய அமைப்பு, காலச்சூழல், யாப்பமைதி போன்றவை இதற்குக் காரணமாகின்றன. வாய்மொழி இலக்கியம் ஓங்கியிருந்த காலகட்டத்தில் பயின்றுவருதல் எனும் உத்தி பெரிதும் பின்பற்றப்பட்டது குறிப்பிட்ட ஒலிகள், தொடர்கள், கருத்துக்கள் ஆகியவை திரும்பத் திரும்ப பயின்று வருதல் இவ்வகை இலக்கியத்தின் இயல்பாகும். அதிகமாகப் படி எடுக்க முடியாமலும், எடுத்த படிகளைக் காப்பாற்ற முடியாமலும் இருந்த காலகட்டத்தில், வாய்மொழி இலக்கியங்கள் வாய்-செவி வழியாகவே அடுத்தடுத்த தலைமுறைகளுக்குத் தரப்பட்டன. எனவே இங்கு நினைவாற்றலுக்கு முக்கிய வேலை இருந்தது. ஒலிகளும் தொடர்களும் பயின்றேவருமானால் நினைவிற் கொள்ளுதல் எளிதாகும். இவ் வடிப்படையிலேயே எதுகை, மோனை, வண்ணம் போன்றவை தோற்றப்படலாயின. அறக்கருத்துக்களை மீண்டும் மீண்டும் வலியுறுத்திச் சொல்லவேண்டிய ஒரு சூழல் சமுதாயத்தில் இருக்குமானால், பெரும்பாலும் முன்னிலைத் தொடர்கள் பயன்படுத்தப்படுவது இயல்பு. யாப்பமைதி காரணமாக சில சொற்கள் இன்னொரு அசையைப் பெற்றோ அல்லது தம்முடைய வடிவமே நீண்டோ பயன்படுகின்றன.

'கண்', 'தோள்', 'தேர்' 'வரை' முதலான பெயர்கள் பெரும்பாலும் ஏதேனும் ஒரு அடையைப் பெற்றே, மழைக்கண், திண்டோள் நெடுந்தேர், உயர்வரை என வருவதனைக் காணலாம். இவை தனித்து ஒரு சீராக இயங்க முடியாது. எனவே இன்னொரு அடையைப் பெறுவதன் மூலம் ஈரசைச்சீராக இயங்க

முடிகிறது. 'விளைந்த தேறல்'என ஆசிரியப்பாவில் இரு சீராகப் பயன்படும் தொடர் கலிப்பாவில் 'விளைதேறல்' என ஒரே சீராகப் பயன்படுகிறது. 'மாயோள்' என்னும் ஒரு சீரை இரு சீராக மாற்ற வேண்டுமானால் 'மாஅ யோளே' என அள பெடை பயன்படுத்தப்படுகிறது.

இவ்வாறு முதலில் தேவையடிப்படையில் பயன்படுபவையே பின்னர் நடை உத்திகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. காலப் போக்கில் இவையே யாப்பு விதிகளாக மாறுகின்றன. நீக்கல் உத்தி தமிழ் இலக்கியத்தில் பெரிதும் பயன்படுலதாகும், பெரும் பாலும் செயலிகள் நிக்கப்படுதலை இலக்கியப படைப்பில் காணலாம். 'பாறை நெடுஞ்சுனை விளைந்த தேறல்' என்பது 'பாறையிலுள்ள நெடிய சுனையில் விளைந்த தேறல்' என்பதன் மாற்றாகும். 'பெருந்தோட் சிறு நுதல் பேரமர் மழைக்கண்' என் பது பெரிய தோளும் சிறிய நுதலும் பெரிய அமர்த்த மழை யெனக் குளிர்ந்த கண்ணும்' என்பதன் மாற்றாகும். இங்கெல் லாம் செயலிகள் நீக்கப்பட்டுள்ளன. இதற்கு மொழியின் கட் டமைப்பு இடந்தருகிறது. செயலிகள் இல்லாவிடினும் பொருள் சிதைவதில்லை, மொழியின் பழம் நிலையினை இது சுட்டுவ தாகலாம்,

சங்க இலக்கியங்கள் தொகுக்கபட்ட காலத்தில் மற்றொரு இன்றியமையாத நடையியற் கோட்பாடு உருவெடுத்தது. முத லிற் குறிப்பிட்டதுபோல படைப்பு இலக்கியத்தின் நோக்கம் வெறும் தகவல்களைத் தருவதன்று; அத்தகவல்களை மெருகூட்டி முருகியல் உணர்வோடு தருவதே அதன் தலையாய நோக்கம். முழுமையான இலக்கியச் சுவைப்பிற்குச் சிலநேரம் படைப்பிற்கு வெளியேயும் செல்லவேண்டிவரும். ஒரு குறிப்பிட்ட செய்யுள் எச்சூழலில் பாடப்பட்டது என்பது தெரியாமற் போனால் அது வெறும் தகவல் பட்டியலாகவே அமைந்துவிடும் (இவ்வே, பீலி அணிந்து மாலை சூட்டி....) பல சங்கப் பாடல்கள் இங்ஙனம், சூழல் தெரியாமற் போனால் சுவைக்க முடியாமலே போகின் றன. இப்பாடல்களைத் தொகுத்தோர் இதனை உணர்ந்திருக்க வேண்டும். எனவேதான் இவைகளுக்கு கொளுக்கள் எழுதப் பட்டிருக்க வேண்டும். இக்கொளுக்கள் வரலாற்றுக் குறிப்புக்

களாகப் பலராலும் நம்பப்பட்டாலும் பெரும்பாலானவற் றிற்கும் பாடல் தலைவனுக்கும் நேரடிக்குறிப்பில்லை. திணை, துறை ஆகியவை தெளிவாகத் தெரியாவிட்டால் அகப்பாடல் களைப் புரிந்து கொள்வதில் சிக்கல் எழுகின்றது. தற்கால நடை யியலார் முழுமையான இலக்கியச் சுவைப்பிற்குப் பின்ன ணியைப் பற்றிய உணர்வும் ஒரு அடிப்படையான தேவை என்று கூறுவதை மனதிற் கொள்ள வேண்டும். தற்காலத் தமிழ் எழுத்தாளர்களான ஜெயகாந்தன், கண்ணதாசன் போன்றோ ரது படைப்புக்களைப் புரிந்துகொள்ள அவர்களது வாழ்க்கைப் பின்னணி பெரிதும் துணை செய்கிறது.

சில நடையியல் உத்திகள் திரும்பத் திரும்பக் கடைப்பிடிக் கப்படும்போது அவை தம்முடைய பயனை இழக்கின்றன. கைலாசபதி குறிப்பிடுவது போன்று சில அடைகள் தம்முடைய தன்மையோடு தொடர்பில்லாத சில பெயர்களுக்கு அடையாகத் திரும்பப் பயன்படுத்தப்படும்போது அவை வெறும் மரபுவழக்கு களாகிவிடுகின்றன. எடுத்துக்காட்டாக, நெடும் எனும் அடை, கண், தோள், வரை, தேர், கயம் போன்ற பல்வேறு பெயர் களுடன் யாப்பமைதி பேணுவதற்காக, ஈரசைச் சீராவதற்காக பயன்படுத்தப் படுகின்றது. இலக்கியத் தலைவியர் அனைவருமே 'மழைக்கண்'/'அமர்க்கண்'/'உண்கண்'/'நெடுங்கண்' கொண்ட வர்களேயன்றி இயல்பான கண்கொண்டவர்களல்லர். இவ் வடைகள் மரபாகவே பயன்படுத்தப்படுகின்றன.

தொல்காப்பியச் சிந்தனை செய்யுள் வடிவத்தையும், இனக் குழுச் சமுதாயப் பண்பாட்டினையும் அடிப்படயாகக் கொண்டது. இன்றைய இலக்கிய வடிவங்கள் பெரிதும் உரை நடையையும், அறிவியல் சார்ந்த நகரத்துவச் சமுதாயப் பண் பாட்டினையும் அடிப்படையாக கொண்டவை. தொல்காப்பியச் சிந்தனையை இன்றைய இலக்கியங்கள் மேல் ஏற்றிக் காணும் போது எச்சரிக்கைதேவை. எதுகை, மோனை முதலான உத்திகள் இன்று இலக்கியத்தில் பெரிதும் இடம் பெறுவதில்லை நினை வாற்றலுக்கு இவ்வறிவியற்காலத்தில் அத்துணை இன்றியமை யாமை இல்லை என்பதனால் இவை போற்றப்படுவதில்லை.

அது மட்டுமன்று, செய்யுள்வடிவ இலக்கிய வகைகள் Musical melody எனும் இசை ஒலியால் சுட்டப்படுபவை. உரைநடை இலக்கியவகைகள் Speech melody என்னும் பேச்சொலியால் சுட்டப்படுபவை. எனவே இன்று அதிக இசைமை தரும் அளபெடை, வண்ணம் போன்றவை போற்றப்படுவதில்லை. எனினும் எதுகை, மோனை முதலான உத்திகள் இலக்கிய வகைகளில் பயன்படுத்தப்படாவிட்டாலும் அவற்றின் பயன்பாடு அரசியல் முழக்கங்கள், விளம்பரங்கள் ஆகியவற்றில் கூடிக் காணப் படுகிறது. காலம், இலக்கியவகை ஆகியவற்றுக்கேற்ப நடையியல் உத்திகளின் பயன்பாடு மாறுதலுக்குள்ளாகும்.

தொல்காப்பியரது நடையியற் சிந்தனை அவருக்குப் பின் வளராமற் போனதற்குத் தொல்காப்பியம் ஒரு மொழி இலக்கண நூலாகவே பெரிதும் எண்ணப்பட்டதே காரணமாகும். நடையியற் கருத்துக்கள் யாப்பிலக்கணமாகவே கருதப்பட்டு இரண்டிற்குமிடையேயுள்ள வேறுபாடு உணரப்படவில்லை. விளைவாக, நடை பற்றிய திறனாய்வுகளெல்லாம் பெரிதும் படிப்பாளியின் கோணத்திலிருந்தே நிகழ்த்தப்பட்டு, தற்சார்புடையனவையாயின. போற்றியல் திறனாய்வுகளே பாராட்டப்பட்டன. இலக்கிய வடிவத்திற்கும் பொருளுக்குமிடையே காணப்படும் உறவு புறக்கணிக்கப்பட்டு, மொழியியலாரால் வடிவம் மட்டுமே ஆய்வுக் குட்படுத்தப்பட, இலக்கியத்திறனாய்வாளரால் கருத்து மட்டுமே ஆய்வுக்குட்படுத்தப்படலாயின. விளைவாகப் புறநிலை வடிவங்களும். கருத்துக்களும் அப்படியே மாறுதலின்றி ஏற்றுக் கொள்ளப்படலாயின. மரபுகள் அன்றாட உண்மைகளாயின. இதன் விளைவு, வாழ்க்கை மதிப்புக்களைப் பாதிக்கலாயிற்று. மரபுகளைப் பற்றிய உணர்வு படைப்பாளிகளுக்கு இருப்பினும் இல்லாமற் போயினும் படிப்பாளிக்கு அது நிச்சயம் தேவையாகிறது. மரபைப் போற்றுவதற்காகவோ, யாப்பமைதிக்காகவோ ஒரு குறிப்பிட்ட நடை உத்தி பயன்படுத்தப்படும்போது அதனைப் புரிந்து கொள்ளக்கூடிய திறன் படிப்பாளிக்கு இருந்தாக வேண்டும். இதனை நடையியல் ஆய்வு ஒன்றே உணர்த்த வல்லது. இன்றேல், மரபுகளும், உத்திகளும் தவறாகப் புரிந்து கொள்ளப்படுகின்றன. விளைவாக ஒரு இலக்கியச் சுவைப்பு அதற்குரிய பயனைத் தராமல் மாறான

ஒன்றைத் தந்துவிடும். இதனால் ஒரு சமுதாயத்தின் வாழ்க்கை மதிப்புகளும் கூட மாறுதலுக்குள்ளாகலாம். தமிழிலக்கியப் புறப்பாடல்கள் பெரிதும் பாடாண் திணையிலும் வாகைத் திணையிலும் அமைந்து, ஒரு தலைவனை நேரடியாக விளித்து. அவனது பண்பு நலன்களைப் பாராட்டுகின்றன. பாடாண் திணை ஒருவனது கீர்த்தி, வலி, கொடை, தண்ணளி ஆகியவற்றையும், வாகைத் திணை அவனது வீரத்தையும் போற்றுகின்றன.

தனிமனித நோக்கில் அகப்பாடல்கள் பாடப்பட்டதனைப் போன்று சமுதாய நோக்கில் புறப்பாடல்கள் பாடப்பட்டுள்ளன. இங்கும் தனி மனிதன் முன்னிலைப் படுத்தப்பட்டாலும் அவனது சிறப்பியல்புகளாகக் கருதப்படும் பண்புகளே பெரிதும் பாராட்டப்படுவதால் அதன் வழியே அச்சமுதாயத்திற்குத் தேவையான பண்புநலன்களே வலியுறுத்தப்படுகின்றன. எனவே அத்தனி மனிதன் தன்னிகரில்லாத் தலைவனாகப் போற்றப்படுகிறான். குறிக்கோள் வாழ்வைப் பிரதிபலிக்கும் குறிக்கோள் தலைவனாக அவன் சித்திரிக்கப்படுகிறான். எனவே கற்பனைக்கும், மரபு வழக்குகளுக்கும் இங்கு மிகுந்த தேவை எழுகிறது. இவ்வுண்மையைப் புரிந்து கொள்ள முடியாமற்போகும்போது இம்மரபுகளும் கற்பனைகளும் அப்படியே நம்பப்பட்டு, அத்தலைவர்கள் சாதாரண மனிதர்கள் என்ற நிலையிலிருந்து தன்னிகரில்லா உயர்நிலைக்கு ஏற்றப்படுகிறார்கள். அத்தலைவர்களும் இத்தகைய ஒரு போற்றுதலை விரும்பத் தலைப்பட்டு அங்ஙனம் செய்வோருக்குப் பரிசில்களை வழங்குகின்றனர். மனித உறவுகள் கொடுப்போன் கொள்வோன்' என்ற நிலையிலேயே நிர்ணயிக்கப்படுகின்றன. போற்றிப் புகழ்வதன் மூலம் வேண்டியது கிடைக்கும் என்ற நிலை ஏற்படும்போது அதுவே வாழ்க்கையின் நியதி என ஆகிறது. குழந்தை அழுதவுடன் தாய் ஓடோடி வந்து பால் தருவதைப் போல் இரவலன் போற்றிப் பாடியதும் புரவலன் பரிசில் தருகிறான். குழந்தையின் அழுகை ஒலி செய்யும் அதே பணியை இரவலனின் மொழி நடை செய்கிறது. உடல் உழைப்பின் மூலம் பெற முடியாத ஒன்னற மொழி எனும் கருவி தந்து விடுகிறது. எனவேதான், அலங்காரப் பேச்சுக்களும். அளவிறந்த நடை உத்திகளும் இன்றும் தமிழகத்தில் போற்றப்படுவதோடு மட்டுமின்றி அவையே வாழ்க்கையில் வெற்றி

பெறுவதற்கான வழிகளுமாகும் என்ற எண்ணமும் உருதிப்பட்டு விட்டது.

புரவலனைப் போற்றுவதற்கென்றே சில இலக்கிய மரபுகள் தோன்றி நிலைபெற்று விட்ட பின், அவனது நிறைகளையன்றிக் குறைகளைச் சுட்டுவது தவறாகவே கருதப்பட்டுவிடுகிறது. சாதாரணக் குடிமகன் ஒருவனது சிறிய குறை பெரிதாக்கப்படும் போது புரவலன் ஒருவனது பெருங்குறை கண்ணிற் படுவதேயில்லை. நடையியல் துறையில் வளர்ச்சி காணப்படாமற் போனமையே இத்தகு நிலைக்குக் காரணமாகும்.

இலக்கியச் சுவைப்பின்போது நடையியல் உத்திகள் இனங் காணப்படவேண்டும். அடிப்படை உண்மையிலிருந்து மெருகூட்டப்பட்ட கற்பனைப்பகுதிகள் பிரித்தறியப்பட வேண்டும். வடிவத்தினால் கருத்தில் ஏற்படும் மாறுதல்களும் கருத்தினால் வடிவத்தில் ஏற்படும் மாறுதல்களும் தெளிவாகப் புலப்படுத்தப்படவேண்டும். இதனை உணர்த்தவல்ல துறையே நடையியலாகும். இன்றேல் இலக்கியச் சுவைப்பு திசை திரும்பும் போது, சமுதாய மதிப்புகளும் திசைதிரும்பத் தொடங்குகின்றன.

துணை நூல்கள்

Hockett, C.F., 1958, *A course in Modern Linguistics*, Macmillan company, New York.

Kailasapathy, K 1968, *Tamil Heroic poetry*, Oxford, London.

Meenakshisundaram, T.P. 1966 'Tolkappiar's Literary theory' in *Tamil Culture Vol.* xii, Madras.

Periakaruppan, RM 1976 *Tradition and Talent in Cankam Poetry*, Madurai Publishing House, Madurai.

நீதிவாணன், ஜெ, 1979 **நடையியல்**, முல்லை வெளியீடு, மதுரை.

தொல்காப்பியம் - பொருளதிகாரம் - இளம்பூரணம், திருநெல்வேலித் தென்னிந்தியச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

கலந்துரையாடல்

நடராசபிள்ளை: நடை என்றால் என்ன?

தொல்காப்பிய நடை முதல் சூத்திரத்திலேயே தொல்காப்பியர் விளக்குகிறார்.

நடையியல் பற்றி விளக்கம்

1). Propor word in propter place
2). Ciurco
3). Peculum

and so on

ஒரே **content** பலர் பல விதமாய் சொல்கிறார்கள்.

குமாரசாமி ராஜா: style ன்முலம், குறிஞ்சி, முல்லை, நெய்தல் என்ற அகப்பாடலை அறியலாமா?

நீதிவாணன்: கபிலர், பரணர் முலம்

1550- Standard by view chonslay-view styles - view தொல்காப்பியத்தை இப்பார்வையின்மூலம் பார்த்தால்

வரலாம் —ஆம் என்பதன் பொருள் என்ன? ஆகும் என்ற முழுவினையில் இருந்து ஆம் என்ற துணைவினையாகமாறியது. முழுவினையில் உள்ள பொருள் இழந்து பின்பு திரிந்து இலக்கணப் பொருளாக மாறி துணைவினையாக மாறுகிறது. இதைப்பற்றித்தான் தொல்காப்பியர் பேசுகிறார். முழு வினையப்பற்றி பேசல் வேண்டும் என்றது தொல்காப்பியர் நினைத் திருந்தால் எல்லாவற்றையும் சொல்லியிருக்க வேண்டும் ஆகவே இது தொல்காப்பியரின் குற்றமாகும்.

சிவலிங்கனார்: கொற்றன் · சாத்தன் ஓதல் வேண்டும். இதில் **case** ஏதும்இல்லை இதுபோல் தற்போது சொல்ல முடியாது எனத் **MGR** ஜெயிக்க வேண்டும்.

இங்கே case வந்துள்ளது இது துணைவினையாக உள்ளது.

குமாரசாமிராஜா: நான் பேசனும் — 1 — தன்பால்
அவன் பேசனும -- 2 தன்பால்/பிறர்பால்
வடிவஅமைப்பில் ஆராய்தல், பொருளின் அடிப்படையில் ஆராய்தல், இரண்டிற்கும் இடையில் உள்ள தொடர்பை ஆராய்தல்.

சிவசுப்ரமணியம்: பொருள் வடிவம் இவை இரண்டும்தான் நடையியலை அறியப் பயன்படுகிறாது. சிலப்பதிகாரம், மணி மேகலை – நடையைத் தருவது வேறுஒன்று உள்ளது. உணர்ச்சி, கற்பனை.

மொழியியல் 8. 3 & 4 (1985)
முதல் மொழியியல் கருத்தரங்குக்
கட்டுரைக் கோவை

தமிழ் மொழியியலின் ஆய்வுப்போக்கு

பேராசிரியர் கி. அரங்கன்*

தமிழ் மொழியியலின் ஆராய்ச்சி நிலை என்னும் இத் தலைப்பு பரந்துபட்டது. இத் தலைப்பை முழுமையாக என்னால் இப்பொழுது அணுக முடியுமென்று தோன்றவில்லை. எனக்குக் கிடைத்த குறைந்த காலம் பல்வேறு காரணங்களுள் ஒன்றாக உள்ளது. என்னுடைய திறனும் இக் குறுகிய கால எல்லைக்குள் இத் தலைப்பிற்கு முழுமையாக நியாயம் வழங்க முடியும் என்ற நம்பிக்கையைக் கொடுக்கவில்லை, ஆகையால் கடந்த இருப தாண்டுகளாக மொழியியல் குறிப்பாகத் தமிழ் மொழியியலில்- உழன்று கொண்டிருக்கும் பின்னணியைப் பக்கபலமாக நிறுத்திக் கொண்டு சில கருத்துக்களை நான் இங்கு கூறுகிறேன்.

* பேராசிரியர் முனைவர் கி. அரங்கன் அவர்கள் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் மொழியியற்துறைத் தலைவராகவும், மொழிப்புலத்தின் தலைவரும் ஆவார்

தமிழ் மொழியியலின் ஆராய்ச்சி நிலையை இரு கோணங்களிலிருந்து நெருங்கலாம். மொழியியலின் கோட்பாட்டோடு தொடர்புடைய கட்டுரைகளை மட்டும் வகைப்படுத்தி அவை எழுப்பும் பிரச்சனைகளைத் தனித்து காட்டுவது ஓரணுகல் முறை. இவ்வணுகலில் இருவிதப் பிரச்சனைகளை நாம் இனங் கண்டு கொள்ள வேண்டும். குறிப்பிட்ட ஒரு கோட்பாட்டைத் தமிழ் மொழியின் அமைப்பை விளக்குவதற்குப் பயன்படுத்தும் பொழுது நாம் இவ்விரு விதப் பிரச்சனைகளையும் சந்திக்கிறோம். கோட்பாட்டில் சில பிரச்சனைகள் எழுப்பப்படுவதுண்டு. சான்றாக மாற்றிலக்கணத்தில் செவ்வியல் கோட்பாட்டிற்கும் (Standard theory) ஆக்க பொருண்மையியலுக்கும் (Generative Semantics) விவாதப் போர் மூண்டபொழுது சில பிரச்சனைகள் கருதுகோள் (Hypothesis) வடிவில் வைக்கப் பட்டன. இலக்கணக் கூறுகளைக் (Grammatical categories) குறைப்பது ஆக்கப் பொருண்மையியலின் போக்காகவும் இவ்வாறு இலக்கணக் கூறுகளைக் குறைப்பதற்கு எதிராக வாதிப்பது செவ்வியல் கோட்பாட்டின் போக்காகவும் இருந்தன. இந்தப் பின்னணியில்தான் 1970 வாக்கில் வெளிவந்த கட்டுரைகளைப் பார்க்க வேண்டும். தமிழில் அரங்கனின் கட்டுரை (Rangan 1971) இந்த சர்ச்சையைத் தொடங்கி வைத்தது. தொடரியலின் கூறுகளை மட்டும் கருத்தில் கொண்டு **வேண்டும்** போன்ற வினைகள் துணை வினைகள் அல்ல என்று வாதிடப் பட்டது. பொருண்மையியல் அடிப்படையில் இவ்வினைகள் விரிவாக அகத்தியலிங்கம், அண்ணாமலை, வேலுப்பிள்ளை ஆகியவர்களால் ஆராயப்பட்டன. (Agesthialingom 1972, 1974, 1980; Annamalai 1974; Veluppillai 19 3).

ஆக்கப் பொருண்மையியலின் போக்கை ஆதரித்தோ எதிர்த்தோ தமிழ் மொழியிலிருந்து தரவுகள் கொண்டு வரப்பட்டன. இங்கு எழுப்பப்பட்ட பிரச்சனைகள் கோட்பாட்டிற்குள் எழுப்பப்படும் கருதுகோள்களுடன் தொடர்புடையன. தொடரியலில் மட்டுமின்றி வேறுநிலைகளிலும் இத்தகைய கட்டுரைகளைக் காணலாம். அமைப்பு மொழியியல் கோட்பாட்டின் ஒலியனியலுக்கும் ஆக்க ஒலியனியல் (Generative Phonology) கோட்பாட்டிற்கும் ஒலியனைப் பற்றிய

விவாதம் எழுந்த பின்னணியில் வைத்து அகத்தியலிங்கம் அவர்கள் (Agesthialingom 1968) கட்டுரையைப் பார்க்க வேண்டும். இன்றைய பேச்சுத் தமிழில் பெரும்பாலோர் ர என்பதையும் ற என்பதையும் வேறுபடுத்தி உச்சரிப்பதில்லை. இவ்விரண்டுமே ஒன்றாக ஒலிக்கப்படுகின்றன.

(1) ūru 'village'
(2) āru 'river'

இவ்விரு சொற்களிலும் ஒலிக்கப்படுவது /r/ என்பது. வேற்றுமை உருபு சேர்க்கப்படும் பொழுது வெவ்வேறான மாற்றங்களை அடைகின்றன.

(1.a) ūru ≠ e ....,ūre
(2.a) āru ≠ e ....ātte

/r/ என்பது /r/ ஆகவே ஒரு சொல்லில் இருக்கிறது. இன்னொரு சொல்லில் இது /t/ ஆக மாறுகிறது. விதிகளின் அடிப்படையில் /r/ என்பதற்கு இரு ஒலியன்கள் முறை ஒலியனில் நிலையில் (Systematic Phonemic Level) இருப்பதாக வாதிடப்படுகிறது. ஆனால் இது அமைப்பு மொழியியல் ஒலியனியல் கொள்கைக்கு மாறாகச் செல்கிறது.

இப் பின்னணியில் கோதண்டராமன் அவர்களின் (Kothandaraman 1972) கட்டுரையையும் நாம் பார்க்க வேண்டும். சந்தி விதிகள் செயற்படும் பொழுது இலக்கணத் தொடர்புடைய செய்திகள் தேவை என்று இக்கட்டுரை வாதிடுகிறது. ஒலியனியல் நிலையிலான செய்திகள் மட்டும் சந்தி விதி செயற்பாட்டிற்குப் போதா என்று இக் கட்டுரை வாதிடுகிறது.

(3) நடு + இல் ————→ நடுவில்
(4) நடு + அ ————→ நட
(5) ஆடு + ஐ ————→ ஆட்டை
(6) ஆடு + ஆ ————→ ஆட

ஒலியமைப்பில் ஒரே விதமாக இருப்பினும் நடு என்பது -இல் என்ற விகுதியுடன் சேரும்பொழுது வ என்பது இடையில் தோன்றுகிறது. ஆனால், -ஆ என்ற விகுதி சேரும் பொழுது

நட என்று மாறுகிறது. ஆடு என்பது -ஐ விகுதி ஏற்கும் பொழுது **ஆட்டை** என்றாகிறது. அ என்ற விகுதி சேரும் பொழுது **ஆட** என்றாகிறது. ஒலியமைப்பில் மாறுபடாத சொற்கள் இவ்வாறு மாறுபடுவதற்கு என்ன காரணம்? சந்தி விதி ஒலியைத் தவிர்த்த மற்றைய இலக்கண செய்திகளுக்கு உட்பட்டு செயற்படுகிறதா? **நடு** என்ற சொல் பெயராக இருக்கும் பொழுது ஒரு முறையிலும் அதுவே வினையாக இருக்கும் பொழுது வேறு முறையிலும் சந்தி விதிகள் செயற்படுகின்றன என்பது தெளிவாகிறது (Kothandaraman 1972:65-66) தொடரியல் அமைப்பும் சந்தி விதி செயற்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கிறதென்பது தெளிவாகும். **மாடு** என்ற சொல் இணைத் தொடரில் வரும் பொழுது எவ்வித மாற்றமும் இன்றி வருகிறது. பெயருக்கு அடையாக வரும்பொழுது **மாட்டு** என்று மாறுகிறது.

(7) மாடு + கன்று ——→ மாடுகன்று
(8) மாடு + கன்று ——→ மாட்டுக்கன்று

சந்தி விதிகளின் செயற்பாட்டிற்கு ஒலியனியல் நிலையின் செய்திகள் மட்டுமின்றி இலக்கண செய்திகளும் - உருபனியல் செய்திகளும் தொடரியல் செய்திகளும் - முக்கிய பங்கு வகிக்கின்றன என்பது இக் கட்டுரையால் நிறுவப்பட்டது. பரமசிவம் (1982) ஒரு படி மேல் சென்று பொருண்மையில் செய்தியும் சந்தி விதிகளின் செயற்பாட்டில் எவ்வாறு பங்கு கொள்கிறது என்பதையும் விளக்குகிறார். பெயர்ச்சொற்களில் சிலவற்றை இனப் (Generic) பொருள் என்ற அடிப்படையிலும் தனிப் (Specific) பொருள் என்ற அடிப்படையிலும் பிரிப்பார்கள். இப் பாகுபாடு சந்திவிதிகளின் செயற்பாட்டில் வகிக்கும் பங்கை பரமசிவன் (1982) அவர்களின் கட்டுரை தெளிவாக்குகிறது.

(9) பார்வதி கிளிச்சிறகு நிறத்தில் பட்டுப்புடவை வாங்கினாள்.

(10) பார்வதி அந்தக் கிளி சிறகுக்குள் தங்கத்தை ஒளித்து வைத்தாள்.

இங்கு (9) இல் **கிளிச்சிறகு** என்றும் (10) இல் **கிளிசிறகு** என்றும் காணப்படுகிறது. சந்தி விதிகளின் செயற்பாட்டிற்கு **கிளிச்சிறகு**

என்பது (9) இல் இனப்பொருளைச் சுட்டுவதாகவும் கிளிசிறகு என்பது (10) இல் தனிப் பொருளைச் சுட்டுவதாகவும் வந்துள்ளதே காரணம் என்று விளக்கப்படுகிறது. தொடரியல் செய்திகள் மட்டுமின்றி பொருண்மையில் செய்தியும் சந்திவிதிகளின் செயல்பாட்டிற்குத் தேவையென்று இங்குச் சுட்டிக் காட்டப் படுகிறது. ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் பொழுது சந்திவிதிகள் செயற்படுவதற்கு மொழியின் எல்லா நிலைகளிலிருந்தும் செய்திகள் தேவைப்படுகின்றன என்பது தெளிவாகிறது.

சந்திவிதிகள் செயற்படும்பொழுது ஒரு வரிசை முறையில் செயற்படுகின்றன என்ற கருதுகோள் ஆக்க ஒலியனியலாளர்களால் முன்வைக்கப்பட்டது. குமாரசாமி ராஜா (Kumaraswami Raja 1978) அவர்கள் தமிழிலிருந்து நிறைய சொற்களை எடுத்துக் காட்டி அவற்றை வருவிக்க எவ்வாறு விதிகள் வரிசைப்படுத்தப்படுகின்றன என்பதைக் காட்டியுள்ளார். இதை அமைப்பு மொழியியல் ஒலியனியலாளர்களுக்கும் ஆக்க ஒலியனியலாளர்களுக்கும் இடையிலான கருத்து வேறுபாடு என்று கொள்வதைவிட விதிகள் வரிசைப்படுத்தப்பட வேண்டுமா அல்லது வேண்டாமா என்று வாதிடுபவர்களுக்கிடையிலான கருத்து வேறுபாடு என்று கொள்வதே பொருந்தும். ஆக்க ஒலியனியலாளர்களிடையே கூட இவ்வேறுபாடு இருக்கிறது.

மொழியை விவரிக்கப் பயன்படுத்தப்படும் இலக்கணக் கூறுகளின் (Grammatical Categories) இயல்பைக் குறித்தும் எழுந்த கோட்பாட்டு வாதங்களுக்குத் துணையாக வந்த ஆய்வுகள் தமிழிலும் உண்டு. எடுத்துக்காட்டாக பெயர், வினை போன்ற இலக்கணக் கூறுகளை அளவில் (Scale) வைத்து விவரிப்பது பொருத்தமா அல்லது இரட்டை பிரிவு அடிப்படையில் (Binary) விளக்குவது பொருத்தமா என்ற கேள்வி மாற்றிலக்கணத்தில் எழுந்தது. சொற்கள் ஒன்று பெயராக இருக்கும் இல்லையென்றால் வினையாக இருக்கும் என்ற நிலையில் இலக்கணக் கூறுகளை வரையறுப்பது ஒருமுறை; இலக்கணக் கூறுகள் அளவில் உள்ள புள்ளிகளாகக் கருதப்பட்டு சொற்கள் இவ்விரு புள்ளிகளுக்கிடையில் வரலாம் என்று அணுகுவது இரண்டாவது முறை. சொற்களை அதிக பெயர்த் தன்மை கொண்டவை

யென்றும் அதிக வினைத் தன்மை கொண்டவை யென்றும் விவரிப்பது மேம்பட்டது என்பது இரண்டாவது அணுகுமுறையின் வாதம். அண்ணாமலை அவர்களின் (Annamalai 1982) ஆய்வு அளவில் வைத்து வாதாடுகிற கருதுகோளுக்கு ஆதரவாக அமைந்துள்ளது. குறிப்பிட்ட ஒரு கோட்பாட்டில் கருதுகோளை ஆதரித்தோ எதிர்த்தோ வாதிடுகின்ற இயல்புடைய கட்டுரைகளையும் நூல்களையும் நாம் தமிழ் மொழியியலில் காண்கிறோம்.

தமிழ் மொழியியலில் வெளிவந்த கட்டுரைகளையும் நூல்களையும் மதிப்பீடு செய்வது என்பது கூட்டு முயற்சியாகஇருக்க வேண்டும்; அத்துடன் கால எல்லையும் வரம்புக்கு உட்படுத்தப்பட்டு நீண்டிருக்க வேண்டும். முறையாக இவ்வணுகலை நாம் மேற்கொள்ள வேண்டுமென்றால் இதுவரை தமிழ் மொழியியலில் வெளிவந்த கட்டுரைகளையும் நூல்களையும் திரட்டி வகைப்படுத்த வேண்டும். இவ்வாறு திரட்டுவதற்கு ஆரம்பமாக தமிழ் மொழியியலைப் பற்றிய முறையான நூலடைவோ (A bibliography of Tamil Linguistics) ஆய்வடங்கலோ நம்மிடம் இல்லை, மேலே குறிப்பிட்ட அணுகுமுறையை மேற்கொள்கின்ற ஆய்வாளர்களுக்கும் தமிழ் மொழியியலில் ஆய்வைத் தொடங்குபவர்களுக்கும் உதவக் கூடிய வகையில் தமிழ் மொழியியலுக்கு ஒரு நூலடைவு மிகத் தேவையாக இருக்கிறது. நூலடைவோ ஆய்வடங்கலோ உருவாகும் வரை மொழியியல் கோட்பாட்டின் பிரச்சனைகளை மையமாகக் கொண்டு தமிழ் மொழியியலில் நடந்த ஆய்வுகளை மதிப்பீடு செய்வதை ஒத்திப்போட வேண்டும் என்று நான் இங்கு கூற முன் வரவில்லை. இத்தகைய அணுகுமுறை ஆய்வை மேற்கொள்வதற்கு நூலடையும் நூலடங்கலும் எவ்வாறு உதவலாம் என்பதை விளக்கவே நான் இங்கு முற்படுகிறேன்.

தமிழ் மொழியியலின் சில பகுதிகளில் நடந்த ஆய்வுகளை எடுத்துக்கொண்டு மதிப்பீடு செய்த சில கட்டுகைகளை நாம் நூலடைவிற்கும் பிரச்சனைகளை இனங்கண்டு கொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்ளலாம். அரங்கனின் (Rangan 1981) கட்டுரையையும் சண்முகம் பிள்ளை அவர்களின் (Shanmugam

Pillai 1983) கட்டுரையையும் மாதிரியாக எடுத்துக்காட்டலாம். இக் கட்டுரைகளில் ஒரு ஒட்டு மொத்தமான மதிப்பீட்டை நாம் காண முடியும். ஒரு சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரிடையே உள்ள செய்திப் போக்குவரத்தின் மென்மையே வட்டார வழக்குகளில் காணப்படும் வேற்றுமைகளுக்குக் காரணம் என்று புளூம்பீல்டு அவர்கள் (Bloomfield 1963) குறிப்பிடுகிறார்கள். நில அடிப்படையிலான வட்டார வழக்குகளுக்கிடையில் காணப்படும் வேற்றுமைகளை விவரிக்க இவ் விளக்கம் பயன்படலாம். ஒரே கிராமத்தில் வாழும் பல்வகைப் பிரிவினரின் சமுதாய வழக்குகளில் காணப்படும் வேற்றுமைகளை விளக்க இதனால் முடியுமா என்பது சந்தேகமே! பிராமணரல்லாதார் நடத்தும் குடும்ப நிகழ்ச்சிகளில் பிராமணர்கள் கலந்து கொள்கிறார்கள். ஆதி திராவிட மக்களில் பலர் விவசாயம் காரணமாக மேல்மட்ட நடுமட்ட மக்களுடன் பழகுகிறார்கள். ஆகையால் சமுதாய வழக்குகளுக்கிடையிலான வேறுபாடுகளுக்குச் செய்திப் போக்குவரத்தின் மென்மை காரணம் என்று கூறுவது பொருந்தாது. குழுத் தனித்துவமே (Group identity) இதற்கு வலுவான காரணமாக அமையும்.

கிளைமொழி ஆய்வை மதிப்பீடு செய்யும் பொழுது பல்வேறு சமுதாய காரணிகளுக்குள் சாதிக்கு மட்டும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதை நாம் பார்க்கிறோம். இந்திய சமுதாயத்தில் – குறிப்பாகத் தமிழ்ச் சமுதாயத்தில் சாதி முக்கிய பங்கு வகிப்பது காரணமாக இருக்கலாம். மற்றைய காரணிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காவிட்டாலும் அவைகளும் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன. மொழி வடிவங்களின் தேர்வை மூன்று கட்டுப்படுத்துகின்றன: (i) அனுப்புவோர் (Sender) (ii) பெறுவோர் (Receiver) (iii) பின்புலம் (Setting). கல்வி, வயது, சாதி, பால் முதலிய காரணிகள் செய்திகளை அனுப்புவோருடனும் பெறுவோருடனும் தொடர்புடையவை. செய்தியை அனுப்புவோருடைய வயது, கல்வி, சாதி, பால், வாழுமிடம் முதலியவை கிளை மொழிகளில் காணப்படுகின்ற வேறுபாடுகளுக்கு அடிப்படையாக அமைவதை நமக்குள் பல்வேறு ஆய்வுகள் காட்டுகின்றன. செய்தியைப் பெறுவோருடைய சமுதாய நிலை செய்தியை அனுப்புவோருடைய மொழி

வடிவு தேர்ந்தெடுப்பைக் கட்டுப்படுத்துகிறது. இவ்விரண்டையும் தவிர்த்து மொழி பயன்படுத்தப்படும் பின்புலமும் மொழிவகைத்தேர்வைக் கட்டுப்படுத்துகிறது. மொழி பல வகைகளைத் தன்னுள் கொண்டது. பேச்சு மொழியைச் சார்ந்த கிளை மொழிகளில் ஒன்றை நாம் நம் வீட்டில் உள்ளோருடனும் நண்பர்களுடனும் மற்றையவர்களுடனும் பயன்படுத்துகிறோம், வகுப்பறையிலும் மேடையிலும் எழுத்து மொழியை நாம் பயன்படுத்துகிறோம். பேச்சு மொழி எழுத்து மொழி என்ற தேர்வு மொழி பேசப்படும் பின்புலத்தால் கட்டுப்படுத்தப்படுகிறது. தமிழைப் பொறுத்தவரை எழுத்துத் தமிழும் பேச்சுத் தமிழும் இரு மொழிகளென்று கருதப்படக்கூடிய அளவிற்கு வேற்றுதமைகளைக் கொண்டன என்று தமிழைக் கற்கின் பிற மொழியாளர்கள் கருதுகிறார்கள். இதை இரட்டைமொழி நிலை (Diglossia) என்று சமுதாய மொழியியலாளர்கள் கூறுவார்கள், இதை இரு கோணங்களிலிருந்து அணுகி இது தொடர்பாக வந்த ஆய்வுகளை வகைப்படுத்தலாம்: (i) பேச்சுத் தமிழுக்கும் எழுத்துத் தமிழுக்கும இடையே காணப்படும் வேற்றுமைகளை ஒலியனியல், உருபனியல், சொற்றொடர் ஆகிய நிலைகளில் வைத்து ஆய்வது; (ii) இரட்டை மொழி நிலையோடு தொடர்புடைய பின்புலச் சூழலையும் அதைச் சார்ந்த பிரச்சனைகளையும் ஆய்வது. சேதுப்பிள்ளை அவர்களின் (Sethu Pillai 1944-46) ஆய்வு இதற்குத் தொடக்கமாக அமைந்தது. சண்முகம் பிள்ளை அவர்கள் (Shanmugam Pillai 1960, 1965, 1972) இவரை அடுத்து இப்பகுதியில் ஆய்வை மேற்கொண்டவர். பேச்சுத் தமிழும் எழுத்துத் தமிழும் ஒரு காலக் கட்டத்தில் ஒருமித்து விடும்/சங்கமித்து விடும் என்று சண்முகம் பிள்ளை அவர்கள் கருதுகிறார்கள். ஷிப்மேன் (1974) தென்னிந்திய சமுதாயத்தில் ஆழமாகப் பதித்துள்ள தூய்மை/களங்கம் என்ற கருத்தை 'இரட்டை மொழிநிலையோடு தொடர்புபடுத்துகிறார். பேச்சுத் தமிழுக்கும் எழுத்துத் தமிழுக்கும் பொதுவான வடிவத்தைப் படைத்து அதிலிருந்து பேச்சுத் தமிழ் வடிவத்தையும் எழுத்துத் தமிழ் வடிவத்தையும் வருவிக்க தேவையான விதிகளைக் கொண்டு தெய்வ சுந்தரம் (Deiva Sundaram 1980) இடைவெளியை அளவிடு

கிறார். ஆக்க ஒலியனியல் கொள்கையைப் பயன்படுத்தி இராம சுவாமி (Ramaswamy 1979) பேச்சுத் தமிழுக்கும் எழுத்துத் தமிழுக்கும் உள்ள வேற்றுமைகளை விளக்குகிறார்.

இதோடு தொடர்புடையது செம்மொழி (Standard Language) பற்றிய ஆய்வும் புதுமையாக்கமும் (Modernization) 'எழுத்து அறிமுகமும் இலக்கியமும் இதற்கு அடிப்படை' என்று கிருட்டிணமூர்த்தி (Krishnamurthi 1975:191) அவர்கள் குறிப் பிடுகிறார்கள். செம்மொழி ஒன்றினைக்கும் ஆற்றல் கொண் டது. கிளைமொழிகளில் ஒன்று செம்மொழியாக உருவெடுப்பது சமுதாயக் காரணங்களாலும் மொழியியல் காரணங்களாலும் தீர்மானிக்கப்படுகிறது. சமுதாய கிளை மொழிகளில் ஒன்றோ வட்டாரக் கிளைமொழிகளில் ஒன்றோ செம்மொழியாக உரு வெடுப்பதற்குக் காரணம் மற்றக் கிளைமொழிப் பேச்சாளர்கள் அதைச் சமுதாயக் காரணங்களால் உயர்ந்ததாகவும் பின்பற்று வதற்குரியதாகவும் கருதுவதால்தான் தமிழில் எது செம்மொழி என்று கிளப்பிய சர்ச்சையில் ஒருமித்த முடிவு வரவில்லை. ஸ்வெலபில் (Zvelebil 1964) வட்டாரத்தையும் சாதியையும் அடிப்படையாகக் கொண்டு தமிழில் செம்மொழி உருவாகிறது என்கிறார். நகரப்புறங்களில் வணிகத்துறையிலும் மற்றைய தொழில் துறைகளிலும் உள்ள பிராமணரல்லாதார் பேச்சு செம்மொழியாகத் தமிழில் உருவெடுக்கிறது என்று ஸ்வெலபில் கருதுகிறார். கிழக்கு அல்லது நடுப்பகுதியில் பேசப்படுகிற கிளை மொழிக்கும் செம்மொழிக்கும் உள்ள வேற்றுமைகள் மற்ற கிளைமொழிகளுக்கும் செம்மொழிக்கும் உள்ள வேற்றுமை களை விடக் குறைவு என்பது அவருடைய கருத்து. கருணாகரன் அவர்கள் (Karunakaran 1975, 1976) இக்கருத்தையே ஏற்றுக் கொள்கிறார். இதில் கல்வியின் பங்கும் வலியுறுத்தப்படுகிறது (Vasantha Kumari 1976). செம்மொழி தமிழைப் பொறுத்த வரை வட்டாரக் கிளைமொழியிலிருந்தோ சமுதாயக் கிளை மொழியிலிருந்தோ உருவாகவில்லை. பல்வேறு கிளைமொழி களைப் பேசுபவர்கள் தங்கள் கிளைமொழிகளைக் குறிக்கும் வடிவங்களைத் தவிர்த்து பேசுகின்ற முறைதான் தமிழில் செம் மொழியை உருவாக்குகிறதென்று அண்ணாமலை அவர்கள்

(Annamalai 1976) கருதுகிறார்கள். ஞானசுந்தரம் அவர்களின் (Gnanasundaram 1980) ஆய்வு இரு கருதுகோள்களை மெய்ப்பிக்கிறது. ஒன்று மொழி பேசுபவர்கள் சில வடிவங்களைத் தங்கள் கிளை மொழிகளின் வடிவங்கள் என்று கருதுகிறார்கள்; இரண்டு செம்மொழியாக்கம் ஒருவருக்கு ஒருவர் மாறுபடுகிறது.

செவ்விய பேச்சுத் தமிழின் (Standard Spoken Tamil) இயல்பு குறித்தும் அது உருவாகும் தன்மை குறித்தும் பல்வேறு கருதுகோள்கள்வைக்கப்படுவதை நாம் இதுவரை குறிப்பிட்டோம். செவ்விய பேச்சுத் தமிழ் உருவாகும் நிலையில் உள்ளதென்பது எல்லோராலும் ஒத்துக் கொள்ளப்படுகிறது. இது முற்று பெறாத நிலையில் உள்ளது. இது குறித்த ஆய்வு விரிவாகவும் பரந்த நிலையிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய நிலையில் உள்ளது.

செம்மையாக்கத்தை மொழித் திட்டமிடலின் பகுதியாகவும் நாம் பார்க்கலாம். நிர்வாகம், கல்வி முதலிய துறைகளில் இந்திய மொழிகள் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற மொழிக் கொள்கை தமிழ் வளர்ச்சிக்குப் புதிய பாதைகள வகுத்துக் கொடுத்தது. தமிழை அறிவியலிலும் கலைத் துறைகளிலும் பயன்படுத்தும் பொழுது கலைச் சொல்லாக்கம் முக்கிய பிரச்சனையாக எழுகிறது.

இந் நூற்றாண்டின் துவக்கத்தில் தூய தமிழ்இயக்கம் மறைமலை அடிகளால் துவக்கப்பட்டது. வடமொழிச் சொற்களும் அயல்மொழிச் சொற்களும் தமிழிலிருந்து நீக்கப்பட்டாலும் தமிழ் தனித்தியங்கக் கூடியது என்பதை நிறுவ மறைமலை அடிகள் இவ்வியக்கத்தைத் துவக்கினார்கள்.

சண்முகம் அவர்கள் (Shanmugam 1976) இத் தூய தமிழ் இயக்கத்தினை பிராமணரல்லாதார் இயக்கத்தோடு தொடர்புபடுததுகிறார்கள். இக்கட்டுரையில் இவ்வியக்கத்தின் சமுதாயப் பண்பாட்டுப் பின்னணியை அவர் விளக்குகிறார். ஆனால் அண்ணாமலை அவர்கள் (Annamalai 1979) இவ்வியக்கத்தின் கூறுகள் தமிழ்மொழி வரலாற்றின் ஆரம்ப காலத்திலேயே

காணப்படுவதாகக் குறிப்பிடுகிறார். தமிழுக்கும் வடமொழிக்கும் பொதுவான எழுத்துக்கள் இருந்தால் வடமொழிச் சொற்களைச் செய்யுளில் பயன்படுத்தலாமென்று தொல்காப்பியம் (309, 401, 402) கூறுகிறது. வடமொழிக்குரிய எழுத்துக்களைச் சொற்கள் பெற்றிருப்பின் இவ்வெழுத்துக்களைத் தமிழாக மாற்றிவிட்டு இச் சொற்களைப் பயன்படுத்தலாமென்று கூறுகிறது. இம் முறையில் சொற்கள் தமிழ் எழுத்துக்களால் எழுதப்பட்டன. இப்போக்கின் பின்னணியைத் தெளிவாகவும் விரிவாகவும் தமிழ் மொழி வரலாற்றிலிருந்து காட்டியுள்ளார். இந் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்த சமுதாயப் பண்பாட்டின் பின்னணியை விளக்கி தூய தமிழ் இயக்கம் தோன்றியதன் சூழலை விளக்கியுள்ளார்.

ஒரு மொழியின் சொற்கள் மற்றொரு மொழி பேசுபவர்களுக்குத் தெரிந்திருக்கும்பொழுதும் அவை வழக்கிலிருக்கும் பொழுதும கடன் வாங்கப்படக்கூடும் என்று சண்முகம் அவர்கள் (Shanmugam, 1976) கருதுகிறார்கள். பேச்சுத் தமிழுக்கும் எழுத்துத் தமிழுக்கும் உள்ள இடைவெளியை தமிழில் தூய்மை வாதம் கூட்டுமென்று அவர் கருதுகிறார். தூய்மை வாதப் போக்கும் எளிமையாக்கமும் புதுமையாக்கத்தின் செயற்பாடுகளில் ஒரு பகுதி என்று அண்ணாமலை அவர்கள் (Annamalai, 1979, 1980) கருதுகிறார்கள். தூய்மைப் போக்கு சொற்களஞ்சியத்தையும் எளிமையாக்கம் தொடரியலையும் புணரியலையும் பாதிக்கிறது என்பது அவர் முடிவு.

சண்முகம் அவர்கள் (Shanmugam, 1976) மொழி வளர்ச்சியில் புதுமையாக்கத்தின் பல்வேறு செயற்பாடுகளைத் தமிழோடு தொடர்புபடுத்தி விளக்குகிறார். எழுத்தாக்கம், செம்மையாக்கம், சொல் வளர்ச்சி, நடை வளர்ச்சி ஆகியவை மொழியின் புதுமையாக்கத்திற்கு எவ்வாறு துணை செய்கின்றன என்பதை அவர் விளக்கியுள்ளார், புதுமையாக்கத்தின் செயற்பாடுகள் எவ்வாறு தமிழில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன என்பதை அவர் தெளிவாக்குகிறார். தற்காலத் தமிழைப் பற்றிய தெளிவான ஒரு நல்ல விளக்கத்தை இக் கட்டுரை நமக்கு அளிக்கிறது.

இந்தியா போன்ற நாடுகளில் பல்வேறு இனத்தைச் சேர்ந்த மொழிகளைப் பேசுகின்ற மக்கள் ஒரு நிலத்தில் வாழ்வதை நாம் பார்க்கிறோம், இவ்வாறு பல்வேறு மொழிகளைப் பேசுவோர் உறவாடி ஒன்றாக வாழ்வதால் ஒரு மொழியின் கூறுகள் இன்னொரு மொழிக்குச் செல்வது வியப்பிற்குரியதில்லை. எடுத்துக் காட்டாகத் தமிழர்கள் கேரளம், கருநாடகம், ஆந்திரம் ஆகிய தென் மாநிலங்களில் மட்டுமின்றி வட மாநிலங்கள் பலவற்றில் வாழ்கிறார்கள். இவர்கள் வீட்டில் தமிழையும் வெளித் தொடர்பிற்கு அம் மாநில மொழியையும் பயன்படுத்துகிறார்கள். இதேபோல் தமிழகத்தில் தெலுங்கு, மலையாளம்' கன்னடம், பஞ்சாபி, சௌராஷ்டிரம், மராத்தி ஆகிய மொழிகளைத் தாய் மொழியாகக் கொண்டவர்களும் வாழ்கிறார்கள். இவர்கள் இம்மொழிகளை வீட்டிலும் தமிழை வெளியுலகத் தொடர்புக்கும் பயன்படுத்துகிறார்கள். இவ்விதச் சூழல்களில் இருவித ஆய்வுகளை நாம் வகைப்படுத்திப் பார்க்கலாம். தமிழின் கூறுகள் மற்ற மொழிகளில் காணப்படுகின்ற சூழலை ஆய்வது முதலாவது; மற்ற மொழிகளின் கூறுகள் தமிழில் காணப்படுகின்ற சூழலை ஆய்வது இரண்டாவது.

பெரியாழ்வார் அவர்கள் (Perialwar, 1972) ஆனைக்குட்டத்தில் பேசப்படும் தெலுங்கையும் தமிழையும் ஒப்பிட்டு எவ்வாறு தமிழின் கூறுகள் ஆனைக்குட்டம் தெலுங்கில் காணப்படுகின்றன என்பதை விளக்குகிறார்கள். எதிர்மறை என்ற இலக்கணக் கூற்றை மட்டும் எடுத்துக்கொண்டு இது எவ்வாறு மைசூர்த் தமிழில் காணப்படுகிறது என்பதை அரங்கனும் ஞானசுந்தரமும் (Rangan and Gnanasundaram, 1977) விளக்குகிறார்கள். மைசூர்த் தமிழில் காணப்பட்ட **வந்தில்ல** என்ற வடிவமும் வரலெ என்ற வடிவமும் இவ்வாய்வைத் தூண்டின. மைசூர்த் தமிழின் பொருண்மை ஒருங்கு (Semantic system) கன்னட மொழியின் பாதிப்பால் எவ்வித மாற்றமும் அடையவில்லை என்பதையும் முதியோர் பேசுகின்ற தமிழ் தமிழ்நாட்டுத் தமிழோடு நெருங்கியதென்றும் இளைய தலைமுறையினர் பேசுகின்ற தமிழ் கன்னட மொழியோடு நெருங்கியதென்றும் கருதுகின்ற கருதுகோள்களுக்குப் போதிய சான்றுகள் இல்லை

என்பதும் இவ்வாய்வால் தெளிவாகிறது. எதிர்கால எதிர் மறையைப் பொறுத்தவரை முதியோர் தமிழ் தமிழகத் தமிழை நெருங்குவதாகத் தோன்றுகிறது. இவ்வாய்வு மேலும் பல விளக்கங்களை வேண்டி நிற்கிறது.

சமுதாய மொழியியல் ஆய்வு தமிழில் பிரச்சனைகளை நிறைய வெளிக்கொண்டு வந்திருக்கிறது. சாதி என்ற சமுதாயக் காரணி இடம்பெற்ற அளவிற்கு மற்றக் காரணிகள் இவ்வாய்வு களில் இடம்பெறவில்லை. பல ஆய்வுகள் மொழியியல் ஆய்வு முறைகளையே பின்பற்றியுள்ளது; சமூகவியலின் ஆய்வுமுறை கள் தீவிரமாகப் பயன்படுத்தப்படவில்லை என்ற குறையைப் பலர் கூறுகிறார்கள்.

எதிர்கால ஆய்வு கவனம் செலுத்த வேண்டிய ஒன்று இரட்டை மொழி நிலை (**Diglossia**). ஆய்வாளர்களில் சிலர் பேச்சுத் தமிழும் எழுத்துத் தமிழும் ஒன்றாகும் என்று கருது கிறார்கள். இதையே இன்னொரு கோணத்தில் பார்க்கலாம். பேச் சுத்தமிழும் எழுத்துத் தமிழும் இணைப் (**Convergence**) போக் கைக் காட்டுகின்றன என்றும் நாம் கருதலாம். இதனுடன் தொடர்புடையது செவ்விய பேச்சுத் தமிழ் ஆய்வு (**Standard Spoken Tamil**, பல்வேறு கருத்துக்களும் கருதுகோள்களும் இது குறித்து முன் வைக்கப்பட்டிருப்பதால் எதிர்கால ஆய்வுகள் தீவிரமான சமூகவியல் அணுகுமுறைகளைப் பயன்படுத்தி இப் பிரச்சனைகளுக்கும் தீர்வு காண முன்வரவேண்டும். மொழிகளின் இணைவு (**Language convergence**) குறித்த ஆய்வும் விறுவிறுப் பானது. பேச்சுத் தமிழ் எழுத்துத் தமிழ் இணைவை ஒருவகை ஆய்வாகவும் தமிழும் மற்ற மொழிகளும் காட்டுகின்ற இணைவை இன்னொரு வகை ஆய்வாகவும் நாம் நோக்கலாம். தமிழ்– சௌராஷ்டிரம் ஆய்வைப் பண்டித் (**Pandit, 1972**) அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இத்தகைய ஆய்வை இரு மொழி பேசப்படுகின்ற தமிழக எல்லை ஓரங்களிலும் இருமொழி பேசுகின்ற மக்களிடையேயும் மேற்கொள்ளலாம். கோட்பாடு களை உருவாக்கக்கூடிய நிலையில் சமுதாய மொழியியல் தமிழில் வளரக் கூடிய வாய்ப்பைப் பெற்றிருக்கிறது.

தமிழ் மொழியியலோடு தொடர்புடைய வேறு சில பகுதி களையும் மேலோட்டமாகச் சுட்டிக் காட்டுவோம். தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கின்ற முயற்சி மொழியியல் தமிழகத்தில் வேரூன்ற ஆரம்பித்த காலத்திலேயே தொடங்கி விட்டது. அமெரிக்க நாடுகளிலும் ஐரோப்பிய நாடுகளிலும் உள்ள பல்கலைக்கழகங்கள் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிக்க எடுத்துக்கொண்ட முயற்சியும் தமிழ் மொழியியலுக்கு வளஞ் சேர்த்தன. தமிழைக் கற்பிப்பதற்குரிய பாடநூல்கள் தயாரிக்கப்பட்டன. தமிழ் மொழியியலாளர்கள் இதில் கவனம் செலுத்தினார்கள். இராதாகிருட்டிணனும் ஆஷரும் (Asher and Radhakrishan (1971) சேர்ந்து வெளியிட்ட நூலை ஆரம்ப கால முயற்சியாகக் குறிப்பிடலாம். சிகாகோ பல்கலைக்கழகத்தில் தமிழை அறிமுகப்படுத்தும் துவக்கமாகத் தமிழ்மொழியின் வரலாறு குறித்த சிறப்புச் சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்யப்பட்டன. தமிழகத்திலிருந்து தெ.பொ. மீனாட்சிசுந்தரம் அவர்கள் அழைக்கப்பட்டார். 1960 வாக்கில் தெ. பொ. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சிகாகோ பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழி வரலாறு பற்றி ஆற்றிய சொற்பொழிவுகள் தமிழ் மொழியியலில் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை. நூலாகப் பின்னர் உருவான இச் சொற்பொழிவுகளிலிருந்து தமிழ் மொழியின் வரலாற்றை மட்டும் புரிந்துகொள்ள வில்லை; அன்றைய தமிழ் மொழியியலின் நிலையையும் நாம் புரிந்துகொள்கிறோம். இந்நூலின் நூலடைவுப் பிரிவைப் பார்ப்பதன் மூலம் எவ்வளவு ஆய்வேடுகளும் நூல்களும் தமிழ் மொழியியலில் அப்பொழுது வந்துள்ளன என்பது நமக்குத் தெரியவரும். தமிழ் மொழி வரலாற்றை விரிவாக விவரிப்பதற்கு எவ்வித ஆய்வுகளும் இல்லை என்பதும் நமக்குப் புரியும்.

இக்காலக் கட்டத்தில் தமிழ்மொழி வரலாற்றுக்குத் தேவை யான பல்வேறு இலக்கியங்களின்-குறிப்பாக சங்க இலக்கியங் களின்-வண்ணனை இலக்கணங்களை (Descriptive Grammars) உருவாக்கும் முயற்சியில் அன்றைய இளைய தலைமுறை வ. அய். சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் கேரளப் பல்கலைக்

கழகத்திலும் தெ. பொ. மீனாட்சிசுந்தரம் அவர்கள் தலைமையில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் ஈடுபட்டது. சிலப்பதிகாரம், பதிற்றுப்பத்து, திருக்குறள், நற்றிணை, பத்துப்பாட்டு, தேவாரம் முதலிய இலக்கியங்களுக்கும் சில நூற்றாண்டுகளின் கல்வெட்டுக்களுக்கும் வண்ணனை இலக்கணங்கள் தயாரிக்கும் முயற்சி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டது. இலக்கியங்களுக்கும் கல்வெட்டுகளுக்கும் இலக்கணங்கள் எழுத வேண்டுமென்ற சூழலும் முயற்சியும் வட்டார வழக்கு ஆய்விற்கும் சமூக மொழியியல் ஆய்விற்கும் இட்டுச் சென்றன.

இவ்வித ஆய்வுகள் ஒரு புறம் செல்ல சண்முகம் பிள்ளை போன்ற அறிஞர்கள் தமிழ்மொழிக் கற்பித்தலுக்குரிய நூல்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டனர். சண்முகம் பிள்ளை அவர்கள் (Shanmugam Pillai, *1965 & 1968*) எழுதிய பேச்சுத் தமிழ் குறித்த பாடநூலும் குமாரசாமி ராஜா அவர்களும் துரைசாமி அவர்களும் (Kumaraswami Raja and Duraiswami, *1966*) எழுதிய நூலும் குறிப்பிடத் தக்கவை. மொழிகளைக் கற்பிக்கும் பொழுது இன மொழிகளின் அமைப்பை அடிப்படையாகக் கொண்டு பாடங்களைத் தயாரிப்பது நல்லது; தெரிந்த அமைப்பிலிருந்து தெரியாத அமைப்புக்குச் செல்லுகின்ற இம்முறை மொழி கற்பவர்களுக்கு எளிமையானது என்று கருதப்படுகிறது. இனமொழிக் கற்பித்தல் வழிமுறை (**Cognate Language Teaching Method**) என்ற புதிய கோட்பாட்டின் அடிப்படையில் கேரளப் பல்கலைக்கழக மொழியியல் வ. அய். சுப்பிரமணியம் அவர்கள் தலைமையின் கீழ் தமிழுக்கொரு பாடநூலை தயாரித்தது.

இது குறித்து இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தின் பங்கையும் நாம் இங்குக் குறிப்பிட வேண்டும். பல்வேறு மாநிலங்களிலிருந்து வரும் ஆசிரியர்கள் தமிழை இரண்டாம் மொழியாகப் பத்துமாதம் கற்கிறார்கள். இதற்காக பலவகைப் பாடநூல்களைக் தயாரித்து வருகிறார்கள். வேற்று மொழியினர்த் தமிழைப் பிழையற உச்சரிப்பதற்காக ஒலியியல் அடிப்படை

யிலான நூலொன்றை இராசாராம் அவர்கள் (Rajaram, 1972) தயாரித்துள்ளார்கள். இவரே பயிற்சியின் முதற்கட்டத்திற்குரிய நூலையும் தயாரித்துள்ளார். (Rajaram, 1979). உயர்நிலைப் பயிற்சிக்காகவும் தமிழில் உள்ள வெவ்வேறான நடைகளுக்குப் பயிற்சியாளர்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென்பதற்காகவும் பட்டநாயக் அவர்களும் திருமலை அவர்களும் அரங்கன் அவர்களும் (Pattanayak, Thirumalai and Rangan, 1974) இணைந்து பாடநூலொன்றை உருவாக்கினார்கள். இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தினுடைய தென்னிந்திய மொழிகளின் மையம் தமிழைக் கற்பிப்பதற்குரிய பாடநூல்களைத் தயாரித்துக் கொண்டிருக்கிறது.

தமிழ் மொழியியலின் எல்லாப் பகுதிகளையும் இக்கட்டுரையில் குறிப்பிட இயலவில்லை. தமிழ் மரபிலக்கணங்களின் இயல்பையும் கோட்பாடுகளையும் பல மொழியியலாளர்கள் ஆராய்ந்துள்ளார்கள். இவர்களுள் அகத்தியலிங்கம், இசரேயல், குமாரசுவாமி ராஜா, சண்முகம், முருகையன், பாலசுப்பிரமணியன், கோதண்டராமன், காமாட்சிநாதன், ஆதித்தன் ஆகியோர் குறிப்பிடத் தகுந்த முறையில் ஆய்வை நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

உள மொழியியல் தமிழ் மொழியியலின் போதிய கவனத்தைத் திருப்பவில்லை. திருமலை அவர்கள் (Thirumalai, 1972) நான்கு வயதுக் குழந்தை தமிழ் ஒலியனியலைக் கற்கும்பொழுது காணப்படுகின்ற சில கூறுகளை விவரித்துள்ளார்கள். குழந்தைகள் எவ்வாறு தமிழைக் கற்கிறார்கள் என்பதை விவரிக்கின்ற ஆய்வுகள் நம்மிடையே குறிப்பிடுகின்ற முறையில் வரவில்லை. 5-6 வயதுக் குழந்தைகள் தமிழைக் கற்கும் பொழுது காணப்படுகின்ற தொடரியல் வளர்ச்சியின் சில கூறுகளும் ஆய்வுக்கெடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மொழியியல் துறைகள் உள மொழியியலுக்குரிய பங்கை அளிக்கவில்லை.

கோட்பாட்டை அடிப்படையாக் கொண்டு தமிழ் மொழியியலில் உள்ள பிரச்சனைகளை மேலோட்டமாகவும் ஒட்டு

மொத்தமாகவும் பார்ப்பதின் விளைவு என்ன என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும். அமெரிக்காவில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் மொழியியல் ஆசிரியர்கள் எதை மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டுமென்ற சர்ச்சை எழுந்தது. மொழியியலைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு அத்துறையில் எழுந்துள்ள பிரச்சனைகளைத் தெளிவாகவும் விளக்கமாகவும் உணர்த்த வேண்டும் என்று லேங்கண்டுயன் (Langendoen) என்ற மொழியலாளர் குறிப்பிட்டதை நாம் இங்கு நினைவு கூர்வது நல்லது. மொழியியல் கோட்பாடுகளையும் கொள்கைகளையும் மாணவர்கள் அறிந்திருக்க வேண்டுமென்பது முதல் கட்டம். இக்கொள்கைகளும் கோட்பாடுகளும் தமிழ் மொழியின் அமைப்பை விவரிக்க முற்படும்பொழுது நாம் சந்திக்கின்ற பிரச்சனைகள் எவை என்பதும் மாணவர்களுக்குத் தெளிவு படுத்தப்பட வேண்டும். தமிழ் மொழியியலின் ஒவ்வொரு பகுதியிலும் வெளி வந்த ஆய்வுகளைத் திரட்டி அவை எழுப்பும் பிரச்சனைகளையும் கருத்து வேறுபாடுகளையும் ஒட்டு மொத்தமாக வைத்து நாம் விமர்சனம் செய்யலாம், இவ்வாறு மேற்கொள்கின்ற விமர்சனம் பிரச்சனைகளை இனங் கண்டுகொள்வதற்கும், ஆய்வை நெறிப்படுத்துவதற்கும் வசதியாக இருக்கும்.

ஆண்டுதோறும் கூடவிருக்கின்ற தமிழ் மொழியியல் மாநாட்டில் தமிழின் ஒலியியல், உருபியல், தொடரியல், பொருண்மையியல், சமுதாய மொழியியல் என்று பல பகுதிகளாகப் பிரித்துக்கொண்டு இதுவரை வெளிவந்த ஆய்வுகளைத் திறனாய்வு செய்வது தமிழ் மொழியியலின் ஆய்வுநிலையைப் புரிந்துகொள்ளப் பேருதவியாக இருக்கும். இத்தகைய திறனாய்வுகள் மொழியியல் ஆசிரியர்களையும் மாணவர்களையும் சென்றடைய வேண்டும். இவை தமிழ் மொழியியல் நிலையைச் சுட்டிக் காட்டுவதோடு அதன் போக்கையும் நமக்குக் காட்டும். ஆய்விற்குள் அடியெடுத்து வைக்கும் மாணவர்கள் தமிழ் மொழியியல் பிரச்சனைகளை இனங்காண்பதற்கும் தமக்கு விருப்பமுள்ள பிரிவோடு தொடர்புடைய பிரச்சனைகளை ஆய்விற்கெடுத்துக் கொள்வதற்கும் பேருதவியாக இருக்கும்.

தமிழ் மொழியியல் ஆய்வில் ஈடுபட்டுள்ள மொழியியல் துறைகளிலும் தமிழ்மொழித் துறைகளிலும் நடைபெறுகின்ற ஆய்வுகளின் விவரம் நமக்குக் கிடைப்பதில்லை. கொடுக்கப்படு கின்ற ஆய்வேடுகளில் கண்ட முடிவுகள் மற்றவர்களுக்குத் தெரிவது கடினமாக இருக்கிறது. ஆய்வின் சுருக்கத்தைப் படிகள் எடுத்து மற்ற துறைகளுக்கு அனுப்பிவைக்கலாம்; இல்லையென் றால் மொழியியல் இதழில் தமிழ் மொழியியலோடு தொடர் புடைய ஆய்வேடுகளின் சுருக்கங்களை வெளியிடலாம். புலமை, தமிழ்க்கலை போன்ற ஆய்விதழ்களையும் இம்முயற்சியில் உட்படுத்தலாம்.

ஆண்டுக்கொரு முறை தமிழ் மொழியியலில் ஆய்வை மேற் கொண்டிருக்கும் தமிழகத்தில் உள்ள மொழியியல் துறைகளின் தலைவர்களும் தமிழ் மொழித் துறைகளின் தலைவர்களும் கூடி தங்கள் துறைகளின் ஆய்வுப் பணிகள் குறித்தும் தமிழ் மொழியியலில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஆய்வுத் திட்டங்கள் குறித்தும் விரிவாக விவாதிக்கலாம். இத்தகைய சந்திப்பு ஆய்வில் ஏற்படுகின்ற இரட்டிப்பு வேலையைத் தவிர்ப் பதற்கும் எப் பகுதிகளில் ஒத்துழைக்கலாம் என்பதைச் சிந்திப் பதற்கும் வழி செய்யும். தமிழ்மொழி வரலாறு விரிவாக எழுதப் பட வேண்டும் என்பது போன்ற பெரிய திட்டங்களை நிறை வேற்ற வேண்டுமென்றால் இத்துறைகள் ஒன்று கூடி சிந்திக்க லாம். ஒவ்வொரு துறையும் இத்தகைய பெரிய திட்டங்களுக்கு எவ்வித ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளலாம் என்பது பற்றி விரிவாக விவாதிக்கலாம். தமிழகத்திலாவது இத்தகைய ஒத்து ழைப்பை துவக்கி வைக்கலாம். அனைத்திந்தியத் தமிழ் மொழி யியற் கழகமோ தமிழ்ப் பல்கலைக் கழகமோ இத்தகைய சந்திப்பை ஏற்படுத்த முயற்சியெடுக்கலாம்.

தமிழ் மொழியியலின் போக்கையும் பிரச்சனைகளையும் மேம்போக்காகவே சுட்டிக் காட்டியிருக்கிறேன். நான் முன்பு கூறியதைப் போல இம் முயற்சி ஆழமாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும். நான் இங்கு விவாதத்தைத் தொடங்கி அடி மட்டும் எடுத்துக்கொடுத்தமைகிறேன்.

துணை நூல்கள்

Agesthialingom, S. (1968) 'Systematic Phonemics' paper presented to the seminar at Annamalainagar, Annamalai University.

——— (1972) 'A syntactical treatment of 'must' in Dravidian' in Agesthialingom, S. and S. V. Shanmugam (eds.) *Third Seminar on Dravidian Linguistics.* Annamalainagar, Annamalai University. pp. 1-36.

——— (1974) 'Modality in Tamil' *Proceedings of the Second All India Conference of Linguistics*, Poona: LSI pp. 47-58.

——— (1980) 'Auxiliaries and Main Verbs' in Agesthialingom, S. and G.S. Varma (eds) *The Auxiliaries in Dravidian.* Annamalai Nagar, Annamalai University.

Annamalai, E. (1974) 'The semantics of a model verb in Tamil: an exploratory study' in the *Proceedings of the Second All India Conference of Linguistics.* Poona: LSI pp. 59 71.

——— (1976) 'Discussion over the standard spoken Tamil' *in Studies in Dialectology.*

——— (1979) 'Movements for linguistic purism: the case of Tamil' in (ed) E. Annamalai *Language Movements in India.* Mysore: CIIL.

——— (1980) '*Simpli*fication as a process of modernization' in S. Agesthialingom and K. Karunakaran: (eds) *Sociolinguistics and Dialectology.* Annamalainagar Annamalai University.

——— (1982) 'Dynamics of verbal extension in Tamil: in *International Journal of Dravidian Linguistics*, 11.1 pp.22–116.

Arokianathan, S. 'Tamil Diglossia' mimeo)

Asher R.E. and Radhakrishnan, R. (1971) *A Tamil Prose Reader.* Cambridge: Cambridge University Press.

Bloomfield. L. (1963) *Language.* Delhi: Motilal Banarsidas (Reprint)

Deiva Sundaram, N. (1981) 'Can We measure the distance between the written and spoke forms in Tamil?' in Agesthialingom,S. and K.Karunakaran (eds) *Sociolinguistics and Dialectology.* Annamalainagar: Annamalai University.

Gnanasundaram. V. (1981) 'Standard spoken Tamil: What and How?' in Agesthialingom. S. and K. Karunakaran (eds) *Sociolinguistics and Dialectology.* Annamalainagar: Annamalai University.

Karunakaran, K. (1976) 'Language standardization in Dravidian with reference to Tamil' in *Dravidian Linguistics* V. Agesthialingom, S. and Subramanyam, P.S. eds). Annamalainagar: Annamalai University.

Kothandaraman, P.(1972) 'On Sandhi' in *Studies in Tamil Linguistics.* Madras: Tamil Nuulagam. pp. 56-73.

Krishnamurthi, Bh. (1975) 'Language varieties and problems of standardization of Indian languages' in *Indian Linguistics*, 36, 191-196.

Kumaraswami Raja (1978) 'Three consonant clusters' paper presented to the Seminar on Phonology held at Annamalainagar: Annamalai University.

Kumaraswami Raja, N. and Doraiswami. K.(1966) *Conversational Tamil.* Annamalainagar: Annamalai University.

Meenakashisundaran, T.P. (1965) *A History of Tamil language.* Poona: LSI.

Pandit, P.B. (1972) *India as a sociolinguistic area.* Gune memorial lectures, University of Poona.

Pattanayak, D.P., Thirumalai, M.S. and K. Rangan (1974) *Advanced Tamil Reader.* Mysore: CIIL.

Perialwar, R. (1972) 'Interference of Tamil in a Telugu dialect' in the *Proceedings of the fourth All India University Tamil Teachers' Conference,* Trivandrum 463-468.

Rajaram, S. (1972) *Tamil Phonetic Reader.* Mysore: CIIL.

——— S. (1979) *An intensive course in Tamil.* Mysore: CIIL.

Ramaswami, N. (1979) *Formal and informal Tamil.* Ph.D. Thesis Trivandrum: University of kerala

Rangan (1971) 'Modals as main verbs in Tamil' *Proceedings of the First All India Conference of Linguistics.* Poona: LSI. pp.238-48.

——— (1981) 'Tamil Sociolinguistics' paper submitted to the *Dravidan Encyclopaedia.*

Rangan, K. and V.Gnanasundarm (1977)'Negation in Mysore Tamil: a sociolinguistic study' in *International Journal of Dravidian Linguistics.* 6.1. pp. 76-84.

Schiffman, H.F. (1974) 'Language, linguistics and politics' in (eds). E.Gerow, and M.D. Long *Studies in the language and culture in South Asia.* Seattle: University of Washington press.

Shanmugam, S.V. (1973) 'moḻi valarcciyil putumaiyākkam' *Aaraaichi* 4.1 39-48.

——— (1976) 'moḻittūymai' ilaṇṭant amiḻccanka *āṇṭu malar* 1-10.

Shanmugam Pillai, M. (1960) 'Tamil literary and colloquial' in *Linguistic Diversity in South Asia,* IJAL, 26.3. pt.2.

——— 1965 "Merger of literary and colloquial Tamil' in *Anthropological linguistics*, 7. 59-66.

——— (1965) *Spoken Tamil. Part I.* Annamalainagar: Annamalai University.

——— (1968) *Spoken Tamil - Part II* Annamalainagar: Annamalai University.

——— (1972) 'Tamil today' in *Indian Linguistics*,33. 67-71.

——— (1983) 'Tamil dialectology: a critical survey', paper submitted to the seminar on *Dialectology* conducted at Thanjavur, Tamil University.

Thirumalai, M.S. (1972) "Some aspects of four year + old stage in the acquisition of Tamil phonology" in *Journal of All India Institute of speech and Hearing*, 3. 64-67..

Vasantha Kumari, T. (1976) 'The standard spoken Tamil' in *Studies in Dialectology*, 1-1.

Veluppillai, A. (1983) 'Modiality in Jaffna Tamil' in *Indian Linguistics*, 44. 1-4. pp.83-96.

Zvelebil, K. (1964) 'Spoken language of Tamilnadu' in *Archiv Orientalini*, 32. 237-64.

கருணாகரன், கி. (1975) சமுதாய மொழியியல். கோயம்புத்தூர்.

பரமசிவம், கு. (1982) 'கனப்பொருளும் தனிப்பொருளும்'. சென்னை.

திருநெல்வேலித், தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக மணிவிழா மலர் பக். 9-12.

நான்காம் அமர்வு **121 - 160**

தொல்காப்பியம் அல்லது நன்னூல் சூத்திரங்களுக்குப் புது உரை காண்டல்
ச. அகத்தியலிங்கம் *123 - 144*

தொல்காப்பியச் சூத்திரம் ஒன்றுக்குப் புத்துரை
ஆ. சிவலிங்கனார் *145 - 150*

இன்றைய மாணவர் இலக்கணத்தை வெறுப்பதேன்
இரா. திருமுருகன் *151 - 160*

ஐந்தாம் அமர்வு **161 – 198**

தமிழ் நடையியற் போக்குகள் - சில சிந்தனைகள்
ஜெ. நீதிவாணன் *163 – 176*

தமிழ் மொழியியலின் ஆய்வுப் போக்கு
கி. அரங்கன் *177 - 198*

மொழியியல்

தொகுதி 8 எண் 3 & 4

ஜனவரி - ஜூன் 1985

உள்ளுறை பக்கம்

துவக்கவிழா 1 - 26

வரவேற்பு உரை

ச. அகத்தியலிங்கம் 1 - 4

தலைமை உரை

மோ. இசரயேல் 5 - 14

துவக்க உரை

சை. வே. சிட்டிபாபு 15 - 22

நன்றி உரை

செ. வை. சண்முகம்

முதல் அமர்வு 27 - 32

கருத்தரங்கு மாநாட்டின் நோக்கமும் நடத்தும் முறையும்

ச. அகத்தியலிங்கம் 29 - 32

இரண்டாம் அமர்வு 33 - 68

உயர் நிலைப்பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு இலக்கணம் கற்பித்தல்

மோ. இசரயேல் 35 - 50

தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும் போது எதிர்படும் இடர்பாடுகள்

ந. நடராசப்பிள்ளை 51 - 68

மூன்றாம் அமர்வு 69 - 120

உரிச்சொல்

செ. வை. சண்முகம் 71 - 120

(தொடர்ச்சி அட்டை மூன்றாம் பக்கம் பார்க்க)